வெளியீடு 25-1-2006

Issued 25-1-2006

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

**புதன்கிழமை, செப்டம்பர் 28, 2005—தொகுதி 86—எண் 1**

**Wednesday the 28th September, 2005—Volume 86—No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

[Price Rs. 3.00

928
21.9.06

**28-9-2005**

**உள்ளடக்கம்**

| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vii |
| Governor and Council of Ministers | ix-xii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xiii-xvi |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xvii-xxvii |
| **1. வினாக்கள்—விடைகள்—** | |
| உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 9 மற்றும் 10) | 1-62 |
| **2. அறிவிப்பு—** | |
| பேரவை அலுவல் நீட்டிப்பு | 62 |
| **3. தகவல் கோரல்—** | |
| (அ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 63 |
| (ஆ) காவிரி கடைமடைப் பகுதிகளின் பாசனத்திற்குத் தண்ணீர் | 63-64 |
| **4. உரிமை மீறல் பிரச்சினை—** | |
| துணை மானியக் கோரிக்கைகள் பற்றி முன்னாள் முதலமைச்சர் முரசொலி பத்திரிகையில் வெளியிட்டுள்ள கருத்துகள் | 64 |
| திரு. லா. சந்தானம் | 64-72 |
| மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 66,67 |

| | பக்கங்கள் |
|---|---|
| **5. கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2005–2006—விவாதம்** | 75-200 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 75,77-78, 81-93 |
| மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்) | 97-104 |
| திரு. ஜி.கே. மணி | 105-116, 118-130 |
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 105-106,107, 109,110,111, 122,132-134, 139,142-148, 150,152,153, 155-156,162, 166-170,185, 194 |
| திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் | 131-132, 134-161 |
| திரு. ஆற்காடு நா. வீராசாமி | 161-163, 166-183, 185-200 |
| **6. அரசினர் தீர்மானம்—** | |
| விதி 32-ஐத் தளர்த்தல் | 201 |
| **7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 202 |




## ஆளுநரும் அமைச்சரவையும்

**ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்**

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

**2. பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறு பாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு, சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

**3. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

நிதி, திட்டமிடல், தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

4. சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

சட்டம், நீதிமன்றங்கள், தகவல் தொழில்நுட்பவியல்.

5. உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்**

உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு, புள்ளியியல் மற்றும் கூட்டுறவு.

6. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

7. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

8. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

9. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

...ழ்நாடு ஆவணக் காப்பகம்
227000
சென்னை-600 008



10. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதி திராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

11. போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள், மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

12. தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

13. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

14. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்.

15. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்**

கால்நடை பராமரிப்பு.

16. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

**17. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

**18. கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டோர் மற்றும் வணிக வரிகள்.

**19. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

**20. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

**21. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**

மீன்வளம்.

**22. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.



**23. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.

**24. செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**

செய்தி & விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

**25. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.

- - -

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. | **Chief Minister** | .. **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. | **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | .. **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. | **Minister for Finance** | .. **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 4. | **Minister for Law and Information Technology** | .. **The Hon. Thiru D. Jayakumar:** Law, Courts and Information Technology. |
| 5. | **Minister for Food and Co-operation** | .. **The Hon. Thiru Pollachi V. Jayaraman:** Food, Civil Supplies, Consumer Protection, Price Control, Statistics and Co-operation. |

6. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**

   Hindu Religious and Charitable Endowments.

7. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. P. Vijayalakshmi Palanisamy:**

   Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

8. **Minister for Health** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

   Health, Medical Education and Family Welfare.

9. **Minister for Rural Industries** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

   Rural Industries including Cottage Industries, Small Scale Industries and Khadi & Village Industries Board.

10. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru C. Karuppasamy:**

    Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

11. **Minister for Transport and Electricity** .. **The Hon. Thiru R. Viswanathan:**

    Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Electricity and Non-Conventional Energy Development.

12. **Minister for Industries** .. **The Hon. Thiru Nainar Nagenthran:**

    Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.



13. **Minister for Agriculture** .. **The Hon. Thiru K. Pandurangan:**

    Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

14. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:**

    Backward Classes, Most Backward Classes and Denotified Communities.

15. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru P.V. Damodhiran:**

    Animal Husbandry.

16. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

    Forests & Environment and Pollution Control.

17. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

    Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

18. **Minister for Education and Commercial Taxes** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**

    Education, Technical Education, Science and Technology, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees, Evacuees and Commercial Taxes.

19. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

    Milk and Dairy Development.

20. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru V. Somasundaram:**

Handlooms and Textiles.

21. **Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:**

Fisheries.

22. **Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller:**

Tourism and Tourism Development Corporation.

23. **Minister for Labour** .. **The Hon. Thiru P. Annavi:**

Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs.

24. **Minister for Information & Publicity and Local Administration** .. **The Hon. Thiru K.P. Anbalagan:**

Information & Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural indebtedness, Urban and Rural Water Supply.

25. **Minister for Sports and Youth Welfare** .. **The Hon. Thiru Inbathtamilan:**

Sports and Youth Welfare.

- - -



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

### மாற்றுத் தலைவர்கள் #

திரு. ப. இராஜரெத்தினம்

திரு. அ. அன்வர் ராஜா

திருமதி சி.எம். சூரியகலா

திரு. லா. சந்தானம்

டாக்டர் தே. குமாரதாஸ்

முனைவர் செ.கு. தமிழரசன்

### செயலாளர்

திரு. வெ. இராசாராமன்

---

# 22-9-2005 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | - கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) (விடுப்பு) |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |



| | |
|---|---|
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) (பொறுப்பு) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | .. பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ச. ஆறுமுகம், பி.எஸ்ஸி. | .. சார்புச் செயலாளர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. அ. நவாப்ஜான், பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |

| | |
|---|---|
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்.சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. ரேவதி, எம்.ஏ. | .. செயலாளரின் தனிச் செயலர் (சார்புச் செயலாளர் நிலை) |



## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. | .. தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆகு.சி. | .. பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. வேடசந்தூர் |

20. ஆறுமுகம், திரு. கே. .. செங்கல்பட்டு
21. ஆறுமுகம், திரு. த. .. திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. .. நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. .. கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். .. கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
31. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். .. மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. .. அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆ.வா.)
41. இன்பத்தமிழன், திரு. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)



43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
48. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
50. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
51. கணேசன், திரு. வி. .. மங்களூர் (செ.வ.)
52. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
58. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
59. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
60. கனகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
61. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
62. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
63. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்
64. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2
65. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்
66. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)

67. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)
68. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
69. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்
70. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
71. கோபிநாத், திரு. கே. .. ஒசூர்
72. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
73. கோவிந்தராஜ், திரு. வெ .. கிருஷ்ணகிரி
74. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
75. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
76. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
77. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
78. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
79. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
80. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
81. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
82. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி
83. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை
84. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
85. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை
86. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்
87. சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பரம்
88. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
89. சாமி, திரு. ஆர். .. மேலூர்
90. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்



91. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
92. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)
93. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
94. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்
95. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. சூரூர்
96. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
97. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
98. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
99. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
100. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
101. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
102. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
103. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
104. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
105. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்
106. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்
107. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்
108. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி
109. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி
110. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்
111. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்
112. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்
113. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

| | | |
|---|---|---|
| 114. | சோமசுந்தரம், திரு. வி. | .. உத்திரமேரூர் |
| 115. | ஞானசேகரன், திரு. சி. | .. வேலூர் |
| 116. | ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. | .. திருநாவலூர் |
| 117. | தமிழரசன், முனைவர் செ.கு. | .. நன்னிலம் (செ.வ.) |
| 118. | தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி | .. மேல்மலையனூர் |
| 119. | தம்பிதுரை, டாக்டர் மு. | .. பர்கூர் |
| 120. | தவமணி, திரு. க. | .. திருவிடைமருதூர் |
| 121. | தளவாய் சுந்தரம், திரு. ந. | .. கன்னியாகுமரி |
| 122. | தனபால், திரு. ப. | .. சங்கரி (செ.வ.) |
| 123. | தாமோதரன், திரு. எஸ். | .. விருதுநகர் |
| 124. | தாமோதரன், திரு. செ. | .. கிணத்துக்கடவு |
| 125. | தாமோதிரன், திரு. ப.வெ. | .. பொங்கலூர் |
| 126. | திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. | .. பேராவூரணி |
| 127. | துரைமுருகன், திரு. | .. காட்பாடி |
| 128. | துரைராஜ், திரு. சி. | .. சேடப்பட்டி |
| 129. | தென்னரசு, திரு. கே.எஸ். | .. ஈரோடு |
| 130. | நடராசன், திரு. வது. | .. இளையான்குடி |
| 131. | நடராஜன், திரு. அ. | .. குத்தாலம் |
| 132. | நடராஜன், திரு. எஸ். | .. நாட்ராம்பள்ளி |
| 133. | நடராஜன், திரு. பி.கே.டி. | .. ஆத்தூர் |
| 134. | நயினார் நாகேந்திரன், திரு. | .. திருநெல்வேலி |
| 135. | நரசிம்மன், திரு. பி.எம். | .. பள்ளிப்பட்டு |
| 136. | நளினி மனோகரன், திருமதி | .. போளூர் |



| | | |
|---|---|---|
| 137. | நன்மாறன், திரு. என். | .. மதுரை கிழக்கு |
| 138. | நீலகண்டன், திரு. ப. | .. ஆற்காடு |
| 139. | நீலமேகவர்ணம், திரு. லெ. | .. சாத்தான்குளம் |
| 140. | நெப்போலியன், திரு. து. | .. வில்லிவாக்கம் |
| 141. | பச்சைமால், திரு. கே.டி. | .. குளச்சல் |
| 142. | பதினெட்டாம்படியான், திரு. க. | .. முதுகுளத்தூர் |
| 143. | பரணிகுமார், திரு. பா. | .. திருச்சிராப்பள்ளி-1 |
| 144. | பரிதி இளம்வழுதி, திரு. | .. எழும்பூர் (செ.வ.) |
| 145. | பவானி கருணாகரன், திருமதி கே. | .. அரக்கோணம் (செ.வ.) |
| 146. | பழனிசாமி, திரு. கே.எஸ். | .. பெருந்துறை |
| 147. | பழனிசாமி, திரு. ஜி. | .. திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 148. | பழனியப்பன், திரு. பெ. | .. மொரப்பூர் |
| 149. | பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. | .. குறிஞ்சிப்பாடி |
| 150. | பன்னீர்செல்வம், திரு. ஓ. | .. பெரியகுளம் |
| 151. | பாண்டுரங்கன், திரு. கே. | .. அணைக்கட்டு |
| 152. | பாப்பாசுந்தரம், திரு. அ. | .. குளித்தலை |
| 153. | பாரமலை, திரு. க. | .. மானாமதுரை (செ.வ.) |
| 154. | பாரிமோகன், திரு. கி. | .. தருமபுரி |
| 155. | பாலகிருஷ்ணன், திரு. சோ. | .. கடலாடி |
| 156. | பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். | .. தொண்டாமுத்தூர் |
| 157. | பாலசுப்ரமணியன், திரு. கே.கே. | .. ஸ்ரீரங்கம் |
| 158. | பாலபாரதி, செல்வி க. | .. திண்டுக்கல் |

159. பாலன், திரு. எஸ்.எம். .. லால்குடி
160. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். .. சேரன்மகாதேவி
161. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
162. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
163. பூபதி மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
164. பூவராகமூர்த்தி, திரு. ஏ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
165. பெருமாள், திரு. என்.கே. .. விளாத்திகுளம்
166. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. .. பொள்ளாச்சி
167. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
168. பொன்னம்பலம், திரு. டி.பி. .. சமயநல்லூர் (செ.வ.)
169. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு
170. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
171. மகாலிங்கம், திரு. எஸ். .. அவினாசி (செ.வ.)
172. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
173. மஹேஸ்வரி, திருமதி எ.எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு
174. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
175. மணி, திரு. டி. .. விளவங்கோடு
176. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
177. மலையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை
178. மல்லிகா சின்னசாமி, திருமதி .. முசிறி
179. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி
180. மில்லர், திரு. அ. .. கூடலூர்
181. முரளிதரன், திரு. கே.வி. .. தளி



182. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)
183. முருகேசன், திரு. ஆகு. .. ஆத்தூர்
184. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டினம்
185. மைதிலி, திருமதி தி. .. காஞ்சிபுரம்
186. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
187. மோகன், திரு. ப. .. சின்னசேலம்
188. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
191. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிசெட்டிப்பாளையம்
192. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்
193. ராதாரவி, திரு. .. சைதாப்பேட்டை
194. ராமசாமி, திரு பி.சி. .. மொடக்குறிச்சி
195. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்
196. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்
197. ராஜகோபால், திரு. ஆ. .. சிவகாசி
198. ராஜம்மாள், திருமதி எஸ். .. தூத்துக்குடி
199. ராஜா, திரு. எச். .. காரைக்குடி
200. ராஜாங்கம், திரு. வி.ஆர். .. சோழவந்தான்
201. ராஜு, திரு. எச்.எம். .. உதகமண்டலம்
202. ரெங்கநாதன், திரு. என். .. பூம்புகார்
203. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. .. பேரூர்
204. ரோகிணி, டாக்டர் திருமதி ஆ. .. குளத்தூர் (செ.வ.)

205. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு
206. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. .. அரவக்குறிச்சி
207. வடிவேல், திரு. ஆர். .. வாணியம்பாடி
208. வளர்மதி, திருமதி பா. .. ஆலந்தூர்
209. வளர்மதி ஜெபராஜ், திருமதி .. மதுரை மேற்கு
210. வள்ளல் பெருமான், டாக்டர் பி. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
211. வாசுதேவன், திரு. பெ. .. மதுராந்தகம்
212. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்
213. வில்வநாதன், திரு. இரா. .. சோளிங்கர்
214. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. .. பூங்கா நகர்
215. விஜயகுமார், திரு. கே.எஸ். .. கும்மிடிப்பூண்டி
216. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. புதுக்கோட்டை
217. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. .. பனமரத்துப்பட்டி
218. வீரபாண்டியன், திரு. ஜெக. .. மயிலாடுதுறை
219. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி
220. வெங்கடாஜலம், திரு. செ. .. சேலம்-I
221. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
222. வேலு, திரு. எ.வ. .. தண்டராம்பட்டு
223. வேலுசாமி, திரு. செ.ம. .. பல்லடம்
224. வேல் முருகன், திரு. தி. .. பண்ருட்டி
225. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்
226. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு
227. ஜீவானந்தம், திரு. இரா. .. நாகப்பட்டினம்



228. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. .. ஆரணி
229. ஜெயக்குமார், திரு. கு. .. நாமக்கல் (செ.வ.)
230. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்
231. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஆண்டிப்பட்டி
232. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
233. ஹக்கீம், திரு. எம்.ஏ. .. மதுரை மத்தி
234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. திருவட்டாறு
235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி .. (நியமனம்)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

- - -

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## புரட்டாசி 12, பார்த்திப - திருவள்ளுவர் ஆண்டு 2036

## 2005 செப்டம்பர் 28, புதன்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்*
*நடைதெரிந்த நன்மை யவர்"*

சொற்களின் நடைமுறைப் போக்கினை ஆராய்ந்தறிந்த நல்லறிவாளர்கள், அவையின் நேரம், நிலைமை ஆகியவற்றை ஆராய்ந்து தெரிந்து, நன்றாக உணர்ந்து சொல்ல வேண்டும்.

### 1. வினாக்கள்-விடைகள்

**உடுக்குறியிடாத வினாக்கள்**

**(பட்டியல்கள் 9 மற்றும் 10) @**

**பட்டியல் 9**

1—

**பாலம் அமைத்தல்**

**வினா எண் 2556—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஏரியூர் - நெருப்பூர் சாலையில் தின்னபென்னூர் பள்ளத்தில் சிறிய பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

---

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள தின்னபென்னூர் கிராமம் அமைந்துள்ள இடத்தில் பாலம் அமைக்க தோராயமாக ரூ.10.00 இலட்சம் தேவைப்படுகிறது. இப்பணியானது அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் தற்போது இடம் பெறவில்லை.

**2—**

**சாலைகளைச் சீரமைத்தல்**

**வினா எண் 17939—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, வந்தவாசி - ஒசூர் சாலைகளைச் சீரமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இச்சாலையின் சில பகுதிகள் மிகவும் பழுதடைந்த சாலைகள் மேம்பாடு திட்டம் முதல் கட்டத்தில் மேம்பாடு செய்யப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. மேலும், இரண்டாவது கட்டத்தில் சில சாலைப் பகுதிகள் தார் நொடிகள் போட்டு சாலை நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள சாலைப் பகுதி போக்குவரத்திற்கு உகந்ததாக உள்ளது.

**3—**

**சாலை சீரமைத்தல்**

**வினா எண் 60421—திரு. அ. இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) கபிலர்மலைத் தொகுதி, மோகனூரிலிருந்து நாமக்கல் மற்றும் காட்டுப்புத்தூர் செல்லும் சாலையைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாநில நெடுஞ்சாலையாகப் பராமரிக்கப்பட்டு வரும் மல்லியகரை — ராசிபுரம் — திருச்செங்கோடு — ஈரோடு சாலையில் கி.மீ. 77/2 — 87/2 வரை மத்திய சாலை நிதியிலும் மற்றும் கி.மீ. 93/2 — 93/8 வரை முதலமைச்சரின் சிறப்புச் சாலைப் பழுதுபார்ப்புத் திட்டத்தின் மூலமாகவும் பணி மேற்கொள்ளப்பட்டு தற்போது சாலை நல்ல நிலையில் உள்ளது.

**4—**

**எழுத்தர் உரிமத்தைப் புதுப்பித்தல்**

**வினா எண் 80487—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சார்பதிவாளர் அலுவலகங்களில் ஆவண எழுத்தராக உரிமம் பெற்றவர்கள் எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை தங்களுடைய உரிமத்தைப் புதுப்பிக்க வேண்டும் என அரசு அறிவித்துள்ளது?

(ஆ) அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) அரசாணை எண் 267, வணிகவரித் துறை, நாள் 10-9-1998-ன் படி சார்பதிவாளர் அலுவலகங்களில் ஆவண எழுத்தர் உரிமங்கள் ஐந்து ஆண்டு காலத்திற்கு ஒருமுறை புதுப்பிக்கப்படுகின்றன.

(ஆ) மாநில அளவில் ஆவண எழுத்தராக ('A' State Licence) உரிமம் பெற்றவர்களின் உரிமங்கள், புதுப்பிக்கக் கோரும் மனுக்கள் உரிய மாவட்டப் பதிவாளர் மூலம் பெறப்பட்டு, "5 ஆண்டு காலத்திற்கு" பதிவுத் துறை தலைவர் அலுவலகத்தில் கூடுதல் சீட்டுப் பதிவாளரால்

புதுப்பிக்கப்பட்டு மீள அனுப்பப்படுகின்றன. மாவட்ட அளவில் ஆவண எழுத்தராக உரிமம் ('B' District Licence), உப பதிவு மாவட்ட அளவில் ஆவண எழுத்தராக உரிமம் ('C' Sub-District Licence) பெற்றவர்களின் உரிமங்கள், உரிய மாவட்டப் பதிவாளரால் ஐந்தாண்டு காலத்திற்குப் புதுப்பிக்கப்படுகின்றன.

**5—**

**கலப்படம்**

**வினா எண் 52034—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேங்காய் எண்ணெயில் கலப்படம் செய்து விற்பனை செய்வதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தேங்காய் எண்ணெயில் கலப்படம் தொடர்பாக குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை ஆய்வாளர்களால் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, கடந்த 2003 ஆம் ஆண்டு 29 வழக்குகளும் 01-01-2004 முதல் 30-4-2004 வரை 23 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால், வணிகர்கள் தொடர்ந்த வழக்கின் பேரில் 15-06-2004 அன்று இடப்பட்ட சென்னை உயர் நீதிமன்ற ஆணையின்படி, தற்போது தேங்காய் எண்ணெய் கலப்படம் சம்பந்தப்பட்ட வழக்குகள் ஏதும் பதிவு செய்யப்படவில்லை.

**6—**

**ஊட்டச்சத்து மைய அலுவலகம்**

**வினா எண் 41818—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை, கணக்கம்பாளையம் ஊராட்சி, ஜீவா நகர் பகுதியில் ஊட்டச்சத்து மைய அலுவலகம் கட்டடப் பணி இடையில் நிறுத்தப்பட்டுள்ளதால், அரசு நிதி ஒதுக்கீடு செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) உடுமலைப்பேட்டை, கணக்கம்பாளையம் ஊராட்சி, ஜீவா நகர் பகுதியில் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம் அரசு கட்டடத்தில் 1-4-2004 முதல் செயல்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

**7—**

**கழிப்பறை வசதி**

**வினா எண் 52560—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திருப்புங்கூர், கொண்டல், தொழுதூர் அங்கன்வாடி மையங்களுக்கு கழிப்பறை வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திருப்புங்கூர் மற்றும் தொழுதூர் அங்கன்வாடி மையங்களுக்கு 2004 அக்டோபர் மாதத்தில் முழு சுகாதார இயக்கத்தின்கீழ் கழிப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. கொண்டல் மையத்தில், மேற்படி திட்டத்தின்கீழ் ஜனவரி 2005-ல் கழிப்பறை வசதி செய்து தரப்பட்டுள்ளது.

**8—**

**கைமுறை காகித அலகு**

**வினா எண் 73876—திரு. ப. அரசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலம் மற்றும் சித்தகண்ணியில் கைமுறை காகித அலகு மூடப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை திறக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

[2005 செப்டம்பர் 28

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வாரியத்தின் கைமுறை காகித அலகுகள் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்ததாலும் வாரியத்தின் அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் கை முறை காகிதங்களுக்கான விலை வெளிச்சந்தையில் விற்கப்படும் விலையைவிட கூடுதலாக இருப்பதாலும், போதிய தேவை நமுனாக்கள் பெறப்படாமல் உற்பத்தித் திறன் மிகவும் குறைந்த நிலையில் உள்ளதாலும், 15 கைமுறை காகித அலகுகள் அரசாணை (நிலை) எண் 199, கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணிநூல் மற்றும் கதர் (பி.2) துறை, நாள் 12-11-1999-ன்படி நிரந்தரமாக மூடப்பட்டுள்ளன. தற்போது வாரியத்தில் கடுமையான நிதி நெருக்கடியான நிலை உள்ளதால் புதிதாக எந்தவொரு கைமுறை காகித அலகினையும் திறந்து நடத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

**9—**

**மானியம்**

**வினா எண் 33948—திரு. க. பாரமலை:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரு. என்.எம்.ஆர். சுப்பராமன் நினைவு உறைவிட ஆரம்பப் பள்ளியில் படிக்கும் பட்டியல் இன பழங்குடி மாணவ-மாணவியருக்கு மானியம் வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேருக்கு வழங்கப்படுகிறது?

**விடை.—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திரு. என்.எம்.ஆர். சுப்பராமன் நினைவு உறைவிட ஆரம்பப் பள்ளியில் படிக்கும் பட்டியல் இன பழங்குடி மாணவ, மாணவியருக்கு மானியம் எதுவும் இத்துறையால் வழங்கப்படவில்லை.



2005 செப்டம்பர் 28]

**10—**

**சுற்றுச்சுவர் கட்டுதல்**

**வினா எண் 46681—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, எருக்கூர் ஊராட்சியிலுள்ள ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம் மற்றும் சீர்காழி தொகுதி, எருக்கூர் ஊராட்சியிலுள்ள ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளி சர்வ சிக்ஷ அபியான் திட்டத்தின்கீழ் 2002-2003 மற்றும் 2003-2004 ஆம் நிதியாண்டுகளில் ரூ.5,000/-, ரூ.10,000/- வீதம் சாலையோரமாக 280 சதுர அடி நீளத்திற்கு சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

**11—**

**பணிகளில் இட ஒதுக்கீடு**

**வினா எண் 70288—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் நடத்தும் கல்லூரிகளில் தாழ்த்தப்பட்ட மற்றும் மலை ஜாதியினருக்குப் பணிகளில் இட ஒதுக்கீடு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசுக் கல்லூரிகளிலும், அரசின் நிதி உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் மட்டும்தான் இட ஒதுக்கீடு கொள்கை பின்பற்றப்படுகிறது. தனியார் நிறுவனத்திலும் (தொழில்), தனியார் நடத்தும் கல்வி நிறுவனங்களிலும் இட ஒதுக்கீடு கொள்கை பின்பற்றப்படவில்லை.

[2005 செப்டம்பர் 28

12—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 50631—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கோபாலசமுத்திரம் ஊராட்சி, சாமியத்தில் உள்ள துணை கால்நடை மருத்துவமனைக்கு ஆழ்குழாய்க் கிணறு அமைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மயிலாடுதுறை கோட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியப் பகுதி, சாமியத்தில் கால்நடை கிளை நிலையம் ஏதும் செயல்படவில்லை. ஆனால், சாமியத்தில் கொள்ளிடம் கால்நடை மருந்தகம் என்ற பெயரில் மருந்தகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அம்மருந்தகத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு நீர்த்தேக்கத் தொட்டி ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளதால் அவ்விடத்தில் மீண்டும் ஆழ்குழாய்க் கிணறு அமைப்பதற்கான அவசியம் ஏதுமில்லை.

(ஆ) எழாது.

13—

## கால்நடை மருத்துவமனையைப் புதுப்பித்தல்

**வினா எண் 58183—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் பழுதடைந்துள்ள கால்நடை மருத்துவமனையைப் புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?



2005 செப்டம்பர் 28]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை கால்நடை மருத்துவமனை கட்டடம் நெடுஞ்சாலைத் துறை பராமரிப்பில் உள்ளது. ஆதலால், கோயம்புத்தூர் நெடுஞ்சாலைத் துறை செயற்பொறியாளர் மூலம் நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளரை அணுகி பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

14—

## கால்நடை மருத்துவமனை விரிவுபடுத்துதல்

**வினா எண் 69642—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, காட்டாம்பட்டி கால்நடை மருத்துவமனையை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) முசிறி தொகுதி, காட்டாம்பட்டியில் கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. இதனை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

15—

## இலவசப் பரிசோதனை

**வினா எண் 69883—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 28

எடப்பாடி தொகுதி, பால் உற்பத்தியாளர் சங்க உறுப்பினர்களின் கால்நடைகளைக் கால்நடை மருத்துவர் மூலம் இலவசப் பரிசோதனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை.—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

பால் உற்பத்தியாளர்கள் சங்க உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு ஆவின் நிறுவனம் மூலம் சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் எடப்பாடி தொகுதி, பால் உற்பத்தியாளர் சங்க உறுப்பினர்களின் கால்நடைகள் சிகிச்சைக்கு வரும்போது கால்நடை மருந்தகங்களில் இலவசமாகப் பரிசோதனை செய்யப்படும்.

**16—**

### கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம்

**வினா எண் 71440—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், ஆண்டியப்பனூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை கட்டடம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை.—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஆண்டியப்பனூர் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் ஒன்று வாடகை இல்லாத கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட்ட பின் புதிய கால்நடை மருத்துவமனை கட்டடம் அமைப்பது குறித்து முடிவு செய்யப்படும்.



2005 செப்டம்பர் 28]

**17—**

### ஆட்டுப் பண்ணை அமைத்தல்

**வினா எண் 74537—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, நாகமரையில் அரசு ஆட்டுப் பண்ணை ஒன்று அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை.—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) பெண்ணாகரம் தொகுதி, நாகமரையில் ஆட்டுப் பண்ணை அமைக்க போதிய நீர் ஆதாரமும், நில வசதி, உபகரணங்கள், பணியாளர், உள்கட்டமைப்பு வசதிகள் பெருமளவில் தேவைப்படுவதால் அப்பகுதியில் புதியதாக ஆட்டுப் பண்ணை அமைத்திட தற்போது சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

**18—**

### குடற்புழு நீக்கக் கட்டணம்

**வினா எண் 74746—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆடுகளுக்கு குடற்புழு நீக்க, கால்நடை மருத்துவமனையில் கட்டணம் வசூல் செய்யப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கட்டணத்தை நீக்க அரசு ஆவன செய்யுமா?

[2005 செப்டம்பர் 28

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* ஆடுகளுக்கு குடற்புழு நீக்க வசூலிக்கப்பட்டு வந்த கட்டணம் அரசாணை எண் 87, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் துறை, நாள் 13-4-2005-ன்படி இரத்து செய்யப்பட்டு, தற்போது கால்நடை மருத்துவமனைகளில் ஆடுகளுக்கு இலவசமாகவே குடற்புழு நீக்கம் செய்யப்பட்டு வருகிறது.

**19—**

**கால்நடை இனப்பெருக்கப் பிரிவு**

**வினா எண் 75703—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* 2004-2005 ஆம் ஆண்டில் கால்நடை இனப்பெருக்கப் பிரிவிற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் எவ்வளவு?

*(ஆ)* முந்தைய ஆண்டினைவிட இவ்வாண்டில் கூடுதலாக இனப்பெருக்கம் உண்டானதா? ஆம் எனில், எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* 2004-2005 ஆம் ஆண்டில் கால்நடை இனப்பெருக்கப் பிரிவிற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூ.723.98 இலட்சம் ஆகும்.

*(ஆ)* 2003-2004-ல் 31.02 இலட்சம் மற்றும் 2004-2005-ல் 29.23 இலட்சம் செயற்கைமுறை கருவூட்டல் மேற்கொள்ளப்பட்டன. 2003-2004ஐவிட 2004-2005-ல் செயற்கை முறை கருவூட்டல் குறைவாக மேற்கொள்ளப்பட்டன. இதற்கு துறையில் மொத்தம் உள்ள 1,799 கிளை நிலையங்களில் 948 கிளை நிலையங்களில் கால்நடை ஆய்வாளர் பதவிகள் காலியாக இருந்ததாலும், கடந்த ஆண்டில் நிலவிய வறட்சியும் காரணமாகும்.



2005 செப்டம்பர் 28]

**20—**

**கால்நடை துணை மருத்துவ நிலையம்**

**வினா எண் 75704—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* செங்கல்பட்டு நகரில் கால்நடை துணை மருத்துவ நிலையங்கள் தோற்றுவிக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* செங்கற்பட்டு நகரில் ஒரு பிரதம மருத்துவமனை செயல்பட்டு வருவதாலும், புதிய கால்நடை கிளை நிலையங்கள் துவக்கிட விதிக்கப்பட்ட தடை உத்தரவு இன்னும் அமலில் உள்ளதாலும் செங்கற்பட்டு நகரில் புதிய கால்நடை கிளை நிலையம் துவங்கிட தற்போது வாய்ப்பில்லை.

**21—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா எண் 77428—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, தாதாபுரம் பஞ்சாயத்து தாதாபுரத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, தாதாபுரத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2005 செப்டம்பர் 28

22—

## கால்நடை மருந்தகமாக்குதல்

**வினா எண் 83065—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், எதுமலை, கால்நடை கிளை நிலையத்தைக் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், எதுமலை கால்நடை கிளை நிலையத்தைக் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த தற்போது அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) எழாது.

23—

## நவீன துப்பாக்கி வழங்குதல்

**வினா எண் 58758—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள வனத் துறை அதிகாரிகளுக்கு நவீன துப்பாக்கி வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கோவை மாவட்டம், வால்பாறை பகுதியில் இந்திரா காந்தி வன உயிரின உய்விடம் தேசியப் பூங்காவில் அடங்கிய வால்பாறை



2005 செப்டம்பர் 28]

மற்றும் மானாம்பள்ளி சரகங்கள் உள்ளன. இப்பகுதியில் வனம் மற்றும் வன உயிரினப் பாதுகாப்புப் பணிக்காக இப்பகுதியில் பணிபுரியும் களப் பணியாளர்களுக்கு அவ்வப்போது தேவையான ஆயுதங்கள் வாங்கி விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இந்த இரண்டு சரகங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

| வால்பாறை சரகம் | எண்ணிக்கை |
|---|---|
| 1. கிளாக் 17 பிஸ்டல் | 1 |
| 2. 315 ரைபிள் | 2 |
| 3. 410 மஸ்கட் | 1 |
| 4. 7.62 ஏக்ஷன் ரைபிள் | 2 |
| 5. 303 ரைபிள் | 1 |

| மானாம்பள்ளி சரகம் | எண்ணிக்கை |
|---|---|
| 1. கிளாக் 17 பிஸ்டல் | 1 |
| 2. 315 ரைபிள் | 2 |
| 3. 7.62 போல்டு ஏக்ஷன் ரைபிள் | 4 |
| 4. 303 ரைபிள் | 1 |

மேலும், தற்போது இருப்பிலுள்ள ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்துகள் பாதுகாப்புப் பணிக்குப் போதுமானதாக உள்ளன.

24—

## சந்தன மரங்களை வெட்டி கடத்துதல்

**வினா எண் 63131—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வனத் துறை கல்லூரி அலுவலகத்தில் உள்ள சந்தன மரங்களை வெட்டி கடத்திச் சென்றது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீதான நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ)* வால்பாறை தொகுதியில் வனத் துறை கல்லூரி அலுவலகம் ஏதுமில்லை. ஆனால், கோவையில் தென்னக வனச் சரகர்கள் பயிற்சிக் கல்லூரி வளாகத்தில் உள்ள சந்தன மரங்கள் திருட்டுத்தனமாக வெட்டி கடத்தப்பட்டன.

*(ஆ)* தென்னக வனச் சரகர்கள் பயிற்சிக் கல்லூரி வளாகத்தில் 12-07-2004 அன்று சந்தன மர திருட்டு வெட்டு நடைபெற்றது. இந்நிகழ்வில் உடனடியாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதன் விவரம் பின்வருமாறு:

| வழக்கு | பிடிபட்ட சந்தனமரக் கட்டைகளின் அளவு | பிடிபட்ட குற்றவாளிகள் பெயர் | வழக்கின் நிலவரம் |
|---|---|---|---|
| (1) STOR No. 6/2004 நாள் 08-09-2004 | 5.000 கி.கி. | கருப்பசாமி (எ) பெரியகருப்பன், த/பெ.பாப்பன், ஐயம்பட்டி கிராமம் | ரூ.5,000 இணக்கக் கட்டணம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டு வழக்கு முடிக்கப்பட்டது. |
| (2) STOR No. 7/2004 நாள் 11-09-2004 | 64.000 கி.கி. | 1. திரு. ராஜன், த/பெ. ரங்கசாமி, கோஞ்சூர், கேரளா. 2. திரு. செல்வன், த/பெ. அய்யாசாமி, கோஞ்சூர், கேரளா. 3. திரு. வீரன், த/பெ. சாத்தன், கோஞ்சூர், கேரளா. | மேற்படி மூவரில் திரு. ராஜன் மற்றும் திரு. செல்வன் தப்பி ஓடிவிட்டனர். பிடிப்பட்ட திரு. வீரன் மீது வழக்கு தொடரப்பட்டு கோவை நீதிமன்ற எண் 7-ல் நிலுவையில் உள்ளது. |





மேலும், மேற்படி சந்தன மர திருட்டுக்களைத் தடுக்கும் பொருட்டு மேற்படி வளாகத்தில் பாதுகாப்பினை பலப்படுத்தும் வகையில் மைய மற்றும் மாநில அரசு அலுவலர்களின் கூட்டுக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டு சந்தன மரக் குற்றங்கள் நிகழாவண்ணம் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

**25—**

## குடிநீர் மாசுக்கட்டுப்பாடு

**வினா எண் 69619—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

என்.எல்.சி. நிறுவனத்தால் சுற்றுப்புற கிராமங்களில் குடிநீர் மாசுபடுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

என்.எல்.சி. நிறுவனம் சுற்றுப்புற கிராமத்தில் உள்ள கிணற்று நீரின் தன்மையைத் தொடர்ந்து கண்காணித்து வருகின்றது. ஆய்வு முடிவுகளின்படி நிலத்தடி நீரின் தரம் இந்திய தர அளவிற்கு உட்பட்டுள்ளது. மேலும், இந்நிறுவனம் சுற்றுப்புற கிராமங்களில் ஆழ்குழாய்க் கிணறு மற்றும் திறந்தவெளி கிணறுகள் அமைத்து கிராம மக்களுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுத்துள்ளது.

**26—**

## வன அலுவலகத்திற்குக் கட்டட வசதி

**வினா எண் 75155—திரு. ப. மோகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சியில் கோட்ட வன அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

2005-2006 ஆம் ஆண்டில் விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி கோட்ட வன அலுவலகக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் இல்லை. எனினும், 2006-2007 ஆம் ஆண்டில் இப்பணியை மேற்கொள்ள பரிசீலிக்கப்படும்.

**27—**

## குடிசை விடுகளை மாற்றி விடு கட்டித் தருதல்

**வினா எண் 37954—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, சேத்துமடை, அண்ணாநகர் பகுதியிலுள்ள குடிசை வீடுகளை மாற்றி வீட்டு வசதி வாரியம் மூலம் நீண்டகால கடனால் வீடு கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பகுதி குடிசைப் பகுதி வாழ் குடும்பங்கள் வால்மீகி அம்பேத்கர் வீட்டு வசதித் திட்டத்திற்கான நிதி ஆதாரங்களுக்கு சம்மதம் தெரிவித்து வீடுகள் அமைத்துக்கொள்ள முன்வராததன் காரணமாக வீடுகள் அமைக்க இயலவில்லை.

**28—**

## விடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம்

**வினா எண் 38576—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) சேலம் மாநகராட்சி, 10-வது கோட்டம், புத்துமாரியம்மன் கோயில் அருகில் உள்ள தேசிய புனரமைப்பு காலனி, 36-வது கோட்டம், நஞ்சம்பட்டி, 40-வது கோட்டம், பஞ்சம்பட்டி ஆகிய இடங்களில் வாம்பே திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி, 10-வது கோட்டம், புத்துமாரியம்மன் கோயில் அருகில் உள்ள தேசிய புனரமைப்பு காலனி 36-வது கோட்டம், நஞ்சம்பட்டி 40-வது கோட்டம், பஞ்சம்பட்டி ஆகிய பகுதியில் வாம்பே திட்டத்தின்கீழ் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் வீடுகள் குடிசை வாழ் மக்களிடம் போதிய ஆதரவு கிடைக்காததால் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தில் வீடுகள் கட்டுவதற்கு இயலாத நிலை உள்ளது.

**29—**

## ஆசிரியர் பெறும் உதவித்தொகை

**வினா எண் 67986—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, வேலூர் கந்தசாமிக் கண்டர் கல்லூரிக்கு அரசு அளித்துள்ள நிதி உதவி மற்றும் ஆசிரியர் பெறும் ஊதியத் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, வேலூர் கந்தசாமிகண்டர் கல்லூரிக்கு ஆண்டுக்கு சுமார் ரூ.2.20 இலட்சம் அரசு நிதியுதவி, ஆசிரியர்கள் சார்பாக ஊதியத் தொகையாக வழங்கப்படுகிறது. இது தவிர வேறு நிதி உதவி எதுவும் அளிக்கப்படவில்லை.

30—

## நூல்களைப் பாதுகாத்தல்

**வினா எண் 70204—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் ஆவணக் காப்பகத்தில் உள்ள நூல்களைப் பாதுகாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் ஏறத்தாழ 2.3 இலட்சம் நூல்கள் உள்ளன. இவற்றுள் புத்தகங்கள், அரசு ஆண்டறிக்கைகள், மக்கட்தொகை கணக்கெடுப்பு விவரச் சுவடிகள், அல்மனாக் மற்றும் டைரக்டரிகள், பாராளுமன்ற நடவடிக்கைகள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள் மற்றும் சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள், தமிழ் மற்றும் ஆங்கில சஞ்சிகைகள் அடங்கும். தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் உள்ள மேற்கண்ட நூல்களெல்லாம் உரிய முறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அதாவது உலர் முறை அமிலத்தன்மை நீக்கல் (Dry De acidification) புகையூட்டல் (Fumigation), ஒட்டுமுறை (Lamination), கட்டும் முறை (Binding) மற்றும் சிப்பான் செப்பனிடல் (Chiffon mending) ஆகிய ஐவகை முறைகளில் நூல்கள் பாதுக்கப்பட்டு வருகின்றன.

31—

## வைப்புத் தொகை

**வினா எண் 74340—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வணிகர்கள் பதிவு எண் (ஆர்.சி) எடுத்தவர்கள் எண்ணிக்கை எவ்வளவு?



(ஆ) பதிவு எண் (ஆர்.சி) எடுக்கும்போது நிரந்தர வைப்புத் தொகை செலுத்த வேண்டுமா?

(இ) ஆம் எனில், எவ்வளவு தொகை?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) 1-4-2005-ல் தமிழகத்தில் பதிவு பெற்ற வணிகர்களின் எண்ணிக்கை 3,44,184 ஆகும்.

(ஆ) ஆம்.

(இ) 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் பிரிவு 21(1ஏ)-ன்படி, புதிதாகப் பதிவு எண் எடுக்கும்போது உத்தேசமாக அளித்துள்ள வரி விதிப்புக்குட்பட்ட விற்பனைத் தொகைமீது செலுத்தப்பட வேண்டிய வரியில் 1½ மடங்கிற்கு மிகாமல் வைப்புத் தொகை அதிகபட்சமாக நிர்ணயம் செய்ய சட்டத்தில் வழியுள்ளது.

32—

## மீனவர் அங்காடி

**வினா எண் 69420—திரு. நா. சந்திரமோகன்:** மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பழையாறு மற்றும் திருமுல்லைவாசல் மீனவர் கிராமத்தில் மீனவர் அங்காடியை கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, பழையாறு மற்றும் திருமுல்லைவாசல் மீனவர் கிராமத்தில் மீனவர் அங்காடி கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2005 செப்டம்பர் 28

33—

## தேயிலை எஸ்டேட் இயங்கச் செய்தல்

**வினா எண் 66887—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை, உபாசியில் தேயிலை ஆராய்ச்சி நிலையத்திற்குச் சொந்தமான எஸ்டேட் மூடியிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை, உபாசி தேயிலை ஆராய்ச்சி நிலைய தொழிலாளர்கள் 2 மாத சம்பளம் போனஸாக வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதைத் தொடர்ந்து மேற்படி நிறுவனம் 4-12-2004 முதல் கதவடைப்பு செய்யப்பட்டது. ஆனால், கோவை, தொழிலாளர் துணை ஆணையர் முன்பு 12-1-2005 அன்று முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்பட்டதன் விளைவாக கதவடைப்பு 13-1-2005 அன்று விலக்கிக் கொள்ளப்பட்டு நிறுவனம் தற்போது முழுமையாக இயங்கி வருகிறது.

34—

## ஆலோசனைக் குழு அமைத்தல்

**வினா எண் 72722—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வால்பாறையில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களைச் சேர்த்து அவர்களுக்கான ஆலோசனைக் குழு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 செப்டம்பர் 28]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 30-4-2002 அன்று வெளியிடப்பட்ட அரசாணை(டி) எண் 349-ல் வால்பாறை தொகுதி தோட்டத் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளையும் சேர்த்து தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு திருத்தி அமைக்கப்பட்டது.

35—

## நல வாரியம்

**வினா எண் 74877—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு தனி நல வாரியம் அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

36—

## இலவச மருத்துவ வசதி மற்றும் வீடு

**வினா எண் 74883—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பீடித் தொழிலாளர்களுக்கு இலவச மருத்துவ வசதி மற்றும் வீடு வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

பீடித் தொழிலாளர்களுக்கான 10 இலவச மருத்துவமனைகள் மத்திய அரசால் நிர்வகிக்கப்படுகிறது. மேலும், மத்திய மாநில அரசின் மானியத்துடன் பீடித் தொழிலாளர்களுக்கான ஒருங்கிணைந்த வீட்டு வசதித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**37—**

## வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தவர்கள்

**வினா எண் 76086—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத்தில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தனது கல்வித் தகுதியினைப் பதிவு செய்துள்ளவர்கள் எத்தனை பேர்?

(ஆ) பட்டதாரிகளுக்குப் பணியிட வாய்ப்புகள் வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 30-6-2005 நிலவரப்படி 85,030 நபர்கள் பதிவு செய்துள்ளனர்.

(ஆ) அரசின் தடை ஆணை உள்ளதால் பட்டதாரிகளுக்குப் பணியிட வாய்ப்புகள் வழங்குவது என்பது இயலாத ஒன்றாகும். எனினும் மத்திய/மாநில அரசு/அரசு சார் நிறுவனங்கள் மற்றும் வங்கிகளில் வேலைவாய்ப்பிற்காக நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகளில் கலந்து கொண்டு பணிவாய்ப்பு பெற முயற்சிக்கலாம் என்றும் தகுதியான மனுதாரர்கள் சுயவேலைவாய்ப்பில் ஆர்வமிருப்பின் மாவட்டத் தொழில் மையம் போன்ற நிறுவனங்களை அணுகி பயன் பெறலாம்.



**38—**

## வேலைவாய்ப்பு அலுவலகத்தை மாற்றுதல்

**வினா எண் 79052—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூரில் இயங்கிவந்த வேலைவாய்ப்பு கிளை அலுவலகத்தை மீண்டும் மேட்டூருக்கு மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

மேட்டூரில் மீண்டும் துணை வேலைவாய்ப்பு அலுவலகத்தை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

**39—**

## வேலைவாய்ப்பில் முன்னுரிமை

**வினா எண் 79505—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்திருக்கும் தாழ்த்தப்பட்ட அருந்ததியர் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் 30-06-2005 தேதிய நிலவரப்படி மொத்தமாக 38,34,263 நபர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களில் தாழ்த்தப்பட்டோர் 9,63,953 பதிவுதாரர்கள் வேலைக்காகப் பதிவு செய்து காத்திருக்கிறார்கள். அவர்களுள் பட்டதாரிகள் 31-12-2004 நிலவரப்படி 1,14,059 ஆவர். முதுநிலைப் பட்டதாரிகள் 29,645 நபர்கள் ஆவர். 2004 ஆம் ஆண்டில் தாழ்த்தப்பட்ட பட்டதாரிகள் 219 பதிவுதாரர்களும், முதுநிலைப் பட்டதாரிகள் 13 பதிவுதாரர்களும் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர். வேலையளிப்போர்களிடமிருந்து பெறப்படும்

காலியிடங்களுக்கு இனச்சுழற்சிக்கு ஏற்பு, பதிவு மூப்பு அடிப்படையில் பதிவுதாரர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களால் பரிந்துரை செய்யப்படுகின்றனர். அண்மைக் காலத்தில் அரசின் ஆட்குறைப்பு கொள்கையால் காவலர், மருத்துவர் மற்றும் ஆசிரியர் பணியிடங்கள் தவிர ஏனைய தற்காலிகப் பணியிடங்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களின் மூலம் நிரப்பிட அரசாணை எண் 212, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 29-11-2001-ல் அரசு தடை விதித்துள்ளதால் வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்குத் தெரிவிக்கப்படும் காலியிடங்களின் எண்ணிக்கை கணிசமான அளவு குறைந்துள்ளது.

இந்நிலையில் தாழ்த்தப்பட்ட அருந்ததியர் பட்டதாரிகளுக்கு மட்டும் தனியே வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கும் நடவடிக்கை ஏதும் அரசிடம் இல்லை.

**40—**

### இலவச வீடுகள் கட்டுதல்

**வினா எண் 80344—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதியில் உள்ள பனையேறும் தொழிலாளர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதியில் உள்ள பனையேறும் தொழிலாளர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**41—**

### அரசு தொழிற் பயிற்சி நிலையம்

**வினா எண் 81954—திரு. ப. அரசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார் கோவிலில் அரசு தொழிற் பயிற்சி நிலையம் தொடங்கும் கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளதா?



**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

இல்லை.

**42—**

### உதவித் தொகை வழங்குதல்

**வினா எண் 83371—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பத்து ஆண்டுகளுக்கு மேல் பதிவு செய்து வேலையில்லாமல் காத்திருப்பவர்களுக்கு உதவித்தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பத்து ஆண்டுகளுக்கு மேல் பதிவு செய்து வேலையில்லாமல் காத்திருப்பவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் இல்லை.

**43—**

### வேலைவாய்ப்பு அலுவலகத்தை மாற்றுதல்

**வினா எண் 83935—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை மீண்டும் கோவை மாநகருக்கு மாற்ற அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

இல்லை.

[2005 செப்டம்பர் 28

**44—**

### குடிநீர் வழங்குதல்

**வினா எண் 67087—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், சித்தூர் பஞ்சாயத்தில் உள்ள எல்லைக்குட்டூர் முனியப்பன் கோவில், சித்தூர் நாக்கியார் தெரு பகுதியில் புதிதாக மேல்நிலைத் தொட்டிகள் கட்டி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி ஒன்றியம், சித்தூர் ஊராட்சியில் உள்ள சித்தூர் நாக்கியார் தெரு குடியிருப்பிற்கு இராசிபுரம்-எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் சித்தூரில் அமைக்கப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்து பகிர்மானக் குழாய் நீட்டிப்புமூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, இக்குடியிருப்புக்குப் புதிதாக மேல்நிலைத் தொட்டி கட்டும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.

அதே ஊராட்சியிலுள்ள எல்லக்குட்டூர் முனியப்பன் கோயில், எல்லக்குட்டை குடியிருப்பின் பகுதி ஆகும். இதன் மக்கட்தொகை 250 ஆகும். இராசிபுரம்-எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் எல்லக்குட்டூர் குடியிருப்பில் உள்ள 15,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து பகிர்மானக் குழாய் மூலம் இப்பகுதிக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தனியாக மேல்நிலைத் தொட்டிகள் கட்டும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.

**45—**

### சாலை, குடிநீர், விளக்கு வசதி

**வினா எண் 67234—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2005 செப்டம்பர் 28]

உடுமலைப்பேட்டை நகரத்தில் அரசு அனுமதி பெறாத பகுதியில் சாலை, குடிநீர், விளக்கு வசதி செய்து தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உடுமலைப்பேட்டை நகரத்தில் அரசு அனுமதி பெறாத பகுதியில் சாலை, குடிநீர், விளக்கு வசதி செய்து தர தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 விதிகளின்படி வழிவகை இல்லை என்பதால் அடிப்படை வசதிகள் செய்து தர இயலாது.

**46—**

### மணிமண்டபம்

**வினா எண் 73601—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை தரமணியில் உள்ள தமிழ்நாடு அரசு திரைப்படக் கல்லூரிக்கு "மறைந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன்" பெயர் சூட்டப்படுமா?

(ஆ) அவருக்கு மணிமண்டபம் எப்போது, எங்கே அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கருத்துரு பரிசீலனையில் இல்லை.

**47—**

### தமிழக அரசின் செய்திப்படங்கள்

**வினா எண் 78146—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அரசின் செய்திப்படங்களை முறையாக திரையிடாத சினிமா அரங்குகள்மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்குமா?

[2005 செப்டம்பர் 28

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தமிழக அரசின் செயல்பாடுகள், தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகள் குறித்த செய்திப்படங்கள் 1955 ஆம் ஆண்டு திரையரங்குகள் (ஒழுங்கு முறை) சட்டப்பிரிவு 6-இன் படி, திரையரங்குகளில் காண்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்திப்படங்களைக் காண்பிக்கத் தவறும் திரையரங்கு உரிமைதாரர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு திரையரங்கின் 'சி' படிவ உரிமம் தற்காலிகமாக நிறுத்தம் செய்யப்பட்டு தண்டனை வழங்கப்படும் முறை நடைமுறையில் உள்ளது.

**48—**

**பழுதடைந்த மைதானத்தைச் சீர்செய்தல்**

**வினா எண் 58757—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் உள்ள ஸ்டான் மோர் இந்துஸ்தான் லீவர் எஸ்டேட் மைதானம் மிகவும் பழுது அடைந்துள்ளதைச் சீர்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் உள்ள ஸ்டான் மோர் இந்துஸ்தான் லீவர் எஸ்டேட் மைதானம் மிகவும் பழுதடைந்துள்ளதைச் சீர்படுத்துவதற்கான நடவடிக்கை ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.



2005 செப்டம்பர் 28]

**49—**

**கைப்பந்துப் போட்டி**

**வினா எண் 59379—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறையில் பெண்கள் கைப்பந்துப் போட்டிகள் நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டம், வால்பாறையில் பெண்கள் கைப்பந்துப் போட்டிகளை நடத்த அரசிடம் நடவடிக்கை இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**50—**

**உடற்பயிற்சி மையம்**

**வினா எண் 63841—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, அகணி, ஆரப்பள்ளம் ஊராட்சி, நெப்பத்தூர் ஊராட்சி மற்றும் அளக்குடி ஊராட்சி, மணிகருப்பு தெரு ஆகிய இடங்களில் உடற்பயிற்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, அகணி, ஆரப்பள்ளம் ஊராட்சி, நெப்பத்தூர் ஊராட்சி மற்றும் அளக்குடி ஊராட்சி, மணிகருப்பு தெரு ஆகிய இடங்களில் உடற்பயிற்சி மையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

[2005 செப்டம்பர் 28

## பட்டியல் 10

1—

### மதுபானக் கடை இடமாற்றம்

**வினா எண் 74349—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, அங்குசெட்டிபாளையம் கிராமத்தில் சேலம் பிரதான சாலையிலுள்ள அரசு மதுபானக் கடையை ஊருக்கு வெளியே மாற்றித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி வட்டம், அங்குசெட்டிபாளையத்தில், சேலம் பிரதான சாலையில் நடைபெற்று வந்த டாஸ்மாக் மதுபானக் கடை (எண் 2603) 10-6-2005 முதற்கொண்டு ஊருக்கு வெளியே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

2—

### சார்பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம்

**வினா எண் 74875—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி சட்டமன்றத் தொகுதி சார்பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



2005 செப்டம்பர் 28]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) பூந்தமல்லி சார்பதிவாளர் அலுவலகம் ஏற்கெனவே நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. புதிய கட்டடம் கட்டவேண்டிய அவசியம் எழவில்லை.

3—

### வாடகையை உயர்த்துதல்

**வினா எண் 67099—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் உள்ள அருள்மிகு மருதமலை சுப்ரமணியர் திருக்கோயில், அருள்மிகு பேரூர் பட்டீஸ்வரர் திருக்கோயில், அருள்மிகு தண்டுமாரியம்மன் திருக்கோயில் மற்றும் கோணியம்மன் திருக்கோயில்களுக்குச் சொந்தமான இடத்தில் கடைகள் வைத்துள்ளவர்களிடம் வாடகையை உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர், மருதமலை அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில் கடைகள் பொது ஏலம் மூலம் வாடகைக்கு விடப்பட்டு வருகிறது. பேரூர் அருள்மிகு பட்டீஸ்வரசுவாமி திருக்கோயிலில் கடைகளின் வாடகை உரிமங்கள் அனைத்தும் ஏலம் டெண்டர் வழியாக விடப்பட்டு வருகின்றன. அருள்மிகு கோணியம்மன் திருக்கோயிலில் கடைகள் உள்ள இடங்கள் இராஜகோபுரம் கட்டுவதற்குத் தேவைப்படுவதால், கடை வாடகைதாரர்களை உயர் நீதிமன்றம் வழியாக வெளியேற்றி கடைகள் திருக்கோயிலால் சுவாதீனம் எடுக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் அருள்மிகு தண்டுமாரியம்மன் திருக்கோயிலின் கடைகளுக்கு விதிமுறைகளின்படி நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு முந்தைய வாடகையை விட தொகை உயர்வு செய்து நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி கடைகளில் வாடகைத் தொகைகளை தற்போது உயர்த்துவதற்கு அவசியம் எழவில்லை.

4—

## தங்கும் விடுதி

**வினா எண் 72039—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை அருள்மிகு சுப்பிரமணியர் திருக்கோயிலுக்கு அறநிலையத் துறை சார்பாக தங்கும் விடுதி கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை வட்டம், அருள்மிகு சுப்பிரமணியர் திருக்கோயிலுக்கு கட்டணச் சீட்டு விற்பனை, கட்டட வாடகை மற்றும் உண்டியல் மூலம் கிடைக்கப் பெறும் தொகையைக் கொண்டு நித்ய பூஜை மற்றும் பணியாளர்களின் ஊதியம், மின் கட்டணம் ஆகிய அத்தியாவசிய செலவுகளுக்குச் செலவிடப்பட்டவை போக, திருக்கோயிலுக்கு உபரிநிதி ஏதும் இல்லை. எனவே, துறை சார்பாக தங்கும் விடுதி கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

5—

## சத்துணவுப் பணியாளர் நியமனம்

**வினா எண் 20944—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியத்தில் மலையூரில் புதியதாக ஆரம்பிக்கப்பட்ட ஒன்றிய ஆரம்பப் பள்ளிக்கு சத்துணவுப் பணியாளர் நியமனம் செய்யப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர் :**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் மலையூரில் புதியதாக ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளி ஏதும்





ஆரம்பிக்கப்படவில்லை. ஆகவே, அப்பள்ளிக்கு சத்துணவுப் பணியாளர் நியமனம் செய்யப்படுமா என்ற கேள்வி எழாது.

6—

## சத்துணவுக் கூடம்

**வினா எண் 38501—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை சக்தி எஸ்டேட் ஒன்றியத் துவக்கப் பள்ளியில் சத்துணவுக் கூடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை மூன்றாம் நிலை நகராட்சிக்குட்பட்ட சக்தி எஸ்டேட் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் புதிய சத்துணவுக் கூடம் 2002-2003 ஆம் நிதியாண்டில் கட்டி முடிக்கப்பட்டு தற்போது மையம் இயங்கி வருகிறது.

7—

## இளம் குற்றவாளிகள்

**வினா எண் 69208—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை மாவட்டத்தில் எத்தனை இளம் குற்றவாளிகள் சிறப்பு இல்லங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர்?

(ஆ) அவர்களைத் திருத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது?

(இ) அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர் :**

(அ), (ஆ) மற்றும் (இ) நாகை மாவட்டத்தைச் சேர்ந்த சிறுவன் ஆரோக்கியராஜ் என்பவன் ஒருவன் மட்டுமே இந்தியத் தண்டனைச்

சட்டம் பிரிவு 225 மற்றும் 378-ன்கீழ் அனுமதிக்கப்பட்டு சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் வேலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு முழுவதற்குமான சிறுவருக்கான அரசினர் சிறப்பு இல்லத்தில் சேர்க்கப்பட்டுள்ளான்.

தவறிழைத்ததாகக் கருதப்பட்டு சிறப்பு இல்லங்களில் அனுமதிக்கப்படும் சிறுவர்களுக்கு அவர்கள் திருந்தி நல்ல ஒரு இந்தியக் குடிமகனாக வாழ வேண்டும் என்னும் நோக்கத்தில் அரசு பல வழிமுறைகளைக் கையாளுகிறது. இச் சிறுவர்களுக்கு இந்நிறுவனங்களில் முறைசாரா கல்வி கற்பிக்கப்படுகிறது. ஏற்கெனவே வெளியே கல்வி பயின்று கொண்டிருந்த சிறுவர்களானால் அவர்கள் தொடர்ந்து கல்வி பயின்று தேர்வுகள் எழுதவும் சிறப்பு ஆசிரியர்களைக் கொண்டு பயிற்றுவிக்கப்படுகின்றனர். இச்சிறுவர்களுக்கும் முறையான கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்று மாவட்ட ஆலோசனைக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றியதைத் தொடர்ந்து கல்விப் பிரிவு ஒன்று வேலூர், அரசினர் சிறுவருக்கான சிறப்பு இல்லத்தில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சிறுவர்களுக்கு தையல், பாய், நெசவு மற்றும் தோல் பொருட்கள் செய்தல் போன்ற பயிற்சிகள் கற்பிக்கப்படுகின்றன. இவை தவிர சமுதாய பாலிடெக்னிக்குகள் மூலமாக குறுகிய காலப் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

இச்சிறுவர்கள், இந்நிறுவனங்களிலிருந்து பயிற்சி முடிந்து வீடு செல்லும் போது அவர்கள் கற்ற பயிற்சிக்கு ஏற்ப உபகரணங்கள் ரூ. 500/- முதல் ரூ.2,500/- வரை பெற்று வழங்கும் ஒட்டு மொத்த மானியத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது தவிர, தமிழ்நாடு சமூகப் பாதுகாப்பு நல நிதியிலிருந்தும் இச்சிறுவர்கள் சுய தொழில் செய்ய நிதியுதவி பெற அரசு வழிவகை செய்துள்ளது.

இச்சிறுவர்களுக்கென இயங்கும் சிறப்பு இல்லங்களில் இச் சிறுவர்களின் மறுவாழ்வுக்கென கல்வி மற்றும் தொழிற் கல்வியுடன், கவுன்சிலிங், நன்னடத்தை வகுப்புகள் (Moral Instruction Classes) தன்னார்வுத் தொண்டு நிறுவனங்களின் மூலமாக கலை நிகழ்ச்சிகள் நடத்தி அதன்மூலம் நல்ல பல போதனைகள் வழங்குதல், உடற் பயிற்சி, யோகா பயிற்சிகள் மூலமாகவும் சிறுவர்களின் மனமும், உடலும் தூய்மையுற வழிவகை செய்யப்பட்டுள்ளது.



8—

## நடுநிலைப் பள்ளி

**வினா எண் 35019—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, காரைமேட்டிலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, காரைமேடு ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளி 1998-99 ஆம் ஆண்டில் நடுநிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்பட்டு 2004-2005 ஆம் ஆண்டில் உயர்நிலைப் பள்ளியாகவும் நிலை உயர்த்தப்பட்டு இயங்கி வருகிறது.

9—

## மழைநீர் சேகரிப்புத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 56752—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, மாதானம் ஊராட்சியில் உள்ள அரசினர் ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியில் மழைநீர் சேகரிப்புத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2005 செப்டம்பர் 28

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, மாதானம் ஊராட்சியில் உள்ள அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியில் மழைநீர் சேகரிப்புத் தொட்டி 2003 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் அமைக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

**10—**

## கழிவுநீர் சுத்திகரிப்பு செய்யும் திட்டம்

**வினா எண் 61890—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜவ்வரிசி ஆலைகளில் ஓ.சி.ஏ.டி. தொழில்நுட்பம் மூலம் கழிவுநீர் சுத்திகரிப்பு செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) ஜவ்வரிசி தொழிற்சாலைகளில் இருந்து வெளியாகும் தொழிற் கழிவுநீரை ஓ.சி.ஏ.டி. தொழில்நுட்பம் மூலம் சுத்திகரிக்க ஆகும் செலவு நடைமுறையில் உள்ள தொழில்நுட்பத்தைவிட மிக அதிகமாகும் என்பதால் இத்திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**11—**

## தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 64085—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் வனத் துறையின் மூலம் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 செப்டம்பர் 28]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் :**

(அ) வனத் துறை மூலம் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**12—**

## வனக் கல்லூரி இடமாற்றம்

**வினா எண் 65333அ—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழககாணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவையிலுள்ள வனக் கல்லூரியை பொதுமக்கள் நலன் கருதி புறநகர்ப் பகுதிக்கு மாற்ற அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் :**

கோவையிலுள்ள வனக் கல்லூரியை வேறு இடத்திற்கு மாற்றம் செய்யும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**13—**

## பராமரிப்புப் பணிகள்

**வினா எண் 65832—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், அமராவதி, அல்லாபுரம், மானுப்பட்டி, செல்லிப்பட்டி, ராமரைபுறம், வல்லக்குண்டாபுரம் கிராமங்களில் காடு வளர்ப்புத் திட்டத்தின் மூலம் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 செப்டம்பர் 28

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் :**

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், அமராவதி, அல்லாபுரம், மானுப்பட்டி, செல்லிப்பட்டி, ராமரைபுறம், வல்லக்குண்டாபுரம் கிராமங்களில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் மூலம் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**14—**

## காடு வளர்ப்புத் திட்டம்

**வினா எண் 67522—திரு. கே. ஆறுமுகம் :** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு, எரிபொருள் கோட்டம், மாவட்ட வனத் துறையின் மூலம் கடந்த நான்கு ஆண்டுகளில் எத்தனை கோயில்களுக்கு தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன?

(ஆ) எந்தெந்தக் கோயில்களுக்கென அரசு அறிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 முதல் 2004-2005 முடிய கடந்த நான்கு ஆண்டுகளில் செங்கற்பட்டு, எரிபொருள் கோட்டம், மாவட்ட வனத் துறை மூலம் கோயில் பராமரிப்புப் பணிகள் ஏதும் செய்யப்படவில்லை.

**15—**

## மரங்களை நடுதல்

**வினா எண் 69912—திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 செப்டம்பர் 28]

(அ) தமிழகத்தில் வனத் துறை சார்பில் சமூகக் காடுகளில் வளர்க்கப்படும் தைல மரத்திற்குப் பதிலாக செம்மரம், செந்சந்தனம், வேங்கை, சைபரூபா, கிளாக்க போன்ற மரங்களை வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) தமிழக வனத் துறையில் சமூகக் காடுகளில் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை. ஆனால், வனத் துறை சார்பில் தற்போது ஏரி, குளங்களின் மேற்புறத்தில் கருவேல் மரங்கள் மட்டும் நடவு செய்யப்பட்டு வருகின்றன. பொதுவாக தைல மரம் நடவு செய்யப்படுவதில்லை. செம்மரம், செந்சந்தனம், சந்தனம் போன்ற மரங்கள் மதிப்பு மிகுந்த மரங்களாக இருப்பதால், பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டு காப்புக் காடுகள் அல்லாத இதர நிலங்களில் நடவு செய்யப்படுவதில்லை. மேலும், கருவேல் மரங்கள் ஊராட்சிகளைச் சார்ந்த ஏரி, குளங்களின் மேற்புறத்தில் வளர்க்கப்பட்டு வருவதால் இதுபோன்ற மரங்கள் வளர்ப்பதற்குப் போதிய பாதுகாப்பில்லாமல் இருப்பதால் இம்மரங்கள் வனத் துறை மூலம் தேர்வு செய்யப்படுவதில்லை.

அரசாணை எண் (டி) 94, சுற்றுச்சூழல்-வனத் (வனம் 6) துறை, நாள் 4-4-2003-ன்படி ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட 22 இலட்சம் பல்வகை நாற்றுக்களில் ஒன்றான சைபரூபா, கிளாக்க செடிகள் குளங்கள் மற்றும் ஏரிகளின் மேல்புறத்தில் தமிழ்நாட்டின் தேர்வு செய்யப்பட்ட பத்து மாவட்டங்களில் 2003-2004 ஆம் ஆண்டு நடவு செய்யப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**16—**

## நீர்க்குட்டை ஏற்படுத்துதல்

**வினா எண் 72047—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 28

(அ) வால்பாறையில் உள்ள அக்காமலை மற்றும் ஊசிமலை வனப் பகுதிகளில் வன விலங்குகள் தண்ணீர் குடிக்க நீர்க்குட்டை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறையில் உள்ள அக்காமலை மற்றும் ஊசிமலை வனப் பகுதிகளில் வன விலங்குகள் தண்ணீர் குடிக்க நீர்க்குட்டை கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர், கோவை அவர்களுக்கு வன உயிரின காப்பாளர், பொள்ளாச்சி அவர்களால் பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது.

(ஆ) கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**17—**

### மரம் நடுதல்

**வினா எண் 72067—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வனப் பகுதிகளில் மரம் நட தனியாருக்கு அனுமதி வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை வனப் பகுதி, இந்திரா காந்தி வன உயிரின உய்விடம் மற்றும் தேசிய பூங்காவின் ஒரு பகுதி ஆகும். 1980 ஆம் வருடத்திய வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி இப்பகுதிக்குள் மரம் நட தனியாருக்கு அனுமதி வழங்க இயலாது.

(ஆ) இவ்வினா எழவில்லை.



2005 செப்டம்பர் 28]

**18—**

### மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 75108—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி தொகுதியில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி தொகுதியில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுவதில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**19—**

### வனத் துறை அதிகாரிகளுக்குப் பாதுகாப்பு

**வினா எண் 75109—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விலையுயர்ந்த தேக்கு மற்றும் சந்தன மரக் காடுகளில் பணிபுரியும் அதிகாரிகளுக்குத் தேவையான பாதுகாப்பை அரசு அதிகப்படுத்துமா?

(ஆ) ஆம் எனில், போதுமான ஆயுதங்களைக் கூடுதலாக வழங்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழக வனத் துறையில் விலை உயர்ந்த வனச் செல்வங்களான சந்தன மரம் மற்றும் இதர மர வகைகள் வன விலங்குகள் மற்றும் வன விலங்குப் பொருளான யானைத் தந்தம்

போன்ற முக்கிய வனச் செல்வங்களைக் கடத்தல்காரர்களின் பிடியிலிருந்து விடுவிக்கவும், நாளுக்கு நாள் கடத்தல்காரர்கள் பயன்படுத்தி வரும் ஆயுதங்களை எதிர்கொண்டு வனத்தைப் பாதுகாக்கவும் வனத் துறை சீரிய பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. மேலும் வெளிநாட்டில் இருந்தும் ஜீ-கிளாக்-17 ரக துப்பாக்கிகள் 200 நெம்பரும், இராணுவத்திடமிருந்து 7.62 போல்ட் ஆக்ஷன் நவீன ரக துப்பாக்கிகள் போன்ற ஆயுதங்கள் வாங்கப்பட்டு பாதுகாப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, வன அதிகாரிகளுக்கும், வனச் செல்வங்களுக்கும் பாதுகாப்பை ஏற்படுத்தும் ஓர் அங்கமாகத்தான் ஆயுதங்கள் அமைந்துள்ளன. இந்த ஆயுதங்களை எவ்வாறு உபயோகிக்க வேண்டும் என்ற முறை குறித்து விலையுயர்ந்த தேக்கு மற்றும் சந்தன மரக் காடுகளில் பணிபுரியும் அதிகாரிகளுக்குத் தேவையான பயிற்சிகள் அளிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் படைக்கலன்களின் இருப்பை மேலும் அதிகரிக்க பல முயற்சிகள் மற்றும் நடவடிக்கைகள் அவ்வப்போது எடுக்கப்பட்டு வருவதன் மூலம் கூடுதலான ஆயுதங்களை வழங்குவதற்கு வாய்ப்பு உள்ளது.

**20—**

## காடுகளை வளர்த்தல்

**வினா எண் 75113—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திற்கு ஜப்பான் வழங்கியுள்ள ரூ.500 கோடி நிதியைக் கொண்டு கிராமப்புறங்களில் காடுகள் வளர்க்க உரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை-II திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் 800 இடைபடு கிராமங்களில் 1775 சதுர கி.மீ. பரப்பில்



தரம் குன்றிய காடுகளைத் தரமிக்க காடுகளாக மேம்படுத்த ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதி நிறுவனத்தின் கடனுதவியுடன் 2005-2006 முதல் 2012-2013 வரை 8 ஆண்டுகளுக்கு ரூ.567.42 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

(ஆ) தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை-II-ன் கீழ் நடப்பாண்டில் (2005-2006) ரூ.66.76 கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகள் செயல்படுத்தப்பட உள்ளன. இதில் ஒருங்கிணைக்கப்பட்ட நீர்ப்பிடிப்பு வளர்ச்சிப் பணிகளின்கீழ் 105 இடைபடு கிராமங்களில் 26,250 எக்டேர் பரப்பளவில் ரூ.2,413.71 இலட்சம் செலவிலும், ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 3,000 எக்டேர் பரப்பளவில் 30 இடைபடு கிராமங்களில் ரூ.441.60 இலட்சம் செலவிலும் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

**21—**

## விழிப்புணர்வு முகாம்

**வினா எண் 75115—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காடுகள் வளர்ப்புத் திட்டம் குறித்த விழிப்புணர்வு முகாமை கிராமந்தோறும் நடத்திட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தக் கிராமத்திற்கு வனத் துறை மூலம் நலத் திட்டங்கள் வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் காடு வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு ஒவ்வொரு திட்ட கிராமத்திலும் ஏற்படுத்தப்படுகிறது. திட்ட கிராமங்களில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள அரசு சாரா நிறுவனங்கள்/தன்னார்வு நிறுவனங்கள் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், மக்களை ஒன்று திரட்டுதல் போன்றவற்றில் துறைக்கு உதவி புரிகின்றன. இது தவிர வனங்களைப் பேணுதல், பாதுகாப்பு மற்றும் காடு வளர்ப்பு தொடர்பாக பயனுள்ள விளம்பரங்களை அளிப்பதற்கு நாடகங்கள், வில்லுப்பாட்டு, தெருக்கூத்து போன்ற

[2005 செப்டம்பர் 28

பல்வேறு சிறிய தோதில் விளம்பர இயக்கங்கள் நடத்தப்படுகின்றன. 2004-2005 ஆம் ஆண்டு முடிய தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் முதற்கட்டத்தில் (Phase-I) காடு வளர்ப்பு தொடர்பான விழிப்புணர்வு மாநிலம் முழுவதும் உள்ள 1,367 தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்ட கிராமங்களில் 1997 ஆம் ஆண்டு முதல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை-II-ன்கீழ் (Phase - II) 2005-2006 ஆம் ஆண்டு முதல் 2012-2013 ஆம் ஆண்டு வரை மேலும் 800 கிராமங்களில் ஏற்படுத்தப்பட உள்ளது.

(ஆ) தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் வரும் அனைத்து கிராமங்களுக்கும் பல நலப் பணிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிராமத்திற்கும் வருவாய் பெருக்கும் நடவடிக்கைகள் மற்றும் சமுதாய வளர்ச்சிப் பணிகளுக்காக ரூ.10.75 இலட்சம் இடைதாங்கு மண்டலப் பணிகளின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது. வனத்தைச் சார்ந்தோர், பொருளாதார ரீதியில் பின்தங்கியோர் குறிப்பாக மகளிரின் வருவாய் பெருக்கத்திற்கு மாற்று வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. ஏழை எளிய மக்களுக்குப் பயிற்சி மற்றும் சிறு கடன் வழங்கப்படுகிறது. மகளிருக்கு உதவி புரிய 1,367 திட்ட கிராமங்களிலும் சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதேபோன்று, கிராமங்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர் வழங்கல், சுகாதாரம், சமுதாயக் கூடங்கள், சாலை மேம்பாடுகள், பள்ளிக்கூட மேம்பாடு, நூலகம், பால்வாடி போன்றவற்றுக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. பல்துறை இணைப்பு மூலம் இதர துறைகளின் நலத் திட்டங்களும் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்ட கிராமங்களில் ஒருங்கிணைக்கப்படுகின்றன. மேலும் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் 150 பழங்குடி கிராமங்கள் உட்பட 800 கிராமங்களில் வனத் துறையால் நலப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**22—**

## மரங்கள் வளர்த்தல்

**வினா எண் 80158—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வனத் துறை மாவட்ட மையங்களில் ஈட்டி, மஞ்சக்கடம்பை, பலா போன்ற மரங்களை அதிக அளவில் வளர்க்க அரசு ஆவன செய்யுமா?



2005 செப்டம்பர் 28]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

வன விரிவாக்க மையங்களின் மூலம் விவசாயிகளுக்குத் தேவையான மரவகைகளைக் கண்டறிந்து ஒவ்வொரு மையத்திலும் 10,000 மரக் கன்றுகள் 2005-2006ஆம் ஆண்டில் பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கவும், மேற்படி நாற்றுக்களில் ஈட்டி, மஞ்சக்கடம்பை, பலா போன்ற கன்றுகளை அதிக அளவில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதுமட்டுமல்லாமல் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் ஒரு மையத்திற்கு 5,000 வீதம் 95,000 மரக் கன்றுகள் 10,000 ஒட்டுநெல்லி, புளி இனங்களும் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு சகாயமான விலையில் வழங்கப்படுகின்றன. மேலே குறிப்பிட்ட திட்டங்களின் மூலம் ஈட்டி, மஞ்சக்கடம்பை, பலா போன்ற மரக் கன்றுகள் தேவைகளுக்கு ஏற்ப உற்பத்தி செய்யப்படும்.

**23—**

## வளர்ச்சிப் பணிகள்

**வினா எண் 80161—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் மூலம் எடப்பாடி தொகுதியில் பின்தங்கிய கிராமங்களைத் தேர்வு செய்து வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

ஆம். தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை-II-ன்கீழ் 2005-2006 முதல் 2012-2013 வரை காடு வளர்ப்புப் பணிகள் செயல்படுத்தப்படவுள்ளன. இத்திட்டத்தின்கீழ் எடப்பாடி தொகுதியில் சூரியமலை காப்புக்காட்டை ஒட்டியுள்ள பின்தங்கிய கிராமமாகிய எல்லப்பாளையம் தேர்வு செய்யப்பட்டு வரும் ஆண்டில் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2005 செப்டம்பர் 28

24—

## காடுகளைப் பாதுகாத்தல்

**வினா எண் 80175—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பாலமலை பகுதியில் உள்ள காடுகள் ஆண்டுதோறும் தீயினால் அழிக்கப்படுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

பாலமலை வனப் பகுதிகளில் கடந்த இரண்டாண்டுகளில் நெருப்பு நிகழ்வுகள் எதுவும் ஏற்படவில்லை. திட்டமில்லாத பணிகளின் கீழும், ஒருங்கிணைந்த வனப் பாதுகாப்பு திட்டப் பணிகளின் (திட்டம்) கீழும் ஒவ்வொரு ஆண்டும் தீ தடுப்புக் காவலர்கள் நியமிக்கப்பட்டு வனங்களைத் தீயிலிருந்து காப்பாற்றும் முகமாக ஒவ்வொரு ஆண்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த வனப் பகுதியை ஒட்டி செயல்பட்டு வரும் பின்வரும் வனக் குழுக்களின் உறுப்பினர்களும் வனத்தைத் தீயிலிருந்து பாதுகாக்கும் பணியில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்—

(1) கண்ணாமூச்சி வனக் குழு

(2) பூமனூர் வனக் குழு

இப்பணிகள் தொடர்ந்து நிறைவேற்றப்பட நடவடிக்கைகள் எடுப்பதுடன் ஈரோடு, பாலமலை பகுதியில் உள்ள காடுகள் ஆண்டுதோறும் தீயினால் பாதிக்கப்படாமல் இருக்கவும் ஆவன செய்யப்பட்டு வருகிறது.

25—

## பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனைக்குத் தடை

**வினா எண் 80621—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 செப்டம்பர் 28]

(அ) சுற்றுச்சூழலுக்கு அதிகமான பாதிப்பை ஏற்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களை விற்பனை செய்வதற்குத் தடை செய்து அதற்கு மாற்று ஏற்பாடாக வேறு ஏதேனும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

26—

## தனி அலுவலர்

**வினா எண் 53920—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாநகராட்சிப் பள்ளி நிர்வாகத்தில் மாவட்டக் கல்வி அலுவலர் நிலையில் ஒரு தனி அலுவலரை நியமிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

ஆம். இப்பணியிடம் பதவி உயர்வு மூலம் தற்போது நிரப்பப்பட்டுவிட்டது.

27—

## அரசு உதவிபெறும் கல்லூரிகள்

**வினா எண் 69150—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருள்மிகு பழனி முருகன் கோவில் நிர்வாகத்தின்கீழ் என்னென்ன கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன?

[2005 செப்டம்பர் 28

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

அருள்மிகு பழனி முருகன் கோவில் நிர்வாகத்தின் கீழ் கீழ்க்காணும் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. அவை, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் அரசு உதவி பெறும் கல்லூரிகள் ஆகும்:

1. அருள்மிகு பழனி ஆண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, பழனி.

2. அருள்மிகு பழனி ஆண்டவர் கல்லூரி (மகளிர்), பழனி.

**28—**

## ஆய்வுக்கூடக் கட்டடம்

**வினா எண் 70329—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம்-2 தொகுதியிலுள்ள அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் புதிய ஆய்வுக்கூடக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம்-2 அரசு மகளிர் கலைக் கல்லூரியில் தற்சமயம் 9 ஆய்வுக்கூடங்கள் உள்ளன. இருப்பினும் மேலும் 6 ஆய்வுக் கூடங்கள் தேவைப்படுவதாக அக்கல்லூரி முதல்வர் தெரிவித்துள்ளார். ஆயினும் தற்போது கூடுதல் ஆய்வுக்கூடங்கள் கட்டும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.



2005 செப்டம்பர் 28]

**29—**

## மீன் விற்பனை அங்காடி

**வினா எண் 65407—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, புதுப்பட்டு நகர் மற்றும் மூரார்பாளையத்தில் சில்லறை மீன் விற்பனை அங்காடி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சங்கராபுரம் தொகுதி, புதுப்பட்டு நகர் மற்றும் மூரார்பாளையத்தில் சில்லறை மீன் விற்பனை அங்காடி அமைத்துத் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**30—**

## செயற்கை இழை பருத்தி நூல் வலைகள்

**வினா எண் 82935—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மீனவக் குடும்பங்களுக்குச் செயற்கை இழை பருத்தி நூல் வலைகள் இலவசமாக வழங்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

மீனவக் குடும்பங்களுக்குச் செயற்கை இழை பருத்தி நூல் வலைகள் இலவசமாக வழங்கும் திட்டம் அரசிடம் இல்லை.

[2005 செப்டம்பர் 28

31—

## தொழிற்கூடம் அமைக்கும் திட்டம்

**வினா எண் 82939—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, செல்லனேந்தலில் மீன்பிடிப் படகுகள் மற்றும் இயந்திரங்களைப் பழுதுபார்க்க தொழிற்கூடம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, செல்லனேந்தலில் மீன்பிடிப் படகுகள் மற்றும் இயந்திரங்களைப் பழுதுபார்க்க தொழிற்கூடம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

32—

## தொழிற் சங்கங்களின் அங்கீகாரம்

**வினா எண் 70591—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், வால்பாறையில் செயல்படாமல் இருக்கும் தொழிற் சங்கங்களின் அங்கீகாரங்களை இரத்து செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

ஆண்டறிக்கை தாக்கல் செய்யாத 17 தொழிற் சங்கங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

33—

## கல்வித் தொகையை உயர்த்துதல்

**வினா எண் 83516—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2005 செப்டம்பர் 28]

தொழிலாளர் நல வாரியம் மூலம் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு வழங்கும் கல்வித் தொகையை உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—.**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

2005-2006 ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கையின்போது தமிழக சட்டப் பேரவையில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி 12-07-2005 முதல் பொறியியல்/ மருத்துவம்/சட்டம் மற்றும் வேளாண்மை பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு தொழிலாளர் நல நிதியிலிருந்து வழங்கப்பட்ட உதவித் தொகை ரூ.1,200/-லிருந்து ரூ.2,400/-ஆக உயர்த்தியும், பொறியியல் மற்றும் மருத்துவப் பட்டயப் படிப்பு பயிலும் மாணவர்களுக்கு ரூ.720/-லிருந்து ரூ.1,440/-ஆக உயர்த்தியும், தொழிற்பயிற்சி (ITI) பயிலும் மாணவர்களுக்கு ரூ.500/-லிருந்து ரூ.1,000/-ஆக உயர்த்தியும் மற்றும் மேல்நிலை வகுப்புகள் பயிலும் மாணவர்களுக்கு ரூ.600/-லிருந்து ரூ.1,200/-ஆக உயர்த்தியும் வழங்கப்படுகிறது.

34—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 26680—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், சின்னம்பள்ளி ஊராட்சியில் இராசிராவுத்தன அள்ளி பகுதி கரியன்காட்டு வளவு, தோளூர் பகுதி ஆகிய இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ)

[2005 செப்டம்பர் 28

**இராசிராவுத்தனஅள்ளி**

பெண்ணாகரம் ஒன்றியம், சின்னம்பள்ளி ஊராட்சி, இராசிராவுத்தனஅள்ளி குடியிருப்பிற்கு நபார்டு நிதி உதவியுடன் புதிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்த தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**கரியன்காட்டு வளவு**

பெண்ணாகரம் ஒன்றியம், சின்னம்பள்ளி ஊராட்சி, கரியன் காட்டுவளவு பகுதி காலநாயக்கனூர் கோம்பை குடியிருப்பைச் சார்ந்ததாகும். இப்பகுதியின் மக்கள் தொகை மிகக் குறைவாக உள்ளதால், உள்ளாட்சி அமைப்பின் மூலம் ஒரு கையிறைப்பான் அமைக்கப்பட்டு குடிநீர் வழங்கப்படுகிறது.

**தோளூர்**

பெண்ணாகரம் ஒன்றியம், சின்னாம்பள்ளி ஊராட்சியில் உள்ள தோளூர் குடியிருப்பிற்கு ஆறு கையிறைப்பான்கள், ஒரு சிறு மின்விசைத் திட்டம் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் ஆகியவை மூலம் தற்போது குடிநீர் வழங்கப்படுகிறது.

**35—**

**மரக் கன்றுகள் நடுதல்**

**வினா எண் 43110—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகராட்சி வீதிகளில் நிழல் தரும் மரங்கள் நட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். புதுக்கோட்டை நகராட்சிப் பகுதிகளில் 2002 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலமாக 2,870 மரக் கன்றுகளும், 2004-2005 ஆம் நிதியாண்டில் மரக்கன்று நடுதல் திட்டத்தின்கீழ் நகராட்சி மூலமாக 20,000 மரக்கன்றுகள் நகராட்சியின் அனைத்துப் பகுதிகளிலும் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.



2005 செப்டம்பர் 28]

**36—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 44418—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராணிப்பேட்டை தொகுதி, வாலாசா ஒன்றியம், படியம்பாக்கம் ஊராட்சி, இடையந்தாங்கல் மற்றும் படியம்பாக்கம் காலனியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், வாலாஜா ஒன்றியத்தைச் சேர்ந்த படியம்பாக்கம் ஊராட்சியிலுள்ள இடையந்தாங்கல் குடியிருப்பிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய மின்விசைத் திட்டத்தின் மூலமும், படியம்பாக்கம் காலனி குடியிருப்பிற்கு இரண்டு கையிறைப்பான்கள் மூலமும் குடிநீர் வழங்கப்படுகிறது. தற்போது இது போதுமானது.

**37—**

**தெரு விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 58247—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை பன்னிமேடு தொழிற்சாலை பிரிவு பள்ளிக்கு முன்பும் மற்றும் 3ஆம் எண் மாடியில் குடியிருக்கும் பகுதியிலும் தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 செப்டம்பர் 28

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள வால்பாறை நகராட்சிக்குட்பட்ட பன்னிமேடு தொழிற்சாலைப் பிரிவில் ஏற்கெனவே 15 எண்ணிக்கை 1 x 40 வாட்ஸ் தெரு மின் குழல் விளக்குகள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.*

*(ஆ) வினா எழவில்லை.*

**38—**

**மயானக் கொட்டகை அமைத்தல்**

**வினா எண் 58249—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையிலுள்ள ஊசிமட்டம் பகுதியில் மயானக் கொட்டகை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வால்பாறையிலுள்ள ஊசிமட்டம் தனியார் தோட்ட நிறுவனப் பகுதியாகும். தனியார் தோட்ட நிறுவனம் மயானம் அமைத்துக் கொடுத்து அவர்களது பராமரிப்பில் இருந்து வருகிறது. எனவே, வால்பாறை நகராட்சியிலிருந்து மேற்கூறிய இடத்தில் மயானக் கூரை அமைக்க வேண்டிய நிலை எழவில்லை.*

**39—**

**தெரு விளக்கு அமைத்தல்**

**வினா எண் 58250—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2005 செப்டம்பர் 28]

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை ஊசிமலை மட்டம் குடியிருப்புப் பகுதியில் தெரு விளக்கு அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை ஊசிமலை மட்டம் குடியிருப்புப் பகுதியில் 10 எண்ணிக்கை மின் குழல் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**40—**

**சிறுவர் பூங்கா அமைத்தல்**

**வினா எண் 58253—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை முடிஸ் பகுதியில் சிறுவர் பூங்கா ஏற்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) வால்பாறை முடிஸ் பகுதி தனியாருக்குச் சொந்தமான இடமாகும். நகராட்சிக்குச் சொந்தமான இடமில்லையாதலால் அப்பகுதியில் நகராட்சி மூலம் சிறுவர் பூங்கா அமைக்க வாய்ப்பு இல்லை.*

*(ஆ) கேள்வி எழவில்லை.*

**41—**

**குடிநீர்**

**வினா எண் 67069—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2005 செப்டம்பர் 28

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், தப்பக்குட்டை பஞ்சாயத்து குருவகவுண்டனூர் பகுதியில் புதிதாக மேல்நிலைத் தொட்டி கட்டி பொதுமக்களுக்குக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியம், தப்பக்குட்டை ஊராட்சியிலுள்ள குருவகவுண்டனூர் குடியிருப்பிற்கு இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் கலிங்கனூர் குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்பு செய்யப்பட்டு போதுமான அளவு காவிரிக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, அப்பகுதிக்குத் தனியாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.

**42—**

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 67070—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், கண்டர்குலமாணிக்கம் ஊராட்சியிலுள்ள நவாப்மேடு, பனங்காடு, குவார்ட்டர்ஸ் ஆகிய பகுதிகளில் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி பொது மக்களுக்குக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியம், கண்டர்குலமாணிக்கம் ஊராட்சியிலுள்ள நவாப்மேடு குடியிருப்பிற்கு இராசிபுரம்-எடப்பாடி



2005 செப்டம்பர் 28]

கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

பனங்காடு என்பது பள்ளிக்காட்டுவளவு குடியிருப்பின் ஒரு பகுதியாகும். இராசிபுரம்-எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் இப்பகுதிக்குப் பள்ளிக்காட்டுவளவு குடியிருப்பில் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து பகிர்மானக் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

குவார்ட்டர்ஸ் பகுதிக்கு இராசிபுரம்-எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் அரியாம்பாளையம் குடியிருப்பில் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்புச் செய்யப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ஒரு சிறு மின்விசைத் திட்டமும் ஜனவரி 2005 முதல் பயன்பாட்டில் உள்ளது. எனவே, மேற்குறிப்பிட்டுள்ள குடியிருப்புகளுக்குப் புதிதாக மேல்நிலைத் தொட்டிகள் கட்டும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.

**43—**

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 67085—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், நடுவனேரி பஞ்சாயத்தில் உள்ள பெருச்சாளி நத்தம் அருந்ததியர் தெரு, கோட்டைப்புதூர் ஆகிய பகுதிகளில் புதிதாக மேல்நிலைத் தொட்டி கட்டி அங்குள்ள மக்களுக்குக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மகுடஞ்சாவடி ஒன்றியம், நடுவனேரி ஊராட்சியிலுள்ள பெருச்சாளி நத்தம் அருந்ததியர் தெரு குடியிருப்புக்கு நடுவனேரி புதூர் குடியிருப்பில்

கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்புச் செய்யப்பட்டு, இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் மகுடஞ்சாவடி ஒன்றியத்தைச் சார்ந்த 175 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, இக்குடியிருப்புக்குத் தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.

அதே ஊராட்சியிலுள்ள கோட்டைபுதூர் குடியிருப்புக்கு, நடுவனேரி ஊராட்சியின் அருகில் உள்ள திருவள்ளிப்பட்டி காட்டுவளவு குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்புச் செய்யப்பட்டு மேற்குறிப்பிட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து காவிரிக் குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.

**44—**

## கிராவல் பரப்புதல்

**வினா எண் 67156—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை நகராட்சியில் களிமண் பகுதியில் வீதிகளுக்கு கிராவல் பரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை நகராட்சியில் களிமண் பகுதியில் வீதிகளுக்கு கிராவல் பரப்பும் நடவடிக்கை ஏதும் இல்லை.





**45—**

## கழிவுநீரைச் சுத்திகரித்தல்

**வினா எண் 67588—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் குறைந்த செலவில் நுண்ணுயிர் கொண்டு கழிவுநீரைச் சுத்திகரிக்கும் முறை எந்தெந்த இடங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் கீழ்க்கண்ட 16 நகரங்களில் பாதாள சாக்கடைத் திட்டங்கள் பயன்பாட்டில் உள்ளன. இத்திட்டத்தில் பெறப்படும் கழிவுநீர், "கழிவுநீர் சுத்திகரிப்புக் குட்டை" தொழில்நுட்பத்தில் சுத்திகரிப்புச் செய்யப்படுகிறது. இத்தொழில்நுட்பத்தில் இயற்கையில் பெறப்படும் சூரிய ஒளி மற்றும் நுண்ணுயிர் கிருமிகளைப் பயன்படுத்தி கழிவுநீர் சுத்திகரிக்கப்படுகிறது.

| வரிசை எண் | மாவட்டம் | நகரம் |
|---|---|---|
| 1 | மதுரை | மதுரை |
| 2 | மதுரை | பெரியகுளம் |
| 3 | மதுரை | திருமங்கலம் |
| 4 | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 5 | திண்டுக்கல் | பழனி |
| 6 | விருதுநகர் | சாத்தூர் |
| 7 | திருநெல்வேலி | திருநெல்வேலி |
| 8 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் |
| 9 | கடலூர் | சிதம்பரம் |

| வரிசை எண் | மாவட்டம் | நகரம் |
|---|---|---|
| 10 | திருவள்ளூர் | திருவொற்றியூர் |
| 11 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் |
| 12 | சேலம் | மேட்டூர் |
| 13 | திருவாரூர் | மன்னார்குடி |
| 14 | நீலகிரி | உதகமண்டலம் |
| 15 | திருச்சி | திருச்சி |
| 16 | தஞ்சாவூர் | கும்பகோணம் |

மேலும், கோவை மாவட்டத்தில் சூலூர் சிறப்பு ஊராட்சியில் நாள் ஒன்றுக்கு 6 இலட்சம் லிட்டர் கழிவுநீரை மைக்ரோ என்காப்சுலேஷன் (Micro-Encopsolation) முறையில் கழிவுநீர் நுண்ணுயிர்களை உற்பத்தி செய்து அந்த நுண்ணுயிர்களே கழிவுப் பொருட்களைச் சாப்பிடும் சுத்திகரிப்பு முறைமை கொண்ட முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் உதகமண்டலம் ஏரி "உயரிய தொழில்நுட்ப முறையான நுண்ணுயிரியல்" முறைமையினைக் கொண்டு புனரமைப்புகள் செய்யப்பட்டுள்ளன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு

### பேரவை அலுவல் நீட்டிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 21-9-2005 அன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவின்படி, 28-9-2005 அன்றுடன் முடிவுபெறுவதாக இருந்த இக்கூட்டத்தொடர், அவையின் அலுவல்கள் முற்றுப் பெறாததால் பேரவையின் அனுமதியுடன் 29-9-2005 அன்று நீட்டிக்கப்பெற்று, 28-9-2005 அன்று எடுத்துக்கொள்ளப்படவிருந்த அன்றைய அலுவல்கள் 29-9-2005 அன்று எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. ஜே. ஹேமச்சந்திரன் (குறுக்கீடு)



## 3. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஒத்திவைப்பு தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறேன். கூட்டத்தொடர் முடியப்போகிறது. எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அறிவிப்பாரா? (குறுக்கீடு)

### (ஆ) காவிரி கடைமடைப் பகுதிகளின் பாசனத்திற்குத் தண்ணீர்

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு விவசாயிகள் ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறார்கள், மேட்டூரிலே தண்ணீர் திறந்துவிட்டதனாலே. அநேகமாக தஞ்சை, நாகை மற்றும் திருவாரூர் போன்ற மாவட்டங்களிலே நேரடி விதைப்பு இருந்தது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் 24,000 கன அடி தண்ணீர் திறந்துவிட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால், இன்றுவரையில் கடைமடைப் பகுதிகளுக்குத் தண்ணீர் போகவில்லை. நிறைய பிரச்சினையாக இருக்கிறது. ஆதலால், அந்தத் தண்ணீரைக் கொஞ்சம் அதிகப்படியாகத் திறந்துவிட்டு இந்த ஒரு மாதம் (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன், இந்த ஒரு மாதம் தண்ணீர் இருந்தால், அடுத்த மாதம் season நமக்கு தொடங்கிவிடும், தண்ணீர் தேவைப்படாது. நீங்கள் முறைவைத்து தண்ணீர் விடலாம். நேரடி விதைப்பு இருக்கிறதனாலே அந்த விவசாயிகள் நிறைய பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தண்ணீர் இல்லையென்று தொடர்ந்து தொலைபேசி மூலமாகத் தொடர்புகொண்டு கேட்கிறார்கள். அதனாலே தண்ணீர் திறந்துவிடுவதை அதிகப்படுத்தி, எல்லா கடைமடைப் பகுதிகள் வரைக்கும் தண்ணீர் சென்றடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரியிலிருந்து, காவிரி டெல்டா பாசனத்திற்காக 18,000 கன அடி தண்ணீர் விடுவிக்கப்பட்டு விவசாய வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நல்லமுறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கடைமடைப் பகுதிகளுக்கு நீர் வந்து சேரவில்லை என்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு வந்து சேர்ந்த உடனே, 24,000 கனஅடியாக விடுவிக்கப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) முறைவைத்து பாசனம் செய்து வந்த

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2005 செப்டம்பர் 28

நிலையை மாற்றி, அனைத்துப் பகுதிகளுக்கும் தொடர்ந்து நீர் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் *(குறுக்கீடு)*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள், 24,000 கன அடி தண்ணீர் திறந்துவிட்ட பிறகும்கூட கடைமடைப் பகுதிகளுக்குத் தண்ணீர் போய்ச் சேரவில்லையென்று இங்கே தெரிவிக்கிறார். நிலைமை ஆராயப்படும்; தேவையிருப்பின் கூடுதலான தண்ணீர் விடுவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடு)*

## 4. உரிமை மீறல் பிரச்சினை

### துணை மானியக் கோரிக்கைகள் பற்றி முன்னாள் முதலமைச்சர் முரசொலி பத்திரிகையில் வெளியிட்டுள்ள கருத்துகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் ஏதோ பேசவேண்டும் என்கிறார்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2005-2006* ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகள் பற்றிய வாதங்கள் பேரவையிலே நடந்துகொண்டிருக்கின்றன. இன்றைக்கும் அந்த வாதங்கள் தொடர்கின்ற நிலையிருக்கின்றது. எனவே, இந்தத் துணை மதிப்பீடுகளிலே நிதி ஒதுக்கம் செய்யவில்லை என்பதை இந்த அவையிலேயே வாதம் செய்யலாம். அனைத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் அதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படி இருக்கின்றபோது, இந்த அவை நடந்துகொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், அவைக்கு வெளியிலேயிருந்து சரமாரியான அறிவிப்புகளும், சவுரி முடிகளும் என்கின்ற தலைப்போடு இந்த அவையினுடைய நடவடிக்கைகளைப் பற்றி விமர்சனமும் வந்திருக்கிறது. அதிலே, ஏதோ இந்த அரசு தமிழக மக்களை ஏமாற்றுகின்றது போலவும், பல்வேறு



2005 செப்டம்பர் 28] [திரு. லா. சந்தானம்]

அறிவிப்புகளை அறிவித்துவிட்டு, அது நாவிலே தேன் தடவுகின்ற நிலைபோல அமைந்து இருக்கிறதே தவிர, அதற்கு உண்மையாக நிதி ஒதுக்கப்படவில்லை என்பது போலவும் குற்றச்சாட்டுகளோடு பத்திரிகையிலே செய்திகள் வெளிவந்திருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது எந்தப் பத்திரிகை என்று சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* இல்லை, அவர் சொல்லி முடித்துவிடட்டும். *(குறுக்கீடுகள்)* சொல்லி முடிக்கட்டும்.

**திரு. இ. புகழேந்தி** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point of order இல்லை, திரு. சந்தானம் சொல்லி முடிக்கட்டும். *(குறுக்கீடுகள்)* திரு. சந்தானம் சொல்லி முடிக்கட்டும். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. சி. ஞானசேகரன்:** வெளியிலே யாரோ பேசியதையெல்லாம் இங்கே உறுப்பினர் சொல்லிக் கொண்டு இருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், உட்காருங்கள், *(குறுக்கீடுகள்)* திரு. புகழேந்தி, உட்காருங்கள், *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். நீங்கள் பேசுங்கள், சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முரசொலியில் வந்த செய்தியைத்தான் சொல்கிறேன். *(குறுக்கீடுகள்)* முரசொலி பத்திரிகையில் இப்படி ஒரு செய்தி வந்திருக்கிறது. *(குறுக்கீடுகள்)*

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* அவர் உரிமை மீறல் பிரச்சினை கொண்டு வந்திருக்கிறார். *(குறுக்கீடுகள்)* அவர் உரிமை மீறல் பிரச்சினை கொண்டு வந்திருக்கிறார். எனவே, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. லா. சந்தானம்:** நானும் ஓர் உறுப்பினர் என்கின்ற முறையில், துணை மதிப்பீட்டிலே... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் உரிமை மீறல் பிரச்சினை கொண்டு வந்திருக்கிறார். உட்காருங்கள். திரு. சந்தானம், பேசுங்கள். *(குறுக்கீடுகள்)*

[2005 செப்டம்பர் 28

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஞானசேகரன் அவர்கள் இங்கே கூறுவதுபோல், யார் யாரோ வெளியே எதை எதையோ பேசியதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் இங்கே குறிப்பிடவில்லை. இந்த அவையின் உறுப்பினராக இருக்கின்ற முன்னாள் முதலமைச்சர், திரு. கருணாநிதி அவர்கள், ஏதாவது கருத்து தெரிவிப்பதாக இருந்தால், துணை மானியக் கோரிக்கையின்மீது கருத்து தெரிவிக்க விரும்பினால் இந்த அவைக்கு வந்து தெரிவிக்க வேண்டுமே தவிர, அவைக்கு வெளியே தெரிவிப்பது, அவதூறாக கருத்து தெரிவிப்பது என்பதற்கு உரிமை மீறல் என்ற பிரச்சினையைத்தான் அவர் கொண்டுவருகிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம், அதற்கான விளக்கம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. சந்தானம், அதற்கான விளக்கம் சொல்லுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய உறுப்பினர் என்கின்ற முறையில், இந்த அவையைப் பற்றிப் பேசுவதற்கு எனக்கும் உரிமை இருக்கிறது. இந்த அவையினுடைய செய்திகள் வெளியிலே இல்லாமல் அவைக்குள்ளேதான் விவாதிக்கப்பட வேண்டுமே தவிர... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, உட்காருங்கள். புகழேந்தி, உங்களைப் பேச அனுமதிக்கவில்லை, உட்காருங்கள். திரு. ஞானசேகரன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. லா. சந்தானம்:** வெளியிலே அதை விமர்சனம் செய்வது என்பது முறையற்ற செயல் என்பதைச் சொல்வதற்கு எனக்கு உரிமை இருக்கிறது என்கின்ற முறையில் நான் அதைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், ஞானசேகரன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், புகழேந்தி. (குறுக்கீடுகள்) பேச அனுமதிக்கவில்லை, உட்காருங்கள். திரு. சந்தானம், பேசுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் வேண்டுமென்றாலும் எந்தக் கருத்தையும் வலியுறுத்துவதற்கு உரிமை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புகழேந்தி, பேச அனுமதிக்கவில்லை. உட்காருங்கள்.



2005 செப்டம்பர் 28]

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சி உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்கள், யார் வேண்டுமானாலும் என்ன கருத்து வேண்டுமானாலும் தெரிவிக்கலாம், அதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது என்று சொல்கிறார். யார் வேண்டுமானாலும் என்று சொன்னால், அது பொதுமக்களைக் குறிக்கின்ற ஒரு சொல்லாகும். அப்படி அல்ல. இப்போது நான் முதலமைச்சராக இருக்கிறேன். எனக்கும் எல்லாவிதமான உரிமைகளும் உண்டு. ஆனால், இந்த அவைக் கூட்டத் தொடர் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது ஏதாவது அறிவிப்புச் செய்ய விரும்பினால், கருத்து கூற விரும்பினால் இந்த அவைக்கு வந்துதான் நான் தெரிவிக்க வேண்டுமே தவிர, வெளியே தன்னிச்சையாக நான் கட்டுரை எழுதி வெளியிட முடியாது. வெளியே தன்னிச்சையாக நான் பேட்டி கொடுக்க முடியாது. ஆகவே, இந்த அவைக்கு வந்து கருத்து தெரிவிக்க வாய்ப்பு இல்லாதவர்கள் ஏதாவது கருத்து கூறினால் அதைப்பற்றி நாங்கள் கவலைப்படப்போவதில்லை. அதைப்பற்றி இந்த அவையிலும் விவாதிக்கப்போவதில்லை. ஆனால், இந்த அவையின் உறுப்பினராக இருக்கின்ற ஒரு சட்டமன்ற உறுப்பினர் வேண்டுமென்றே இந்த அவை நடவடிக்கைகளைப் புறக்கணித்து, இந்த அவையில் நடக்கின்ற நிகழ்ச்சிகளைப்பற்றி, இங்கே நடக்கின்ற அலுவல்களைப்பற்றி வெளியே அவதூறாகக் கட்டுரை எழுதி, அவர் வெளியிட்டார் என்றால் அதைப்பற்றி இங்கே குறிப்பிட்டாக வேண்டும். எந்தத் தவறும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம், பேசுங்கள். (குறுக்கீடுகள்) சந்தானம், விளக்கம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) புகழேந்தி மற்றும் பரிதி இளம்வழுதி ஆகியோரைப் பேச அனுமதிக்கவில்லை, உட்காருங்கள். சந்தானம், பேசுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் இந்த அவையிலே எதிர்க் கட்சி வரிசையிலே உள்ள ஓர் உறுப்பினர் என்கின்ற முறையில்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், உட்காருங்கள். திரு. புகழேந்தி, உட்காருங்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னென்ன உரிமைகள் இருக்கின்றனவோ அத்தனை உரிமைகள் எனக்கும் இருக்கின்றன என்கின்ற முறையில்... (குறுக்கீடுகள்)

(உறுப்பினர் திரு. இ. புகழேந்தி நின்றுகொண்டு பேச முற்பட்டார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புகழேந்தி, அவையினுடைய நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிக்காதீர்கள். உட்காருங்கள்.

**திரு. லா. சந்தானம்:** இந்த அவையினுடைய மாண்புமிகு மரபுகளைக் காக்க வேண்டியது என்னுடைய கடமை என்கின்ற முறையில், இந்த அவையிலே எத்தனையோ வாய்ப்புகள் இருக்கின்றன, இந்த அவையிலே நடக்கின்ற நிகழ்ச்சிகளை விமர்சனம் செய்வதற்கு...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய அனுமதியில்லாமல் பேசக் கூடாது. புகழேந்தி, உட்காருங்கள். (குறுக்கீடு) என்னுடைய அனுமதியில்லாமல் பேசக் கூடாது.

**திரு. லா. சந்தானம்:** இந்த மூன்று நாட்களாக அந்த விமர்சனங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. அப்படி இருக்கும்போது...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புகழேந்தி, என்னுடைய அனுமதியில்லாமல் பேசக் கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கின்ற காரணத்தால், புகழேந்தி பேசிக்கொண்டிருப்பதால், புகழேந்தியை அவையைவிட்டு அகற்றுமாறு அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன்.

*(உறுப்பினர் திரு. இ. புகழேந்தி, அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்.)*

**திரு. லா. சந்தானம்:** இந்தப் பத்திரிகையிலே, நாவின் நுனியில் தேன் தடவப்படுகின்ற தந்திரச் செயலாக திட்டங்களை அறிவித்துள்ளனர். அதில் வெறும் வேடம் கட்டி ஆடிக்கொண்டிருக்கிறார்கள் என்கின்ற செய்தி வந்திருக்கிறது. அதுபோல, ஏமாற்றுகின்ற செயல்தானே, இது என்ன வெல்லத்திலே பிள்ளையார் செய்து அந்த வெல்லத்தையே கொஞ்சம் கிள்ளி வெல்லப் பிள்ளையாருக்குப் படைக்கின்ற கதையாக இருக்கிறது. எந்தத் தலைப்பின்கீழ் எந்த அமைச்சர் பதிலுரையில் விளக்கம் தெரிவித்துக்கொள்ளலாம் என்கின்ற... (குறுக்கீடுகள்) 23-9-2005 ஆம் நாளன்று பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட 2005-2006 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை குறித்து சட்டமன்ற விவாதத்தில் பங்கேற்று தனது கருத்துகளைத் தெரிவிக்கலாம். சட்டமன்றத்திற்கு வெளியே இந்தத் துணை மதிப்பீட்டினை 'முள்ளு முனையிலே மூன்று குளம், அதில் இரண்டு குளம் பாழ், ஒரு குளத்தில் தண்ணீரே இல்லை' என்று உண்மைக்குப்





புறம்பாகச் செய்தி வெளியிட்டிருப்பதும், அதே கட்டுரையில், பொதுமக்களைத் திசை திருப்புகின்ற வகையில், 'அதிகத் தொகையை அனுமதிக்காத' என்று பொதுமக்கள் மத்தியிலே உண்மைக்குப் புறம்பான ஒரு செய்தியை வெளியிட்டுள்ளதும், மேலும் இந்தத் துணை மதிப்பீட்டினை 'ஏமாற்றுகின்ற செயல்' என்று விமர்சித்திருப்பதும் உண்மைக்குப் புறம்பான ஒரு செயலாகும். மேலும், 'ஒய்யாரக் கொண்டையாம்' என்றும், மற்றும் 'சந்தேகமின்றி சவுரி முடிகளேதான்' என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீதும், அவர்களது திட்டங்கள் குறித்தும், அவையிலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் முதல் துணை நிதி நிலை அறிக்கை குறித்தும், உண்மைக்குப் புறம்பான, மக்களைத் திசை திருப்புகின்ற, அவை உரிமையைப் பாதிக்கின்ற வகையில் செய்திகள் வெளியிட்டிருப்பதும் அவை உரிமையை மீறிய செயலாகும்.

*முற்பகல் 10-10*

திரு. கலைஞர் கருணாநிதி அவர்கள், ஒரு மூத்த சட்டமன்ற உறுப்பினர். ஒரு அரசியல் கட்சியினுடைய தலைவர். தற்போது சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிக்கொண்டிருப்பவர். சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட முதல் துணை நிதிநிலை அறிக்கை குறித்து, சட்டமன்ற நடவடிக்கைகளில் கலந்து கொண்டு, கருத்துகளைத் தெரிவித்து, அதற்குத் தகுந்த பதிலை அரசிடமிருந்து பெறாது, சட்டமன்றத்திற்கே வராது, வெளியே இருந்துகொண்டே, இந்தச் சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட முதல் துணை நிதிநிலை அறிக்கை குறித்தும், அதில் கண்டுள்ள விவரங்கள் குறித்தும், உண்மைக்குப் புறம்பாக, பொதுமக்கள் மத்தியில் சட்டமன்றத்தின் தரம் தாழும் வகையில், பொதுமக்களைத் திசை திருப்புகின்ற வகையில், உண்மைக்கு மாறான செய்திகளை வெளியிட்டிருப்பது, அவை உரிமையை மீறிய செயலாகும்.

2004-2005 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கை குறித்த மானியங்கள் மற்றும் சட்டமுன்வடிவினை சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றாத நிலையில், விவாதத்தில் இருந்துகொண்டிருக்கின்ற ஒரு நிலையில், ஒரு சட்டமன்ற உறுப்பினர் இதுபோன்று உண்மைக்கு மாறான, மக்களைத் திசை திருப்புகின்ற வகையில், முதல் துணை நிதிநிலை அறிக்கை குறித்து, சட்டமன்றத்திற்கு வெளியே இருந்துகொண்டு அறிக்கை வாயிலாக வெளியிட்டுக் கொண்டிருப்பது, அவை உரிமையை ஒட்டுமொத்தமாகப் பாதிக்கும் செயலாகும்.

[திரு. லா. சந்தானம்] [2005 செப்டம்பர் 28

"ஒரு செயல் அல்லது விடுபாடு, சட்டமன்றப் பேரவை அல்லது உறுப்பினர் தனது கடமையைச் செய்வதைத் தடுத்தாலோ அல்லது அவையின் அலுவலர் தன்னுடைய கடமையைச் செய்வதைத் தடுத்தாலோ அல்லது குறுக்கீடாக இருந்தாலோ, அந்தச் செயல் அல்லது விடுபாடு, நேரடியாகவோ, மறைமுகமாகவோ அதுபோன்ற விளைவுகளை உருவாக்குவதாக அமைந்தாலோ, அது அவையை அவமதிப்பதாகும்" என May-யின் 'நாடாளுமன்ற நடைமுறை வழக்கம்' என்ற புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களின் பேச்சு சுதந்திரத்திற்கு அடிகோலிய Bill of Rights, (1689)-ன் 9-வது பிரிவு கீழ்வருமாறு கூறுகிறது:

"நாடாளுமன்றப் பேச்சு சுதந்திரம், விவாதங்கள், நடவடிக்கைகள் குறித்து நீதிமன்றத்திலோ அல்லது நாடாளுமன்றத்திற்கு வெளியேயுள்ள இடங்களிலோ குற்றஞ்சாட்டவோ, கேள்வி எழுப்பவோ கூடாது. 22-4-1699 ஆம் நாளன்று 'House of Commons'-ல் நிறைவேற்றப்பெற்ற தீர்மானத்தில், "இந்த அவையின் உறுப்பினருடைய பெயர்களை அச்சிட்டு வெளியிடுவது அல்லது அவர்களைக் குற்றஞ்சாட்டும் வகையில் வெளியிடுவது அல்லது அவர்களுடைய பாராளுமன்ற நடவடிக்கைகளை உண்மைக்குப் புறம்பாக வெளியிடுவது உரிமை மீறும் செயலாகும் எனவும், அவ்வாறு வெளியிடுவது, பாராளுமன்றச் சுதந்திரத்தை அழித்துவிடும்" எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

26-2-1701 ஆம் நாளன்று 'தாய் பாராளுமன்றம்' என்று அழைக்கப்படுகின்ற 'House of Commons'-ல், "அவையின் எந்த உறுப்பினரையும் பாதிக்கும் வகையில், அவர்களது பணிகள் குறித்து அவதூறை அச்சிடுவது அல்லது வெளியிடுவது, அவை உரிமை மீறிய செயலாகும்" என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதுபோன்ற நேர்வுகளில் அரசமைப்புச் சட்டத்தின் 194-வது உறுப்பின்படி, சட்டமன்றப் பேரவை, அப்படிப்பட்டவர்களைத் தண்டிப்பதற்கு அனைத்து அதிகாரங்களையும் பெற்றுள்ளது. இதுபோன்று விமர்சனம் செய்பவர்கள் எத்தகைய நபர்களாக இருந்தாலும் சரி, பேரவையின் உறுப்பினராகவே இருந்தாலும் சரி, அவர்கள் அவையால் தண்டிக்கத்தக்கவர்களே." இதற்கு ஏராளமான முன்னுதாரணங்கள் உள்ளன.

அரசமைப்புச் சட்டத்தின் 194 (2)-ஆம் உறுப்பு கீழ்க்கண்டவாறு கூறுகிறது:

"ஒரு மாநிலச் சட்டமன்ற உறுப்பினர் எவரும், சட்டமன்றத்திலோ அல்லது அதன் குழு எதிலுமோ, அவரால் கூறப்பட்ட



2005 செப்டம்பர் 28] [திரு. லா. சந்தானம்]

எதனையும் அல்லது அளிக்கப்பட்ட வாக்கு எதனையும் பொறுத்தமட்டில், நீதிமன்றம் எதிலும் நடவடிக்கைகள் எவற்றிற்கும் உள்ளாக்கப்படத்தக்கவர் ஆகார்; மற்றும் அத்தகையதொரு சட்டமன்ற அவை ஒன்றின் அதிகார உரிமையின் வாயிலாகவோ, கீழாகவோ வெளியிடப்பட்ட அறிக்கை, வரைதாள், வாக்குகள் அல்லது நடவடிக்கைகள் எவற்றையும் பொறுத்தமட்டில் எவர் ஒருவரும் அவ்வாறு உள்ளாக்கப்படத்தக்கவர் ஆகார்."

*முற்பகல் 10-15*

அரசமைப்புச் சட்டத்தின் 194 (3) ஆம் உறுப்பு கீழ்க்கண்டவாறு கூறுகிறது:

"பிற வகைகளில், ஒரு மாநிலச் சட்டமன்றத்தின் ஓர் அவையின் மற்றும் அத்தகைய சட்டமன்றத்தின் ஓர் அவை உறுப்பினர்களின், மேலும் குழுக்களின் அதிகாரங்களும், சிறப்புரிமைகளும், ஏமங்களும், சட்டமன்றத்தால் சட்டத்தின் வாயிலாக, அவ்வப்போது வரையறுக்கப்படலாகுமாறு இருத்தல் வேண்டும். மற்றும் அவ்வாறு வரையறுக்கப்படும் வரையில் 1978 ஆம் ஆண்டு அரசமைப்புச் சட்டத்தின் 26-ஆம் பிரிவு செல்லாற்றலுக்கு வருவதையொட்டி முன்பு அந்த அவைக்கும் அதன் உறுப்பினர்களுக்கும், குழுக்களுக்கும் இருந்தவையாக இருத்தல் வேண்டும்.

மேலும், அரசமைப்புச் சட்டம் 361 (அ)-ஆம் உறுப்பின்படி நாடாளுமன்ற ஈரவைகளில் ஏதொன்றின் அல்லது ஒரு மாநிலச் சட்டமன்றப் பேரவையின் அல்லது நேர்வுக்கு ஏற்ப, சட்டமன்ற ஈரவைகளில் ஏதொன்றின் நடவடிக்கைகள், அவற்றின் கணிசமான உண்மை அறிக்கையை செய்தித்தாள்களில் வெளியிட்டிருப்பதைப் பொறுத்தமட்டில், அந்த வெளியீடு தீய நோக்குடன் செய்யப்பட்டிருப்பதாக மெய்ப்பிக்கப்படுகிறது என்றாலன்றி, நீதிமன்றம் எதிலும், எவரும், உரிமையியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகள் எவற்றிற்கும் உள்ளாக்கப்படத்தக்கவர் ஆகார். ஆனால், அந்தக் கூற்றில் உள்ள எதுவும் நாடாளுமன்ற ஈரவைகளில் ஏதொன்றின் அல்லது ஒரு மாநிலச் சட்டமன்றப் பேரவையின் அல்லது நேர்வுக்கு ஏற்ப..(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சந்தானம், உங்களுடைய கோரிக்கை என்ன என்பதைச் சொல்லுங்கள். எது உரிமை மீறல் என்பதை மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) பேசுங்கள், பேசுங்கள்.

[2005 செப்டம்பர் 28

**திரு. லா. சந்தானம்:** இவற்றின் பிரகாரம், இந்த அவையிலே நடக்கின்றச் செய்திகளை, இந்த அவை நடந்துகொண்டிருக்கின்றபோது, இந்த அவையிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையிலே நிதிகள் ஒதுக்கப்படவில்லை என்கின்ற நிலைகளைச் சொல்வதற்குரிய மன்றம் இந்தச் சட்டமன்றம். இந்தச் சட்டமன்றத்திலே சொல்வதற்குப் பதிலாக, வெளியிலேயிருந்து 26-9-2005 ஆம் நாளிட்ட முரசொலி இதழில் இதற்குப் புறம்பாக பல்வேறு நிலைகளிலே இந்தச் சட்டமன்றத்திலே பொய்யான தகவல்கள் தரப்படுகின்றன; உண்மைக்கு மாறாக செய்திகள் இந்தக் கொள்கைக் குறிப்பிலே இருக்கின்றன; அதற்குப் போதிய நிதியாதாரங்கள் ஒதுக்கப்படவில்லை; இது தமிழக மக்களை ஏமாற்றுகின்ற ஒரு வேலை என்கின்ற அளவிற்கு அந்தப் பத்திரிகையிலே விமர்சனம் செய்து, அதிலும் 'ஒய்யாரக் கொண்டையிலே தாழம் பூவாம்' என்று சொல்லி, இந்த மன்றத்தின் மாண்பையும், மரபையும் சீர்குலைக்கின்ற அளவிற்கு செய்திகள் வெளியிட்டிருக்கின்ற காரணத்தினால், இந்த மன்றத்தினுடைய உரிமையை மீறியதாக நான் கருதுகிறேன். அதற்கு இந்த மன்றம் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினையில் மேலெழுந்தவாரியாக அவை உரிமை மீறல் இருப்பதாகக் கருதுவதால், இதுகுறித்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 226-ன்கீழ் அவை உரிமைக் குழுவிற்கு இப்பிரச்சினையை அனுப்புகிறேன். (குறுக்கீடுகள்) பேரவை விதி 226-ன்கீழ் அவை உரிமைக் குழுவிற்கு இப்பிரச்சினையை அனுப்புகிறேன். (குறுக்கீடுகள்) (மணியடிக்கப்பெற்றது) 2005-2006 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை மீது விவாதம். (குறுக்கீடுகள்) திரு. ஹேமச்சந்திரன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே,..

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, Point of order.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே,..

**திரு. பரிதி இளம்வழுதி:** தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. (குறுக்கீடுகள்) திரு. ஹேமச்சந்திரன். (குறுக்கீடுகள்) திரு. ஹேமச்சந்திரன், பேசுங்கள்.



2005 செப்டம்பர் 28]

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) அதாவது, ஒரு உரிமை மீறல்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், நிதிநிலை அறிக்கையின்மீது உங்களுடைய விவாதத்தைத் தொடருங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நிதிநிலை அறிக்கைமீதுதான் பேசுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்ப்பின்மீது பேசுவதற்கு வாய்ப்பில்லை. (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் வழங்கிய தீர்ப்பிற்குப் பிறகு, அதைப்பற்றி விமர்சனம் செய்து பேசுவதற்கு வாய்ப்பில்லை. (குறுக்கீடுகள்) அதையெல்லாம், உரிமைக் குழுவிலே பேசுங்கள். (குறுக்கீடுகள்) உரிமைக் குழுவிலே உறுப்பினராக நீங்கள் இருக்கிறீர்கள், அங்கே பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஹேமச்சந்திரன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** நீங்கள் அதை Privilege Committee-யிலே சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தூக்குத் தண்டனை ஒன்றும் விதிக்கவில்லை. அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது. அங்கே போய் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்களும் அதிலே உறுப்பினராக இருக்கிறீர்கள். அங்கு பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஹேமச்சந்திரன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடுகள்)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** உரிமைக் குழுவிற்கு இந்த விஷயம் அனுப்பப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவருடைய கருத்தைச் சொல்ல வேண்டுமென்றால், அந்தக் குழுவிலே சொல்லட்டும். யாருக்கும் எந்த ஆட்சேபனையும் இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் அங்கே போய்ச் சொல்லுங்கள், சார். (குறுக்கீடுகள்)

[2005 செப்டம்பர் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், விவாதத்தைத் தொடருங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது, *(குறுக்கீடுகள்)* எனக்குப் பேசுவதற்கு இந்த அவையைச் சரிபண்ணித் தர வேண்டுமென்று நான் சபாநாயகர் அவர்களிடம் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை உங்கள் கூட்டணித் தோழர்களிடம் சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)*

*(உறுப்பினர்கள் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், திரு. ஜி.கே. மணி, திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் எழுந்து நின்று பேச முற்பட்டனர்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி., உட்காருங்கள். திரு. ஜி.கே. மணி, உட்காருங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது, நான் எழுந்துகொள்வதற்கு முன்னாலே, அமைச்சர்கள் எழுந்து பேச ஆரம்பிக்கிறார்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு Point of order. *(குறுக்கீடுகள்)* Point of order கேட்க உரிமையில்லையா ஒரு மெம்பருக்கு? *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* எஸ்.ஆர்.பி. உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* எஸ்.ஆர்.பி., மணி, உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும். *(குறுக்கீடுகள்)* இந்தத் தீர்ப்பின்மேல் விவாதத்திற்கு இடமில்லை. *(குறுக்கீடுகள்)* ஹேமச்சந்திரன், பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* பேரவைத் தலைவர் தீர்ப்பிற்குப் பிறகு, மேலும் விவாதம் கூடாது. மணி, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் கோஷமிட்டுக் கொண்டே வெளிநடப்புச் செய்தனர்.)*



2005 செப்டம்பர் 28]

## 5. கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2005–2006–விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** சபை நடவடிக்கைகளிலே கலந்துகொண்டு, சில கருத்துகளைச் சொல்ல வேண்டுமென்று நாங்கள் விரும்பித்தான் இங்கே வருகிறோம். ஆனால், துரதிருஷ்டவசமாக, அதற்கு முடியாத நிலைமைகள் இங்கே உருவாகிக்கொண்டிருப்பதற்காக நான் மிகவும் வருந்துகிறேன்.

இன்று ஒரு முக்கியமான பிரச்சினையை நான் இந்த அவை வழியாக, தமிழக அரசினுடைய மற்றும் தமிழக முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இரண்டு நாட்களுக்கு முன்னால், கர்நாடக மாநிலத்தினுடைய மற்றும் தமிழகத்தினுடைய எல்லைப் பகுதியான தருமபுரி மாவட்டத்திலே, ஒகேனக்கல் சம்பந்தமான ஓர் அறிவிப்பு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றையதினம் பத்திரிகைகளிலே எல்லாம் கர்நாடக மாநிலத்தினுடைய ஓர் அமைச்சரின் அறிக்கையும் வந்திருக்கிறது. இதிலே, நான் பணிவன்புடன் என்ன தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் என்றால், மக்களை பரஸ்பரம் மோத வைக்கக்கூடிய முறையிலே இந்த விஷயத்தைக் கொண்டு செல்வதற்கு அனுமதிக்காமல், முதலமைச்சர் அவர்கள், கர்நாடக முதலமைச்சரைச் சந்தித்து, இதுசம்பந்தமாகப் பேசவோ அல்லது மத்திய அரசு வழியாக இந்தப் பிரச்சினையைத் தீர்க்கவோ, ஒரு சுமுகமானத் தீர்வு ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைத் தமிழக அரசும், நமது முதலமைச்சர் அவர்களும் எடுக்க வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாங்கள் கேட்டுக்கொள்ள விரும்புகிறோம். ஏனென்றால், இரண்டு மாநிலங்களிலே இருக்கிற மக்கள் மோதுகிற ஒரு பிரச்சினையாக இது மாறுவதற்கு நாம் அனுமதிக்கக் கூடாது. நான் இந்த நேரத்திலே ஒரு கருத்தைச் சொல்லிக்கொள்வதற்கு விரும்புகிறேன். நம்முடைய எல்லை குறித்து மாநிலங்களைப் பொறுத்த அளவிலே, நாம் ஒரு சுமுகமான உறவை ஏற்படுத்த வேண்டும் என்பது, நம்முடைய தேவை. ஏற்கெனவே, காவிரி, அதேபோன்று கிருஷ்ணாவிலே தண்ணீர், இந்தப் பிரச்சினைகளிலே எல்லாம் பல விபரீதமான நிலைமைகள் வந்தன என்பதையெல்லாம் இந்த நாடு நன்கறியும்; இந்த மாமன்றமும் நன்கறியும். ஆகவே, அந்த முறையிலே ஒரு நிலைமையை ஏற்படுத்தாமல்...

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் மூத்த உறுப்பினர். அரசுக்கு அறிவுரை வழங்க அவருக்குப் போதிய அனுபவமும், வயதும், எல்லாம் இருக்கின்றன. ஆனால், விபரீத நிலைமைகள் என்று இங்கே குறிப்பிட்டார். அவர் எதைப்பற்றிச் சொல்கிறார் என்று தெரியவில்லை. அண்டை மாநிலங்களோடு சுமுகமான உறவு வைத்துக்கொள்ள வேண்டுமென்று இங்கே அறிவுரை வழங்கினார். தமிழ்நாடு, எப்போதுமே அண்டை மாநிலங்களோடு எந்தப் பிரச்சினையையும் எழுப்பவில்லை. நாங்கள் அண்டை மாநிலங்களோடு எந்தச் சண்டைக்கும் போகவில்லை. காவிரிப் பிரச்சினையைப் பொறுத்தவரை, அனைவருக்கும் தெரிந்த ஒன்று. தமிழகத்தின்மீது எந்தத் தவறும் இல்லை. கர்நாடகத்திலிருந்து காவிரித் தண்ணீர் நமக்கு விடுவிக்கப்பட வேண்டும். தொடர்ந்து கர்நாடக அரசு, அதைச் செய்ய மறுக்கிறது. அதனால் பிரச்சினை ஏற்படுகிறது. நீதிமன்றத்திற்குச் செல்கிறோம். நாங்கள் அண்டை மாநிலங்களோடு சுமுகமான உறவு வைத்துக்கொள்ள வேண்டுமென்றுதான் விரும்புகிறோம். நாங்கள் எந்தவிதத்திலும் எந்தத் தவறும் செய்யவில்லை.

அதைப்போலவே, கிருஷ்ணா நதிநீர்ப் பிரச்சினை. முன்பு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தபோது, தமிழகத்திற்கும், ஆந்திராவிற்கும் ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதன்படி, கிருஷ்ணா நதிநீர் குறிப்பிட்ட அளவு 12 டி.எம்.சி. அளவிற்கு ஆண்டுதோறும் தமிழ்நாட்டிற்கு, குறிப்பாக சென்னைக்கு விடுவிக்கப்பட வேண்டும். அதை அவர்கள் இதுவரை செய்யவில்லை. ஆகவே, திரும்பத் திரும்ப வற்புறுத்திக் கோருகிறோம். எங்களுக்கு வரவேண்டிய தண்ணீரைத் திறந்துவிடுங்கள் என்று கோருகிறோமே தவிர, ஆந்திரத்துடன், அண்டை மாநிலத்தோடு சண்டை போடவில்லை. யாரோடும் எந்தவிதமான தகராறுக்கும் நாங்கள் செல்லவில்லை.

*முற்பகல் 10-25*

இப்பொழுது இந்த ஒகேனக்கல் பிரச்சினை. 2 நாட்களாக இந்த அவையில் அதைப்பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். இந்தப் பிரச்சினை ஏன் எழுந்தது என்றே தெரியவில்லை. மத்திய அரசு வெளியிட்ட வரைபடங்களிலேயே—இந்தியா முழுவதும் எல்லா மாநில அரசுகளும் மத்திய அரசு வெளியிட்ட வரைபடங்களைத்தான் பயன்படுத்துகிறார்கள். நாங்களும் அதைத்தான் பயன்படுத்துகிறோம். மத்திய அரசு வெளியிட்ட வரைபடத்திலேயே இந்தக் குறிப்பிட்ட



பகுதி தமிழ்நாட்டின் எல்லைக்குள் இருப்பதாகத்தான் காட்டப்பட்டிருக்கிறது. எத்தனையோ ஆண்டுகளாக தமிழ்நாட்டின் உபயோகத்தில்தான் இந்தப் பகுதியும் இருந்துவருகிறது. ஆனால், திடீரென்று கர்நாடக அரசு இப்படி ஒரு பிரச்சினையை எழுப்பியுள்ளது. திரும்பத் திரும்ப வற்புறுத்தி, வலியுறுத்தி நான் கூறுகிறேன். இந்தப் பகுதி தமிழ்நாட்டின் எல்லைக்குள்தான் இருக்கிறது. இந்தப் பகுதி தமிழ்நாட்டிற்குச் சொந்தமானது. ஆகவே, நாங்கள் இந்தப் பிரச்சினையைப் பெரிதாக்க வேண்டும் என்று விரும்பவில்லை. எந்த விபரீத நிலைமை ஏற்படவும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம். அந்த மாநில மக்களும், இந்த மாநில மக்களும் மோதிக்கொள்கின்ற அளவிற்கு இது ராஜா, ராணி காலமல்ல. படையெடுத்துக்கொண்டு யாரும் மோதிக்கொள்ள முடியாது. ஆகவே, மத்திய அரசு ஒரு சர்வே நடத்த வேண்டுமென்று கூறியிருக்கிறது. இரண்டு மாநில அதிகாரிகளும் டெல்லியிலே சந்தித்து இந்த சர்வே நடத்துவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அந்த சர்வே நடத்தி முடிக்கும்போது, நிச்சயமாக இந்தப் பகுதி தமிழ்நாட்டிற்குள்தான் இருக்கிறது என்பது நிரூபிக்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் யாரையும் குறை சொல்லவில்லை. தமிழக அரசு இதில் குற்றவாளி என்றும் நான் சொல்லவில்லை. விபரீதமான என்று நான் சொன்னது காவிரியிலே தண்ணீர் வரப்படாததன் காரணமாக நம்முடைய தமிழகத்திலே இருக்கிற விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அதைக் காரணம் என்று நான் சொல்ல வரவில்லை. *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுபற்றி விளக்கம் முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். அடுத்த subject-க்கு வாருங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இதேபோன்ற ஒரு பிரச்சினையை நான் இந்த அவையினுடைய கவனத்திற்கும், முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலேயும், அதேபோன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்களுடைய தொகுதியிலேயும் 40, 50 ஆண்டு காலமாக நெய்யாறு. - எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் அதேபோன்று கேரளாவினுடைய எல்லையிலே நெய்யாறு என்ற ஒரு ஆறு - அதில் ஒரு அணை இருக்கிறது. அந்த அணை உருவாக்கப்படுகிற நேரத்திலேயே கன்னியாகுமரி மாவட்டத்திலே விளவங்கோடு தொகுதியிலேயும், திருவட்டாறு தொகுதியிலேயும் இருக்கிற மக்களுக்கு

தண்ணீர் கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லி, அதற்கான ஒரு கால்வாய் தனியாக உருவாக்கப்பட்டது. ஆனால், இன்று அந்தக் கால்வாயிலே கன்னியாகுமரிக்கு வரவேண்டிய தண்ணீரை கேரள மாநில அரசு வழங்கவில்லை. இது சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் கேரள மாநிலத்தினுடைய முதலமைச்சரைச் சந்தித்துப் பேசினார். நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசினார்கள். அதேபோன்று இது சம்பந்தமாக கேரள சட்டமன்றத்திலேயும் பிரச்சினை எழுப்பப்பட்டது. நானும், மாண்புமிகு P.W.D. துறை அமைச்சருடைய கவனத்திற்கும், அதேபோன்று நம்முடைய Health Minister அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டுவந்து பேசியிருக்கிறேன். இது சம்பந்தமாக கேரள மாநில அரசுக்குக் கடிதம் எழுதுகிறேன் என்று P.W.D. அமைச்சர் அவர்கள் எனக்குச் சொன்னார்கள். அதனுடைய நகல் எனக்கு அனுப்பப்படும் என்றும் சொன்னார்கள். ஆனால், இதுவரை வரவில்லை. கேரள மாநிலத்திலே சட்டப் பேரவையிலே, அந்த மாநிலத்தினுடைய Irrigation Minister என்ன சொல்லி இருக்கிறார் என்று சொன்னால், தமிழக அரசு இது சம்பந்தமாகப் பேசுவதற்கு முன்வரவில்லை. அவர்கள் பேசுவதற்கு...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நெய்யாறு பிரச்சினை குறித்து தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். கேரள மாநிலத்தினைச் சேர்ந்த திருவனந்தபுரம் மாவட்டத்திலுள்ள நெடுமண்காடு மற்றும் நெய்யாற்றின்காரா வட்ட விவசாயிகள் மற்றும் தமிழ்நாட்டினைச் சேர்ந்த கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள விளவங்கோடு வட்ட விவசாயிகள் ஆகியோரின் பாசனத் தேவைக்காக நெய்யாறு பாசனத் திட்டம், முன்னாள் திருவாங்கூர்-கொச்சின் மாநிலத்தால் தயாரிக்கப்பட்டது. திட்டத்தின் முதல் கட்டமாக கல்லணை மற்றும் வலதுகரைக் கால்வாய் ஆகியவை கட்டி முடிக்கப்பட்டன. திட்டத்தின் 2-வது கட்டமாக இடதுகரைக் கால்வாய் கட்டுமானப் பணி எடுத்துக்கொள்ளப்பட்டது.

*முற்பகல் 10-30*

இத்திட்டம் 1965 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மொத்த பாசனப் பரப்பு 38,000 ஏக்கராகும். இதில், 28,800 ஏக்கர் கேரளாவிலும், 9,200 ஏக்கர் தமிழ்நாட்டிலும் அமைந்துள்ளன. எனினும், தமிழ்நாட்டில் இதுவரையில் 6,150 ஏக்கர் மட்டுமே பயனடைந்து வருகிறது. 1956 ஆம் ஆண்டு மாநிலங்களைத்



திருத்தியமைக்கும் சட்டத்தின் விளைவாக கன்னியாகுமரி மாவட்டத்தின் விளவங்கோடு வட்டத்தில் இந்த இடதுகரைக் கால்வாய் ஆயக்கட்டுகள் அமைந்துள்ளன. இடதுகரைக் கால்வாய் மூலம் பாசன வசதி பெறும் கேரள மற்றும் தமிழகத்தின் விளவங்கோடு வட்ட நிலங்களுக்கு நெய்யாறு அணையிலிருந்து தண்ணீர் விடுவிக்கப்பட வேண்டும். இவ்வாறு விடுவிக்கப்படும் நீர் இப்பகுதிகளில் அமைந்துள்ள நிலங்களின் விகிதாச்சாரப்படி, அதாவது, 4,020 ஏக்கர் : 3,825 ஏக்கர் என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்ளப்பட வேண்டும். இடதுகரைக் கால்வாய் மூலம் தமிழகத்தின் விளவங்கோடு வட்டத்திற்கு அளிக்கப்படும் தண்ணீரின் அளவு ஆயக்கட்டு விகிதப்படி 3725/7845 ஆக இருக்கும். அதாவது, விடுவிக்கப்படும் மொத்த நீரில் தமிழகத்தில் உள்ள விளவங்கோடு பகுதிக்கான பங்கு 48 சதவிகிதம் ஆகும். இத்திட்டம் முடிக்கப்பட்டபோதிலும், தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களுக்கிடையே நீர் பகிர்வு மற்றும் தொகை பகிர்வுக்கான ஒப்பந்தம் ஏதுமில்லை.

1968-ல் கேரள அரசு, ஒழுங்குமுறை விதிகளை ஏற்படுத்தலாம் எனத் தெரிவித்தது. எனினும், தமிழ்நாடு அரசு, கேரள அரசு கணக்கிட்டுத் தெரிவித்த முதலீட்டுத் தொகையில், தமிழக அரசின் பங்குத் தொகையான 54.14 இலட்சம் ரூபாய் செலுத்த ஒப்புக்கொண்டபோது, நெய்யாறு இரண்டாவது கட்டப் பணிகளுக்கான செலவினைப் பகிர்ந்துகொள்ளுதல் மற்றும் நீர்ப் பங்கீடு செய்வதற்கான விதிகளை ஏற்படுத்துதல் குறித்து ஒரு முறையான ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொள்ளலாம் என்று தமிழ்நாடு கருத்து தெரிவித்தது. இதற்கிணங்க, தமிழ்நாடு அரசு 1971 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இத்திட்டத்திற்கான முதலீட்டுச் செலவு மற்றும் நீரைத் தமிழ்நாட்டிற்கு வழங்குவதற்கான ஒரு வரைவு ஒப்பந்தத்தைத் தயாரித்து கேரள அரசின் இசைவைக் கோரியது. இந்த ஒப்பந்தத்தில் முதலீட்டுத் தொகையைப் பங்கிட்டுக்கொள்ள ஒப்புக்கொள்ளப்பட்டதைப்போலவே, பராமரிப்புச் செலவினை பங்கீடு செய்துகொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. தமிழ்நாட்டின் பாசனப் பரப்பு 9,200 ஏக்கராக இருந்தபோதிலும், பாசனத்திற்காக 150 கன அடி நீரை தமிழக எல்லையில் அனுப்புவதற்கு கேரள அரசால் ஒப்புக்கொள்ளப்பட்டது. இதன்படி நெய்யாறு திட்டத்திற்கான ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கான கடிதப் போக்குவரத்து மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இதற்கிடையில், தமிழ்நாடு-கேரள அரசுகளின் பாசன அமைச்சர்கள் இடையே திருவனந்தபுரத்தில் 13-2-2003 அன்று நடைபெற்ற இருதரப்பு பேச்சுவார்த்தையின்போது நெய்யாறு திட்டம் பற்றியும் பேசப்பட்டது.

தமிழ்நாடு அனுப்பியுள்ள வரைவு ஒப்பந்தத்தை ஆய்வு செய்து, அவ்வரசின் முடிவு தமிழ்நாட்டிற்குத் தெரிவிக்கப்படும் என்று கேரள அரசின் நீர் ஆதாரத் துறை அமைச்சர் அச்சமயம் தெரிவித்தார். ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்காக கேரள அரசுடன் தொடர்ந்து கடிதப் போக்குவரத்து மேற்கொள்ளப்பட்டது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டி, மத்திய அரசையும் தமிழ்நாடு அரசு அணுகியது. கேரள மற்றும் தமிழ்நாடு அதிகாரிகளிடையே பேச்சுவார்த்தை நடத்துவதற்காக மத்திய நீர்வளக் குழுமத்தின் மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு கேரள அரசு ஒத்துழைப்பு அளிக்காததனால் மத்திய நீர் ஆதார அமைச்சகம் எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை என்றும், 13-2-2003 அன்று அமைச்சர்கள் அளவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளைச் சுட்டிக்காட்டி, மேற்கொண்டு பேச்சுவார்த்தையின் மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் எனவும், அதற்கு மத்திய நீர்வள குழுமம் முழு ஒத்துழைப்பை நல்கும் எனவும் மத்திய நீர் ஆதார அமைச்சகம் தனது 30-5-2003 ஆம் நாளிட்ட கடிதத்தில் தெரிவித்தது.

கேரள அரசிடமிருந்து பதில் வரப்பெறாத நிலையில் 5-7-2005 அன்று தமிழக அரசின் தலைமைச் செயலாளரிடமிருந்து, கேரள அரசின் தலைமைச் செயலாளருக்குக் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. இக்கடிதத்தில் பிப்ரவரி 2004 முதல் தமிழ்நாட்டின் பாசனப் பகுதிக்குத் தேவையான நீர் அளிக்கப்படவில்லை என்பது விவரமாக எடுத்துரைக்கப்பட்டு, கேரள அரசு நெய்யாறு அணையிலிருந்து நெய்யாறு கால்வாய் மூலம் கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகா பகுதியில் இந்த ஆண்டாவது, 2005 ஆம் ஆண்டாவது பாசனம் செய்ய ஏதுவாக நீரை வழங்கும்படியும் மற்றும் தமிழ்நாட்டின் வரைவு ஒப்பந்தத்திற்கு இசைவு அளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

*முற்பகல் 10-35*

பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் 21-7-2005 அன்று கேரள அரசின் பாசனம் மற்றும் சட்டமன்ற விவகாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில், நெய்யாறு அணையிலிருந்து நெய்யாறு கிளைக் கால்வாய் வழியாக நீர் விடுவிக்கப்படாததனால், கன்னியாகுமரி மாவட்டத்தின் விளவங்கோடு பகுதியில் விவசாயம் மிகவும் பாதிப்பு அடைந்துள்ளது என்றும், அப்பகுதி விவசாயிகள் தங்களது வாழ்வாதாரத்திற்கு நெய்யாறு ஆற்று நீரையே முற்றிலும் நம்பி வாழ்க்கை நடத்தி வருகின்றனர் என்பதால் இநத ஆண்டாவது, அதாவது 2005 ஆம் ஆண்டிலாவது, கன்னியாகுமரி மாவட்டத்தின் விளவங்கோடு பகுதி விவசாயிகள்



சாகுபடிப் பணிகளை மேற்கொள்ள நெய்யாறு அணையிலிருந்து தண்ணீரை விடுவிக்க கேரள அரசின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

16-8-2005 அன்று தமிழகப் பொதுப் பணித் துறை செயலாளரிடமிருந்து கேரள அரசின் நீர் ஆதாரத் துறை முதன்மைச் செயலருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில், நீரை விடுவிக்கவும் மற்றும் தமிழ்நாடு அனுப்பிய வரைவு ஒப்பந்தத்திற்கு கேரள அரசின் இசைவைத் தெரிவிக்கவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. கேரள அரசு தனது 31-8-2005 ஆம் நாளிட்ட கடிதத்தில் தமிழ்நாட்டின் கருத்துருக்கள் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும், கேரள அரசின் இறுதி முடிவு விரைவில் தெரிவிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு வட்டப் பகுதியில் உள்ள பாசன நிலங்களுக்கு நெய்யாறு அணையிலிருந்து நீரை விடுவிக்க கேரள அரசை இணங்கச் செய்யவும் மற்றும் இதற்கான ஒப்பந்தத்தை ஏற்படுத்தவும், தமிழ்நாடு அரசு அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழக அரசு எடுத்துக்கொண்டிருக்கிற நடவடிக்கைகள் பற்றி விளக்கமாக இங்கே தெரிவித்தார்கள். தமிழக அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைக்கும், முதலமைச்சருக்கும், அரசுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று ஒரு மிக முக்கியமான பிரச்சினையாக நான் இந்த அவை வழியாக அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, இன்று ஏராளமான மக்கள் பட்டா கேட்டு மனுக்களை பல அலுவலகங்களுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். குடிசைகளில் தங்கி இருக்கக்கூடிய மக்கள், சாலையோரங்களிலும், அதேபோன்று நீர்வளப் பகுதிகளிலேயெல்லாம் தங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஏதோ சில நீதிமன்றங்களினுடைய முடிவு என்று சொல்லி, பல அதிகாரிகள் இவர்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். இது சம்பந்தமாக பல்வேறு இடங்களிலே பல போராட்டங்கள் நடந்துகொண்டிருக்கின்றன என்பதும் அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கும் என்று நான் நம்புகின்றேன். உதாரணமாக, புதுக்கோட்டை மாவட்டம், திண்டுக்கல் மாவட்டம் போன்று பல மாவட்டங்களிலே இப்படிப்பட்ட நிலை

இருந்து கொண்டிருக்கின்றது. நான் ஒன்றை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புவது, மதுரையிலே, High Court அமைக்கப்பட்டுள்ள பகுதியே ஒரு நீர்வளப் பகுதி. அந்த நீர்வளப் பகுதியைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக High Court building -ஐ எல்லாம் இடித்துவிட முடியுமா? ஆகவே, மக்களைப் பொறுத்த அளவிலே என்ன முறையிலே அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமோ, அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும். இந்த மாதிரி குடிசைகளை அப்புறப்படுத்துகிற நேரத்திலே, சாலையோரங்களில் இருக்கக்கூடியவர்களுக்கும், அதேபோன்று மற்ற பகுதியில் உள்ள மக்களுக்கும் மாற்று இடங்களைக் கொடுத்துவிட்டு அவர்களை அப்புறப்படுத்துவதற்கு தமிழக அரசு கீழே இருக்கிற அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்க வேண்டுமென்றும், அவர்களும் அந்த முறையில் உள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோன்று இன்னொரு விஷயத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால், நம்முடைய பள்ளிக்கூடங்களைப் பொறுத்த அளவிலே இன்று 2003-2004-லே 4,203.81 கோடி ரூபாய்....

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலையோரங்களிலும், நீர்நிலைகளிலும் ஆக்கிரமிப்புச் செய்திருக்கின்ற குடிசைகளை அகற்ற வேண்டுமென்று மதுரை உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பாக வழங்கப்பட்டிருக்கின்றது. அந்த அடிப்படையில்தான் பல்வேறு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது அரசு எடுத்த முடிவு அல்ல என்பதையும் நான் இங்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதோடுமட்டுமல்லாமல், இந்தப் பிரச்சினை குறித்து தமிழகத்தில் நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்கின்றது. மாவட்டத்தில் இருக்கின்ற அத்துணை இடங்களிலும் எம்மாதிரியான ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன என்ற புள்ளிவிவரங்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. அந்தப் புள்ளிவிவரங்கள் அரசுக்கு வந்து முடிகின்ற தருவாயில் இருக்கின்றன. அதனை ஏற்கெனவே நான் இரண்டு தினங்களுக்கு முன்பாக இங்கு கேட்கப்பட்ட கேள்விக்கு விளக்கமாகப் பதிலளித்தேன். அதுகுறித்து கூடியவிரைவில் ஒரு நல்ல தீர்வினை மாண்புமிகு அம்மா அவர்கள் எடுப்பார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



முற்பகல் 10-40

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்னாலே சொன்னார், 50 ஆண்டுகாலம், 60 ஆண்டுகாலமாக குடியிருக்கக் கூடியவர்களுடைய நிலையைப்பற்றி பரிசீலிக்கப்படும் என்று. அந்த முறையிலே தமிழக அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்று சொல்லப்பட்டதற்கு நன்றி. இன்று நம்முடைய மக்களை நாம்தான் பாதுகாக்க வேண்டும். சாலையோரங்களிலும் மற்ற பகுதிகளிலேயும் இருக்கக்கூடியவர்கள், அவர்களும் இந்த நாட்டிலே வீடுகள் கட்டி வாழ வேண்டிய கடமை...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் திரு. ஹேமச்சந்திரன் அவர்களுக்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்த அரசு எப்போதுமே ஏழையெளிய மக்கள் பக்கம் நிற்கின்ற அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாவிதமான ஆக்கிரமிப்புகளையும் அகற்ற வேண்டும் என்பது மதுரை உயர் நீதிமன்ற Bench-ன் ஆணை. அது நீதிமன்ற ஆணை. ஆகவே, இது அரசு எடுத்த முடிவு அல்ல என்பதை மீண்டும் நான் தெளிவாக்க விரும்புகிறேன். நீதிமன்ற ஆணையைச் செயல்படுத்துகின்றபோது மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அந்தப் பாதிப்புகளிலிருந்து மக்களைப் பாதுகாக்க என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன், இன்னும் ஒரு ஐந்து மணித் துளிகளில் முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** என்னுடைய நேரத்திலே பெரிய அளவு நேரம் குறுக்கீடுகளிலே போய்விட்டது. நான் சுருக்கமாகப் பேசிவிடுகிறேன். அதாவது, 2003-2004-லே நம்முடைய கல்விக்காக வேண்டி ஒதுக்கப்பட்ட நிதி ரூ. 4203.81 கோடி. 2004-2005-லே ஒதுக்கப்பட்டது ரூ.4202.79 கோடி. அதிலே 2003-2004-லே செலவு செய்யப்படாமல் இருந்த பணம் ரூ.266.52 கோடி. 2004-2005-லே செலவு செய்யப்படாமல் இருந்த நிதி ரூ.402.12 கோடி. அந்த இரண்டு வருடங்களிலே ரூ.668.04 கோடி அரசுக்கு மீதி வந்திருக்கின்றது. அதிலேயிருந்து இப்போது 86 கோடி ரூபாய் இலவசப் பாடப் புத்தகங்களுக்கும், 116 கோடி ரூபாய் இலவச சைக்கிள் கொடுப்பதற்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நடவடிக்கைகளைப் பொறுத்த

அளவிலே அது நல்ல நடவடிக்கைதான். ஆனால், நிலைமை என்னவென்றால், இன்று நம்முடைய பள்ளிக்கூடங்களிலே, 70 ஆயிரத்திற்கு அதிகமான ஆரம்பப் பள்ளிகளிலே இருக்கிற ஆசிரியர்களுடைய எண்ணிக்கை ஒரு பள்ளிக்கூடத்திற்கு ஒரு ஆசிரியர். அதேபோன்று 18 ஆயிரம் பள்ளிக்கூடங்களுக்கு மூன்று ஆசிரியர்கள். அரசு இன்று இலவசமாக சைக்கிள் கொடுத்திருக்கிறது. இந்த சைக்கிளில் ஏறி அங்கே போய்ப் படிப்பதற்கு ஆசிரியர் வேண்டாமா? பள்ளிக்கூடத்திலே தேவையான ஆசிரியர்கள் இல்லாமல் அவர்கள் என்ன படிக்க முடியும்? நம்முடைய முதலமைச்சர் அவர்களால் சைக்கிள் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்று அந்த சந்தோஷத்திலே, அந்த திருப்தியிலே அங்கே போய் உட்கார முடியுமா?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழகத்திலே பல்லாயிரக்கணக்கான ஓராசிரியர் பள்ளிகள் இருக்கின்றன என்ற தவறான தகவலைச் சொல்கின்றார். இன்றைய தேதிவரை தமிழகத்திலே எங்கேயுமே ஓராசிரியர் பள்ளியே இல்லை என்பதை முதலிலே அவருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, இந்த நான்கு ஆண்டு காலத்திலே மட்டும், தமிழகத்திலே இருக்கின்ற ஆசிரியர் பணியிடங்கள், அதாவது அடுத்த ஆண்டு - இந்தக் கல்வி ஆண்டு முடிகின்ற—வரையில் எத்தனை ஆசிரியர் பணியிடங்கள் காலியாக வருகின்றதோ அந்த ஆசிரியர் பணியிடங்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு இந்தத் தேதிவரை 39 ஆயிரம் ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு மட்டும் 11 ஆயிரம் ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமோ இல்லையோ, என்னுடைய மாவட்டத்திலே ஓர் ஆசிரியர் மட்டும் இருக்கின்ற பள்ளிக்கூடங்களை, ஒன்றுக்கு மேற்பட்ட பள்ளிகளை நான் அவர்களுக்குச் சுட்டிக்காட்டத் தயாராக இருக்கின்றேன்.



**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஆசிரியர் பள்ளிகளே தமிழகத்தில் இல்லை. அந்தப் பள்ளிகளிலே யாராவது ஆசிரியர்கள், பணி ஓய்வு பெற்றிருக்கலாம். இல்லையென்றால் அந்த ஆசிரியர்களைப் பணி மாற்றம் செய்து இருக்கலாமே தவிர, ஓராசிரியர் பள்ளியே தமிழகத்தில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன் பேசட்டும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, ஒரே ஒரு விளக்கம். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்தை நான் ஏற்றுக்கொள்கின்றேன். ஆனால், தொடக்கப் பள்ளியில் வகுப்பிற்கு ஓர் ஆசிரியர் என்று நமது அரசு அறிவித்திருக்கிறது. அந்த அடிப்படையிலே 5 ஆசிரியர்கள் இருக்க வேண்டிய பள்ளிகளிலே 2 ஆசிரியர்கள்தான் இருக்கின்றார்கள் என்பதுதான் உண்மை. மீதம் 3 ஆசிரியர்கள் வீதம் போட வேண்டிய பள்ளிகள் ஏராளமாக இருக்கின்றன என்பதை நினைவூட்ட விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் அமைச்சர் சொல்கிறார். ஓர் ஆசிரியர் பள்ளியே தமிழகத்தில் இல்லை என்று சொல்கிறார்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய பள்ளிக்கூடங்களிலே 2003-லிருந்து 2005 வரை காலியாகவுள்ள 45 ஆயிரத்து 538 இடங்களை நிரப்புவதற்கு அரசால் உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஆனால், எத்தனை இடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன என்பது நமக்குத் தெரியாது. ஆனால், நமக்கு உள்ள தகவலின்படி....

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** 23 ஆயிரம் இடங்கள் நிரப்பப்படாமல் காலியாக இருக்கின்றன.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 முதல் 2005-2006 வரை 58,282 ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப அரசு அனுமதித்துள்ளது. ஆனால், 1996-97 முதல் 1999-2000 வரை இதைவிடக்குறைவாக 52,506 ஆசிரியர் பணியிடங்கள் மட்டுமே நிரப்ப அனுமதிக்கப்பட்டுள்ளது. 2001-2002 முதல் 2004-2005 வரையில் அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் பணியிடங்கள்

நிரப்பப்பட்டுவிட்டன. 2005,2006 ஆம் ஆண்டு 11,788 ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கு உத்தரவிடப்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டு டிசம்பர் மாதம் முடிவதற்குள்ளாக தமிழகத்திலே எல்லாப் பள்ளிகளிலும் ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்ற நிலையை உருவாக்க அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு அதற்கான பணிகள் மிக விரைவாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஒரு நோக்கம் சைக்கிள் கொடுத்து நம்முடைய மாணவர்கள் படிக்க வேண்டும் என்ற அந்த எண்ணத்தோடு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், நீங்கள் கேட்டதற்கு அமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார். அடுத்த பிரச்சினைக்குப் போங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அந்த எண்ணத்தோடு, அது பூர்த்தியாக வேண்டுமென்றால் ஒரு வகுப்பிற்கு ஓர் ஆசிரியர் என்ற முறையில் நியமனம் பண்ணி கல்வியின் தரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது மட்டும்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் அதைத்தான் சொல்கிறார்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Yes. நான் அடுத்த விஷயத்திற்கு வருகின்றேன். அடுத்து, குடிதண்ணீர் விஷயத்தைப் பொறுத்த அளவிலே இன்று கடல் நீரை நல்ல நீராக்குவதற்காக மத்திய அரசு தமிழக அரசிற்கு நிதியுதவி வழங்குவதாக பத்திரிகையில் செய்திகளைப் படித்தேன். ஆனால், தமிழக அரசு அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்று தெரிய வந்தது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் எந்த உலகில் இருக்கிறார் என்றே புரியவில்லை. ஏதோ பழைய செய்திகளை எல்லாம் இங்கே பேசிக்கொண்டிருக்கிறார். இந்தப் பழைய கேள்விகள் பல முறை இந்த அவையில் எழுப்பப்பட்டு பல முறை இங்கே பதில் சொல்லி ஆகிவிட்டது. அதன் பிறகு எவ்வளவோ நிகழ்ச்சிகள் நடைபெற்றுவிட்டன. ஆனால், அவற்றை எல்லாம் அவர் தெரிந்து கொண்டதாகவே இங்கே தெரியவில்லை. மத்திய அரசு கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கு எந்த நிதியுதவியும் வழங்குவதாகச் சொல்லி முன்வரவில்லை. அவர்கள் கொடுத்த எந்த நிதியையும் மாநில அரசு வேண்டாம் என்று சொல்லவில்லை. அப்படி ஒரு பிரச்சினையே எழவில்லை. மாறாக, மாநில அரசே இதற்கான டெண்டர்களை விட்டு, அதற்காக பல பேர் இந்த Global Tender-ல் பங்கேற்று, bid-களைக் கொடுத்து, அதை ஒரு Technical Consultant-இடம் கொடுத்து, expert-இடம் கொடுத்து, அதற்கு ஒரு நிறுவனத்தைத் தேர்ந்தெடுத்து, அவர்களோடு ஒப்பந்தமும் போடப்பட்டு பணிகளும் தொடங்கிவிட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. நான் ஒன்றை மட்டும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். மத்திய அரசினுடைய உதவியோடு நம்முடைய மாநிலத்திலே குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் இந்த அரசால் எடுக்கப்பட வேண்டும். இராமநாதபுரம் மாவட்டத்திலே ஏற்கெனவே நம்முடைய BHEL நிர்வாகம் நல்ல முறையிலே அங்கு தண்ணீர்ப் பிரச்சினையை முடித்துக் கொடுத்ததாகப் பத்திரிகைகளிலே படித்தேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை மாநில அரசுதான் செயல்படுத்தியுள்ளது. கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டங்களுக்கு மத்திய அரசு நிதி உதவி கொடுக்க முன்வந்தால் மகிழ்ச்சியோடு அதை வரவேற்று ஏற்போம். ஆனால், அவர்கள் கொடுக்க முன்வரவில்லை என்பதுதான் உண்மை.

முற்பகல் 10-50

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அவர்களிடமும் உதவி செய்ய வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்துகிறோம். இன்று இந்த நேரத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித் துளிகளிலே முடித்து விடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இந்த நேரத்திலே நான் மாண்புமிகு முதலமைச்சருடைய, அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, நம்முடைய நெல்லை மாவட்டத்திலே கங்கைகொண்டான் என்ற பகுதியிலே, அங்கு Coca Cola நிறுவனம் தண்ணீர் எடுப்பதற்கு டிட்கோ மூலம் ஓர் ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது என்றும், 5 இலட்சம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) நீங்கள் சொல்லி முடித்துவிடுங்கள். ஹேமச்சந்திரன் சொல்லி முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஆகவே, இந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு குடிதண்ணீருக்குப் பெரிய பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லி, அந்தப் பகுதியிலே...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் கங்கைகொண்டான் என்னும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ள தொழில் வளர்ச்சி மையத்தில் ஏற்படுத்தப்பட்டுவரும் Coca Cola குளிர்பான நிறுவனத்திற்குத் தண்ணீர் வழங்குவது குறித்து இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் பல்வேறு சந்தேகங்களைத் தெரிவித்தார். எனவே, இதுகுறித்து உண்மை நிலையை இந்த அவைக்கும், அதன் மூலமாக தமிழக மக்களுக்கும் தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகிறேன். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கங்கைகொண்டான் என்ற இடத்தில் தொழில் வளர்ச்சி மையம் ஒன்றை அமைத்திட மைய அரசால் 4-5-1992-ல் அங்கீகாரம் வழங்கப்பட்டது. சுமார் 31.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைத்திட உத்தேசிக்கப்பட்ட இந்தத் தொழில் வளர்ச்சி மையத்தின் மதிப்பீட்டுத் தொகையை 39.68 கோடி ரூபாயாக மாற்றி, சிப்காட் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இந்தத் தொழில் மையம் அமைத்திட சுமார் 2,300 ஏக்கர் நிலம் கையகப்படுத்த திட்டமிடப்பட்டதில், இதுவரை 2,017.36 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இதில், இதுவரை 52.79 ஏக்கர் நிலம் எட்டு தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றில், இதுவரை மூன்று நிறுவனங்கள் செயல்படத் துவங்கியுள்ளன. மற்ற ஐந்து நிறுவனங்கள் கட்டுமானப் பணியில் பல்வேறு நிலையில் உள்ளன. இந்த மையத்திற்குத் தேவைப்படும் தண்ணீரை வழங்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் சுமார் 4.04 கோடி ரூபாய் செலவில், நாள் ஒன்றுக்கு ஒரு மில்லியன் கேலன் லிட்டர், 45.4 இலட்சம் லிட்டர் வரை தண்ணீர் வழங்க தாமிரபரணி ஆற்றை நீர் ஆதாரமாகக்கொண்டு இம்மையத்தில் 5 இலட்சம் கொள்ளளவுள்ள தரைமட்ட நீர்த்தேக்கத்தொட்டி அமைத்து வழங்க திட்டம் செயல்படுத்தப்பட்டு 4-6-2004-ல் சிப்காட் வசம் ஒப்படைக்கப்பட்டது. இந்த மையத்தில் தொழிற்சாலை அமைக்க South India Bottling Company Private Limited என்ற நிறுவனம் அமெரிக்க நிறுவனமான Coca Cola Company-யின் இந்திய கிளை நிறுவனமான Hindustan Coca Cola Company-க்காக Coca



Cola குளிர்பானம் தயாரிப்பதற்காக ஒப்பந்தம் செய்துகொண்டு சிப்காட்டை அணுகியது. சுமார் 30.89 ஏக்கர் நிலப்பரப்பில் ஓர் உற்பத்தி நிலையம் அமைக்க, 21-10-2004 அன்று சிப்காட் நிறுவனத்தால் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. South India Bottling Company மைய அரசின் Secretariat for Industrial Assistance-இடம் தொழில் தொடங்குவதற்கான அறிக்கையை தாக்கல் செய்துள்ள நிறுவனமாகும். தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடமிருந்து காற்று மற்றும் தண்ணீர் மாசு பற்றி தடையின்மைச் சான்றும் இந்நிறுவனத்தால் பெறப்பட்டுள்ளது. சுமார் நாள் ஒன்றுக்கு 1,200 கிலோ லிட்டர் தண்ணீர் வழங்க வேண்டுமென்று சிப்காட்டை இந்நிறுவனம் கோரியதில், நாள் ஒன்றுக்கு 900 கிலோ லிட்டர், 9 இலட்சம் லிட்டர் தண்ணீர் வழங்க சிப்காட் முடிவு செய்துள்ளது. மேலும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மூலம் வழங்கப்பட்டுள்ள தடையின்மைச் சான்று, இந்த நிறுவனம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நிலத்தடி நீரை தொழிற்கூட உபயோகத்திற்குப் பயன்படுத்தக்கூடாது. சிப்காட் மூலம் வழங்கப்படும் தண்ணீரை மட்டும் உற்பத்திக்கு உபயோகிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன்தான் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்த நிறுவனத்திற்கு நிலம் ஒதுக்கீடு செய்யும்போது சிப்காட்டின் முன் அனுமதியின்றி ஆழ்துளைக் கிணறு எதுவும் அமைக்கக்கூடாது என்ற நிபந்தனையுடன்தான் நிலம் வழங்கப்பட்டுள்ளது. இந்நாள் வரை இந்த நிறுவனம் தங்கள் தயாரிப்புகளை உற்பத்தி செய்யத் தொடங்கவில்லை. இதுவரை 80 சதவீத கட்டுமானப் பணிகள் மட்டும் முடிவடைந்துள்ளன. மேலும், இந்த நிறுவனம் தாமிரபரணி ஆற்று நிலப் படுகையிலிருந்து நிலத்தடி நீரை எடுக்கவோ அல்லது உபயோகிக்கவோ எவ்வித அனுமதியும் தமிழக அரசால் வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், இரண்டு மணித் துளிகளில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி சொல்கிற அதே நேரத்திலே நான் ஒரு பணிவான வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். கங்கைகொண்டான் பகுதியிலே இருக்கிற அந்த மக்களிடையே ஒரு பயம் ஏற்பட்டிருக்கிறது. அதாவது கேரள மாநிலத்திலே உள்ள பாலக்காட்டிலே Coca Cola Company நடத்துகின்ற இதேபோன்ற ஸ்தாபனத்தினால் மாசுக்

கட்டுப்பாட்டுப் பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன என்றும், அவை இங்கே வருவதற்கான ஆபத்து இருக்கிறது என்றும் அவர்கள் கருதுகிறார்கள். ஆகவே, மக்களுடைய நலனில் அக்கறை உள்ள ஓர் அரசு என்ற முறையில் இந்த அரசு மக்களுடைய அந்தச் சந்தேகத்தை மாற்றுவதற்கு, மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாசுக் கட்டுப்பாடு வாரியத்தைப் பற்றிச் சொன்னார்கள். 19-11-2004 அன்று மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் இந்தத் தொழிற்சாலை தொடங்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொண்டு, மேலும் 1997 ஆம் ஆண்டு திருவள்ளூர் மாவட்டத்தில் இதுபோன்ற ஒரு தொழிற்சாலை தொடங்கப்பட்டு நேமத்தில் Coca Cola Company இயங்கி வருகிறது. அங்கெல்லாம் இந்த மாதிரி பிரச்சினை எழவில்லை. அதுமட்டுமல்ல, மொத்தம் இந்தியாவில் 56 இடங்களில் Coca Cola Company இயங்கிக்கொண்டு வருகிறது. 35 இடங்களில் Pepsi Company இயங்கிக்கொண்டு வருகிறது. ஆக, எந்த இடத்திலும் இந்த மாதிரி மாசுக் கட்டுப்பாட்டுப் பிரச்சினை எழவில்லை. மேற்கு வங்காளத்தில் மட்டும் 4 இடங்களில் இந்த மாதிரி தொழிற்சாலை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மகாராஷ்டிரா மாநிலத்தில் 5 இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆந்திரப் பிரதேசத்தில் 3 இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்னும் இதர மாநிலங்களில் 35 இடங்களையும் சேர்த்து மொத்தம் 56 இடங்களில் இந்தியாவில் இதுபோன்ற தொழிற்சாலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அங்கெல்லாம் அந்த மாதிரிப் பிரச்சினை எதுவுமே எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கேள்வி. இந்த 9 இலட்சம் லிட்டர் தண்ணீர் சிப்காட் கொடுக்கிறது என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த 9 இலட்சம் லிட்டர் தண்ணீரை எங்கிருந்து எடுத்து சிப்காட் தருகிறது?



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிப்காட்டிற்கு தாமிரபரணி ஆறுதான் நீராதாரம். ஆனால், இதற்குப் பல நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. நாளொன்றுக்கு 1,200 கிலோ லிட்டர் தண்ணீர் வேண்டுமென்று இந்த நிறுவனத்திடம், Coca Cola நிறுவனம் கேட்டிருக்கிறது. ஆனால், சிப்காட் 900 கிலோ லிட்டர்தான் வழங்க முடியும் என்று ஒப்புக்கொண்டுள்ளது. மேலும், மாசுக் கட்டுப்பாடு வாரியம் தடையின்மைச் சான்றிதழ் வழங்கும்போது, இந்த Coca Cola நிறுவனம் சிப்காட்டிடமிருந்துதான் தேவையான தண்ணீரைப் பெற்றுக்கொள்ள வேண்டும்; நேரடியாகவோ, மறைமுகமாகவோ அவர்கள் தாமிரபரணி ஆற்றிலிருந்து தண்ணீர் எடுக்கக் கூடாது; bore-well-ம் போடக் கூடாது என்ற நிபந்தனைகளுடன்தான் இந்தத் தடையின்மைச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, எந்த துஷ்பிரயோகமும் நடைபெறுவதற்கு இங்கே வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன். (குறுக்கீடு)

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும், உட்காருங்கள் அம்மா.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கு வங்காளம், மகாராஷ்டிரா பற்றிச் சொன்னார்கள். நான் அங்கே போய்ப் பார்க்கவில்லை. கங்கைகொண்டானில் இருக்கிற மக்கள் எனக்குச் சொன்னார்கள். நான் போய்ப் பார்த்தேன். அவர்கள் இதைச் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதற்குப் பக்கத்தில்தான் இருக்கிறார். அவர்கள்கூட கங்கைகொண்டானில் போய் அந்த மக்களைச் சந்தித்து அவர்களுடைய பயத்தை மாற்றக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்கலாம்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கத்திலே இருக்கிற திருவள்ளூர் மாவட்டத்திலே இதே தொழிற்சாலை நடைபெற்றுக்கொண்டுதானே இருக்கிறது. நீங்கள் மகாராஷ்டிரா மாநிலத்திற்குப் போக வேண்டாம், மேற்கு வங்காளத்திற்குப் போக வேண்டாம். இங்கே பக்கத்திலே இருக்கிற அடுத்த மாவட்டத்திற்குப் போய்ப் பார்த்துவிட்டு வாருங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** இதேபோன்று சிவகங்கை மாவட்டத்திலே படமாத்தூரிலே Coca Cola Company தண்ணீர் எடுத்து, அந்த மக்களால்

[திரு. ஜி. பழனிசாமி] [2005 செப்டம்பர் 28

அங்கே தடுக்கப்பட்டிருக்கிறது. தடுக்கப்படாமல் இல்லை. இந்த மாதிரி சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு வந்ததால் பொது மக்களால் தடுக்கப்பட்டிருக்கிறது. அதைத்தான் சொல்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது சொன்னார்கள், அநேகமாக 2 இலட்சம் லிட்டர் என்று சொன்னார்கள். ஆனால், ஒரு நாளைக்கு 5 இலட்சம் லிட்டர் தண்ணீர் உறிஞ்சப்படுகிறது என்பதுதான் பொது மக்களுக்கு இன்றைக்கு இருக்கிற ஒரு பேரபாயமாக இருக்கிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** திருபுவனத்திலே Coca Cola Company-யிலே இதேபோன்று மக்களுடைய எதிர்ப்பு காரணமாகக் கைவிட்டுப் போய்விட்டார்கள். நான் அந்த விஷயத்திற்கே வரவில்லை. இப்போது சுனாமியாலே ஏற்படுத்தப்பட்ட பாதிப்புகளைப் பொறுத்த அளவிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், பேசி முடித்துவிடுங்கள். அந்தக் கருத்தோடு முடித்துவிடுங்கள். சட்டப் பேரவைத் துணைத் தலைவர்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை, இல்லை, ஒரு ஐந்து நிமிடம் வேண்டும். அதாவது சுனாமியாலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நேரமில்லை, நேரமில்லை. சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் ஹேமச்சந்திரன் அவர்களும், பாலபாரதி அவர்களும், பழனிசாமி அவர்களும் எழுப்பிய பிரச்சினை என்னவென்றால் நிலத்தடி நீரை எடுத்தால் அது அங்குள்ள அந்தப் பகுதிவாழ் மக்களைப் பாதிக்கும். இதுதானே பிரச்சினை. நிலத்தடி நீரை எடுக்கக்கூடாது. இங்கே சிப்காட், ஒட்டுமொத்த அந்தத் தொழில் மையத்திற்கும், தொழில் பூங்காவிற்கும், நிலத்தடி நீரை எடுக்கவில்லை. நேரடியாக தாமிரபரணி ஆற்றிலிருந்துதான் சிப்காட் நீரை எடுத்துக்கொள்கிறது. ஆகவே, நிலத்தடி நீரை எடுத்தால்தான் பிரச்சினை உருவாகும். நிலத்தடி நீரை எடுக்க அங்கே யாருக்கும் அனுமதிக்கப்படவில்லை. ஆகவே, பிரச்சினை எதுவும் இல்லை.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்... (குறுக்கீடு) இல்லை, முடிந்துவிட்டது. விட்டுவிடுங்கள். (குறுக்கீடு)



2005 செப்டம்பர் 28]

**செல்வி க. பாலபாரதி:** தாமிரபரணி ஆற்று நீர், விவசாயத்திற்கே போதுமானதாக இல்லை. (குறுக்கீடு) மணியடிக்கப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) ஹேமச்சந்திரன், உங்கள் நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடு) உங்கள் நேரம் முடிந்துவிட்டது. மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர். (குறுக்கீடு) முடிந்துவிட்டது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டு. (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது சுனாமியால் பாதிக்கப்பட்ட...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, ஹேமச்சந்திரன் time இல்லை. (குறுக்கீடு) ஏற்கெனவே உங்களுக்குப் போதுமான நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டு.. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித் துளிகளில் முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** திருவள்ளூர் மாவட்டத்திலே, எண்ணூர் பகுதியிலே, இந்திரா காந்தி மீனவர் குப்பம், சுனாமியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு இருக்கிற ஒரு பகுதி. அங்கே இருக்கிற மாணவர்களுக்கு பள்ளிக்கூடத்திலே கல்விக்காக வசதிகள் செய்யப்படும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் assurance கொடுத்து இருக்கிறார்கள். ஆனால், அந்த முறையில் ஒன்றும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதேபோன்று பல பகுதிகளில், கன்னியாகுமரி மாவட்டத்தில்கூட இந்தப் பிரச்சினைகள் இருக்கின்றன. ஆகவே, நாங்கள்கூட ஒரு கோரிக்கை வைத்தோம். இந்த சுனாமிக்கு எத்தனை இலட்சம் ரூபாய் நம்முடைய மாநிலத்திற்கு வரப்பெற்று இருக்கிறது. எவ்வளவு ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது? அதிலே எத்தனை beneficiaries . . .

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு நான் பதில் கூற விரும்புகிறேன். 2004 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தமிழக கடற்கரைப் பகுதிகளைத் தாக்கிய சுனாமி

ஆட்கொல்லி பேரலையால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணமும், மறுவாழ்வும் அளிப்பதற்கு என்னுடைய அரசு மேற்கொண்ட அசாதாரண முயற்சிகளை, இம்மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவர்.

என்னுடைய அரசு மிகக் கவனமாகத் திட்டமிட்டு மேற்கொண்ட நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகள், உலக அளவில் பாராட்டுதல்களைப் பெற்றன. என்னுடைய அரசின், சாதாரண மனித சக்திக்கு அப்பாற்பட்ட அசாத்திய முயற்சிகளால்தான் இது சாத்தியமாயிற்று என்பதை உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) மும்பையைத் தாக்கிய பேரிடரையும், அமெரிக்காவின் நியூ ஆர்லியன்ஸ் பகுதியைத் தாக்கிய 'காத்ரீனா' சூறாவளியையும் தொடர்ந்து உருவான நிலைமையுடன், சுனாமியின் தாக்குதலுக்குப் பிறகு, இங்கு இருந்த நிலையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இது எளிதில் புலனாகும். இதுபோன்று ஒரு பேரிடர் தாக்கும்போது, உடனடியாகச் செயல்பட்டு நடவடிக்கை எடுப்பதும், பரந்துபட்ட அளவில் நிவாரணப் பணிகளுக்கு ஏற்பாடு செய்வதுமே மிக முக்கியம். சுனாமிப் பேரழிவின்போது, என்னுடைய அரசு உடனடியாகச் செயல்பட்டு, மின்னல் வேகத்தில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டதுதான் என்னுடைய அரசுக்கு, உலகளாவிய பாராட்டுக் கிடைத்ததற்கு முக்கியக் காரணம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் முன்னரே இந்த அவையில் குறிப்பிட்டதைப்போல, நிவாரணப் பணிகளும், மறுவாழ்வுப் பணிகளும் மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டன. முதல் இரண்டு கட்டப் பணிகள் ஏற்கெனவே நிறைவேற்றி முடிக்கப்பட்டு விட்டன. நீண்ட கால மறுவாழ்வு நடவடிக்கைகளான மூன்றாம் கட்டப் பணிகள், தற்போது நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் தற்போது முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

என்னுடைய அரசு பின்பற்றவிருக்கின்ற வீட்டு வசதிக் கொள்கை குறித்து, நான் சென்ற கூட்டத் தொடரில் இம்மாமன்றத்தில் அறிவித்தேன். இது முழுக்க முழுக்க தன்னார்வ அடிப்படையிலானது என்பதால், இது அனைவரின் வரவேற்பையும் பெற்றுள்ளது. இதற்கு நல்ல ஒத்துழைப்பு கிடைத்துள்ளது. வீட்டு வசதி மற்றும் கிராம நிர்மாணத் திட்டத்திற்கு அவசரமாகத் தேவைப்படுகின்ற நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உரிய அதிகாரங்கள் வழங்கப்பட்டு, தற்போது பெரிய அளவில் வீட்டுவசதித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனோடு கூடவே, புதிய குடியிருப்புப் பகுதிகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் செய்து



கொடுப்பதற்கான நடவடிக்கைகளும் அதிவேகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின்கீழ் 45,892 புதிய வீடுகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதோடு, 7,411 வீடுகள், அவற்றின் உரிமையாளர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில், பழுது பார்க்கப்பட்டு வருகின்றன. கடற்கரையிலிருந்து 200 மீட்டர் தொலைவிற்குள் வசித்துவரும் சிலரது வீடுகள் பாதிக்கப்படாவிட்டாலும்கூட, அவர்களுக்காக மேலும் 43,314 வீடுகள் கட்டிக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அந்த இடத்தை விட்டு வெளியேறி வேறு இடங்களில் குடியேற அவர்கள் காட்டும் விருப்பத்தைப் பொறுத்தே இது செயல்படுத்தப்படும். இவ்வாறாக, மீண்டும் வீடுகள் கட்டித் தருவது மற்றும் மறுவாழ்வு தொடர்பான மாபெரும் பிரச்சினையை நாங்கள் வெற்றிகரமாக சமாளித்துள்ளோம். இந்த முயற்சியில் அரசு சாரா அமைப்புகளின் முழு ஆதரவையும் நாங்கள் பெற்றுள்ளோம். சுனாமி துயரச் சம்பவத்தைத் தொடர்ந்து மீனவர்களுக்கு அளிக்கப்பட்ட மறுவாழ்வு உள்ளபடியே என்னுடைய அரசின் குறிப்பிடத் தகுந்ததொரு சாதனையாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-05

தற்போது மீண்டும் முழுமையான இயல்பு நிலை திரும்பியுள்ளது. இதுவரை தமிழக அரசால் 19,323 பழுதடைந்த படகுகள் சீரமைக்கப்பட்டுள்ளன. 16,581 புதிய படகுகள் வழங்கப்பட்டுள்ளன. 38,144 மீனவர்களுக்கு புதிய மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 2,750 மோட்டார் இயந்திரங்கள் பழுதுபார்க்கப்பட்டுள்ளன. இவ்வகையில் 141.23 கோடி ரூபாய் தமிழக அரசால் செலவிடப்பட்டுள்ளது.

இது தவிர, அரசு சாரா மற்றும் இதர நிறுவனங்கள் மூலமாக 3,875 மீனவர்களுக்குப் புதிய படகுகளும், பழுதடைந்த படகுகளும் சீரமைத்தும் வழங்கப்பட்டுள்ளன. மீனவர்களுக்கு நல்ல தரமான வாழ்க்கை அமைவதை உறுதிப்படுத்த நீண்டகால அடிப்படையிலான மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்ள தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக உலக வங்கியிடமிருந்தும், ஆசிய வளர்ச்சி வங்கியிடமிருந்தும் நாங்கள் கூடுதல் உதவியைப் பெற்றுள்ளோம். இந்தப் புதிய திட்டங்கள் தற்போது செயல்படுத்தப்படும்.

இந்த நீண்டகால மறுவாழ்வு நடவடிக்கைகளில் தமிழக அரசுக்கு ஆதரவு அளிக்க பல்வேறு பன்னாட்டு அமைப்புகள் மிகுந்த

ஆர்வத்துடன் முன்வந்துள்ளன. உலக வங்கி 423 மில்லியன் டாலர், அதாவது 1852.74 கோடி ரூபாய் அளவிலான ஆதரவு தொகுப்புதவிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. ஆசிய வளர்ச்சி வங்கியும் 143.75 மில்லியன் டாலர், அதாவது 629.63 கோடி ரூபாய் அளவிலான ஆதரவு தொகுப்புதவிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டமும் - UNDP - இதற்குத் தேவையான தொழில்நுட்ப ஆதரவை நல்கி வருகிறது. இவ்வாறாக பெரிய அளவிலான ஒரு மறுவாழ்வுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் பாதிக்கப்பட்ட அனைவருடைய வாழ்க்கை பெரிதும் மேம்படுத்தப்படுவதுடன் அப்பகுதி முழுவதிலும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளும், வீட்டு வசதிகளும் மீண்டும் ஏற்படுத்தப்பட்டு சமுதாயச் சொத்துகள் உருவாக்கப்படும். சுருக்கமாகச் சொல்வதானால், மக்கள் அனைவரும் மன நிறைவு கொள்கின்ற விதத்தில் பாதிக்கப்பட்ட பகுதி முழுவதும் ஒரு புதுப் பொலிவு பெறும். இந்த மறுவாழ்வுத் திட்டத்தினை விரைவிலேயே செயல்படுத்திட வேண்டும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன். அதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளுக்காக என்னுடைய அரசு இதுவரை 1,120.88 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. அதில் இதுவரை 859 கோடி ரூபாயை எனது அரசு விடுவித்துள்ளது. ஆனால், மத்திய அரசு இதுவரை 625.70 கோடி ரூபாய் மட்டுமே மாநில அரசுக்கு விடுவித்துள்ளது. இவ்வாறு நிதி முழுவதுமாக வழங்கப்படாமலிருக்கும்போது, விடுவிக்கப்பட்ட தொகைக்கான செலவு விவரங்களைத் தமிழக அரசு அளிக்க வேண்டுமென பொறுப்பற்ற முறையில் இங்கே பிரச்சினை எழுப்புவது, கேள்வி கேட்பது எனக்கு மிகுந்த வியப்பையும், வேதனையையும் அளிக்கிறது. என்னுடைய தலைமையிலான தமிழக அரசு அரிய சாதனை படைத்திருக்க, அதில் குறை கண்டுபிடிக்க முற்படும் இத்தகைய போக்கு மக்களிடையே எடுபடாது. (மேசையைத் தட்டும் ஒலி) எனது அரசு செய்துள்ள நல்ல பணிகள் பற்றி மக்களுக்கு நன்கு தெரியும். எனவே, வீண் அவதூறுகளைக் கூறி மக்களை ஏமாற்ற முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், முடிந்துவிட்டது. சட்டப் பேரவைத் துணைத் தலைவர். (குறுக்கீடு) நீங்கள் கேட்டதற்கு விளக்கமான பதிலை முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு)



**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் முடிந்துவிட்டது. சட்டப் பேரவைத் துணைத் தலைவர்.

***மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** 2005-2006 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீட்டின் மீது (குறுக்கீடு) நடைபெறுகின்ற விவாதத்திலே பேசுவதற்கு வாய்ப்பளித்த நித்தம் நித்தம் புத்தம் புது திட்டங்களை மக்களுக்கு வழங்கி வரும் இதய தெய்வம் தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கிற தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய உரையைத் தொடங்குகிறேன். (குறுக்கீடு)

'அம்மா ஆணையிட்டார், அதை நடத்திவிட்டார்,
இங்கு ஏழைகள் வேதனைப்படுவதில்லை.
நீங்கள் இருக்கும் வரை எந்தத் துன்பம் இல்லை
மக்கள் கண்ணீர் கடலிலே விழுவதில்லை,
மக்கள் கண்ணீர் கடலிலே விழுவதில்லை.
அம்மா ஆணையிட்டார், அதை நிறைவேற்றிவிட்டார்
இங்கு ஏழைகள் வேதனைப்படுவதில்லை.
நீங்கள் இருக்கும்வரை எந்தத் துன்பம் இல்லை
மக்கள் கண்ணீர் கடலிலே விழுவதில்லை,
மக்கள் கண்ணீர் கடலிலே விழுவதில்லை'. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

முற்பகல் 11-10

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிடுகிறார்கள், நித்தம் நித்தம் ஒரு திட்டத்தை அறிவித்து, மக்களின் நலன் காக்கிறார்கள்.

"வயிற்றுக்குச் சோறிட வேண்டும் -
இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்
பயிற்றுப் பலகல்வி தந்து - இந்தப்
பாரை உயர்த்திடல் வேண்டும்"

என்ற பாரதியாரின் வரிகளுக்கேற்ப, 83 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில், கல்வி கற்கிற மாணவர்கள், 1-வது முதல் 12-வது வரை படிக்கிற

[திரு. அ. அருணாசலம்] [2005 செப்டம்பர் 28

குழந்தைகளுக்குப் பாடப் புத்தகத்தை வழங்க வேண்டுமென்று, ஒரு கோடியே 8 இலட்சம் பிள்ளைகள் பயன்பெறுகிற வகையில், கிட்டத்தட்ட 83 கோடியே 70 இலட்சம் ரூபாய்க்கு இலவசப் பாடப் புத்தகங்களை வழங்கிய பெருமை, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தப் பாடப் புத்தகத்தை வாங்குகிறபோது பெற்றோர்கள் எவ்வளவு வேதனைப்படுவார்கள்? அவர்களிடம் காசு கையிலே இருக்காது. கிராமத்திலே படிக்கிற ஒவ்வொருவருக்கும் நன்றாகத் தெரியும். ஒருவன் தந்தையிடம் போய் கேட்பான், அப்பா நாளைக்கு ஆசிரியர் பாடப் புத்தகம் வாங்கச் சொன்னார். எந்தப் பாடப் புத்தகம் வாங்கச் சொன்னார்? கணிதம் வாங்கச் சொன்னார். ஆகவே, கணிதப் புத்தகம் வாங்க வேண்டுமென்று அந்தத் தந்தை, பணத்தை ஏதாவது கடன், உடன் வாங்கிக் கொடுத்துவிடுவார். அடுத்த நாள் போய் தாயிடம் கேட்பான், அம்மா நான் பாடப் புத்தகம் வாங்க வேண்டும், ஆசிரியர் சொல்கிறார் என்பான். நேற்று தானேடா உன் அப்பாவிடம்போய் கேட்டாய், இன்றைக்கு என்னடா என்று கேட்பார்கள். அப்போது சொல்வார்கள், நான் அப்பாவிடம் கேட்டது கணிதப் புத்தகம், உங்களிடம் கேட்டது mathematics புத்தகம் என்பார்கள். இப்படி மாணவர்கள் தங்களுடைய அந்தக் குறையைச் சொல்லி, இப்படியே ஏமாற்றிக்கூட தாயிடம் அந்தப் பணத்தைப் பறித்தார்கள். Science புத்தகம் என்று தாயிடம் சொல்லிவிட்டு, தந்தையிடம் அறிவியல் புத்தகம் என்று சொல்வார்கள். இப்படி, இந்தக் குறையை எல்லாம் நீக்க வேண்டுமென்றுதான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இலவச பாடப் புத்தகத்தை இந்திய வரலாற்றிலே கொடுத்திருக்கிறார்கள் என்றால், இதை யாரும் மறுக்கமாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே பேசினார்கள், தொடக்கப் பள்ளி இருக்கிறதா என்றுகூட நம்முடைய மரியாதைக்குரிய ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்னார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பின்னாலே ஒரு கிலோ மீட்டருக்குள் தொடக்கப் பள்ளி அவசியமாக இருக்க வேண்டும்; 3 கிலோ மீட்டருக்குள் நடுநிலைப் பள்ளி இருக்க வேண்டும் என்று சொல்லி, 4 ஆண்டு காலத்தில் 1,112 தொடக்கப் பள்ளிகளை உருவாக்கி, ஆரம்பக் கல்வியைக் (மேசையைத் தட்டும் ஒலி) கற்க வேண்டுமென்ற பெருமையை ஏற்படுத்தித் தந்தவர், கல்விக் கண்ணைத் திறந்தவர், இதய தெய்வம் அம்மா அவர்கள்.



2005 செப்டம்பர் 28] [திரு. அ. அருணாசலம்]

ஆக, இப்படிப் பார்க்கிறபோது, சைக்கிளைப் பற்றியும் சொன்னார்கள். சைக்கிளைப் பார்க்கிறபோது, இந்தியாவைப் பொறுத்தவரையில் எந்த மாநிலத்திலேயும் நடைபெறாத ஒரு சிறப்பான திட்டம், புரட்சிகரமான, அற்புதமான, சீர்திருத்தமான திட்டம். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001-லே பொறுப்பேற்கிறார்கள். ஏற்றவுடன், 11, 12-வது படிக்கிற ஆதிதிராவிட மாணவர்களுக்கு மட்டும் அந்தத் திட்டத்தை உருவாக்கி சைக்கிளை வழங்குகிறார்கள். அதற்குப் பின்னாலே 2004 ஆம் ஆண்டு, ஆதிதிராவிட மக்களின் குழந்தைகள் மட்டும் படித்தால் போதாது, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர் மரபினர், அந்த மாணவிகளும் படிக்க வேண்டுமென்று 2004-லே பிற்படுத்தப்பட்ட மாணவிகளுக்கும் அந்தத் திட்டத்தைக் கொண்டுவந்த பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

அதற்குப் பின்னாலே பார்த்தார்கள், நாம் இதையெல்லாம் அறிவித்துவிட்டோம், மாணவர்களும் கேட்கிறார்கள், 2005-லே அனைத்து மாணவர்களுக்கும், ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், F.C. அத்தனை பேருக்கும் பொருளாதார ரீதியில்லாமல், எந்த ஜாதியைச் சேர்ந்தவராக இருந்தாலும், எல்லோருக்கும் சைக்கிள் வழங்க வேண்டுமென்று, மாணவர்களுக்கும் வழங்கி, குறிப்பாக இந்த நிதிநிலையிலேகூட ரூபாய் 110.52 கோடியை ஒதுக்கி, தமிழகத்தைப் பொறுத்தவரையில் இன்றுவரையில் 6.36 இலட்சம் மாணவ, மாணவிகள் பயன் பெறுகிறார்கள் என்றால் இந்தத் திட்டத்தைப் பாராட்ட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-15

நல்லவர்கள் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். இந்த சைக்கிள் வழங்குகிறீர்களே, இதற்கெல்லாம் நிதி எங்கேயிருந்து வருகிறது என்று நேற்றைக்கு முந்தைய நாள் பேசிய நம்முடைய பொன்முடி அவர்கள் பேசினார்கள். அவர் பேசினார், நிதி எங்கே இருக்கிறது ஒதுக்குவதற்கு என்று. (குறுக்கீடு) ஆகவே, நாங்கள் சைக்கிள் வாங்கிக் கொடுத்திருக்கிறோம். சைக்கிளை கடனாக வாங்கிக் கொடுக்கவில்லை. வாடகைக்கு எடுத்துக் கொடுக்கவில்லை. நிதி ஒதுக்கியதால்தான் சைக்கிளே கொடுக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

போராட்டம் செய்தால்கூட, தொழிற்சங்கத்தில் இருக்கிறவர்களுக்கு அந்த பைக் நிறுத்துவதற்கு, அவர்களுடைய vehicle நிறுத்துவதற்கு stand கொடுக்க மாட்டார்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சைக்கிள் கொடுத்தோம், அந்த சைக்கிள் நிறுத்துவதற்கு ஒரு stand-ம் இருக்க வேண்டுமென்று அதற்கும் இடம் வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வெளிநாடு செல்வதற்கு எனக்கு அனுமதி வழங்கினார்கள். வெளிநாடு செல்கிறபோது, China-விற்கு போய் இருந்தேன். அங்கே போய் பார்த்தபோது, பல இடங்களிலே அங்கே இருக்கிற மக்கள் எல்லாம் சைக்கிளை ஓட்டிக்கொண்டு போய்க்கொண்டிருந்தார்கள். சைக்கிளில் செல்கிறவர்களுக்கென்று ஒரு வழி போட்டிருக்கிறார்கள், green light-லே. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கே சைக்கிள் கொடுத்தார்கள் என்று நாம் நினைத்துக்கொண்டிருக்கிறோம். மக்களே அங்கே சைக்கிள்தான் ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆக, என்ன காரணம் என்று கேட்டால், சைக்கிள் உடலுக்கு நல்லது, படிப்புக்கு நல்லது என்று புரட்சித் தலைவி அம்மா கொடுக்கிறார்கள். உடலுக்கு நல்லது, இருதயத்திற்கு நல்லது, ஒரு exercise-ஆக இருக்கிறது என்று அங்கே ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப் பார்க்கிறபோது, தமிழகத்திலே சைக்கிள் கொடுத்து ஒரு சீர்திருத்தத்தை உருவாக்கியவர்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

அதுமட்டுமல்லாமல், கரும்புக்கு விலை வேண்டும் என்று கடந்த ஆட்சியிலும் கேட்டார்கள். கேட்டுக் கேட்டுப் பார்த்தார்கள். 5 ஆண்டுகாலமாகக் கேட்டார்கள். மெட்ரிக் டன் ஒன்றுக்கு 1,000 ரூபாய் ஒதுக்குவேன் என்று சொன்னார்கள். ஒதுக்கவேயில்லை. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆண்டு கரும்புக்கு மெட்ரிக் டன் ஒன்றுக்கு 1,014 ரூபாயை ஒதுக்கி, அதிலே பிழிதிறன் 9 சதவிகிதத்திற்கு மேற்பட்டு இருந்தால், குறிப்பாக எல்லோருக்குமே 0.1 சதவிகிதத்திற்கு ரூ. 8.80 ஊக்கத் தொகை வழங்கி, இதற்காக இந்த நிதிநிலையிலே, துணை நிதிநிலையிலே ரூபாய் 7.5 கோடியை ஒதுக்கியிருக்கிற பெருமை புரட்சித் தலைவி அம்மாவிற்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

இதையே சிலர் சொல்கிறார்கள். பேப்பரிலேகூட பார்த்தேன். இதெல்லாம் விவசாயிகளுடைய கண்ணீரைத் துடைக்கிற நிகழ்ச்சி என்றார்கள். 5 ஆண்டுகாலமாக உங்கள் ஆட்சியிலே விவசாயிகள்



கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தார்கள் உண்மையிலேயே அந்தக் கண்ணீரைத் துடைத்த பெருமை புரட்சித் தலைவி அம்மாவிற்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

கரும்புக்கு விலை நிர்ணயம் செய்து, 1,014 ரூபாய் கொடுத்து, இனிமேல் நீங்கள் அழ வேண்டாம், என்னுடைய கை இருக்கிறது. ஆகவே, உங்கள் கண்ணீரைத் துடைத்து, இந்தத் தொகையை வழங்குகிறேன் என்று வருகிற பொங்கலுக்கு இனிப்பான பொங்கலைக் கொண்டாட வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, இப்படியெல்லாம் பல திட்டங்களை உருவாக்கி நடைமுறைபடுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

சுதந்திர தின விழாவிலே அம்மா அவர்கள் பேசுகிறபோது, விவசாயிகளுக்கெல்லாம் இனிப்பான ஒன்றை அறிவித்தார்கள். அறிவித்த அந்தத் திட்டங்கள் குறிப்பாக சிறு மற்றும் குறு விவசாயிகள், தமிழகத்திலே இருக்கிற அத்தனை விவசாயிகளும் உறுப்பினராக இருக்கிற 1 கோடியே 37 இலட்சம் பேர்கள், அவர்களுக்கு 10 ரூபாய் (குறுக்கீடு) விவசாயத் தொழிலாளர்கள், சிறு மற்றும் குறு விவசாயத் தொழிலாளர்கள் 1 கோடியே 37 இலட்சம் பேருக்கு, அவர்களுடைய (குறுக்கீடு) சிறு மற்றும் குறு விவசாயிகள் நிலமற்ற தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள் அத்தனை பேருக்கும் 10 ரூபாய் கட்டணத்தை நானே செலுத்துகிறேன் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செலுத்தி, அதற்காக இந்தத் துணை மதிப்பீட்டிலே 13 கோடியே 70 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள் என்றால், — (குறுக்கீடு) மொத்த ஒதுக்கீடு ரூபாய் 100 கோடியை ஒதுக்கி — அதற்குப் பின்னாலே சொல்லியிருக்கிறார்கள். இந்தத் துணை மதிப்பீட்டிலே, ரூபாய் நூறு கோடியை ஒதுக்கியிருக்கிறார்கள்.

முற்பகல் 11-20

அதற்குப் பின்னாலே 60 வயதைத் தாண்டியவர்கள், குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்கள் 60 வயதைத் தாண்டிவிட்டால் அவர்களுக்குக்கூட ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்று ஒரு திட்டத்தைக் கொண்டுவந்த பெருமை புரட்சித் தலைவி அம்மாவுக்குத்தான் உண்டு. படித்து வேலையில் இருந்தவர்களுக்கு ஓய்வூதியம். 60 வயதைத் தாண்டிய விவசாயிகளுக்குக்கூட ஓய்வூதியம் வழங்குகின்ற ஒரு திட்டம் இருக்கிறதென்றால் அது புரட்சித் தலைவி கொண்டுவந்த திட்டம் என்பதை மறந்துவிடாதீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 60 வயது ஆகிவிட்டால் அவர் வேலையே செய்ய



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227000
சென்னை-600 008

முடியாதிருந்தால் மாதம் 200 ரூபாய். இப்படிப்பட்ட 33 நல்ல திட்டங்களை உருவாக்கி அறிவித்திருக்கிறார்கள் அன்றே. அந்த 33 சலுகைகளை மூச்சுவிடாமல் சொல்லவே ஒருவரால் முடியாது. அப்படி அறிவிக்கப்பட்ட 33 சலுகைகளால் குழந்தைகள் சிறப்பாகப் படிக்கின்றனர். மாணவிகளுக்கு இத்தனையும் கொடுத்து — விவசாயி இறந்துவிட்டால் அதற்காக நிதி கொடுத்து, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஈமச் சடங்கு என்கிற திட்டத்தை — தமிழகத்திலே முதன் முதலாகக் கொண்டுவந்த பெருமை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) வறுமையிலே வாடுகின்ற விவசாயிகள் இறந்து விட்டால் அந்த ஈமச் சடங்குக்கும் 2,500 ரூபாய் வழங்கி பெருமை செய்தவர்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இப்படி கல்வி உதவித்தொகை, மேற்படிப்பு இத்தனையும் செய்த பெருமை புரட்சித் தலைவி அம்மாவுக்கு உண்டு.

உழவர் பாதுகாப்புத் திட்டம், ஓர் அருமையானத் திட்டம். இதை கம்யூனிஸ்ட் கட்சியிலே இருக்கிற அந்தக் கட்சிக்காரர்கள் பாராட்ட வேண்டும். மரியாதைக்குரிய ஹேமச்சந்திரன் பாராட்ட வேண்டும். West Bengal-ல் இருக்கிற அவர்கள் பாராட்ட வேண்டும். அங்கெல்லாம் அதைச் செய்யவில்லை. ஆனால், தமிழகத்திலே புரட்சித் தலைவி சீர்திருத்தத் திட்டத்தை உருவாக்கித் தந்துகொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. த. பாண்டியன் அவர்கள்கூட பாராட்டியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** திரு. த. பாண்டியன் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். அதைப்போல, மாண்புமிகு அம்மா அவர்கள், மத்திய அரசிலே 5 முறை பெட்ரோல், டீசல் விலையை ஏற்றினாலும் மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கி, மாணவர்களுடைய நலன் காத்து, இந்த பட்ஜெட்டிலே சலுகையாகத் தொடர்ந்து வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். இந்த பட்ஜெட்டிலே வழங்கப்பட்டிருக்கிற சலுகை (குறுக்கீடு) பஸ் கட்டணத்திற்கான சலுகையைத் தொடர்ந்து இந்த அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. இந்தத் துணை மதிப்பீடுகளில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 108 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிற பெருமை புரட்சித் தலைவி அம்மாவுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இந்த 108 கோடியை இலவசமாக 24½ இலட்சம் குழந்தைகள் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இது வரலாற்றுச் சிறப்பாகும். மத்திய அரசே உயர்த்தினாலும், மாநில அரசு உயர்த்தாமல் டீசல், பெட்ரோலுக்கு விலையை உயர்த்துகிற நிலையில், மக்கள் பாதிக்கப்படக்



கூடாது, பஸ்ஸிலே செல்கிறவர்கள் பாதிக்கப்படக் கூடாது என்று பார்க்கிற பெருமை புரட்சித் தலைவி அம்மாவுக்கு உண்டு.

சிலர் வீண் பேச்சு பேசுகிறார்கள், அதைக்கூட நம்முடைய மரியாதைக்குரிய சந்தானம் அவர்கள் சொன்னார்கள். இந்தத் துணை நிதிநிலை ஒரு சவுரி முடிக்கு சமம் என்றெல்லாம் கிண்டல் பேசினார்கள். வீண் பேச்சு பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று. ஆனால், அவரைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. வீண் பேச்சு பேசும் தலைவர் போல் அல்ல எங்கள் தலைவி. எங்கள் தலைவி செயல் தலைவி, சொன்னதைச் செய்யும் தலைவி, சொல்லாததைத் தினந்தோறும் செய்து கொண்டிருக்கும் தலைவி, அவர்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் ஒன்றை மட்டும் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இல்லாமல் இருந்தாலும் மத்திய அரசு அங்கே ஆண்டு கொண்டிருக்கிறது. இங்கே திட்டங்கள் தொடங்கப்பட்டு, மத்திய அமைச்சர்கள் எல்லாம் வந்து நடத்துகிறார்கள். ஆனால், அந்த மத்திய அரசு திட்டங்கள், சேது சமுத்திரத் திட்டமாக இருந்தாலும், நெடுஞ்சாலைத் துறை திட்டமாக இருந்தாலும், அந்தத் திட்டங்களைத் தொடங்கி வைக்க மரியாதைக்குரிய முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் தலைமையேற்று, அந்தத் திட்டங்களைத் தொடங்கி வைத்து அவர் நடத்திக் கொடுத்திருக்கிறார். நான் ஒன்றைக் கேட்கிறேன். தமிழகத்தின் முதலமைச்சர் யார்? புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆனால், இவரே முதலமைச்சரைப்போல அந்தத் திட்டங்களையெல்லாம் தொடங்கி வைத்து, அடிக்கல் நாட்டி, இதை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். மக்கள் கேட்கிறார்கள். அவருக்கு கொஞ்சம் அற்ப ஆசை. இனிமேல் ஆட்சிக்கு வருவோமோ, வரமாட்டோமோ, இப்பொழுதே நாம தலைமை தாங்கி நடத்திவிடுவோம் என்று நினைத்துச் செய்வதாக மக்கள் நினைக்கிறார்கள். நாங்கள் நினைக்கவில்லை.

முற்பகல் 11-25

சாலைப் பணியிலே பெரிய சீர்திருத்தம், மறுமலர்ச்சி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆலயப் பணி, மழைநீர் சேகரிப்பு இப்படிப் பல திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஜெர்மனியில், வெளிநாட்டில் என்னைக் கேட்டார்கள். நீங்கள் எங்கே இருந்து வருகிறீர்கள் என்று கேட்டான். You are Indian? என்றான். Yes என்றேன்.

[திரு. அ. அருணாசலம்] [2005 செப்டம்பர் 28

பிறகு திரும்பக் கேட்டான். அங்கே எங்கிருந்து நீங்கள் வருகிறீர்கள் என்றான். I am coming from Tamil Nadu என்றேன். Tamil Nadu, I don't know என்றான். Tamil Nadu, I am coming from Tamil Nadu என்றேன். Tamil Nadu! அப்படி என்றான். என்ன Tamil Nadu என்கிறாரே, you don't know என்றேன். I don't know என்று சொன்னான். அவனிடம் சொல்லும்போது the Chief Minister of Tamil Nadu, dynamic leader, Chief Minister Amma என்றேன். You are coming from Amma State, ஆஹா! அம்மா என்று சொன்னவுடனே அங்கேயும் தெரிந்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் ஜெர்மனியில் போய் சொன்னால்கூட, அம்மா என்று சொன்னால் தெரிகிறது. இந்தியாவிற்கு மட்டுமல்ல, உலகத்திற்கே, அகில உலகத்திற்கே, world leader Puratchi Thalaivi Amma என்றால் தெரிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

உண்மையிலேயே நடந்ததைச் சொல்கிறேன். ஜெர்மனிக்குப் போய், ஒரு வினாயகர் கோயிலினுடைய பூமி பூஜையிலே கலந்து கொண்டேன். கலந்துகொண்டபோது அங்கே சொன்னார்கள். தமிழ்நாட்டிலே திருக்கோயில்களுக்கு இவ்வளவு திட்டங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள் உங்கள் அம்மா. இந்தக் கோயிலுக்கும் அவர் உதவி செய்வார்களா என்று வெளிநாட்டிலே இருக்கிறவர்கள் கேட்கிற பெருமை, அந்தச் சிறப்பு புரட்சித் தலைவி அம்மாவுக்கு இருக்கிறது என்றால், இதை மறந்துவிடக் கூடாது. ஆக, இப்படி எண்ணற்ற திட்டங்களை உருவாக்கிக்கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே நித்தம் நித்தம் திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், சில பொறுக்க முடியாதவர்கள் ஏதாவது சொல்லிக்கொண்டுதான் இருக்கிறார்கள். அதைப்பற்றிக் கவலையில்லை. அவர்கள் சொன்னார்கள், அம்மா அவர்கள் தமிழகத்தைப் பொறுத்தவரையில்—அவர்கள் கடைசியாகச் சொன்னது, தமிழக மக்களை வளமுடனும், நலமுடனும் வாழ வைத்துக்கொண்டிருக்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்த மக்களுக்காக தினந்தோறும் 20 மணி நேரம் தொடர்ந்து பணியாற்றுகிற பெருமையைத் தமிழகம் பெற்றிருக்கிறது என்றால் அது சிறப்பானது; மறந்து விடக்கூடாது. அப்படிப்பட்ட அன்னையின் ஆட்சியில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் அவருடைய பொற்பாதம் பணிந்து நன்றியைத் தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.



2005 செப்டம்பர் 28]

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் குறித்து பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கருத்து தெரிவிக்க வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களாலே இங்கே வைக்கப்பட்டுள்ள துணை மதிப்பீடுகளின்படி 1,919.25 கோடி ரூபாய் நிதியொதுக்கம் கோரப்பட்டுள்ளது. ஆனால், 2005-2006 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்படி வருவாய்க் கணக்கில் 1,404 கோடி ரூபாய் பற்றாக்குறையாகக் காட்டப்பட்டிருக்கிறது. ஆக, இதை ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்தில் துணை மதிப்பீடுகள் நிதிநிலை அறிக்கையில் காட்டப்பட்டுள்ள பற்றாக்குறையை விஞ்சி நிற்கிறது. உதாரணத்திற்கு, செய்யப்பட இருக்கும் செலவுகளை ஈடுகட்டும் வகையில் வருவாய் காட்டாமல், செலவு மட்டுமே செய்தால், பற்றாக்குறை அதிகமாகும் என்று சொல்லி, பொருளாதார நிபுணர்கள், நிதிநிலை பற்றிய கருத்து கூறக்கூடிய வல்லுநர்கள் எல்லாம் இதைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்த வகையில் கடந்த நிதிநிலை அறிக்கையின்படி நீங்கள் காட்டியுள்ள 2008-ல் வருவாய்க் கணக்கில் பற்றாக்குறையே இருக்காது என்ற நடுத்தர கால நிதி திட்டத்தின் இலக்கினை நாம் எப்படி எட்ட முடியும்? இன்னும் நீங்கள் சொல்லியிருப்பதிலே..

*முற்பகல் 11-30*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. 2005-2006 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின்படி ஒட்டுமொத்த பற்றாக்குறை ரூ. 260.400 கோடி இருக்குமென்று கூறப்பட்டிருக்கிறது. இது எப்படி ஈடுகட்டப்படும் என்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தெளிவாக ஏற்கெனவே விளக்க அறிக்கை ஒன்றை அவைக்குத் தந்திருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விளக்கம் சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, நீங்கள் சொல்லியிருப்பது வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை சதவிகிதம் 2003-2004-ல் 6.7 சதவிகிதமாகவும் 2004-2005-ல் 6.3 சதவிகிதமாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. இது 2005-2006 நிதிநிலை அறிக்கை புத்தகத்திலே கடைசி பக்கத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற அட்டவணை. அதிலே 2005-2006-ல் 4.7 சதவிகிதமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த 4.7 சதவிகிதம்

தற்போதைய 1,919 கோடிக்கு கூடுதல் செலவு என்று மேலும் 2 மடங்காக வாய்ப்பு உள்ளது. ஆகவே, பற்றாக்குறை கூடுமே தவிர, குறையாது என்பதைத்தான் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்குதான் அம்மா அவர்கள் ஏற்கெனவே விளக்கம் தந்திருக்கிறார்கள். சிக்கன நடவடிக்கை வரி வருவாயிலே மேற்கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களுடைய பெரு முயற்சியின் காரணமாக 1,500 கோடி ரூபாய் கூடுதலாகப் பெறக்கூடிய நிலை வந்துவிட்டது. Commercial Taxes-ஐப் பொறுத்தவரைக்கும் எந்த மாநிலத்திலும் இல்லாத சாதனையை VAT நடைமுறைப்படுத்தாமலேயே நல்ல வருமானத்தை ஈட்டுகிற காரணத்தால், அங்கிருந்து அரசுக்கு உபரி, எதிர்பார்த்ததைவிட அதிகமான வருமானம் வந்துகொண்டிருக்கிறது. இதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சொல்லப்பட்டது விற்பனை வரியிலே, இன்னும் வாகன வரி வருவாயிலே மற்ற 3 இனங்களிலே சொன்னீர்கள். இன்னொன்றுகூட, மதுவிலே கூட 4-வது இனமாக 4 இனங்களிலே வருவாய் வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. இருந்தாலும்கூட நிறைய அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பற்றாக்குறை கூடுதலாக வருமே தவிர, குறையாது. நீங்கள் சொல்லியிருப்பதைத்தான் சொல்கிறோம். அதேநேரத்தில் துணை மதிப்பீடுகள் என்பது, ஏற்கெனவே சொல்லப்பட்ட பணித் திட்டங்களில் கட்டாயமாக மேற்கொள்ள வேண்டிய கூடுதல் செலவுகள் 1, புதுப் பணித் திட்டங்களின் செலவுகள் 2, நீதிமன்றத் தீர்ப்புகளைச் செயல்படுத்துவதால் ஏற்படும் கூடுதல் செலவு 3 என்று 3 வகைப்படுத்தி நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், இதைத் தவிர 2005-2006 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும் விரிவான துணை மதிப்பீடுகளும் என்ற புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள புள்ளிவிவரங்களில் மேலே சொல்லப்பட்ட 3 வகையான செலவினங்களுக்கு உட்படாத செலவினங்களும் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. உதாரணமாக, கட்டடங்கள் பராமரிப்பு என்ற தலைப்பில் செலவினங்கள் காட்டப்பட்டிருக்கிறது. கட்டடங்கள் பராமரிப்பு ஆண்டுதோறும் நிகழக்கூடிய, முன்கூட்டியே திட்டமிட்டு செலவிடக்கூடிய ஒரு செலவு. இது முறையான திட்டச் செலவில் அடங்குமே தவிர, கூடுதல் செலவாக எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? ஆகவே, இதைக் கூடுதல் செலவினங்களிலே காட்ட வேண்டிய அவசியமில்லை. இப்படி குறித்த



கால பராமரிப்பு என்ற தலைப்பில பல்வேறு இனங்களில் பெரும்பாலான துறைகளில் செலவு காட்டப்பட்டிருப்பது மொத்தமாக 60 கோடி, 59 கோடியே சொச்சம். ஆக, 60 கோடி காட்டப்பட்டிருக்கிறது. இது தேவையில்லாத செலவு என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இரண்டாவது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுதந்திரதினத்திலே உழவர் பாதுகாப்புத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். 100 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இது வரவேற்கக் கூடியதாக நாங்கள் கருதினாலும்கூட, முதலமைச்சர் அவர்களின் அந்த உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் குழந்தைகளுக்கு மருத்துவக் கல்வி, பொறியியல் கல்வி, சட்டக் கல்வி, இன்னும் அறிவியல், கலை போன்ற பல்வேறு கல்விக்காகவும், இதைத் தவிர இயற்கை மரணம், எதிர்பாராத மரணம், ஓய்வூதியம், திருமணச் செலவு என்று சொல்லி உழவர்களுக்கான பல்வேறு சலுகைத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இவர்கள் எல்லாம் ஏழைகள் என்ற காரணத்தினாலே ஏழைக் குழந்தைகளுக்கு ஏற்கெனவே கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே அந்தத் தொகை நிறுத்தப்படாமல் மேலும் இந்த உதவித்தொகை வழங்கப்படுமா என்பதை அரசு அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது; ஏழைக் குழந்தைகள், அதாவது பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட குழந்தைகளுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, மேலும் அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டத்தினாலே அந்தத் தொகை நிறுத்தப்படாமல் தொடர்ந்து வழங்கப்படுமா? இதற்கு உத்தரவாதம் அளிப்பீர்களா என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உழவர் பாதுகாப்புத் திட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்ற விதிமுறைகள் வேறு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற, ஏற்கெனவே நடைமுறையில் இருக்கின்ற விதிமுறைகள் வேறு.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனாலேதான் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஓர்

ஏழை, சிறு, குறு விவசாயக் கூலியினுடைய குழந்தை படித்துக்கொண்டிருக்கிறான். அவன் ஏற்கெனவே கல்வி உதவித்தொகை பெறுகிறான். மீண்டும் இந்தத் திட்டத்தினாலே அவனுக்கு உதவித்தொகை வழங்குவீர்களா? இதுதான் என்னுடைய கேள்வி. மீண்டும் வழங்கப்படுமா அல்லது அதை நிறுத்திவிடுவீர்களா? அதோடு சேர்த்து இதையும் வழங்குவீர்களா?

அடுத்து, இப்போது அரசாங்கம் பல புதிய திட்டங்களை, துணைத் திட்டங்களை அறிவித்திருக்கிறது. ஆனால், நடப்பு ஆண்டில் இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதற்கான நிதி ஒதுக்கப்படவில்லை. வெறும் 1,000 ரூபாய், 2,000 ரூபாய் என்று அடையாளமாக நிதியை ஒதுக்கியிருக்கிறீர்கள். இதிலே குறிப்பிட்டுச் சொல்லியிருப்பது இத்தகைய பணித் திட்டங்கள் எஞ்சிய தொகையாக மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கம் மூலமாக நிறைவேற்றப்படும் என்று சொல்லப்பட்டுள்ளது.

சாதாரணமாக, ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட மானியத்திற்குக் கூடுதலாக அரசு செலவு செய்யும் என்பதுதான் நடைமுறை. ஆனால், ஒதுக்கப்பட்ட மானியத்தில் எப்படி மீதம் ஏற்படும்? செலவே செய்ய மாட்டீர்களா? எப்படி மீதம் ஏற்படும் என்பதைத் தெரிந்துகொள்ளக்கூடிய அதே நேரத்திலே, சில துறைகளில் முன்பு இசைவளிக்கப்பட்ட மானியத்திற்குக் கூடுதலாகவே புதிய துணை மதிப்பீடுகளில் செலவு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, மானியம் 20 - நெடுஞ்சாலைத் துறை, கூடுதல் செலவினமாக ஒருங்கிணைந்த சாலை, அடிப்படைக் கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத் திட்டம், சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் புதிய திட்டங்கள் போன்ற புது வகைப் பணித் திட்டங்களுக்குக் கூடுதல் செலவு சுமார் 1,373 கோடி ரூபாய் என்று அனுமதிக்கப்பட்டுள்ளது. இது 2005-2006 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை புத்தகத்தில் பக்கம் 48-ல் நெடுஞ்சாலைத் துறைக்கான நிதியொதுக்கம் 2,991.47 கோடி ரூபாயாக இருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆக, மானியத்தில் ஒதுக்கப்பட்ட 2,991.47 கோடி ரூபாயும், குறிப்பிட்ட பணிகளைச் செய்து முடித்த பிறகு 1,373 கோடி ரூபாய் அளவு, அதாவது மானிய ஒதுக்கீட்டில் 40 சதவீதம் மீதம் ஏற்படுமா? பணிகள் எல்லாம் செய்து முடிக்கப்பட்டுவிட்டன. செய்து முடித்த பிறகு, செலவிட்ட பிறகு, அந்தத் திட்டப் பணிகளை நிறைவேற்றி முடித்து, எப்படி 40 சதவீத தொகை மிச்சம் ஏற்படும்? அதை எப்படி நீங்கள் செலவிட இருக்கிறீர்கள்? இதுதான் என்னுடைய கேள்வி. அதாவது, முறையான மானிய



ஒதுக்கீட்டில் பாதி அளவு சேமிக்கப்பட்டு, மீதமாகக் காட்டப்பட்டு, மறு நிதியொதுக்கமாகச் செலவிடப்பட வாய்ப்பு உள்ளதா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

அதைப்போல, மானியம் 38 - பொதுப் பணித் துறைக்கான கூடுதல் செலவு. இதிலே, துணை மதிப்பீடுகளிலே சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே, துணை மதிப்பீடு புத்தகம் பக்கம் 83-லிருந்து 99 வரையிலே. 20 இனங்களில் பல்வேறு பணித் திட்டங்களுக்காகச் சுமார் 208 கோடி ரூபாய் செலவிட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப்பணித் திட்டங்களுக்காக வெறும் 15,000 ரூபாய் மட்டுமே கூடுதல் செலவு மானியமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கத்தின் மூலம் செலவிடப்படும் என்ற இந்தக் கூற்று எப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்?

உதாரணத்திற்கு, 2005-2006 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட உரையில் இணைப்புகள் என்ற புத்தகத்தில் பக்கம் 57-லே வருவாய்க் கணக்கில் செலவினம் என்ற தலைப்பில், பெருந் தலைப்பு 2059 - பொதுப் பணிகள் மானியமாக 2005-2006 திட்ட மதிப்பீடாக 159.92 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 2005-2006 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை குறிப்புப் புத்தகம் பகுதி 1-ல், பக்கம் 32-ல் பொதுப் பணிகள் என்ற தலைப்பில் அதே தொகை 159.92 கோடி ரூபாய் மானியம் ஒதுக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆக, இப்படி ஒதுக்கிய தொகை என்பது 159.92 கோடி ரூபாய். இப்போது நீங்கள் மீண்டும் ஒதுக்கியிருப்பது 208.16 கோடி ரூபாய். ஆக, மானியத்தில், நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கிய 159.92 கோடியைவிட, இப்போது 208 கோடி ரூபாய் அதிகமாக இருக்கிறது. இது எங்கிருந்து எஞ்சியிருக்கும், மீதமிருக்கும்? இதுதான் என்னுடைய கேள்வி.

*முற்பகல் 11-40*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு விளக்கம் தர நிறைய நேரம் ஆகும். இறுதியிலே என் விளக்கத்தைத் தருகிறேன். இதற்காக தற்போது கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, சிக்கன நடவடிக்கையால் மிச்சம் செய்கின்ற ஒன்று, கூடுதல் நிதி தற்போது ஒதுக்கப்பட்டிருக்கிறது. எந்தப் பற்றாக்குறையும் ஏற்படாது, விளக்கம் தருகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** கூடுதல் நிதி ஒதுக்கத்திலே 20 இனங்களுக்குச் சேர்த்து வெறும் ரூ.15 ஆயிரம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படி 15

ஆயிரம் ரூபாயை ஒதுக்கிவிட்டு, 208 கோடி ரூபாயை எப்படி செலவழிக்க முடியும்? ஏற்கெனவே 159.92 கோடிதான்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, அதற்குத்தான் பதிலுரையிலே விளக்கம் தருகிறேன் என்று சொல்லிவிட்டார். அடுத்த subject-க்குப் போங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஆக, என்னுடைய சந்தேகம் எல்லாம், இந்தத் துறையிலே, இந்த மானியத்திலே மிக முக்கியமானத் திட்டங்களுக்கு ஒதுக்கியிருக்கிறீர்கள். குறிப்பாக, தேவநேயப் பாவாணர், வீரன் வெள்ளையத் தேவர், அண்ணா நினைவிடம் மேம்பாட்டுத் திட்டம், ரெட்டை மலை சீனிவாசன், வீரன் சுந்தரலிங்கனார், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் போன்ற தலைவர் பெருமக்களுக்கு நினைவிடம் அமைப்பது, மணிமண்டபம் அமைப்பது, அதற்கான நிலங்களைக் கையகப்படுத்துவது போன்ற பல்வேறு திட்டங்களை நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். ஆகவே, இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களுக்கு நிதி ஒதுக்கம் இல்லாமல் நின்று போய் விடக்கூடாது. இதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும், வழங்குவீர்களா என்பதையும் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Token provision ஏற்கெனவே தரப்பட்டிருக்கிறது. எந்தெந்த விதத்தில் நிதி சேகரிக்கப்பட்டிருக்கிறது, போதிய நிதி இருக்கிறது; என்ன நிதி வர இருக்கிறது என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே விளக்கியிருக்கிறார்கள். கட்டாயம் நிதி ஒதுக்கப்படும், அவை ஈடேறும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொன்று; நம்முடைய காவல் துறை மானியக் கோரிக்கையில் பல்வேறு கூடுதல் செலவினங்களுக்காகத் தொகை அனுமதிக்கப்படாமல் கோரப்பட்டிருக்கிறது. இதுவரையிலே, 4, 5 மானியங்களிலே நிதி குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடந்த முறை ஒதுக்கப்பட்ட நிதியில் எஞ்சியிருந்த தொகை இதற்கு ஒதுக்கப்படும் என்று தோராயமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் காவல் துறை மானியத்தில், பல்வேறு இனங்களில் அதைப்பற்றிக் குறிப்பிடப்படாமலே இருக்கிறது. அதற்கு நிதி எங்கிருந்து வரும் என்பதுதான் என்னுடைய கேள்வி. உதாரணமாக, கூடுதலாகச் செலவு செய்யப்படவுள்ள தொகை, அடையாளமாக ஒதுக்கப்பட்டுள்ள மானியத் தொகை எவ்வளவு? விவரங்கள் பல்வேறு துறைகளில் தரப்பட்டிருக்கின்றன. ஆனால், காவல்



துறையில் கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும் அடங்கிய புத்தகத்தில், பக்கம் 56, 57-ல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே இனம்-1, ஆயுதக் காவல் பிரிவில் 53 மற்றும் 292, ஆக 345 தலைமைக் காவலர் பதவிகள், சிறப்புத் துணை ஆய்வாளர்களாகப் பதவி உயர்த்திட அரசு அனுமதித்துள்ளது. இதற்கான கூடுதல் செலவினம் கணக்கிலே காட்டப்படவேயில்லை. அதைப்போல,...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, 2003 ஆம் ஆண்டில், 53 தலைமைக் காவலர் பதவிகளையும், havildar பதவிகளையும், 292 தலைமைக் காவலர் பதவிகளை சிறப்புத் துணை ஆய்வாளர் பதவிகளாகவும் நிலை உயர்த்துவது பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலே 16.12 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் செலவினத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியிருக்கிறது. இது புதிய துணைப் பணி குறித்தச் செலவாகும். மேற்காணும் திட்டத்திற்கு 2005-2006-லே ஏற்கெனவே 2.53 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், 2005-2006 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலே, இம்மானியத்திற்கு 1,339.33 கோடி ரூபாய் ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. 1,339.33 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கின்ற இடத்தில் ரூ. 16.12 இலட்சம் சிக்கன நடவடிக்கைகள் மூலமாக அது மேற்கொள்ளப்பட்டுவிடும். Estimate அதிகமாக இருக்கலாம், எங்கெங்கு, என்னென்ன சிக்கன நடவடிக்கைகள் என்று தெரிந்து மேற்கொள்கின்றபோது ஈடேற்றிவிட முடியும். இது நடைமுறையிலே இருந்து வருகின்ற ஒன்று. 1,339.33 கோடி ரூபாயிலே 16.12 இலட்சத்தைச் சேமிப்பது ஒரு பிரச்சினையே இல்லை, கவலைப்படவேண்டாம்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி பல இனங்களிலே, 40 துணைக் கண்காணிப்பாளர் பதவி, இதுமாதிரி நிறைய சொல்லப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 14-க்கு மேலே சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே இந்த நிதி ஒதுக்கமே ரொம்பக் குறைவாகத்தான் இருக்கிறது. உதாரணத்திற்குப் பார்த்தீர்களென்றால், புதிய சீருந்துகள் வாங்க ரூ. 1 கோடியே 97 இலட்சம், அதற்கு செல்லிடத் தொலைபேசிக் கட்டணம் ரூ. 24 இலட்சம், அமைச்சுப் பணியாளர்களுக்குப் பயிற்சி ஊக்கத் தொகை ரூ. 43 இலட்சம், இப்படி பல இனங்களிலே சொல்லப்பட்டு, அதற்கெல்லாம் ஒதுக்கியிருக்கக்கூடிய தொகை என்பது ரூ. 23 ஆயிரம்தான். Token provision என்று சொன்னால், மீதி ஏற்கெனவே,

நீங்கள் எஞ்சி இருந்த தொகை இதற்கு செலவழிக்கப்படும் என்று சொல்கிறீர்கள். அதிலே எஞ்சியில்லை, எப்படி செலவழிக்கப்படும்?

முற்பகல் 11-45

அதேநேரத்தில், இன்னொன்று, இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். கடந்த முறை இங்கே காவலர்கள், தலைமைக் காவலர்களுக்காக வாராந்திர கூடுதல் நேர ஊதியம், வாரத்திற்கு ஒரு நாளுக்கு வழங்கப்பட்டு வந்த 100 ரூபாயை 150 ரூபாயாக உயர்த்தி வழங்குவதாகச் சொல்லியிருந்தீர்கள். அது இன்னும் வழங்கப்படவில்லை. ஆகவே, அதை இப்போது உயர்த்தி வழங்குவீர்களா? எந்தத் தேதியிலிருந்து வழங்கப்படும் என்பதை நான் இங்கே தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், காவல் துறையிலே இருக்கிற பிரச்சினை, 8 மணி நேரம் கால நிர்ணயம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அது இல்லாமல் இருக்கிறது. இப்போது காவலர்களுடைய எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. அங்கங்கே பார்த்தீர்கள் என்றால், மக்கள்தொகை பெருக்கம், நாகரீக வளர்ச்சி, பதற்றம், பல்வேறு நிலைகள் ஏற்படுகின்ற இந்தச் சூழ்நிலையில் அவற்றை நிறைவேற்றுவதற்குக் கூடுதலாக காவல் பணிகளுக்கு நீங்கள் தேர்வு செய்ய வேண்டும். அதையும் எப்போது தேர்வு செய்ய இருக்கிறீர்கள் என்பதை இங்கே நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஆக இப்படி, இந்தத் துணை மதிப்பீடுகளில் நிதி ஒதுக்காமல் கடந்த முறை நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்ட, ஒதுக்கப்பட்டிருக்கிற அந்தத் தொகையில் செலவு செய்து மீதி இருக்கிற, எஞ்சி இருக்கிற தொகையை இதில் செலவினங்களாக ஏற்றுக்கொள்ளப்படும், அனுமதிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதிலிருந்து எவ்வளவு தொகை மீதி ஏற்படும், எஞ்சி இருக்கிற தொகையில் எவ்வளவு செலவிட இருக்கிறீர்கள் என்பது ஒட்டுமொத்தமாக இதிலே குறிப்பிடப்படாமல் இருப்பது மிகப் பெரிய குறையாக அமைந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல, இன்னொன்று மிக முக்கியமான பிரச்சினை. இங்கே நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே, எந்த மொழிக்கும் எதிராக இல்லை; எந்த இயக்கத்திற்கும் எதிராகக் கூடாது; எந்த ஆட்சிக்கும் எதிரான நிலையிலே இல்லையென்ற அளவில், சமீபத்திலே கடந்த 21 ஆம் தேதி, மூன்றாவது மொழிப்போர் என்ற அடிப்படையிலே, திருச்சி மாநாட்டிலே அறிவித்தவாறு, மருத்துவர் அய்யா அவர்களாலே



மொழிப் போராட்டம் நடத்தப்பட்டது. அந்தப் போராட்டத்தினுடைய நோக்கமாக சொல்லப்படுவது, இதற்கு முன்னாலே இருந்த இரண்டு மொழிப் போராட்டங்களைப் போல எந்த மொழிக்கும் எதிரானது அல்ல. ஆனால், 1956-லே தமிழகத்தில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களாலே ஆட்சி மொழிச் சட்டம் கொண்டுவரப்பட்டது. கொண்டுவரப்பட்டு, இன்றைய வரையிலே 50 ஆண்டுகளானாலும்கூட, நம்முடைய அரசாங்கத்தின் நடவடிக்கைகள், கடிதப் போக்குவரத்துகள், ஆணைகள் எல்லாமே பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே இருக்கக்கூடிய நிலைமையிருக்கிறது. இதை நாம் மாற்றுவதற்கு முன்வரவில்லை. அதை மாற்றியாக வேண்டுமென்று சொல்லி நான் இந்த நேரத்திலே வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். வேண்டுமானால்கூட, அதற்குண்டான ஆதாரங்களை இங்கே கொண்டு வந்திருக்கிறேன். தேவையானாலும் நான் காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல, ஆட்சி மொழியாக்கப்பட வேண்டும், பயிற்று மொழியாக்கப்பட வேண்டும், தமிழிலே பயின்றவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வேண்டும். அதைப்போல, இன்று நீதிமன்றங்களிலே வாதாடுதல், தீர்ப்பு அளித்தல் போன்ற எல்லா நடவடிக்கைகளும் தமிழிலேயே இருக்க வேண்டும். வழிபாடுகளிலே, கோயில்களிலே தமிழ் முறை வழிபாட்டுமுறை வேண்டும். திருமணங்களிலே தமிழ்முறை திருமணம் வேண்டும். இதைப்போல விளம்பரம் என்று எல்லா நிலைகளிலும் தமிழ் வரவேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட தஞ்சையிலே நடந்த எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டிலே 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்ற நிலையோடு என்றும் தமிழ் இருக்க வேண்டுமென்ற ஒரு ஆலோசனையை வழங்கியிருக்கிறார்கள். அதை இந்த அரசு முழுமையாகப் பின்பற்ற வேண்டும், நடைமுறைப்படுத்த வேண்டுமென்று நான் இங்கே அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

21 ஆம் தேதி நடத்திய போராட்டத்திலேகூட ஒரு இலட்சத்து பதினைந்தாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டார்கள். கைது செய்யப்பட்ட நடவடிக்கையிலே தமிழகக் காவல் துறை நல்ல அணுகுமுறையைக் கையாண்டது. எந்தப் பதற்றமும் இல்லாமல், முறையாக அவர்களை அப்புறப்படுத்தி கைது செய்த அந்த நடவடிக்கைக்குத் தமிழகக் காவல் துறைக்கு இந்த நேரத்திலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ஜி.கே. மணி] [2005 செப்டம்பர் 28

அதைப்போல, தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய அதேவேளையில், இன்று உலக இசையில் ஆதி இசையான தமிழிசை அழிந்துகொண்டு இருக்கிறது, தமிழர்களைவிட்டு அகன்று கொண்டிருக்கிறது. இன்று வேற்று மொழி இசைக்கு, பிறநாட்டு மொழி இசைக்கு தமிழர்களெல்லாம், இளைஞர்கள், குறிப்பாக பெண்கள் ஈர்க்கப்பட்டு தமிழிசை சிதைந்து விடுகின்ற இந்தக் காலகட்டத்தில் தமிழிசையை வளர்ப்பதற்கு நம்முடைய அரசு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி முன்வர வேண்டும், தமிழிசையை வளர்க்க வேண்டும் என்பதற்குப் பள்ளிகளிலே—ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளிலேகூட—தமிழிசை வகுப்பினை ஒரு பாடமாகக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லி நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-50*

அதைப்போல, மிக முக்கியமானது நுழைவுத் தேர்வு. இந்த நுழைவுத் தேர்வு கூடாது. நுழைவுத் தேர்வு ஏழைகளின் உயர் கல்விக்கு நுழையாத் தேர்வு என்று தொடர்ந்து பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே மருத்துவர் அய்யா அவர்கள் தலைமையில் பல போராட்டங்களை நடத்தி வந்தோம். இந்த நிலையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நுழைவுத் தேர்வு இரத்து என்று அறிவித்தார்கள். உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணையின்படி இந்த ஆண்டு நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது. ஆனால், உச்ச நீதிமன்றத்தில் சொல்லியிருப்பது மத்திய அரசு சட்டப் பாதுகாப்பு நடவடிக்கை கொண்டுவருவதற்கு முன்பாகவேகூட, மாநில அரசே இதற்குச் சட்டம் கொண்டுவந்து பாதுகாக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இப்போது சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கிற இந்த நேரத்தில் நாம் எதெதெற்கோ சட்டங்களை இயற்றிக்கொண்டிருக்கிறோம் இந்த மன்றத்திலே. இது ஏழை எளிய கிராமப்புறக் குழந்தைகளுக்கு, நகரத்திலே வாழக்கூடிய, சாதாரண, அரசாங்கப் பள்ளிகளிலே படிக்கக்கூடிய, மாநகராட்சிப் பள்ளிகளிலே படிக்கக்கூடிய குழந்தைகளின் பாதுகாப்புக்கு, உயர் கல்விக்கு வழிவகுக்கக்கூடிய ஒரு திட்டம் என்ற காரணத்தினாலே ஏன் இதற்கு நீங்கள் சட்டம் கொண்டுவரவில்லை? இதைப் பாதுகாப்பதற்கு ஒரு சட்டம் கொண்டுவர வேண்டுமா, வேண்டாமா?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் அம்மா அவர்கள் கிராமப்புற மாணவர்கள் பயன்பெறுகின்ற வகையிலே அந்த நுழைவுத் தேர்வை இரத்து செய்தார்கள். அந்த நுழைவுத் தேர்வை இரத்து செய்தபிறகு



2005 செப்டம்பர் 28] [திரு. சி.வி. சண்முகம்]

உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்தபோது அதிலே கூறப்பட்டத் தீர்ப்பின்படி, கொண்டுவந்த நோக்கத்தை நாங்கள் வரவேற்கின்றோம். ஏற்றுக்கொள்கின்றோம்; ஆனால், இது மத்திய அரசாங்கத்தினுடைய சட்டத்தின்படி வருகின்றதால் இதை நாங்கள் தள்ளுபடி செய்கின்றோம், செல்லாது என்று சொன்னார்கள். ஆகவே, நீங்கள் சட்டம் கொண்டுவந்தாலும் அந்தச் சட்டம் செல்லாது. ஆனால், அந்த நோக்கத்தை நாங்கள் வரவேற்கின்றோம். மத்திய அரசாங்கம், Medical Council of India, AICTE அந்த ஒரு சட்டத்தின் அடிப்படையில்தான் அந்த நுழைவுத் தேர்வுகள் நடத்தப்பட வேண்டியிருக்கின்றன. ஆகவே, மத்திய அரசாங்கம் அந்த Medical Council of India-வினுடைய சட்டத்தை மாற்ற வேண்டும், AICTE-யின் சட்டம் மாற்றப்பட்டால் தவிர, இந்த நுழைவுத் தேர்வுக்கு இந்த அரசாங்கம், தமிழக அரசாங்கம் எதுவும் செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, உச்ச நீதிமன்றம் கொடுத்தத் தீர்ப்பின்படி உடனடியாக இந்தியா முழுவதும் இருக்கின்ற பல்வேறு அரசியல் கட்சிகளும், பல்வேறு அரசாங்கங்களும் ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது. அந்தக் கோரிக்கையின்படி டெல்லியிலே அனைத்துக் கல்வி அமைச்சர்களுடைய மாநாட்டைக் கூட்டினார்கள். கூட்டியபிறகு, அங்கே சென்ற பிறகு மறுநாள் அந்தக் கூட்டத்தில் ஒரு துணைக் குழு அமைத்து, செப்டம்பர் 15-க்குள் ஒரு வரைவுச் சட்டம் கொண்டுவரப்படும் என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு தேதி 28 ஆகின்றது. இதுவரை மத்திய அரசாங்கம் அதைப்பற்றி வாயைத் திறக்காமல் மௌனமாக இருந்துகொண்டிருக்கிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தை இந்தியா முழுவதும் இருக்கிற கட்சிகள் மாநில அரசாங்கங்கள் வற்புறுத்தின. தமிழ்நாட்டிலே இருக்கிற நீங்களும் வற்புறுத்தினீர்கள். மத்தியிலே ஆளுங்கட்சி வரிசையிலே இருக்கிற எங்கள் கூட்டணிக் கட்சிகள் எல்லாம் வற்புறுத்தின. அமைச்சர் சட்டத் திருத்தம் கொண்டுவருவதாகச் சொன்னதெல்லாம் உண்மை. அதை நான் மறுக்கவில்லை. சட்டம் கொண்டுவருவதற்கு முன்பாக நாடாளுமன்றக் கூட்டத் தொடர் முடிவடைந்துவிட்டது. கொண்டுவர இருக்கிறார்கள். அதற்குள்ளே நான் போகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அதற்குத்தான் விளக்கம் சொல்கிறார். மாநில அரசு சட்டம் கொண்டுவர முடியாது என்பதற்காகத்தான் விளக்கம் சொல்கிறார்.

**திரு. ஜி.கே. மணி:** உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி சொல்லப்பட்டிருப்பது, மத்திய அரசாங்கம் கொண்டுவருவதற்கு முன்பு மாநில அரசாங்கமே கொண்டுவந்து பாதுகாத்துக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொண்டுவருவதற்கு வாய்ப்பில்லை என்பதைத்தான் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்சநீதிமன்றம் கொடுத்திருக்கின்ற தீர்ப்பின்படி மாநில அரசாங்கம் சட்டம் கொண்டுவர வேண்டுமென்று சொல்லவில்லை. அந்தத் தீர்ப்பின்படி மத்திய அரசாங்கம் ஒரு சட்டம் கொண்டு வருகின்ற வரை, மாநில அரசு இரண்டு கமிட்டிகளை நியமித்து அந்தக் கமிட்டியின்மூலம் அந்தத் தேர்வுகள் நடத்தப்பட வேண்டும். ஒன்று சுப்பிரமணியன் கமிட்டி, இன்னொன்று இராமன் கமிட்டி. சுப்பிரமணியன் கமிட்டி என்பது தேர்வுகள் எப்படி நடத்தப்பட வேண்டும்; இராமன் கமிட்டி என்பது கட்டணங்களை எவ்வாறு வசூலிப்பது; எவ்வாறு நிர்ணயிப்பது. ஆகவே, சட்டம் கொண்டுவர வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் சொல்லவில்லை. மத்திய அரசாங்கம் சட்டம் கொண்டுவருகின்ற வரை இது செல்லும் என்று சொல்லி, நீங்கள் இந்தக் கமிட்டியை வைத்து தேர்வுகள் நடத்தப்பட வேண்டும் என்றுதான் சொன்னதே தவிர, மாநில அரசாங்கம் சட்டம் இயற்ற வேண்டும் என்று எந்த இடத்திலும் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்தக் குழு அமைக்க வேண்டுமென்று சொன்னது எல்லாம் முதல் ஜட்ஜ்மெண்டில் சொன்னது. இப்போது நீங்கள் கோர்ட்டுக்குக்கொண்டு போனீர்களே, இந்த entrance test குறித்து சொன்னதிலே, அதிலே இதெல்லாம் சொல்லவில்லை. அதிலே சொன்னது, மாநில அரசாங்கம் ஆறு மாதங்களுக்குள் சட்டம் போடலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும் ஒன்று, education நம்முடைய subject. நீங்கள் 'சட்டம் போடுங்கள், அந்தச் சட்டம் போடுவதிலே என்ன தவறு?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் மீண்டும் தவறான ஒரு கருத்தைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இது மத்திய அரசாங்கத்தினுடைய



சட்டத்திற்கு உட்பட்டது என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். உச்ச நீதிமன்றம் தெளிவாகச் சொல்லியிருக்கின்றது. மத்திய அரசாங்கம் சட்டம் இயற்றுகின்ற வரை என்று தெளிவாகச் சொல்லியிருக்கின்றது. அந்தச் சட்டத்தை இயற்றுவதற்கு மத்திய அரசாங்கம் இதுவரை தயாராக இல்லை. ஒரு கூட்டத்தையும் கூட்டிவிட்டு அதற்கு ஒரு மாதிரி மசோதாவையும் தயார் பண்ணி, அனைத்து மாநில அரசாங்கங்களுக்கும் தரப்பட்டது. அதன்மீது ஒரு கூட்டத்தையும் கூட்டினார்கள். கூட்டத்தைக் கூட்டிவிட்டு, செப்டம்பர் 15-க்குள்ளாக ஒரு துணைக் குழுவை அமைத்து, அதில் முடிவெடுக்கப்படும் என்று சொன்னார்கள். இன்று வரை அதைப்பற்றி மத்திய அரசாங்கம் எந்தக் கருத்தையும் கூறவில்லை. அதில் நாங்கள் எங்களுடைய கருத்தையும் வலியுறுத்தினோம். அந்தத் துணைக் குழுவிலே தமிழக அரசாங்கம் கண்டிப்பாகச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று நாங்கள் கேட்டிருந்தோம். அதற்கும் இதுவரை எந்தவித பதிலையும் மத்திய அரசாங்கம் தெரிவிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆகவே, மாநில அரசாங்கம் சட்டம் இயற்றுகின்ற அந்தப் பேச்சுக்கே இடமில்லை. இதில் மத்திய அரசாங்கம்தான் சட்டம் இயற்ற வேண்டும். ஆனால், மத்திய அரசாங்கம் இதில் காலம் தாழ்த்திக் கொண்டிருக்கிறது, வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தெளிவான விளக்கத்தைக் கொடுத்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்களுக்குத் தெளிவாகக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசாங்கத்திடம் ஒரு சட்டம் இருக்கிறது. எந்தெந்த மாநிலத்தில் மத்திய அரசாங்கத்தின் மூலமாகவும், மாநில அரசாங்கத்தின் மூலமாகவும் அங்கே பள்ளிகள் இயங்குகிறதோ, அந்தப் பள்ளிகள் Medical Council of India, அவர் கூறியதுபோல், பொறியியல் — Engineering — All India மூலமாக இருக்கக்கூடிய அத்தனைப் பள்ளிகளிலும் நுழைவுத் தேர்வை நடத்த வேண்டும். இந்தச் சட்டம் இன்றுவரை மத்திய அரசாங்கத்தில் நிலுவையில் இருக்கிறது.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுகூட, தனியார் கல்லூரிகளில் நுழைவுத் தேர்வு இல்லாமல், H.S.C., +2 mark-ஐ வைத்தே admit பண்ணலாம் என்று இப்போது ஒரு தீர்ப்பு சொல்லியிருக்கிறார்கள். அதுவும் சொல்லியிருக்கிறார்கள். அந்தமாதிரித் தீர்ப்புகள் என்பது, உச்ச நீதிமன்றத்திலே பல்வேறு தீர்ப்புகள் இதுகுறித்து வழங்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, +2 mark-களின் அடிப்படையில் அனுமதிக்கலாம் என்று சொன்னது, இந்த ஆண்டு வரைக்கும். அதாவது, நடப்பாண்டில் அதைச் செய்யலாம் என்றுதான் உச்ச நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. மற்றபடி, இதைப் பற்றிய ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டியது, மத்திய அரசின் அதிகார வரம்பிற்கு உட்பட்டதாகும். மத்திய அரசுதான் இந்தச் சட்டத்தைக் கொண்டுவர முடியும். அவர்கள்தான் கொண்டுவர வேண்டும். மத்திய அரசு ஒரு வரைவுச் சட்டத்தைத் தயாரித்து, கருத்து கேட்டு, எல்லாக் கட்சிகளுக்கும் அனுப்பியது. அது எங்களுக்கும் வந்தது. எங்கள் கருத்தையும் தெரிவித்து, நாங்கள் பதிலையும் அனுப்பிவிட்டோம். ஆகவே, சட்டத்தை இன்னும் இயற்றாமல், மத்திய அரசுதான் காலம் தாழ்த்திக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாநில அரசாங்கம் ஏன் சட்டம் இயற்றவில்லை, இயற்றலாமே என்று கூறிக் கொண்டிருக்கின்றார். அதைத்தான் மீண்டும் மீண்டும் சொல்கின்றோம். நுழைவுத் தேர்வு இரத்து செய்யப்பட்டபோது, இரத்து செய்தது செல்லாது என்று உயர் நீதிமன்றத்திலே வழக்கு தொடரப்பட்டபோதே, உயர் நீதிமன்றத் தீர்ப்பிலே, எடுத்துவந்த நோக்கத்தை நாங்கள் வரவேற்கின்றோம்; பாராட்டுகின்றோம்; ஆனால், இது மத்திய அரசாங்கத்தின் சட்டத்திற்கு விரோதமாக இருக்கின்றது, மாநில அரசாங்கம் சட்டமே இயற்றினாலும், கொண்டுவந்தாலும், அது செல்லாது என்பது, அப்போதே அந்தத் தீர்ப்பிலே ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதையும் உங்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கல்வி அமைச்சர் இரண்டு தீர்ப்பின் முடிவுகளைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறார். அவர் முதல் தீர்ப்பிலே சொன்னது. இரண்டு கமிட்டிகள் அமைத்துக்கொள்ளலாம்; இட ஒதுக்கீட்டின் அடிப்படையிலேயே மாணவர்களைச் சேர்ப்பதற்காக ஒரு குழுவும், இன்னொன்று, கட்டணத்தை நிர்ணயிப்பதற்காக ஒரு குழுவும் என்பது, கடந்த முறை உச்ச நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பு. அதில்லை, இப்போது நுழைவுத் தேர்வின் அடிப்படையிலே வந்தது, மாநில அரசாங்கத்திற்கு. ஏனென்றால், இந்தியா முழுவதும் வேண்டுமென்று சொன்னால், அங்கே சட்டம் கொண்டுவர வேண்டும். ஆனால், தமிழ்நாடு அளவிலே பாதுகாத்துக் கொள்வதற்கு நாம் ஏன் சட்டம் கொண்டு வரக்கூடாது? கொண்டுவர வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. அது ஒன்று.

அதுமட்டுமல்லாமல், இப்போது சுய நிதிக் கல்லூரிகளில் கல்விக் கட்டணம் மிகக் கூடுதலாக இருக்கிறது. மாணவர்கள் சேர்க்கைக்கான இடங்கள் ஏராளமாக காலியாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. காலியிருப்பதற்கு என்ன காரணம் என்று சொன்னால், அங்கே கட்டணம், கூடுதலான கட்டணம்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுக்கு நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். காலியாக இருப்பதற்குக் காரணம், கட்டணம் என்று சொல்கின்றார். கட்டணம் எந்தவிதத்திலும் உயர்த்தப்படவில்லை. அதே 32 ஆயிரம் ரூபாய்தான் இருக்கின்றது. காலியாக இருப்பதற்குக் காரணம், இன்றைக்கு மத்தியிலே இருக்கின்ற A.I.C.T.E. — அந்தப் பொறியியல் கல்லூரிகளுக்கு அங்கீகாரம் கொடுப்பது, புதிய கல்லூரிகளை ஆரம்பிப்பது, கூடுதலான இடங்களைக் கொடுப்பது பற்றி. ஆனால், அப்படி கூடுதலான இடங்களைக் கொடுக்கின்றபோதோ அல்லது புதிய கல்லூரிகளை ஆரம்பிக்கின்றபோதோ, மாநில அரசினுடைய தடையின்மைச் சான்றினைக் கேட்டுப்பெற வேண்டும். ஆனால், இப்போது, குறிப்பிட்ட இரண்டு, மூன்று ஆண்டு காலமாக மத்தியிலே இருக்கின்ற அந்த A.I.C.T.E. என்பது, மாநில அரசாங்கத்திடம் எந்தவிதக் கருத்தையும் கேட்பதில்லை. அனுமதி கொடுத்தீர்களா, இது தேவையா, இந்தப் பகுதிக்கு இந்தப் பொறியியல் கல்லூரியைக் கொடுத்தால் தேவையா, மாணவர்கள் சேர்கின்ற அளவிற்கு அங்கு வசதி வாய்ப்புகள் இருக்கிறதா என்று, எந்தவிதக் கருத்துகளையும்

கேட்பதில்லை. அவர்களாகவே புதிய கல்லூரிகளைக் கொடுக்கின்றார்கள். புதிதாகக் கூடுதலான இடங்களையும் கொடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். தேவைக்கு அதிகமான இடங்களைக் கொடுத்துக் கொண்டிருந்தால், காலியிடங்கள் இருக்கத்தான் செய்யும்.

*நண்பகல் 12-00*

இந்தப் பொறியியல் கல்லூரிகளில் இடங்களைச் சேர்ப்பதற்கு முன்பாக, ஒரு மாதத்திற்கு முன்பாக, ஐயாயிரம் இடங்களைக் குறைத்தது. யாரையும் கேட்கவில்லை. அவர்களாகவே குறைத்தார்கள். கேட்டால் அதற்கான வசதிகள், infrastructure இல்லை என்று குறைத்தார்கள். மீண்டும் ஒரு வாரம் கழித்து அவர்களாகவே, அதை restore, மீண்டும் அவர்களாகவே திருப்பிக் கொடுத்தார்கள். இப்போது பத்து நாட்களுக்கு முன்னர் பார்த்தீர்களேயானால், 58 பொறியியல் கல்லூரிகளுக்கு 5,900 இடங்களை மீண்டும் கூடுதலான இடங்களைக் கொடுத்திருக்கின்றார்கள். ஏற்கெனவே 11 ஆயிரம் இடங்கள் காலியாக இருக்கின்றன. இப்போது கூடுதலாக 5,900 இடங்களைக் கூடுதலாகக் கொடுத்திருக்கின்றார்கள். மாநில அரசாங்கத்தை, எங்களிடம் கொடுக்கலாமா, அதற்குத் தேவை இருக்கின்றதா என்று கேள்வியே கேட்கவில்லை. இப்படி மத்தியிலே இருக்கின்ற அரசு, எதைப் பற்றியும், மாநில அரசைக் கலந்துகொள்ளாமல், மாநில அரசை மதிக்காமல் தங்கள் இஷ்டம்போல் இடங்களைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில்தான் இன்று காலியான இடங்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பார்த்தீர்களேயானால் 33 ஆயிரம் மாணவர்கள் கலந்தாய்வுக் கூட்ட நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவேயில்லை. என்ன காரணம், அங்கு போனால் கட்டணம் அதிகமாக இருக்கிறது. நீங்கள் விதித்திருக்கின்ற கட்டணம் 32 ஆயிரம் ரூபாய் என்று சொல்கிறீர்கள். ஆனால், வசூலிப்பது 32 ஆயிரத்திற்கு மேலாக, 25 ஆயிரம், 50 ஆயிரம் என்று வசூலித்துக்கொண்டு இருக்கிறார்கள். இதை நீங்கள் நெறிப்படுத்தவில்லை. அந்தக் கமிட்டி போட்டு இருக்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** அந்த நுழைவுத் தேர்வு நடக்கின்றபோதே, அந்த இடத்தில் நாங்கள் தெளிவாக ஒவ்வொரு மாணவருக்கும் தெரிவிக்கின்றோம். இந்த 32 ஆயிரத்திற்கு மேலாக, யாராவது, எந்தக் கல்லூரியிலாவது கட்டணம் கேட்டால், வசூலித்தால்



நீங்கள் எங்களிடம் புகார் கொடுத்தால், அவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்த நுழைவுத் தேர்வு நடக்கின்ற அந்த ஹாலிலேயே அந்த மாணவர்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். பெற்றோர்களுக்கும் சொல்லப்படுகின்றது. அப்படிப்பட்ட புகார்கள் வரவில்லை. எந்தக் கல்லூரியிலாவது அப்படி வசூலிக்கப்படுகிறது என்று புகார் கொடுத்தால், கண்டிப்பாக அந்தக் கல்லூரிகள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாக் கல்லூரிகளிலும் புகார் இருக்கிறது. சொல்வதற்குப் பயப்படுகின்றார்கள் மாணவர்கள். நீங்கள் ஆய்வு செய்து பாருங்கள். எந்தக் கல்லூரியிலே கட்டணத்தைக் கூடுதலாக வசூலிக்கவில்லை. நன்கொடை என்ற பெயரால் வசூலிக்கவில்லையென்று சொல்லுங்கள். எல்லா இடத்திலேயும் இருக்கிறது. நீங்கள் இன்னும் பார்த்தீர்களேயானால், கட்டணத்தைக் கூடுதலாக்கவில்லையென்று சொல்கிறீர்கள்; பக்கத்திலேயிருக்கிற கர்நாடக மாநிலத்தில், மராட்டிய மாநிலத்திலே, அங்கே 12 ஆயிரம் ரூபாய்தான். நமக்கு எதற்கு 32 ஆயிரம் ரூபாய், இடங்கள் எல்லாம் காலியாக இருக்கிறதே? நீங்கள் கட்டணத்தைக் குறைக்கலாமே (மணியடிக்கப்பெற்றது) அதுமட்டுமல்ல, இன்னும் நம்முடைய தமிழக அரசாங்கம்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, இன்னும் 5 மணித்துளிகளில் பேசி முடியுங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குமுன்பு காவல் துறையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசுகின்றபோது காவல் துறை, காவலர்களுக்கும், தலைமைக் காவலர்களுக்கும் Extra Time Remuneration 100 ரூபாய் என்று இருந்ததை 150 ரூபாயாக உயர்த்தி இங்கே அறிவித்த பின்னரும், அது செயல்படுத்தப்படவில்லை, அமலுக்கு வரவில்லை, எப்போதிலிருந்து செயல்படுத்தப்படும் என்ற கேள்வியைக் கேட்டார். மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவலை இந்த அவைக்கு கொடுத்திருக்கிறார். கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரின்போது விதி 110-ன்கீழ் 23-3-2005 அன்று நான் இந்த அவையில் காவல் துறை, காவலர்களுக்கும், தலைமைக் காவலர்களுக்கும் Extra Time Remuneration 100 ரூபாயிலிருந்து 150 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்தேன். இதற்காக Home Department

27-5-2005 அன்று G.O. Ms. No. 395 என்ற அரசாணையை வெளியிட்டிருக்கிறது. இந்த 100 ரூபாயிலிருந்து 150 ரூபாயாக உயர்த்தி வழங்குவது with retrospective effect ஏப்ரல் 1, 2005 ஆம் நாளிலிருந்து அமலுக்கு வந்துவிட்டது. செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். விளக்கத்திற்கு நன்றி. ஆனால், அவர்களுக்கு இன்னும் இதுவரைக்கும் அது கைக்கு கிடைக்கவில்லை என்பதுதான் என்னுடைய கோரிக்கை. எல்லோரும் சொல்கிறார்கள். நேற்றைய தேதி வரையில் சொல்லிக்கொண்டிருப்பது.. *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரியாக விசாரித்துப் பாருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இதிலேகூட பார்த்தீர்களேயானால், காவலர்களுக்கும், இந்தத் துணை நிதிநிலை மதிப்பீடு புத்தகத்திலே, காவலர்களுக்கும், தலைமைக் காவலர்களுக்கும் வழங்கப்படும் கூடுதல் நேர ஊதியத்தை நாள் ஒன்றிற்கு 100 ரூபாயிலிருந்து 150 ரூபாயாக உயர்த்த அரசு அனுமதித்துள்ளது. இது புதுப் பணி குறித்த செலவு ஆகும் என்று இப்போதுதான் சொல்லியிருக்கிறீர்கள். புதுப் பணி என்று இப்போதுதான் சொல்லியிருக்கிறீர்கள். புதுப்பணியில்தானே இதெல்லாம் வருகிறது. அப்புறம் எப்படி முன்னரே ஒதுக்கியிருப்பீர்கள்..

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** No, that is made applicable retrospectively from the date of the G.O. இல்லை, அந்த G.O. போட்ட நாளிலிருந்து அது அமலுக்கு வருகிறது.

**டாக்டர் க. பொன்முடி:** நாம் போட்டது Administrative sanction தான். Financial sanction செய்து Treasury-க்குப் போகவில்லை. அதைத்தான் அவர் சொல்கிறார்... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, இன்னும் 5 மணித்துளிகளில் பேசி முடியுங்கள்.

*பிற்பகல் 12-05*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் வழங்குவதாகச் சொன்னதற்கு நன்றி. 1-4-2005-லிருந்து வழங்குவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். இனிமேல்தான்



அதைச் சேர்த்து வழங்கப்போகிறீர்கள். புதுப் பணி என்று சொல்லியிருக்கிறீர்கள். அதே நேரத்தில், பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசாணையிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே, சுய நிதிக் கல்லூரிகளில் கூடுதலாகக் கட்டணம் வசூலிக்கக் கூடாது; நன்கொடை என்ற பெயரால் கூடாது; இல்லையென்றால், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றெல்லாம் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், எல்லாக் கல்லூரிகளிலும் இருக்கிறது. மாணவர்கள் வெளியிலே சொல்வதற்குப் பயப்படுகிறார்கள். உங்களுக்குத் தேவையானால், அக்கறை இருக்குமென்று சொன்னால், நீங்கள் புலன் விசாரணை செய்யுங்கள். ஒவ்வொரு கல்லூரியிலேயும் நீங்கள் விசாரணை செய்யுங்கள். நம் முதலமைச்சர் அவர்கள்கூட, இந்த நடவடிக்கையைக் கண்டு ஆத்திரப்பட்டு, வெளிப்படையாகச் சொன்னார்கள்; அரசாங்கத்திற்கு இந்தக் கல்லூரிகள் கட்டுப்படவில்லை என்று சொன்னால், அரசு ஏற்கத் தயங்காது என்று கடுமையாகச் சொன்னார்கள். அது தமிழ்நாட்டு மக்கள் மத்தியிலே, மாணவர்கள் மத்தியிலே ஒரு பெருத்த தெம்பை ஏற்படுத்தியது. ஆனால், சொல்லிய பிறகு, நீங்கள் அதை நிறைவேற்றவில்லை. ஏன் தயங்குகிறீர்கள்? நீங்கள் அரசுடைமையாக்குங்கள். எல்லோரும் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள். மாணவர்களுக்கு, ஏழையெளியவர்களுக்கு விரோதமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படி அரசுடைமையாக்கவில்லை என்று சொன்னாலும், நீங்கள் உடனடியாகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அடுத்து, ஒகேனக்கல்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கருத்தை, வேலு, சுதர்சனம், எல்லோரும் வரவேற்கிறார்களா என்று தெரியவில்லை. *(சிரிப்பு)*

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல் பிரச்சினை, சர்ச்சைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு, கர்நாடகாவிற்குண்டான எல்லைப் பிரச்சினை. இதிலே நான் விரிவாகப் பேசவில்லை. முதலமைச்சர் அவர்கள்கூட தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய கருத்து, எனக்கு ஏற்புடையது. அதில் மாற்றம் இல்லை. இருந்தாலும்கூட, அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே தெரிவிப்பது என்னவென்றால், கர்நாடகம், தேவையில்லாமல் நம்முடைய எல்லையை, அவர்களுக்குச் சேர்ந்ததாகச் சொல்கிறார்கள். தேசிய வரைபடத்தின் அடிப்படையிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, அதுகுறித்து, ஏற்கெனவே காலையிலேகூட முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். வேறு ஏதாவது பிரச்சினை இருந்தால், பேசி செய்யச் சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை. அதுதான் ஏற்புடையது என்று சொல்லிவிட்டேன். எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. இருந்தாலும்கூட, முதலமைச்சர் அவர்கள் சொல்லியவாறு நம்முடைய எல்லைக்குட்பட்ட, நமக்குச் சேரவேண்டிய பகுதியை நீங்கள் கட்டாயம் அதை விடக்கூடாது என்பதிலே உறுதியாக இருந்தாலும்கூட, என்னுடைய கருத்தாகவும் நான் இதிலே சேர்த்து கூறிக்கொள்ள விரும்புகிறேன். தருமபுரி மாவட்டம், இப்போது பரவலாக தமிழகத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள். இன்னும் இரண்டு மணித்துளிகளிலே பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இன்னும் 10 நிமிடங்கள். நிறைய இருக்கின்றன. முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன், இன்னும் 10 மணித்துளிகளில்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 2 பேர் பேச வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர்கள் இரண்டு பேர் பேச வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** தருமபுரி மாவட்டம் நிரம்ப வறட்சியாக இருக்கிறது. தமிழகத்தில், பரவலாக மழை பெய்தாலும்கூட, என்னுடைய பெண்ணாகரம் தொகுதியிலே, இப்போதுகூட வறட்சி. நிறைய ஊர்களிலே குடிதண்ணீர் இல்லை. நிரம்ப சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வேண்டுமென்றால்கூட நீங்கள் ஆய்வுசெய்து பாருங்கள். ஆகவே, இந்தக் குடிநீருக்கு முக்கியத்துவம் கொடுத்து, கூடுதல் நிதி ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நிரந்தரத் தீர்வு என்று சொன்னால், இந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். நீங்கள் சொன்னீர்கள். பகுதிவாரியாகவாவது நிறைவேற்ற, ஆண்டிற்கு பகுதித் திட்டமாக எடுத்து நிறைவேற்றுவதாகச் சொன்னீர்கள். அதுவும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அதையும் நீங்கள் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, பஞ்சப்பள்ளி வாய்க்காலிலே இப்போது மழை நீர், உபரி நீராகப் போய், வீணாகப் போய்க்கொண்டிருக்கிறது. அதைத்



தொடர்ந்து சட்டமன்றத்திலே நான் பேசிக்கொண்டே இருக்கிறேன். திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, கடந்த நிதிநிலை அறிக்கையின்போது அறிவிப்பதாக மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்கூட சொன்னார்கள். அது நிலுவையிலே இருக்கிறது. அது வந்தால், பாசனம் இல்லையென்று சொன்னாலும், ஏரியாவது நிரம்பினால், கிணற்றுக்குத் தண்ணீர் கிடைக்கும். அதை இப்போது நீங்கள் நிறைவேற்ற வேண்டுமென்று நான் உங்களிடத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு சர்க்கரை ஆலை, பொதுத் துறை சர்க்கரை ஆலை தொழிலாளர்களுடைய பிரச்சினை, மிக முக்கியமானது. ஒப்பந்தத்தின் அடிப்படையிலே, அவர்களுக்கு ஊதிய உயர்வு, தனியார் ஆலைகளிலே வழங்கப்பட்டுவிட்டது. ஆனால், பொதுத் துறையிலேயும், கூட்டுறவுத் துறையிலேயும் இயங்கும் சர்க்கரை ஆலைகளுக்கு அந்த ஊதிய உயர்வு வழங்கப்படாமல் இருக்கிறது. போனஸ் வழங்கப்படாமல் இருக்கிறது. அதை நீங்கள் உடனடியாக வழங்க வேண்டும்.

அதைப்போலவே, மின் வாரியத் தொழிலாளர்கள், அவர்களும் ஊதிய உயர்வு கேட்டு, பணி நிரந்தரம் வேண்டி, பேரணியெல்லாம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதையும் உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசுப் போக்குவரத்துத் தொழிலாளர்கள் பிரச்சினை. நீங்கள் ஒரு முடிவை அறிவித்துவிட்டீர்கள். ஒட்டுமொத்தமாக அண்ணா தொழிற்சங்கத்திலே இருக்கக்கூடிய தொழிலாளர்கள்கூட, இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்று, இதைப்பற்றியெல்லாம் சொல்லியாகிவிட்டது.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தவித அடிப்படை உண்மையும் இல்லாமல், சபைக்குத் தவறான தகவல் தரக்கூடாது. அதை மறுபரிசீலனை செய்யச் சொல்லி யாரும் சொல்லவில்லை. மாறாக, உங்கள் பாட்டாளி தொழிற்சங்கம்கூட, இதைப் பாராட்டி வரவேற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. அவர்கள்கூட என்னிடத்திலே தனிப்பட்ட முறையிலே பேசுகின்றபோது, அருமையான ஒப்பந்தம், அம்மா அவர்கள் மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள்.

எல்லோரும் வரவேற்றுப் பாராட்டி நன்றி தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் தவறான செய்தியைச் சொல்ல வேண்டாம்.

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, நான் ஆழமாகப் போகவில்லை. எங்கள் தொழிற்சங்கம் பாராட்டவில்லை. குறை இருக்கிறது. அந்தத் தொழிலாளர்களாலே, 900 கோடி ரூபாய் அரசுக்கு வருவாய் வந்திருக்கிறது. 300 கோடி ரூபாய்தான் கொடுத்திருக்கிறீர்கள். இன்னும் 600 கோடி ரூபாய் அதிலே இருக்கிறது. இன்னும் வழங்கலாம் என்று சொல்கிறார்கள். ஆகவே, மறுபரிசீலனை செய்து, மீண்டும் வழங்குவதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள், திரு. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இன்னும் கொஞ்சம், 10 நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். பறிக்கப்பட்டு வழங்கப்படாமல் இருக்கிற...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, 2 மணித்துளிகளிலே முடியுங்கள்.

பிற்பகல் 12-10

**திரு. ஜி.கே. மணி:** பறிக்கப்பட்டு வழங்கப்படாமல் இருக்கிற அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கான சலுகைகளை உடனடியாக வழங்க வேண்டும். தொகுப்பு ஊதியத்தின் அடிப்படையிலே நியமிக்கப்பட்டிருக்கிற ஆசிரியர் பணியிடங்களிலே இருக்கிற ஆசிரியர்கள், மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, சிரமத்தை உணர்ந்து, நிதி நெருக்கடியிலே இருந்து இந்த அரசாங்கம் மீண்டுவிட்ட காரணத்தினாலே, அந்தத் தொகுப்பு ஊதிய முறையை இரத்து செய்து கால முறை ஊதியம் என்ற வகையில் மாற்றி அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, தொகுப்பு ஊதியத்தில் நியமிக்கக்கூடியவர்களே இனி கூடாது; அந்த முறையை இரத்து செய்து, அப்படி நியமிக்கப்பட்டவர்களுக்கு காலமுறை ஊதியமாக வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலை வகுப்புகளில் கணினி ஆசிரியர்களை நியமித்தார்கள். பல வருடங்களாக நிரந்தரம் இல்லாமல் குறைந்த சம்பளத்திலே அவர்கள் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை நிரந்தரப்படுத்த வேண்டும். ஊதிய உயர்வு வேண்டும், பல மாதங்களாக



சம்பளமே இல்லாமல் இருக்கிறார்கள்; அவர்களுக்கு அதனை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்திலே ஆசிரியர் மாறுதலில் கலந்தாய்வு முறை என்று சொன்னீர்கள். ஒரு வருடம் சிறப்பாக இருந்தது. அப்புறம் மிகப் பெரிய குளறுபடி. ஆகவே, அந்தக் கலந்தாய்வு முறையை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்று இங்கே நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். திருநெல்வேலி மாவட்டத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, முடித்துவிடுகிறேன் தலைவரே, முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், முடிக்கச் சொல்லுங்கள். (சிரிப்பு)

**திரு. ஜி.கே. மணி:** திருநெல்வேலி மாவட்டத்தில் உலக்கை அருவி என்று ஒன்று இருக்கிறது. அந்த உலக்கை அருவியிலிருந்து வரும் தண்ணீர் எல்லாம் வீணாகக் கடலில் கலக்கிறது. அந்த நீரைத் தேக்கி வைத்தீர்கள் என்று சொன்னால், நாகர்கோவில் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களுக்கு எல்லாம் அது பயன்படும். அவ்வாறு பயன்படும்வகையில், அந்த உலக்கை அருவி குடிநீர்த் திட்டத்தை நீங்கள் நிறைவேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முக்கியமானது கூட்டுறவுத் தேர்தல். செப்டம்பர் 2001-லே நடத்துகிறோம் என்று சொன்னீர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைக் கொண்டுவரும்போது பேசிக்கொள்ளலாம். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இல்லை. நீதிமன்றத்தையே காரணம் காட்டிக்கொண்டிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த Bill வரும்போது பேசிக் கொள்ளலாம். (குறுக்கீடு) இல்லை, அந்த Bill வரும், அது வரும்போது பேசிக்கொள்ளலாம். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** ஒரு நிமிடம், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பொது நுழைவுத் தேர்வு குறித்து திரு. ஜி.கே. மணி அவர்களும், இன்னும் சில உறுப்பினர்களும் சில கேள்விகளை, சந்தேகங்களை எழுப்பினார்கள். அதற்கு ஒரு

விளக்கத்தைக் கூற விரும்புகிறேன். உச்ச நீதிமன்ற உத்தரவில் பொது நுழைவுத் தேர்வு முறையைப் பின்பற்ற வேண்டும் என்றுதான் கூறப்பட்டுள்ளது. இதனை மாற்ற வேண்டுமென்றால் மத்திய அரசு வகுத்துள்ள சில விதிமுறைகளை மாற்ற வேண்டுமென்று உயர் நீதிமன்றம் ஆணையிட்டது. மத்திய அரசு வகுத்துள்ள விதிமுறைகளில் மாற்றம் ஏற்படுத்தப்படாமல், மாநில அரசு ஒரு சட்டம் வகுக்க இயலாது. எனவேதான், மத்திய அரசின் சுகாதார அமைச்சகம் மற்றும் மனித வள மேம்பாட்டு அமைச்சகங்களுக்கு நாங்கள் அவர்கள் வகுத்துள்ள விதிமுறைகளை மாற்றக் கோரி கடிதங்கள் அனுப்பியுள்ளோம். மத்திய அரசு இந்த மாற்றங்களை ஏற்படுத்திய பிறகே, மாநில அரசு பொது நுழைவுத் தேர்வு முறையை மாற்றி ப்ளஸ் 2 மார்க் அடிப்படையில் மட்டும் மாணவர் சேர்க்கையை ஏற்படுத்த இயலும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி போன்றவர்கள், மத்தியில் சுகாதாரத் துறையில் வகுத்துள்ள விதிமுறைகளை, அவர் கட்சியைச் சார்ந்த அமைச்சர் மூலம் மாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கலாமே? அதனை விட்டுவிட்டு, மாநில அரசு சட்டம் இயற்ற வேண்டும் என்று கூறுவது முற்றிலும் பொருத்தமற்றதாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் சொன்னேன். மத்திய அரசு சட்டம் இயற்றுவதற்குத் தயாராக இருக்கிறது. உங்களுக்கே சொன்னார்கள். (குறுக்கீடு) இல்லை, அதற்குள் நாடாளுமன்றக் கூட்டத் தொடர் முடிந்துவிட்ட காரணத்தினாலே முடியவில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசுகின்றபோது மாநில அரசுதான் சட்டம் இயற்ற வேண்டும்; ஏன் இயற்றவில்லை என்ற கேள்வியைத்தான் இங்கே எழுப்பினார்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் கொண்டுவருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். வரக்கூடிய கூட்டத்தொடரிலே உறுதியாகக் கொண்டுவரப் போகிறார்கள். நம்முடைய மாநில நலனைப் பாதுகாப்பதற்காக நீங்கள் ஏன் கொண்டுவரவில்லை என்றுதான் நான் கேட்டேன். இங்கே மாநிலத்திலே கொண்டுவரலாமே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, முடியுங்கள். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.





**திரு. ஜி.கே. மணி:** முடித்துவிடுகிறேன் தலைவரே, அதைப்போல இந்த அமைப்பு சாரா தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள் நிறைய கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள். பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஓய்வூதியம், மருத்துவ வசதி எல்லாம் கேட்டிருக்கிறார்கள். கோரிக்கை, பேரணி எல்லாம் நடத்தி முதலமைச்சருக்கு மனு கொடுத்திருக்கிறார்கள். அதையும் நிறைவேற்ற வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து முக்கியமான ஒன்று. நம் தமிழகத்திலே பார்த்தால் லம்பாடி என்ற சமுதாயம் இருக்கிறது. அவர்கள் எல்லாம் வறுமைக் கோட்டிற்குக் கீழே, இன்று ஓர் இடத்தில் நிரந்தர வாழ்வு என்று இல்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் பெயர் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருக்கிறது. அவர்கள்கூட நீதிமன்றத்திற்குப் போய், நம்முடைய உயர் நீதிமன்றமும் அவர்களை மலைவாழ் பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்குத் தகுதி இருக்கிறது; பழங்குடியினர்தான் என்று சொல்லி இருக்கிறது. அதை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** முடித்துவிடுகிறேன். ஒன்றே ஒன்று தலைவரே, வேறு ஒன்றும் இல்லை. அடுத்து, சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத்தைப் பற்றிச் சொன்னார்கள். தற்காலிகமாக வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டதில், இரண்டொரு மாதங்களிலேயே அவை சேதமடைந்து விட்டன. நீங்கள் பாருங்கள். குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை. பரவலாக தமிழ்நாடு முழுவதும் அதே நிலைமைதான். அந்தத் தற்காலிக வீடுகள் முழுமையாகச் சேதமடைந்து இருக்கின்றன. அதை நீங்கள் ஆய்வு செய்து, உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இங்கே வேண்டி விரும்பிக் கேட்டு, ஆசிரியர் பணியிடங்கள், காலியிடங்களை கட்டாயம் நிரப்ப வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள், திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, முடித்துவிடுகிறேன். இன்னும் ஒன்றே ஒன்று. இந்தக் கல்வித் துறையில்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, வாக்கியத்தை முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, முடித்து விடுகிறேன். கல்வித் துறையில் மிகப் பெரிய குளறுபடி இருக்கிறது. ஆசிரியர் பணி நியமனம் மத்திய அரசு கொண்டுவந்த அனைவருக்கும் கல்வித் திட்டத்திற்கு வழங்கப்பட்ட நிதித் தொகை, அவற்றிலே குளறுபடி இருப்பதாகச் சொல்கிறார்கள். நியமனம் செய்தவர்கள், மத்திய அரசு வழங்கிய தொகை, செலவழித்த தொகை..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள்; வாக்கியத்தை முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இது குறித்த ஒரு வெள்ளை அறிக்கையை இந்த அரசு வெளியிட வேண்டுமென்று நான் கேட்டு, இந்த அறிவிப்புகள் எல்லாம் வெறும் அறிவிப்பாக, நிறைவேற்றப்படாத அறிவிப்பாக, தேர்தலுக்கான விளம்பர அறிவிப்பாக இருக்கிறது. இந்த அறிவிப்பு என்பது கானல் நீர் என்று கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போகிறபோக்கில் சேற்றை வாரிப் பூசிவிட்டுப் போகின்றார். அவருடைய கட்சி அங்கம் வகித்துக்கொண்டிருக்கின்ற, மத்திய அரசிலே இருக்கின்ற பாரதப் பிரதமர் திரு. மன்மோகன் சிங் அவர்களே, மத்திய அரசின் அனைவருக்கும் கல்வித் திட்டத்திலே இன்றைக்கு இந்தியாவிலேயே மிகச் சிறப்பாக மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாகச் செயல்படுகின்ற ஒரே மாநிலம், தமிழகம் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) பாராட்டியிருக்கின்றார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, ஆசிரியர் நியமனத்திலே எந்தவிதக் குளறுபடியும் இல்லை, மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த ஆண்டு மட்டும் அல்ல; இதுவரையில் இல்லாத நடைமுறையாக அடுத்த கல்வியாண்டின் முடிவில் என்னென்ன ஆசிரியர் பணியிடங்கள், காலியிடங்கள் வருகின்றனவோ, அவற்றை இப்போதே கணக்கிலே எடுத்து, இந்த ஆண்டே அவர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை, தமிழகத்தினுடைய முதல்வர் அம்மா அவர்கள் எடுத்திருக்கிறார்கள் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, முடித்துவிடுங்கள், முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) நீங்கள் சொல்லிவிட்டீர்கள். கல்வி அமைச்சர் பதில் சொல்லிவிட்டார். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள். (குறுக்கீடு) திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுப் பணி என்று சொல்லி, இருந்த ஆசிரியர்களை மாற்றி இருக்கிறார்களே தவிர, நியமனம் பண்ணவில்லை. (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் அறிவிப்பு ஒன்று கொடுத்திருந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. விளக்கத்திற்குள்ளே போகாதீர்கள். நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள், அது என் ஆய்வில் இருக்கிறது. திரு. எஸ்.ஆர்.பி., (குறுக்கீடு) எஸ்.ஆர்.பி. பேசி முடியுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மானியக் கோரிக்கையில் கூறப்பட்டுள்ளதுபோல, மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் எல்லோருக்கும் இலவசமாக சைக்கிள் வழங்குவது... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். திரு. எஸ்.ஆர்.பி., பேசி முடிக்கட்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** குடும்ப அட்டைகளுக்குக் கூடுதலாக மானியம் வழங்குவது, கரும்புக்கு ஆதார விலை அறிவிப்பது, சாலைகளை வலுப்படுத்துவது, இலவசப் பாடப் புத்தகம் வழங்குவது, தேயிலை பயிரிடும் சிறு விவசாயிகளுக்குப் பாதுகாப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்துவது, மாணவர்களுக்கு இலவச பயணச் சீட்டுகளுக்கான தொகையைப் போக்குவரத்துக் கழகங்களுக்கு அளிப்பது, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்காக உழவர் பாதுகாப்புத் திட்டத்தை அறிவித்தது உள்ளிட்ட எல்லாப் புதுப் பணிகளுக்கும் சேர்த்து ரூ.1919.25 கோடி கூடுதலாகக் கோரப்பட்டிருக்கிறது. இதில் மூலதனச் செலவுக்கு ரூ.544.63 கோடி மட்டுமே கோரப்பட்டிருக்கிறது. எஞ்சியுள்ள 1374.62 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலான செலவுகளுக்கே செல்கிறது. ஒரு நிதியாண்டில், முறையான நிதியொதுக்கீட்டிற்குப் பிறகு, எதிர்பாராமல் ஏற்படும் செலவுகளுக்காகத்தான், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக பெற முடியும். ஆனால், நிதி அமைச்சர் கோரியுள்ள இந்த முதல் துணை மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தச்

செலவும் எதிர்பாராத செலவு என்ற வகையில் வராது. பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டபோது கோரப்பட்டிருக்க வேண்டிய அனைத்துச் செலவுகளுமே எதிர்பாராச் செலவுகளாகக் காட்டப்பட்டிருக்கிறது. நிதியொதுக்கீடு தொடர்பான நடைமுறைகளைப் புறந்தள்ளிவிட்டு, தன்முனைப்பாகவும், ஒருதலைப்பட்சமாகவும், அவசரக் கோலத்தில் புதிய அறிவிப்புகளை வெளியிடுவதற்கு, எதிர்பாராச் செலவு என்ற முகமூடியை மாட்டிக்கொள்ள நேரிட்டிருக்கிறது. கோரிக்கைகளில் எதிர்பாராமல் ஏற்பட்ட ஒரு செலவினம் என்று காட்டப்பட்டிருந்தாலும், உண்மையில் இவை அனைத்துமே எதிர்பார்த்து இருக்க வேண்டிய செலவினங்களாகவே அமைந்திருக்கின்றன. மக்களின் வரிப்பணத்தில் இருந்து செலவு செய்யப்படும் ஒவ்வொரு காசுக்கும், மக்களிடம் அனுமதியைப் பெற வேண்டும் என்பதற்காகவும், மக்களிடம் ஒளிவு மறைவில்லாமல் செலவுக் கணக்குகளைக் காட்ட வேண்டும் என்பதற்காகவும், பல்வேறு விதிமுறைகளையும், நெறிமுறைகளையும் நம்முடைய ஜனநாயகம் வலியுறுத்துகிறது. அரசமைப்புச் சட்டத்தில் வரையறுத்துக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், இவற்றிற்கு நேர்மாறான வழிமுறைகளைக் கையாண்டு, முதலமைச்சரால் வெளியிடப்பட்ட, வரையறைக்கு உட்படாத அறிவிப்புகளுக்குச் சட்ட...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவிப்புகளுக்கும், அதற்கு ஆகின்ற செலவுகளுக்கும் அரசு பொறுப்பேற்கிறது என்பதற்கான ஆதாரங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அவைக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, Fiscal Responsibility Act - அது ஆய்வு செய்யப்பட்டு, அதுவும் அவைக்குத் தரப்பட்டிருக்கிறது. அரசு பொறுப்பேற்பதற்காகக் கொண்டுவந்த சட்டம்தான், மைய அரசால் கொண்டுவரப்பட்ட சட்டம்தான், மைய அரசு தாக்கலால் கொண்டுவரப்பட்ட சட்டம்தான் Fiscal Responsibility Act. மற்றும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்பாராச் செலவுகளைப் பற்றி கூறுகிறார்கள். இதுபற்றி நான் ஒரு விளக்கம் தர கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு நிதியாண்டின் நிதி ஒதுக்கீட்டுச் சட்டத்தில், ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட திட்டத்திற்கான செலவினத் தொகையில் பற்றாக்குறை ஏற்படும்போதோ அல்லது ஒரு நிதியாண்டின் நிதிநிலை அறிக்கையில் சேர்க்கப்படாது, புதிதாகச் செயல்படுத்தப்பட்டுள்ள ஒரு புதுப் பணி குறித்த கூடுதல் செலவிற்கான



தேவை ஏற்படும்போதோ, அத்தகைய செலவினத் தொகைகள் குறித்த அறிக்கை சட்டமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்பது, அரசமைப்புச் சட்டத்திலே 205 ஆம் பிரிவினுடைய அவசியத் தேவையாகும். ஏற்கெனவே நடைமுறையில் உள்ள திட்டங்களுக்காக ஏற்கெனவே செலவிடப்பட்ட கூடுதல் தொகைகளுக்கான ஒதுக்கீடு மற்றும் இந்த நிதி ஆண்டின் இறுதிக்குள் ஏற்படக்கூடும் என எதிர்பார்க்கப்படும் கூடுதல் செலவினங்களுக்கான ஒதுக்கீடு ஆகியவை இவற்றில் சேர்க்கப்படும். புதிய திட்டங்களைப் பொறுத்தவரைக்கும் புதுப் பணி தொடர்பான செலவினம் கீழ்க்கண்ட இரு வகைகளில் ஏற்படக்கூடும்:

பிற்பகல் 12-20

1. நிதிக்கான தேவை அவசரத் தன்மையுடையதாக இருக்கும்போது சட்டமன்றத்தின் வரன்படுத்துதலுக்குட்பட்டு சில செலவினங்கள் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து கடன்மூலம் செலவிடப்படும்.

2. உடனடி நிதி ஒதுக்கீட்டிற்கான தேவை இல்லாத திட்டங்களுக்கான செலவினங்கள் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தரப்படாமல் நேரடியாக அவை துணை மதிப்பீடுகளில் வந்துவிடுகிறது. அதை ஏற்கெனவே நாம் தெளிவுபடுத்தியிருக்கிறோம். அதுமட்டுமல்ல, புதிய திட்டத்திற்கான எதிர்பாராச் செலவு நிதி ஒதுக்கீடுகள், திட்டங்களுக்கான உடனடித் தேவையைக் கருத்திற்கொண்டே அளிக்கப்படுகின்றன என்பது இதிலிருந்து தெளிவாகும்.

மேலும், ஒரு திட்டத்திற்காக எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து கொடுக்கப்படும் தொகை, அத்திட்டத்திற்கான மொத்த நிதித் தேவையின் அளவிற்கு இருக்க வேண்டுமென்பது இல்லை. உதாரணமாக, நிதி ஒதுக்கீடின்றி ஒரு பள்ளிக் கட்டடம் கட்டுவதற்காக அரசு ஒரு கோடி ரூபாய்க்கு அனுமதி அளிப்பின், அது ஒரு புதுப் பணி குறித்த செலவு ஆகும். ஆனால், திட்ட வேலைகளைப் பொறுத்து தேவைகளின் அளவிற்கு எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து வழங்கப்படும் முன்பணம் இருக்குமேயொழிய, மொத்தத் தொகையான ஒரு கோடி ரூபாய் அளவிற்கு அது இருக்காது. இதைப்போன்றே ஒரு புதிய பதவிக்கான திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு இல்லாமல், ஒரு புதிய பதவிக்கான துணை மதிப்பீடுகள் சட்டமன்றத்தின் அனுமதி அளிக்கப்பட்டால், துணை மதிப்பீடுகள் சட்டமன்றத்தின் ஒப்புதல் அளிக்கும் வரையிலான சில மாதங்களுக்கான செலவினங்களுக்கு மட்டுமே எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ஒதுக்கப்படுகிறது. தமிழ்நாட்டின் எதிர்பாராச் செலவு நிதியின் அளவு

[திரு. சி. பொன்னையன்] [2005 செப்டம்பர் 28

150 கோடி ரூபாயாகும். 2004-2005 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகள் 21-3-2005 அன்று சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் 79 கோடி ரூபாய் அளவிற்கு எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இம்முன்பணங்கள் சட்டமன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, வரன்முறைப்படுத்தப்பட வேண்டும். அதனால் இம்முன்பணங்கள் 2005-2006 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன. இத்தொகையில் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து அளிக்கப்பட்ட தொகை மட்டுமல்லாது, தற்போது புதிய பணிகளில் ஏற்படக்கூடிய செலவினங்களும் உள்ளடங்கியுள்ளது என்று நான் கூறுகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஏற்கெனவே கொடுக்கப்பட்ட அறிவிப்புகளுக்கு சட்டமன்றத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக இந்தத் துணை மானியக் கோரிக்கை வந்திருக்கிறது. சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் செலவினங்கள் தொடர்பான அறிக்கைகளில் எல்லாச் செலவினங்களும் அடங்குவதில்லை. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் குறித்தோ, முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து செலவிடப்பட்ட தொகை விவரங்கள் குறித்தோ அவையின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுவதில்லை. இவை சாட்டப்பட்ட செலவினங்களும் அல்ல. இந்த இரண்டு இனங்களிலும் செலவிடப்படும் தொகையின் அளவு உயர்ந்துகொண்டே செல்கிறது. முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு பொதுமக்களிடமிருந்து பெறப்படும் தொகை பல மடங்கு அதிகரித்திருக்கிறது. சுனாமி நிவாரண நிதிகூட, இந்த நிதியில்தான் சேர்க்கப்பட்டிருக்கிறது. பொது நிவாரண நிதி என்றிருந்தாலும், முதலமைச்சர் பொறுப்பில் உள்ள குறிப்பிட்ட ஒரு துறையைச் சேர்ந்த ஊழியர்களுக்காகவே அதிலிருந்து அதிகமான தொகை செலவிடப்படுகிறது. ஆனால், மற்ற துறைகளைச் சேர்ந்த ஊழியர்கள் அத்தகைய நன்மையைப் பெறுவதற்கு வாய்ப்பு இல்லாமலே இருக்கிறது.

அதேபோன்று, நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிதி உள்ளிட்ட பல நிதி ஒதுக்கீடுகளைக் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கே திருப்பி விடப்படுவதாகக் கூறப்படுகிறது. முதலமைச்சர் தொகுதிக்கும், அந்த மாவட்டத்திற்கும் அதிகமான நிதி குவிக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. அனைவரையும் சமமாக நடத்த வேண்டும் என்ற கோட்பாட்டிற்கும், நியாயமான, நேர்மையான முறைகளில் நிதிப் பகிர்வு செய்யப்பட வேண்டும்...



2005 செப்டம்பர் 28]

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களைச் சொல்லுவது திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு வழக்கமாகிவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சர் பொது நிவாரண நிதியைப் பொறுத்தவரை அதிலிருந்து பரவலாக பொதுமக்கள் அனைவருக்குமே நிதி உதவி வழங்கப்படுகிறது. முதலமைச்சர் பொறுப்பில் உள்ள ஒரு குறிப்பிட்ட துறையினருக்கு மட்டுமே இது பயன்படுத்தப்படுகிறது என்று சொல்லுவது ஆதாரமற்ற, அபாண்டமான குற்றச்சாட்டு. பொதுமக்கள் பல பேர் சாலை விபத்துகளில் மரணமடைய நேரிடுகிறது. சில சமயம் மின்னல் தாக்கி இறந்துவிடுகிறார்கள். வேறு விபத்துகளில் இறந்துவிடுகிறார்கள். அப்படி நேரிடும்போது, அந்தக் குடும்பத்தினருக்கு எல்லாம் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி வழங்கப்படுகிறது. ஆகவே, எந்தக் குறிப்பிட்ட பிரிவினருக்கும், தனிப்பட்ட முறையில், இந்த முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து உதவி வழங்கப்படுகிறது, மற்றவர்களுக்கு வழங்கப்படுவதில்லை என்ற நிலை இல்லை. அது தவறான குற்றச்சாட்டு.

மேலும், சுனாமி நிவாரண நிதிக்காகவும் பொதுமக்களிடமிருந்து பெருமளவில் நிதி உதவி பெறப்பட்டது. அதுவும் இந்த நிதியில்தான் சேர்க்கப்பட்டது என்று திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் ஏதோ குற்றஞ்சாட்டுவது போல் இங்கே பேசியிருக்கிறார். நான் ஏற்கெனவே இந்த அவையில் தெளிவுபடுத்தியிருக்கிறேன். மீண்டும் கூறுகிறேன். சுனாமி நிவாரண நிதிக்கென்று பெறப்பட்ட நிதி உதவி, அதற்காக தனிக் கணக்கு வைத்துக்கொள்ளப்பட்டது. ஆகவே, சுனாமி நிவாரண நிதிக்காக பெறப்பட்ட நிதி உதவி எதுவாக இருந்தாலும் சுனாமி நிவாரணப் பணிகளுக்காக மட்டும்தான் பயன்படுத்தப்பட்டதே தவிர, வேறு எதற்காகவும் பயன்படுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-25

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல கடந்த நான்கு ஆண்டு காலத்தில் ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதிக்கும் அந்த மாவட்டத்திற்கும் செலவிடப்பட்டுள்ள தொகை குறித்தும்...

**மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்ற, ஏனைய உறுப்பினர் நிதி

எல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய தொகுதிக்குப் போய்ச் சேர்ந்துகொண்டிருக்கின்றது என்ற தவறான தகவலை இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். அந்த மாவட்டத்தைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவர்கள் தங்களுக்கு எந்தத் தேவை, பணியின் முக்கியத்துவம் கருதி, அந்த மாவட்டத்திலே இருக்கின்ற பணிகளுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நல்ல செயலுக்கு, நல்ல திட்டங்களுக்கு கொடுத்துக்கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிதியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொச்சைப்படுத்த வேண்டாம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** கடந்த நான்கு ஆண்டுகாலத்தில் ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதிக்கும், அந்த மாவட்டத்திற்கும் செலவிடப்பட்ட தொகை குறித்தும், தொடங்கப்பட்டுள்ள திட்டங்கள் குறித்தும் ஒரு விரிவான அறிக்கையை இந்த அவையில் தாக்கல் செய்வதற்கு முதலமைச்சர் முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருடைய தனிப்பட்ட உரிமை. அதில் தலையிடுவதற்கு மாண்புமிகு உறுப்பினருக்கு உரிமை இல்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தனிப்பட்ட முறையில் நான் இதைக் கூறவில்லை. பொது நன்மையைக் கருதியும், உயர்ந்த மரபுகளைப் பேண வேண்டும் என்பதற்காகவும், இந்தக் கோரிக்கையை முன் வைத்திருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** எதிர்பாராத செலவு...

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியிலே காங்கிரஸ் ஆட்சி அமைந்தபோதெல்லாம் அமேதி தொகுதிக்கு எவ்வளவு செலவு செய்யப்பட்டது என்று அங்கே கணக்கு வெளியிடத் தயாரா? (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு ஒன்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் தொகை நாங்கள் எல்லாம் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தபோது, 2001-க்கு முன்னாலே, எங்களைப் போன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர், பெரியகுளம் தொகுதி, ஆண்டிப்பட்டி தொகுதிக்கு எல்லாம் நிதியைக் கொடுத்திருக்கிறோம். ஆகவே, முதலமைச்சர் தொகுதி என்று நீங்கள் கூறுவது மிகவும் தவறு.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அமைச்சருடைய விளக்கத்திற்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நாங்கள் கொடுத்தோம் என்று சொன்னார். மிக்க மகிழ்ச்சி. எதிர்பாராத செலவு நிதியத்தின் அளவை..

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** நான் சொன்னது, 2001-க்கு முன்னால் புரட்சித் தலைவி அவர்கள் சில கோரிக்கை வைத்தார்கள் என்பதை, மாண்புமிகு அம்மா அவர்கள் அத்தனை நாடாளுமன்ற உறுப்பினர்களும் பல்வேறு தொகுதியில் இருக்கக்கூடிய கிராமப்புறங்களுக்கு நிதி ஒதுக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உத்தரவிட்டார்கள். அந்த அடிப்படையிலே நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம், நாங்கள் நிதியை ஒதுக்கியிருக்கிறோம். அதேபோல்..

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** எதிர்பாராச் செலவு நிதியத்தின் அளவைப் பல மடங்கு...

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** நான் பேசுகிறேன். பேசி முடியவில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் அந்த நேரத்திலே உறுப்பினராக இல்லை. ஆகவே, நீங்கள் கூறுவது உண்மைக்கு முரணான ஒரு கூற்று. அதுமட்டுமல்லாமல், உங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எந்தெந்த இடத்திலே நாடாளுமன்றத் தொகுதி நிதியை ஒதுக்குகிறார்கள் என்பதை உங்களால் சொல்ல முடியாது. சிலர் நிதியே ஒதுக்காமல் சென்றுவிட்டிருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[2005 செப்டம்பர் 28

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** எதிர்பாராத செலவு நிதியத்தின் அளவைப் பல மடங்கு மிஞ்சுகின்ற வகையிலும், இதற்கு முன் எப்போதும் கூறப்படாத அளவிலும், ரூ.2000 கோடி அளவுக்குத் துணை மானியம் கோரப்பட்டிருக்கிறது. இதில் முக்கால் பகுதி வருவாய்க் கணக்கிலான செலவுகளுக்கே சென்றுவிடுகிறது. சட்டமன்றத்தின் பதவிக் காலம் முடிந்துவிடும் நிலையில் தேர்தலை மனதில்கொண்டு செய்யப்பட்ட அறிவிப்புகளுக்கு நிதி ஒதுக்கவே இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. சட்டத்தின்முன் எல்லோரும் சமம் என்பதையும், சட்டத்தின் சமமான பாதுகாப்பு எல்லோருக்கும் இருக்க வேண்டும் என்பதையும் அரசமைப்புச் சட்டம் வலியுறுத்துகிறது. இத்தகைய சமமான பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிப்பதற்காகவே ஆளுநர் பதவியும் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த ஆளுநரைத் தலைவராகக் கொண்டு இயங்கும் நம்முடைய அரசமைப்பிலேயே இத்தகைய ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுத்தப்படுகின்றன. இது மிகவும் கவலையளிப்பதாக இருக்கிறது. வருவாய்க் கணக்கில் மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் 2005 ஜூன் வரை 6847.98 கோடி ரூபாய் என்று கூறப்பட்டிருக்கிறது. இதில் வணிக வரித் துறை மூலமாக மட்டும் 3866.59 கோடி ரூபாய் திரட்டப்பட்டிருக்கிறது. மாநில ஆயத் தீர்வையாக மட்டும் ரூ.755.61 கோடி வசூலிக்கப்பட்டிருக்கிறது. மறைமுகமான வரி என்ற முறையில், விற்பனை வரி பொதுமக்கள் அனைவரிடமிருந்து நுகர்வோர் என்ற முறையில் வசூலிக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று, மாநில வாணிபக் கழகத்தின் மூலமாகவும், மாநில ஆயத் தீர்வை மூலமாகவும் அடித்தளத்து மக்களிடமிருந்து பெரும்பாலான தொகை வசூலிக்கப்பட்டிருக்கிறது. வாக்கு வங்கிகள் என்ற அடிப்படையில் மட்டும் அடித்தளத்து மக்கள் முதலிடத்தில் இருப்பதில்லை. இந்த அரசாங்கம் இயங்குவதற்கு உயிர் சக்தியாகவும் அவர்கள் இருந்துவருகிறார்கள். ஆனால், அந்த மக்களைப் பாதிப்பதாகவும், விலைவாசிகள் உயர்வதற்கு ஒரு முக்கிய காரணமாகவும் விளங்கக்கூடிய அத்தியாவசியப் பண்டங்கள் மீதான விற்பனை வரியை இந்த அரசு விலக்கிக்கொள்வதும் இல்லை; குறைத்துக் கொள்வதும் இல்லை.

*பிற்பகல் 12-30*

மத்திய வரி வருவாயிலிருந்து இந்த அரசுக்குக் கிடைக்கும் பங்கும் உயர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. நடப்பு நிதியாண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு, ரூபாய் 5041.21 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை மாநில



2005 செப்டம்பர் 28][திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

வரவு-செலவுத் திட்ட மதிப்பீடான ரூபாய் 4672.46 கோடியைவிட அதிகமான தொகை ஆகும் என்று கூறப்பட்டிருக்கிறது. வரிகளைக் குறைத்து வசதிகளைப் பெருக்குவோம் என்று அறிவித்த அண்ணாவின் வழி நடப்பதாக கூறும் இந்த அரசு, வரிகளைக் குறைத்திருக்க வேண்டும். மாறாக, மக்களைக் கசக்கிப் பிழிந்து வசூலிப்பதையே தன்னுடைய கொள்கையாக வைத்துக் கொண்டிருக்கிறது. அதை...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கின்ற அளவுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) உண்மைக்கு மாறான தகவலை அவைக்குத் தருவதே திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுடைய வழக்கமாக இருந்துவருகிறது. கூடுதல் வரியே போடாமல், புது வரியே போடாமல், வருவாயைப் பெருக்கி, மைய அரசினுடைய உதவியும் இல்லாமல், தமிழகத்தில் ஒரு புனிதமான, ஏழை மக்களைக் காக்கின்ற ஆட்சி நடத்துகின்ற அரசுதான் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை நான் தெரிவிக்க விரும்புகின்றேன். அதற்கான விளக்கத்தை நான் தருகின்றேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதாரணமாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால் பெட்ரோல், டீசல் ஆகியவற்றின்மீது வரியைக் குறைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தோம். (குறுக்கீடுகள்) நீங்கள் கொஞ்சம்கூட குறைக்கவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. எஸ்.ஆர்.பி., ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் இதுகுறித்து ஒரு விரிவான அறிக்கையே தந்தார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** முதலமைச்சர் அவர்கள் பேசியதற்கு நான் விளக்கம் சொல்ல வேண்டாமா? விளக்கம் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் இதுகுறித்து ஒரு விரிவான அறிக்கையே தந்தார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் விளக்கம் சொல்கிறேன். நானும் விளக்கம் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் இதுகுறித்து விரிவான விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு வரிகளைக் குறைக்கவில்லை என்று சொன்னார்கள். பெட்ரோல், டீசல் ஆகியவற்றின்மீது வசூலிக்கப்பட்டு வந்த சுங்க வரி....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பற்றி ஏற்கெனவே இந்த அவையில் பிரச்சினை எழுப்பப்பட்டு நான் விரிவான பதில் அளித்தபோது, பெட்ரோல், டீசல் மீதான வரியை, சுங்கத் தீர்வையை, ஆயத் தீர்வையை மத்திய அரசு குறைக்கவே இல்லை என்று சொல்லவில்லை. கணிசமான அளவு குறைக்கவில்லை. மிகவும் குறைவாகக் குறைத்திருக்கிறார்கள் என்றுதான் சொன்னேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சுங்க வரி, கலால் வரி உள்பட பல வரிகள் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசால் குறைக்கப்பட்டிருக்கின்றன. கச்சா எண்ணெய்க்குச் சுங்க வரி பாதியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. கெரசின், சமையல் எரிவாயு ஆகியவற்றுக்கு வரிகள் முழுவதும் இரத்து செய்யப்பட்டிருக்கின்றன. அத்துடன் மக்களுக்கு மானிய விலையில் அவை வழங்கப்பட்டிருக்கின்றன. டீசலைப் பொறுத்தவரை Excise duty, அதாவது கலால் வரி, சென்ற அரசு, NDA அரசு இருந்த நேரத்தில், 14 சதவிகிதம் டீசலுக்கு வரி விதித்திருந்தார்கள். இப்போது ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் 8 சதவிகிதமாகக் குறைத்திருக்கிறார்கள். பெட்ரோலுக்கு NDA ஆட்சியில் 30 சதவிகிதம் விதித்திருந்தார்கள். அதை இன்று குறைத்து, மூன்று முறை குறைத்து, 8 சதவிகிதமாக இப்போது விதித்திருக்கிறார்கள்.

பொது விநியோகத் துறையில் விநியோகிக்கப்படுகின்ற கெரசின், சீமை எண்ணெய், கிருஷ்ணாயிலுக்கு 10 சதவிகிதமாக இருந்ததை, 14 சதவிகிதமாக முன்பு இருந்த அரசு உயர்த்தி இருந்தது. இப்போது எந்த வரியும், எந்தக் கலால் வரியும் வசூலிக்கப்படவில்லை. இப்போது பூஜ்யம் தான் வசூலிக்கப்படுகிறது. அதேபோல சமையல் எரிவாயுவிற்கு முன்பு 10 சதவிகிதமாக இருந்ததை சென்ற NDA ஆட்சி BJP ஆட்சி 14 சதவிகிதமாக உயர்த்தியது. இந்த அரசாங்கம் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கம் வந்து, 8 சதவிகிதமாகக் குறைத்து இப்போது cypher - பூஜ்யம். வசூலே செய்வதில்லை, LPG-க்கு வசூல் செய்வதில்லை.



அதேபோல Customs duty-யைப் பொறுத்தவரை, சுங்க வரியைப் பொறுத்தவரை பெட்ரோலுக்கு முன்பு 20 சதவிகிதமாக இருந்தது. இப்போது 10 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. டீசலுக்கு முன்பு 20 சதவிகிதம், பழைய ஆட்சி வசூலித்துக்கொண்டிருந்தது. இப்போது ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் 10 சதவிகிதமாகக் குறைத்திருக்கிறார்கள். சீமை எண்ணெயைப் பொறுத்தவரை, கெரசின் ஆயிலைப் பொறுத்தவரையில், முன்பு 10 சதவிகிதம் வரி இருந்தது. இப்போது அது பூஜ்யம். எந்த வரியும் இல்லாமல் செய்திருக்கிறார்கள். அதேபோல, சமையல் எரிவாயுவிற்கு சுங்க வரி எதுவுமே வசூலிக்கப்படுவதில்லை. பூஜ்யம். எதுவுமே இல்லாத ஒரு நிலையை உருவாக்கி இருக்கிறார்கள். இந்த அளவிற்குச் சலுகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அது மட்டும் அல்லாமல், மானியம் தரப்பட்டிருக்கிறது. மானியம் தரப்படுவது மட்டுமல்ல, ONGC போன்ற அமைப்புகளைக் கட்டாயமாகத் தரவேண்டும் என்று மத்திய அரசு நிர்ப்பந்தித்துக் கொண்டிருக்கிறது. சில மாத காலத்திலேயே ஏப்ரல் மாதத்திலிருந்து ஜூன் மாதத்திற்குள்ளாக, மூன்று மாத காலத்திற்குள்ளாக இங்கே இருக்கின்ற எண்ணெய்க் கம்பெனிகளுக்கு ஏற்பட்ட நஷ்டம் என்பது IOC, Indian Oil Company-ஐப் பொறுத்தவரையில், அந்த விலை அதிகமானதற்குப் பிறகும், விலையை ஏற்றாமல் இருந்த நேரத்தில் 2118 கோடி ரூபாய் பெட்ரோல் டீசலிலே மட்டும் நஷ்டம் ஏற்பட்டது. LPG சமையல் எரிவாயு, கெரசினிலே மட்டும் 2730 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது.

பிற்பகல் 12-35

BPCL-வில் Bharat Petroleum Corporation Ltd.-ல் பெட்ரோல், டீசலிலே மட்டும் 1,200 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. அதேமாதிரி, சமையல் எரிவாயுவிலே —Gas-லே மட்டும் 900 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. Indo-Burma Petroleum-ல் 413 கோடி ரூபாய் பெட்ரோல், டீசலிலே; LPG, சீமை எண்ணெயிலும், எரிவாயுவிலும் 124 கோடி ரூபாய். கிட்டத்தட்ட 7,000 கோடி ரூபாய் மூன்று மாதத்திலே நஷ்டம் ஏற்பட்டது. இந்தக் கம்பெனிகளிலே, சில இழுத்து மூடவேண்டி இருக்கும்; எங்களுக்கு விலையை உயர்த்திக் கொடுங்கள் என்று அவர்கள் கேட்டார்கள். பெட்ரோல், லிட்டருக்கு 3 ரூபாய் 63 காசு உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டார்கள். மத்திய அரசு 2 ரூபாய் 50 காசுதான் உயர்த்தி இருக்கிறது. டீசலைப் பொறுத்தவரையில், 4 ரூபாய் 15 காசு உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டார்கள். 2 ரூபாய் தான் உயர்த்தியிருக்கிறார்கள். LPG சிலிண்டர், சமையல் எரிவாயுவிற்கு குறைந்தபட்சம் 92 ரூபாய் உயர்த்த வேண்டுமென்று கேட்டார்கள்.

(குறுக்கீடுகள்) 92 ரூபாய் உயர்த்த வேண்டுமென்று கேட்டார்கள். பூஜ்யம், ஒரு காசுகூட உயர்த்தவில்லை. Kerosene - (குறுக்கீடுகள்) சீமை எண்ணெயைப் பொறுத்தவரையில், ஒரு லிட்டருக்கு 11 ரூபாய் உயர்த்த வேண்டுமென்று கேட்டார்கள். ஒரு காசுகூட உயர்த்தவில்லை. பூஜ்யம். ஆக, இயன்றவரையில், மத்திய சர்க்கார் குறைக்க முயற்சிகளை எடுத்திருக்கின்றது. நமக்கும் ஒரு கடமை இருக்கிறது. இந்த மாநில சர்க்காருக்கும் ஒரு கடமை இருக்கிறது. எனவே, அதைக் குறைக்க முன்வர வேண்டும் என்று நான் மீண்டும் என் கோரிக்கையாக வைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசுக்கு ஆலோசனை கூறுவதைவிட, மைய அரசுக்குத் தக்க ஆலோசனைக் கூறுவது, மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களுடைய கடமை. (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே முக்கியமான ஒன்றை மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் கவனிக்க வேண்டும். உலகச் சந்தையிலே கச்சா எண்ணெயினுடைய விலை ஏறுகிறபோது எல்லாம், இந்தியாவிலே அந்த விலையை உயர்த்த வேண்டும் என்ற அவசியம் இல்லை. காரணம், இங்கே Public and Private Sector Refineries, domestic refineries பல இருக்கின்றன. அப்படி அவை இருக்கின்றபோது, ஒவ்வொரு முறையும் இந்த விலை உயர்வு ஆகின்றபோது, அந்த refineries-க்கு ஏகப்பட்ட இலாபம் வருகிறது. அந்த இலாபத்தைக் குறைக்க வேண்டாமா? ஏன் இலாபத்தைக் குறைக்கின்ற முயற்சியிலே ஈடுபடவில்லை? அவர்களுக்கு வருகின்ற இலாபத்தைக் குறைத்துக்கொண்டு, மக்கள் தலையிலே சுமத்தாமல், இந்த விலை உயர்வை அவர்கள் தடுத்திருக்கலாம். அதுமட்டுமல்ல; அப்படிக் கச்சா எண்ணெய் விலை உயருகிறபோது, இந்தச் சலுகையை யாருக்குத் தருகிறீர்கள்? அரசாங்கத்திற்குச் சலுகை தருவது என்ற போர்வையிலே தனியார் refineries-க்கு இந்தச் சலுகையைத் தருவதனுடைய மர்மம் என்ன? அதிலே இருக்கின்ற ஆதாயம் என்ன? இதை நீங்கள் தட்டிக் கேட்க வேண்டாமா? அப்படித் தனியார் refineries-களுக்கெல்லாம் ஆதாயத்தைத் தேடித் தரக்கூடிய ஒரு வாய்ப்பைத் தந்துவிடுகிறீர்கள். அவர்களுக்கு ஏகப்பட்ட இலாபம் கிடைக்கிறது. அந்த இலாபத்தைக் குறைத்துக் கொள்வதற்கு அவர்கள் முன்வரவில்லை. அதுமட்டுமல்ல; இங்கே இந்தியாவிலேயே, நமக்குச் சொந்தமாக oil wells இருக்கின்றன. நமது refineries இருக்கின்றன. கச்சா எண்ணெய் விலை உலகச் சந்தையிலே ஏறுகிறபோது, எதற்காக இந்தியாவிலே உற்பத்தியாகிற எண்ணெய்க்கு விலையை நீங்கள் ஏற்றுகிறீர்கள்? இது ஒரு சூழ்ச்சி இல்லையா? தனியாருக்கு மறைமுகமாக பலன் சென்று



சேரவில்லையா? இதைத்தான் கம்யூனிச இயக்கங்கள்கூட கேள்வியாக எழுப்பியிருக்கிறார்கள் பாராளுமன்றத்திலே. எனவே, சில தவறுகள் நடக்கிறதோ என்ற அச்சத்தை — இந்த டீசல் விலை உயர்வு ஏற்படுகிறபோதெல்லாம், மக்கள் மீது இந்த வரியை, இந்த விலைவாசியினுடைய உயர்வைச் சுமத்துவது, ஏதோ சூழ்ச்சியின் காரணமாக நடக்கின்றதோ, சில ஆதாயத்தின் காரணமாக நடக்கிறதோ என்ற அச்சத்தை — பாராளுமன்றத்திலேயே பல உறுப்பினர்கள் எழுப்பியிருக்கிறார்கள். எனவே, கட்டாயமாக மைய அரசுதான் விலையைக் குறைக்க வேண்டும். இலாபம் அவர்களுக்கு இருக்கிறது. எஸ்.ஆர்.பி. அவர்களுக்கும் தெளிவாகத் தெரியும். இருந்தபோதிலும், ஏழைகள் வயிற்றில் அடிக்கின்ற ஒரு நிலை கூடாது. டீசல் விலை, பெட்ரோல் விலை ஏறிவிட்டால், குறிப்பாக டீசல் விலை ஏறுகிறபோது, வாகனங்களினுடைய வாடகை உயர்ந்துவிடுகிறது. எல்லாப் பொருள்களினுடைய விலைவாசியும் ஏறிவிடுகிறது. இறுதியிலே பாதிக்கப்படுபவர்கள் பாமர மக்கள். அதைப்பற்றி மைய அரசு கவலைப்படவில்லை. Oil Refineries-களைப்பற்றி கவலைப்படுகிறீர்களே, ஏன்? தனியார் முதலாளிகளைப் பற்றி கவலைப்படுகிறீர்களே, ஏன்? இதைத்தான் மக்கள் கேள்வியாகக் கேட்கிறார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும் நஷ்டம் ஏற்பட்ட காரணத்தாலேதான், இன்னும் சொல்லப்போனால், உலகச் சந்தையிலே ஒன்றரை ஆண்டுக் காலத்திற்கு முன்னாலே, 28 டாலருக்கு விற்ற எண்ணெய், இன்று 68 டாலர், ஒரு barrel-உடைய விலை இன்று 68 டாலர். 40 டாலர் இந்த ஒன்றரை ஆண்டுக் காலத்திலே உயர்ந்திருக்கிறது. உயர்ந்ததற்குப் பின்னாலே, under recovery மட்டும் 20 ஆயிரம் கோடி ரூபாய் என்று நிதி அமைச்சரே அறிவித்திருக்கிறார்கள். அதை எப்படித் திரும்பப்பெற வேண்டும் என்பதற்காக, Bond-கள் நீங்கள் வெளியிட்டுக்கொள்ளலாம் என்று எண்ணெய்க் கம்பெனிகள் வைத்திருக்கின்றன. அதில் நஷ்டம் ஏற்படுகிறது. அதுமட்டுமல்ல, அதற்காக ஏற்கெனவே மத்திய சர்க்காரும் நிதி கொடுத்திருக்கிறது; 3,600 கோடி ரூபாய்க்கு மேல் நிதி கொடுத்திருக்கிறார்கள். மற்றவர்களும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். Bond-கள் வெளியிடலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். உலகச் சந்தையிலே எண்ணெயினுடைய விலை உயர்ந்திருக்கிறது. இது யாருமே மறுக்க முடியாத ஒன்று. India is one of the largest importers. இன்று நான்கு நாடுகள் அதிகமாக எண்ணெய் இறக்குமதி செய்கின்றன என்று சொன்னால், அமெரிக்கா, சீனா, இந்தியா, கொரியா ஆகியவை அந்த வரிசையிலே வருகின்றன.

இதிலே, என்ன கஷ்டம் என்று சொன்னால், இப்பொழுது உற்பத்தி பெருமளவிற்குக் குறைந்துபோய்விட்டது. பெருமளவிற்குக் குறைந்திருப்பதற்குக் காரணம், பல்வேறு காரணங்கள்.

*பிற்பகல் 12-40*

இன்னும் சொல்லப்போனால், சில பேர் வாங்கி வாங்கி அதை stock வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அமெரிக்கா போன்ற நாடுகள் வாங்கி வாங்கி stock வைத்துக் கொண்டிருக்கின்றன. அதனுடைய விளைவாக இரஷ்யாவிலே குறைந்துவிட்டது. காரணம், அந்த இரஷ்ய அதிபர் புதின் அங்கேயிருக்கிற எண்ணெய் கம்பெனி மேல் நடவடிக்கை எடுத்தார், ஒரு கம்பெனி மேலே. அவர் அரசியலிலே நுழைகிறார், ஏராளமாகக் கையிலே பணம் வைத்துக்கொண்டு, அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு அரசியலிலே நுழைகிறார்கள் என்ற காரணத்திற்காக Yukos Oil Company மேல் நடவடிக்கை எடுத்தார். அந்த Yukos Oil Company Chairman-ஐயும் பிடித்து உள்ளே போட்டுவிட்டார்கள். இன்றையதினம் அந்த Yukos Oil Company, எண்ணெய் தயாரிப்பதையே நிறுத்திவிட்டது. அதுதான் அங்கேயிருக்கிற மிகப் பெரிய கம்பெனி. மிக அதிகமாக எண்ணெய் எடுக்கிற கம்பெனி.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகச் சந்தையிலே ஒரு syndicate form செய்துகொண்டு கச்சா எண்ணெய் விலையை ஏற்றி வருகிறார்கள் என்றும் பாராளுமன்றத்திலே கூறப்பட்டது. அப்படியிருக்கின்றபோது என்ன காரணத்தால், என்ன மர்மமான காரணத்தால் - இந்தியாவிலே எண்ணெய் வளம் நிறைய இருக்கிறது என்றும் நாம் சொல்கிறோம், மைய அமைச்சரும் சொல்கிறார்கள் - எண்ணெய் வளம் நிறைய இருக்கின்ற இந்தியாவில், நமது எண்ணெய் வளத்தை வெளிக்கொணர்ந்து import-ஐக் குறைத்து நமது ஆதாயத்தை, நமது விலையைக் குறைத்து மக்களைக் காக்கின்ற பணியை விட்டுவிட்டு, syndicate form பண்ணிக்கொண்டிருக்கின்ற வெளிச் சந்தையிலிருந்தே எண்ணெயைத் தொடர்ந்து வாங்க வேண்டுமென்ற கொள்கையினுடைய மர்மம் என்ன, காரணம் என்ன? அப்படி இருக்கின்ற காரணத்தால்தான் - தற்போது நான்கு ஆண்டுக் காலமாக பெருமுயற்சியில் ஈடுபட்டிருந்தால், இந்தியாவில் இருக்கின்ற எண்ணெய் வளத்தை வெளிக்கொணரும் முயற்சியில் ஈடுபட்டிருந்தால், கோடிக்கணக்கான ரூபாயை சேமிக்கும்வகையில் import-ஐக் குறைத்து இருக்கலாம். இந்தியாவிற்கு foreign exchange நிறைய savings செய்திருக்கலாம். பெட்ரோல் விலை உயர்வை, டீசல் விலை உயர்வை தடுத்திருக்கலாம். ஆனால், மைய





ஆட்சியிலே இருக்கிறவர்களை — வெளிச் சந்தையிலிருந்து, இப்படிப்பட்ட வெளிநாடுகளிலிருந்து crude வருகிறபோது, ஏதேனும் ஆதாயம் இருக்கிறதா என்பதை மைய அரசை — நீங்கள் கேட்க வேண்டும். இதுமட்டுமல்லாமல், Excise duty, Customs duty, Petroleum cess ஆகியவற்றைக் குறைக்க வேண்டிய பொறுப்பு மைய அரசுக்கு இருக்கிறது. அதிலும் அவர்கள் தவறிவிடுகிறார்கள். எஸ்.ஆர்.பி. அவர்கள், மைய அரசு செய்கின்ற தவறுக்கு சப்பைக்கட்டுக் கட்டி இங்கே தமிழக மக்களை ஏமாற்றுகிற முயற்சியில் ஈடுபட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** உள்நோக்கம் கற்பிக்கக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. இன்னும் 10 மணித் துளிகளில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, கண்டிப்பாக முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னொரு தலைவர் பேசுவதற்கு இருக்கிறார்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, நான் சொல்வதைக் கேளுங்கள். முதலில் இரண்டு நிமிடங்கள் நான் பேசினேன். அதற்கு நான்கு நிமிடங்கள் பதில் சொன்னார். நான் ஒவ்வொரு முறை எழுந்து பேசும்போதும், இரண்டு மூன்று நிமிடங்கள் பேசினால், ஐந்து நிமிடங்கள், ஆறு நிமிடங்கள் எல்லோரும் பேசுகிறார்கள். கண்டிப்பாக என்னால் முடியாது. ஒப்புக்கொள்ள மாட்டேன். அது முறையல்ல. என்னால் முடியவே முடியாது. அது முறையும் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது துணை நிதிநிலை அறிக்கை. இன்னொரு தலைவர் வேறு பேச வேண்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தனியாக, குறுக்கீடுகள் இல்லாமல் பேசினால், 45 நிமிடங்கள் வேண்டுமென்று உங்களிடத்திலே கேட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னொரு பத்து மணித்துளிகள் எடுத்துக்கொள்ளுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இவ்வளவு விஷயத்தை என்னால் பேசவே முடியாது. இதுவரை எவ்வளவு நேரம் போய் இருக்கிறது? இதிலே வந்து உள்நோக்கம் வேறு கற்பிக்கிறார். உள்நோக்கம் கற்பிப்பது முறையல்ல. அதாவது நாம் இறக்குமதி செய்யாவிட்டால் என்ன நடக்குமென்றால் முன்பெல்லாம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்கள், எவ்வளவு நேரம் இன்னும் வேண்டும் உங்களுக்கு?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** குறைந்தபட்சம் அரை மணி நேரம் வேண்டும். குறைந்தபட்சம்—அரை மணி நேரமே கொஞ்சம் சிரமம். ஏனென்றால் நிறைய இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னொரு தலைவர் பேச வேண்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேசட்டும், பேசட்டும், அவர் பேசட்டும். நான் ஒன்றும் குறுக்கே நிற்கமாட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னொரு பத்து மணித்துளிகளில் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை. 10 மணித்துளிகளில் என்னால் முடியாதுங்க.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 10 மணித்துளிகள் எடுத்துக் கொள்ளுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, என்னால் முடியாது. என்னால் முடியாது. அதாவது உள்நோக்கம் கற்பிப்பது முறையல்ல. உள்நோக்கம் கற்பிக்கக் கூடாது. இறக்குமதி செய்யாவிட்டால் என்ன ஆகுமென்று சொன்னால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. முக்கியமான செய்திகளை மட்டும் சொல்லுங்கள். தலைப்புச் செய்திகளை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தலைப்புச் செய்தியைத்தான் சொல்கிறேன். பெட்ரோல், டீசலே கிடைக்காது. கடந்த கால அரசாங்கங்கள் இருந்தபோது எந்த ஊருக்கு, பெரிய ஊருக்குப் போவதாக இருந்தாலும் முன்னால் பார்த்தால் வரிசையாக கார், ஜீப், லாரி என்று நிற்கும். என்ன காரணமென்றால் பெட்ரோல் கிடையாது. அந்தத் தடங்கல் ஏற்படாமல் இருக்க வேண்டுமென்று சொன்னால் நாம் இறக்குமதிதான் செய்ய வேண்டும். 70 சதவீதம் நாம் இறக்குமதி...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நரிமணத்தில் crude இருக்கிறது. வேதாரண்யத்தில் இருக்கிறது. மைய அரசு, ONGC என்ன ஆய்வைச் செய்கிறது? ஏன் அந்த முயற்சியில் ஈடுபடவில்லை? மாறாக, எதற்காக



வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறீர்கள்? இதைத்தான் நான் கூறுகிறேன். இதில் உள்நோக்கமில்லை. உண்மையைக் கூறுகிறேன். நீங்கள் இதை உள்நோக்கமாகக் கருதுகிறீர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதாவது, அவர் முடியாது என்று சொல்வதை இவ்வளவு எங்கள் மேலே பழியைப் போட்டெல்லாம் சொல்கிறார். நீங்கள் கொஞ்சம் குறையுங்கள். மற்ற ஊர்களில் நம் ஊரைவிடக் குறைவாக இருக்கிறது. அதைப்போல குறைவாக இருப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று கேட்டுக்கொண்டு, அல்லல்பட்டு ஆற்றாத அளவுக்கு ஏழை சிந்தும் கண்ணீருக்கு இந்த அரசு காரணமாக இருக்கக் கூடாது என்று ஏழை மக்கள் விரும்புகிறார்கள். ஆனால், மக்களுக்காகவே மக்களால் நடத்தப்படும் மக்களுடைய அரசு என்ற இலக்கணத்தை மீறி இந்த அரசு இயங்கிக்கொண்டிருக்கிறது. 'Government of the Commercial taxes, by the Commercial taxes, for the Commercial taxes' என்று கூறும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

அரசுக்கு வருவாய் வர வேண்டும் என்பதற்காக கஞ்சா பயிரிடப்படுவதையோ, போதை பொருட்கள் உற்பத்தி செய்வதையோ அனுமதிப்பதில்லை. ஆயினும், மது வகைகளை அனுமதிக்கிறது. அதில் அளவுக்கு அதிகமான வருவாய் கிடைப்பதற்கும் திட்டமிடுகிறோம். அரசாங்கமே முன்னின்று அந்தத் தொழில் நடத்துவதையும், அதிலிருந்து கிடைக்கின்ற வருவாயை அதிகமாக நம்பியிருப்பதையும் பெருமையாகக் கருத முடியாது. பள்ளிக் குழந்தைகளுக்கு சைக்கிள்கள், பாடப் புத்தகங்கள்...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்கள் காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்தவர். ஏதோ காங்கிரஸ் ஆளுகிற மாநிலங்களில் எல்லாம் மதுவிலக்கு நடைமுறைக்கு வந்துவிட்டது போலவும், Indian Made Foreign Liquor அங்கு இல்லாததைப் போலவும், மகாத்மாவைப் போல் இங்கு ஆலோசனை கூறுவது தவறு. மாநிலத்திற்கு மைய அரசு முறையாகத் தர வேண்டிய நிதியை நீங்கள் நிதியைத் தரவில்லை. அதற்கு வாதிடுவதும் இல்லை. ஆனால், I.M.F.L. - ஒதுக்குவதில்லை. Indian Made Foreign Liquor இங்கு இருக்க வேண்டாம் என்று கூறுவதைவிட, மைய அரசே ஒரு சட்டத்தைக் கொண்டு வரலாமே? இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இருக்கக் கூடாது என்று கொண்டு வந்துவிடலாமல்லவா?

*பிற்பகல் 12-45*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் சொல்வது அரசாங்கமே சாராயத்தை விற்க வேண்டாம். அதுதான் நான் சொல்வது. பள்ளி... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஆளுகின்ற டெல்லியிலே வீடு வீடாகச் சென்று door delivery செய்கின்ற அளவிற்கு இன்றைக்கு பிராந்தி, விஸ்கி விற்றுக்கொண்டு இருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பள்ளிக் குழந்தைகளுக்கு சைக்கிள்களும், பாடப் புத்தகங்களையும் வழங்கிவிட்டு, அவர்களுடைய பெற்றோரிடமிருந்து விற்பனை வரியாகவும், ஆயத் தீர்வையாகவும், அளவுக்கு அதிகமான பணத்தைச் சுரண்டுவதை எந்தவகையிலும் நியாயப்படுத்த முடியாது. 'இரை போடும் மனிதருக்கே இரையாகும் வெள்ளாடுகளைப்போல' ஏழை மக்கள் இரையாகிக்கொண்டு இருக்கிறார்கள். மற்ற எந்த மாநில அரசும் செய்யாத வரி வசூல்களை இந்த அரசு செய்து வருகிறது. சைக்கிள்கள் வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு வருவது நல்லது தான்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் பாராட்டுகிறார்கள், நாடே பாராட்டுகிறது. புது வரி போடாத அரசு புரட்சித் தலைவி அரசு என்று 7 கோடி தமிழக மக்கள் பாராட்டும்போது, (மேசையைத் தட்டும் ஒலி) எஸ்.ஆர்.பி. அவர்கள் இப்படிப் பேசுவது அவை முறைக்கு அழகல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள். (சிரிப்பு) (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசும்போது ஒரு ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்த பிறகு, அறிவிப்புகள் எதுவும் வெளியிடக்கூடாது என்றும், அவ்வாறு வெளியிடப்படும் அறிவிப்புகளை எதிர்பாராச் செலவினம் என்று கூறுவது தவறு என்றும் குறிப்பிட்டார். நான் இங்கு ஒன்று கேட்க விரும்புகிறேன். மைய அரசு அண்மையில், அதாவது, நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடரில், அதாவது, நடப்பு ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்தபிறகு, ஊரக வேலைவாய்ப்பு உறுதித்



திட்டம் Rural Employment Guarantee Scheme என்ற புதிய திட்டத்தை அறிவிக்கவில்லையா? இந்தத் திட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம். எனினும், நான் இப்போது திரு. எஸ்.ஆர்.பி. அவர்களிடம் கேட்க விரும்புவது, அவருடைய கோட்பாட்டின்படி மத்திய காங்கிரஸ் அரசு, இந்த அறிவிப்பை வெளியிட்டு இருக்கக்கூடாதா? அது தவறா? 2005-2006 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் இதற்கென எந்த ஒதுக்கீடும் செய்யப்படவில்லையே? மக்களின் தேவைக்கேற்ப திட்டங்கள் அறிவிப்பதற்கான அதிகாரம் அந்த அந்த அரசுகளுக்கு உண்டு. அடுத்த நிதிநிலை அறிக்கை வரை மக்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய திட்டங்களைத் தள்ளிப்போடுவது முறையாகாது. அதனால்தான் அரசின் நிதித் திறனுக்கு ஏற்ற அளவில் புதிய திட்டங்கள் அறிவிப்பதில் எந்தத் தடையும் இல்லை. இதைத்தான் நாங்கள் செய்து இருக்கிறோம். அத்துடன் நாங்கள் நிறைவேற்றியுள்ள Tamil Nadu Fiscal Responsibility Act 2003-ன்படி—அதாவது தமிழ்நாடு நிதிநிலை நிர்வாகத்தில் பொறுப்புடைமை சட்டத்தின்படி, அறிக்கை இந்த அவையில் தாக்கல் செய்து உள்ளோம். இதன்படி புதிய திட்டங்களைச் செயல்படுத்த, நிதித் திறன் உள்ளது என்பது தெளிவாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நிதித் திறன் உள்ளது என்பது உண்மைதான். ஆனால், இப்போதுதான் நீங்கள் அதற்காக சட்டமன்றத்தின் முன்னாலே கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். அதைத்தான் நான் சொல்கிறேன். சைக்கிள்கள் வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு வருவது நல்லதுதான். ஆனால், அந்த சைக்கிள்கள் தயாரிக்கும் வாய்ப்பு இங்கு இருக்கும் தொழிலாளர்களுக்கும், தொழில் முதலீட்டாளர்களுக்கும் வழங்கப்பட்டு இருந்தால் வேலைவாய்ப்பும், வருவாயும் கிடைத்து இருக்கும். T.I. Cycles போன்ற சைக்கிள் உற்பத்தியில் முன்னணியில் இருந்த நிறுவனங்களே உற்பத்தியைக் குறைத்து, தொழிலாளர்களின் எண்ணிக்கையையும் வெகுவாகக் குறைத்துவிட்டது. வெளியில் இருந்து குறைந்த விலைக்கு வாங்கப்படும் உதிரி பாகங்களைக்கொண்டு சைக்கிள்களை assemble செய்வதையே தொழிலாகக் கொண்டு இயங்கி வருகிறது. இத்தகைய நிறுவனங்களிடம் மொத்தமாக order கொடுத்து வாங்கி இருந்தால், குறைந்த விலையில், தரமான சைக்கிள்கள் கிடைத்து இருக்கும். ஆனால், எங்கு இருந்து யார். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு, வழங்கப்பட்ட மிதிவண்டிகள் அனைத்துமே, தமிழகத்திலே இருக்கக்கூடிய T.I. Cycles-னுடைய தொழிற்சாலை மூலமாகத்தான் வாங்கப்பட்டவை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதைத்தான் நான் கேட்கிறேன். எங்கிருந்து யார் மூலமாக எத்தகைய சைக்கிள், என்ன விலைக்கு வாங்கப்பட்டது என்பது போன்ற விவரங்கள் இந்த அவையின்முன் வைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. *(குறுக்கீடுகள்)* வைத்திருந்தால் நிரம்ப மகிழ்ச்சி. ஏனென்றால், முன்னர் இலவச வேட்டி சேலை வழங்கியபோது, நடைபெற்ற அதே தவறுகள் நடைபெறக்கூடாது என்ற நல்லெண்ணத்திலே நான் சொல்கிறேன். ஏற்கெனவே செலவிடப்பட்ட தொகை பற்றியும் விவரங்களைச் சேர்த்துக் கூறியிருந்தால் வசதியாக இருந்து இருக்கும். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச வேட்டி சேலைத் திட்டத்தில் நெசவுத் தொழிலிலே இருக்கின்ற ஏழைகளுக்கு வாய்ப்புத் தந்தவர் புரட்சித் தலைவி அவர்கள். கடந்தகால ஆட்சியிலே பாதிக்கப்பட்டிருந்த நெசவாளர்கள் எல்லாம் இப்போது பாராட்டுகிறார்கள். எங்கள் வயிற்றில் அம்மா பாலை வார்த்துள்ளார்கள் என்று கூறுகிற அளவுக்கு, உன்னதத் திட்டமாக அந்த இலவச வேட்டி சேலைத் திட்டம் இருக்கின்றபோது, அந்த ஏழைகளின் திட்டத்தையும் கொச்சைப்படுத்த எப்படி உங்களுக்கு மனது வருகிறதோ தெரியவில்லை.

*பிற்பகல் 12-50*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நீங்களும் கொஞ்சம் பொறுமையாகக் கேட்கலாம் என்னவென்று. 1991-96-லே இலவச வேட்டி சேலை வெளியே வாங்கியதனால் இவ்வளவு பிரச்சினை வந்தது. அதைத்தான் நான் சொல்கிறேன். நீங்கள் எதையோ மாற்றிச் சொல்லாதீர்கள். அதேபோல, 80 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறீர்கள். அதை முழுமையாக என்ன என்று சொல்லுங்கள். எவ்வளவு செலவானது, யாரிடம் வாங்கினீர்கள் என்று சொல்லுங்கள். கரும்பு ஆலைகளுக்குக் கரும்பை வழங்கும் விவசாயிகளுக்கு ஆதாயம்... *(குறுக்கீடு)*



***மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான கருத்தை இங்கே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். 1991-96-லும்கூட தமிழகத்திலே கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கக்கூடிய நெசவாளர்கள் மூலமாகத்தான் உற்பத்தி செய்யப்பட்டு, விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதனால்தான் வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. *(குறுக்கீடு)* கரும்பு ஆலைகளுக்குக் கரும்பை வழங்கும் விவசாயிகளுக்கு ஆதாயம் தரத்தக்க விலை கிடைக்க . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், 10 மணித்துளிகளுக்குள்ளே தயவுசெய்து உரையை முடித்துவிடுங்கள். இல்லாவிட்டால்... *(குறுக்கீடு)*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் அருள்கூர்ந்து கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் சொன்னதையெல்லாம் நான் ஏற்றுக்கொண்டேன். தயவுசெய்து நீங்கள் தடை விதிக்காதீர்கள். வேண்டாம், தடையே வேண்டாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த தலைவர் பேச வேண்டும். *(குறுக்கீடு)* நாளை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்க வேண்டும். ஏற்கெனவே சட்டமன்றக் கூட்டத் தொடரை ஒரு நாள் விரிவுபடுத்தி இருக்கிறோம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை. அப்படியென்றால் நீங்கள் குறுக்கிடாமல் இருக்கச் சொல்லுங்கள். குறுக்கிடாமல் இருந்தால்கூட என்னால் 10 நிமிடங்களில் உரையை முடிக்க முடியாது. என்னால் முடியாது. பேசவே விடவில்லை. எப்படிப் பேச முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணிக்குள் தயவுசெய்து நீங்கள் உரையை முடியுங்கள். இல்லாவிட்டால் அடுத்தவரை அழைப்பது தவிர, வேறு வழியில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை. வேண்டாம், வேண்டாம். கரும்பு ஆலைகளுக்கு கரும்பை வழங்கக்கூடிய விவசாயிகளுக்கு ஆதாயம் தரத்தக்க விலை கிடைக்கச் செய்வதற்காகவே டன் ஒன்றுக்கு 1,014 ரூபாய் என்று நிர்ணயம் செய்திருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** நானும் அதைத்தான் சொல்கிறேன். All are equal before law. அவருக்கென்ன தனிச் சலுகை? நான் கேட்கிறேன், அவருக்கென்ன தனிச் சலுகை?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், ஒரு மணிக்கு உரையை முடித்துவிடுங்கள். ஒரு மணிக்கு முடித்தால்தான்— அவர் முக்கால் மணி நேரமாவது பேச வேண்டாமா?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** வேண்டாம் என்றால், வேண்டாம் என்று சொல்லுங்கள் நான் போய்விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர்களுடைய உரை இன்று முடிய வேண்டும். நாளை நிதி அமைச்சருடைய பதிலுரை இருக்கிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதை முடித்துவிடலாம், முடித்துவிடலாம். நேற்று ஒரு விளக்கம் சொன்னார்கள், முதலமைச்சர் அவர்கள். ஏற்கெனவே பல தனியார் ஆலைகள் இதைவிட அதிகமான விலை கொடுத்துக்கொண்டிருக்கின்றன. உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், கோவை மாவட்டத்தில் இருக்கிற ஒரு கூட்டுறவு ஆலை, அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை, அதை சில நாட்கள் இயங்கவிட்டு இப்போது மூடிவிட்டார்கள். காரணம் கரும்பு வரவில்லை என்று சொன்னார்கள். ஏன் கரும்பு வரவில்லை என்று கேட்டேன். வெளியே அதிக விலை கொடுக்கிறார்கள், எனவே, கரும்பெல்லாம் அங்கே சென்றுவிடுகிறது. சர்க்கரை ஆலை கொடுத்த விலை 850 ரூபாய். அதில் வெட்டுக்கூலி மற்றும் வாடகை சேர்த்து 260 ரூபாய் போய்விடுகிறது. ஆகவே, விவசாயிக்கு 590 ரூபாய் கிடைக்கிறது. அந்த 590 ரூபாய்க்கு வெளியே என்ன விலை கிடைக்கிறது என்றால்— 1,100, 1,050 என்று இரண்டு ஆலைகள் அங்கே வாங்குகிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கரும்பு விலை உயர்வை மாண்புமிகு அம்மா அவர்கள் உயர்த்துகிறபோது இதைப் பற்றிய தகவல்களை அதிகாரிகள் சேகரித்தார்கள். தனியார் துறையைப் பொறுத்தவரைக்கும், அவர்களும் வெட்டுக் கூலி, அதேபோல வாகனச் செலவு எல்லாம் உள்ளிட்டுத்தான் 1,000, 1,100 ரூபாய் கொடுத்தார்களேயொழிய, 1,100 ரூபாய் வெட்டுக் கூலி இல்லாமல், வாகனச் செலவு இல்லாமல் எந்த இடத்திலும் கொடுத்த தகவல்—Sugar mills-ஐக் கேட்டார்கள்—அப்படிப்பட்ட தகவலே இல்லை. தவறான தகவலை அவைக்கு நீங்கள் தர வேண்டாம்.



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பண்ணாரி அம்மன் சுகர்ஸ் 1,100 ரூபாய்க்கு வாங்கிக் கொண்டிருக்கிறது. அதேபோல சக்தி சுகர்ஸ்...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை. நான் சொல்கிறேன். நானும் உண்மையைச் சொல்கிறேன். பண்ணாரி சுகர்ஸினுடைய எம்.டி. வரவழைக்கப்பட்டார். சக்தி சுகர்ஸினுடைய எம்.டி. அவர்கள் வினவப்பட்டார் அதிகாரிகளால். இருவரும் சொன்னது 1,000 ரூபாய், 1,050 ரூபாய், 950 ரூபாய் தருகிறோம் வெட்டுக் கூலியைச் சேர்த்து, வாகனச் செலவைச் சேர்த்து என்று கூறினார்கள். இதுதான் உண்மையான தகவல். இல்லாத தகவலை எஸ்.ஆர்.பி. அவர்கள் அவைக்குக் கூறக்கூடாது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இருக்கிற தகவலைத்தான் சொல்கிறேன். விவசாயிகள் சொன்ன தகவலைத்தான் சொல்கிறேன். நேற்றையதினம்கூட விவசாயிகளிடத்திலே நான் பேசிவிட்டுத்தான் பேசுகிறேன். அதுமட்டுமல்ல, தனியார் வெளியே கரும்பை ஆட்டுவதற்காக... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொழில் துறை அமைச்சர் விளக்கம் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு விவசாயிகளுடைய வெகுநாள் கோரிக்கை டன் ஒன்றுக்கு 1,000 ரூபாய் வேண்டுமென்பது. கடந்த கால ஆட்சியில்கூட அன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தவர்கள் ஜி.கே. மணி போன்றவர்கள் எல்லோரும் விவசாயிகளுக்கு ஆயிரம் ரூபாய் வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால், 1996-ல் பதவி ஏற்ற திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் 2000 ஆம் ஆண்டு வரையிலும் அதற்கான ஒரு பதிலையும் சொல்லவில்லை. 6-4-2000 தேதியன்று— நான் அன்றைக்குக்கூட குறிப்பிட்டேன்— முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி அவர்கள் சொன்ன வார்த்தை இது. இதே சட்டமன்றத்தில் ஆள விடுங்கள்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அமைச்சர் விளக்கம் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** ஆள விடுங்கள், ஆளையும் விடுங்கள் என்று சொன்னார் அன்றைய முதல்வர் அவர்கள். ஆனால், அன்றைக்கு மத்திய அரசு அறிவித்த SMP 595 ரூபாயும், மாநில அரசின் பரிந்துரை விலை 195 ரூபாயும் சேர்த்து மொத்தம் 174 கோடி ரூபாயை,

கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுக்காமல் சென்றவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள். ஆக, எஸ்.ஆர்.பி. அவர்கள் அதையெல்லாம் கணக்கிலே விட்டுவிட்டு, விவசாயிகளுடைய கோரிக்கையை தாயுள்ளத்தோடு ஏற்றுக்கொண்டு, மற்ற மாநிலங்களை விடவும் இப்போது கூடுலாக, 1,014 ரூபாய் கொடுக்கிறார்கள். பிழிதிறன் ஒவ்வொரு 0.1 சதவீதத்திற்கும் 8 ரூபாய் 80 காசு சேர்த்து ஒவ்வொரு விவசாயிக்கும் 1,150 ரூபாய்வரை விலை அதிகமாகக் கிடைக்கின்ற அளவுக்குச் செய்திருப்பதைப் பாராட்டுவதை விட்டுவிட்டு, தனியார்கள் கொடுக்கிறார்கள், அவர்கள் கொடுக்கிறார்கள் என்று வக்கணைப் பேசுவது, இவர்கள் ஒரு மூத்த உறுப்பினர் என்கின்ற முறையில் இவர்களுக்கு அழகல்ல என்பதைப் பேசி அமர்கிறேன்.

பிற்பகல் 12-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் இன்னும் 5 மணித்துளிகளிலே உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை. நான் பேசிக்கொண்டேயிருக்கிறேன். பார்க்கலாம். இருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அது முடியாது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இதேபோன்று, முன்பே எதிர்பார்த்து இருக்கவேண்டிய மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் சாலைகளை வலுப்படுத்தும் வகையில் ரூபாய் 400.80 கோடியை அனுமதித்து அதில் ரூபாய் 75 கோடியை மானியமாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது.

அதேபோன்று, மக்களுக்கான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதை உறுதிப்படுத்துவதற்கென்று ரூபாய் 250 கோடியை ஒதுக்கியிருக்கிறது. அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைகள் என்கிற பெயரால் இன்றையதினம் மாநகராட்சிப் பகுதிகளில், நகராட்சிப் பகுதிகளில் நிறைய வீட்டுமனைகள் இருக்கின்றன. அங்கே எந்தவிதமான அடிப்படை வசதிகளும் செய்து தருவதில்லை. ஏன் என்றால், அதற்குத் தடை இருக்கிறது என்று சொல்கிறார்கள். யாரும் செய்யவும் முடிவதில்லை. அவர்களைப் பொறுத்தவரையில், வீட்டு வரி கட்டுகிறார்கள், தண்ணீர் வரி கட்டுகிறார்கள். ஆனால், அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைகளுக்கு அடிப்படை வசதிகள் செய்யாததற்குக் காரணம் என்னவென்றால், அது அந்த promoter



அதற்குண்டான வளர்ச்சிக் கட்டணத்தைக் கட்டாமல் போய்விட்டார். அதனால் இவர்களைப் பழி வாங்குவது முறையல்ல. அடிப்படை வசதிகளைக் கண்டிப்பாகச் செய்து கொடுக்க வேண்டும். குறைந்தபட்சம் குடிதண்ணீர், அதேபோல, சாலை வசதி, சாலையிலே தெருவோர விளக்குகள், சாக்கடை வசதியாவது செய்து கொடுக்க வேண்டும், அதற்கு அரசாங்கம் ஆணையிட வேண்டும். நாங்கள் ஏற்கெனவே முதலமைச்சர் அவர்களிடத்திலே நேரிலே சந்தித்துப் பேசியிருக்கிறோம். செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, eviction பிரச்சினையைப் பற்றி காலையிலேயே இங்கே ஹேமசந்திரன் அவர்கள்கூட குறிப்பிட்டார்கள். என்னுடைய தொகுதியிலேயும் சங்கனூர் பள்ளம் பகுதியிலே இன்றையதினம் eviction நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கவுண்டம்பாளையத்திலே சங்கனூர் பள்ளம் என்பது மேலேயிருந்து வந்துகொண்டிருக்கிறது. கணவாயைத் தாண்டி, கோவை மாநகரத்திற்குள்ளே நுழைந்து, சங்கனூர், இரத்தினபுரி மற்றும் கோவை கிழக்குப் பகுதி, சிங்காநல்லூர் பகுதி என்று பல பகுதிகளுக்கும் சென்றுகொண்டிருக்கிறது. அதிலே குறிப்பாக, 67, 68, 69-வது டிவிஷன்களில் இப்போது eviction notice கொடுத்திருக்கிறார்கள். முதலில் 3 நாள் நோட்டீஸ்தான் கொடுத்தார்கள். இப்போது சிலபேருக்கு 15 நாள் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். பல ஆயிரம் குடும்பங்கள் அங்கே இருக்கின்றன. பல ஆண்டுகாலமாக அங்கே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அதிலே என்ன வேடிக்கை என்றால், முறையான அனுமதி பெற்று அங்கே நான்கு மாடிக் கட்டடம் ஒன்று இருக்கிறது. நான் என்ன சொல்கிறேன் என்று சொன்னால், உள்ளபடியே நீர் நிலைக்கு ஆபத்து ஏற்படுவதுமாதிரி, ஏதாவது தவறு ஏற்படுவது மாதிரி இருந்தால், அவர்களை நீங்கள் வெளியேற்றினாலும்கூட, அவர்களுக்கு மாற்று இடம் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மற்றவர்களை விட்டுவிடலாம். அதனாலே எந்தத் தொல்லையும் இல்லை. தூரமாக இருந்தாலும்கூட, இருக்கிறார்கள் என்று சொன்னால், அது நீர் போக்குக்கு இடையூறு வராது என்று சொன்னால், அவர்களை விட்டுவிடலாம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், he should file an impleading petition in the High Court. You have to represent this matter to the High Court. அவைக்கு வந்து, ஏதோ அரசுதான் இந்த

நடவடிக்கையை எடுப்பதுபோல நீங்கள் ஒரு எண்ணத்தை உருவாக்கக் கூடாது. உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின் அடிப்படையில், இந்த நடவடிக்கையை அதிகாரிகள் எடுக்கிறார்கள். இல்லை என்றால் contempt ஆகிவிடும் என்பதும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தீர்ப்புக்கு எதிராக எதுவும் சொல்லவில்லை. ஆனால், அவர்களும் மனிதர்கள் என்பதை நாம் பார்க்க வேண்டும். 30 ஆண்டுக் காலமாக, 40 ஆண்டுக் காலமாக வாழ்கிற அவர்களை, வெளியேற்றியே தீர வேண்டுமென்ற நிலைமை இருக்குமேயானால், மாற்று இடம் அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுகூட தவறா? அதைத்தான் நான் கேட்கிறேன்.

அதேபோல, துடியலூர் கிராமத்தில் — பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியம், துடியலூர் கிராமத்தில் — சுப்பிரமணியம்பாளையம் என்கிற ஓர் ஊர் இருக்கிறது. பழைய ஊர். 200 ஆண்டுக் காலமாக, 300 ஆண்டுக் காலமாக எங்கள் மூதாதையர்கள் எல்லாம், அங்கேதான் நாங்கள் குடியிருந்து வருகிறோம் என்று சொல்கிறார்கள். அங்கே விவசாயிகள் இருக்கிறார்கள், நெசவாளர்கள் இருக்கிறார்கள், தொழிலாளர்கள் இருக்கிறார்கள், அதேபோல தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள், பலரும் அங்கே இருக்கிறார்கள். அந்தக் கிராமத்திற்கு நேரடியாகச் சென்று நீங்கள் ஆவணங்கள் என்று கேட்டால் - 1896 ஆம் ஆண்டு அங்கே செய்யப்பட்ட கிரயப் பத்திரம் ஒன்றை என்னிடத்திலே இன்று கொடுத்திருக்கிறார்கள். 1907 ஆம் ஆண்டு அரசு தயாரித்த வரைபடம். அந்த அரசு தயாரித்த வரைபடம், மீண்டும் அதே வரைபடம், 1957-லே மீண்டும் அது தயாரிக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் அதையே print போட்டிருக்கிறார்கள். அதிலே பார்த்தால், 529, 530, 531, 532 என்கிற அந்தக் காலை எண்கள் எல்லாம், ஏற்கெனவே அவையெல்லாம் மக்கள் வாழ்வதாகக் காட்டியிருக்கிறார்கள். அங்கே வந்து ஓட்டு வீடுகள் இருந்திருக்கின்றன. அந்தக் காலத்திலேயே அங்கே ஓட்டு வீடுகள் இருந்திருக்கின்றன. அவற்றுக்கெல்லாம், அதற்குப் பின்னால் 1927-லே ஒரு கிரயப் பத்திரம் கொடுத்திருக்கிறார்கள். 1974-லே தானக் கிரயம் ஒன்றைக் கொடுத்திருக்கிறார்கள்; Settlement கிரயம் ஒன்றைக் கொடுத்திருக்கிறார்கள். 1997-லே மீண்டும் செய்யப்பட்ட கிரயம் ஒன்றை என்னிடம் கொண்டுவந்து கொடுத்திருக்கிறார்கள். 1999 ஆம் ஆண்டுதான் முதல்முறையாக அங்கே இருக்கிற ரெஜிஸ்திரார் ஆபீஸ் இனிமேல் இங்கே இந்தக் கிரயத்தை, நாங்கள் இந்தக் கிரயம் எதையும் பதிவு செய்ய மாட்டோம். அதேபோல, பாகப் பிரிவினையை நாங்கள்



பதிவு செய்யமாட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது முறை ஆகாது. ஏன் என்று சொன்னால், பல ஆண்டுகளாகத் தவறு நடைபெற்றிருக்கிறது. என்ன தவறு என்றால், வண்டிப் பாதையும், மந்தையும் என்று இப்போது சொல்கிறார்கள். வண்டிப் பாதையாக இருந்தால், வண்டிப் பாதை என்ன? 7 ஏக்கராவும், 6 ஏக்கரா 60 சென்டும் வண்டிப் பாதையாக இருக்க நியாயமே கிடையாது. 7 ஏக்கராவும் வண்டிப் பாதையாக இருக்க நியாயமே கிடையாது. எல்லாம் பழைய வீடுகள். பார்த்தாலே உங்களுக்குத் தெரியும். 200 ஆண்டுகள், 250 ஆண்டுகளாகவே அவர்கள் வாழ்ந்தவர்கள் என்று சொல்கிறார்கள். 109 ஆண்டுகளாக அங்கே வாழ்ந்த காலம், முழுமையான ஆதாரம் record பூர்வமான ஆதாரம் இருக்கிறது. எனவே, அதை மாற்றி மீண்டும்...

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் கொஞ்சம் முடித்துவிடுங்கள். பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** முடித்துவிடுகிறேன். இவ்வளவு வேகமாகப் பேசுகிறேனே? முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, வேறு வழியில்லை. (குறுக்கீடு) கடைசி வாக்கியத்தைச் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், தாங்கள் என்னிடத்திலே 40 மணித்துளிகள்தான் கேட்டீர்கள். (குறுக்கீடு) 47 மணித்துளிகளாகியிருக்கின்றன. (குறுக்கீடு) நான் அவையை நடத்த முடியாது. தயவுசெய்து ஒத்துழையுங்கள். இத்தோடு பேச்சை முடியுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் அவ்வளவு பேசவில்லை. (குறுக்கீடு) கொஞ்சம் வேகமாக முடித்துவிடுகிறேன். கொஞ்சம் வேகமாக முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) கொஞ்சம் வேகமாகவே முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, கடைசி வாக்கியத்தைச் சொல்லி முடியுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சொல்லிக் கொண்டுதான் வருகிறேன். ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டப் பணி முன்கூட்டியே எதிர்பார்த்திருக்க வேண்டிய பணிதான். ஆனால், அது எதிர்பாராத பணி என்று கூறி ரூபாய் 4 கோடி கூடுதலாக அனுமதித்திருப்பது ஒரு புதிராகத்தான் இருக்கிறது. தேங்காய்

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2005 செப்டம்பர் 28

கொப்பரைக் கொள்முதலைப் பொறுத்தவரையில், 35.70 ரூபாய்க்கு நாங்கள் வாங்குகிறோம் என்று சொன்னார்கள். இன்றுவரை வாங்கப்படவில்லை. அதுமட்டுமல்ல, ஏதோ ஓரிடத்திலே பட்டுக்கோட்டையிலே மட்டும் 40 டன் வாங்கியிருக்கிறார்களே தவிர, எங்கேயும் அது வாங்கப்படவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொப்பரைத் தேங்காய் கொள்முதலைப் பொறுத்தவரையிலே, ஒவ்வொரு விவசாயிக்கும் நாங்கள் தனித் தனியாக நீங்கள் கொப்பரையைக் கொண்டுவந்தால், நாங்கள் கொள்முதல் செய்துகொள்வோம் என்கின்ற கடிதத்தையும் எழுதியிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையிலே அறிக்கையாகவும் கொப்பரைத் தேங்காயைக் கொள்முதல் செய்வதற்கு இந்த இந்த இடங்களிலே கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன என்றும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறோம். தொடர்ந்து பத்திரிகையிலே விளம்பரமாக "தென்னை விவசாயிகளுக்கு ஒரு நற்செய்தி" ஒரு கிலோ கொப்பரைத் தேங்காய் ரூபாய் 35.70-க்கு கொள்முதல் செய்யப்படுகிறது என்று பத்திரிகையிலும், தினசரி கால் பக்க அளவிலே விளம்பரம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, வேண்டுமென்றே எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் தவறான குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டாம் என்று கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி., வாக்கியத்தை முடியுங்கள். (குறுக்கீடு) நிறைவு செய்யுங்கள். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** முடிக்கிறேன், என்ன இது? (குறுக்கீடு) அவர் எழுந்துகொண்டு பேசுகிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அடுத்த தலைவர் பேச வேண்டும். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதாவது, வாங்க வேண்டும். வாங்கவில்லை. மீண்டும் விலை 28 ரூபாய்க்கு வந்துவிட்டது. 28 ரூபாய், 29 ரூபாய்க்குக் கொப்பரையை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். நான் பலரிடம் — இங்கே இருக்கிற M.L.A.-க்கள் பலரும் விவசாயிகள்தான், அவர்களிடம் கேட்டேன், ஒருவரும் வாங்கவில்லை என்று சொல்கிறார்கள். வாங்கவில்லை. ஆகவே, உடனடியாக வாங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, காவிரி கடைமடையைப் பொறுத்தவரையிலே, பட்டுக்கோட்டை, பேராவூரணி பகுதிகளுக்குத் தண்ணீர் செல்வதில்லை என்று



2005 செப்டம்பர் 28] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

சொல்கிறார்கள். காரணம், உள்முறை வைத்து அவர்கள் அங்கே தண்ணீர் விட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இதெல்லாம் பெரிய பிரச்சினையா? (குறுக்கீடு) இல்லை. (குறுக்கீடு) நிறைவு வாக்கியத்தை முடியுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதுதான் பெரிய பிரச்சினை, (குறுக்கீடு) முடிந்தது. வடகாடு வாய்க்கால், இராசமடம் வாய்க்கால், புதுப்பட்டினம் வாய்க்கால், சேதுபாவாசத்திரம் வாய்க்கால், ஆனைவயல் வாய்க்கால், ஆனந்தவள்ளி வாய்க்கால், கல்யாணஓடை வாய்க்கால் என்ற வாய்க்கால்கள் உள்முறை வைத்திருப்பதால், கடைமடைக்குத் தண்ணீரே வரவில்லை என்று என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள்.

அதேபோல, கோவையைப் பொறுத்தவரையிலே, வார்ப்பட தொழிற்சாலைகள், அந்த Foundry Industry-ஐப் பொறுத்தவரையிலே, எந்த வகையிலாவது தண்ணீரிலே மாசு ஏற்படுகிறது. ஆனால், அரசாணை என்ன சொல்கிறது என்று சொன்னால், 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு வார்ப்பட தொழிற்சாலைகள் இருக்கக் கூடாது என்று சொன்னால், கோயம்புத்தூரில் இருக்கிற எல்லாத் தொழிற்சாலைகளையும் மூடவேண்டிய நிலை. புதிய தொழிற்சாலைகளை உருவாக்காத நிலை உருவாகிவிடும். எனவே, அதை மாற்றி நீங்கள் அனைவருக்கும் கிடைப்பதற்கு — அந்த G.O.-வை மாற்ற வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இத்துடன் எஸ்.ஆர்.பி. அவர்களுடைய பேச்சு நிறைவு பெற்றது. (குறுக்கீடு) அண்ணன் ஆற்காடு வீராசாமி அவர்கள். (குறுக்கீடு) இல்லை முடித்துவிடுங்கள். அவ்வளவுதான். (குறுக்கீடு) முடித்துவிடுங்கள். நீங்கள் பேசுங்கள் அண்ணே. (குறுக்கீடு) டாக்டர் ஜெயக்குமார், ஏதோ சொல்ல வேண்டுமென்று சொன்னார். உங்கள் கட்சி நண்பர் ஏதோ பேச வேண்டுமென்கிறார். (குறுக்கீடு) இல்லை, ஜெயக்குமார், (குறுக்கீடு) எழுந்திருங்கள். முடித்துவிட்டார். (குறுக்கீடு) இல்லை, கடைசி வாக்கியத்தைச் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) 'இவ்வளவு நேரம் பேச அனுமதித்த பேரவைத் தலைவருக்கு நன்றி'; அப்படியென்று சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) திரு. ஆற்காடு வீராசாமி.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதைக் கண்டிப்பாகச் சொல்கிறேன். காவல் துறையின் செயல்பாடுகளைப் பொறுத்தவரையில், கவலையளிக்கும் போக்கு...

[2005 செப்டம்பர் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நேரமில்லை. நேரமில்லை. (குறுக்கீடு) திரு. ஆற்காடு வீராசாமி. (குறுக்கீடு) எப்படி 1-30 மணிக்கு முடிக்க முடியும்? (குறுக்கீடு) அவருக்கு ஒரு 1/2 மணி நேரமாவது வேண்டாமா? (குறுக்கீடு) இல்லை, இல்லை. திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுடைய பேச்சு நிறைவுபெற்றது. (குறுக்கீடு) திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள். (குறுக்கீடு) அண்ணே, எழுந்திருங்கள். (குறுக்கீடு) இல்லை, இப்பொழுது நேரமில்லை. அவர் கேட்டது 40 நிமிடங்கள்தான் கேட்டார். 47 நிமிடங்கள் ஆகியிருக்கின்றது. அவையை எப்படி நடத்துவது? நாளைக்கு நிதி அமைச்சருடைய பதிலுரை. (குறுக்கீடு) இல்லை, முடித்துவிட்டார். நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள். அவரைப் பார்த்துப் பேசாதீர்கள், என்னைப் பார்த்துப் பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முறையாகக் கேட்டதற்கு எங்களுக்கு வேண்டிய அளவிற்கு நேரம் கொடுக்கிறேன், ஒதுக்குகிறேன் என்று சொன்னீர்கள். நான் அதை ஒப்புக்கொண்டேன். வேண்டிய அளவிற்கு எனக்குக் கொடுத்த நேரம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 40 மணித்துளிகள்தான் தாங்கள் கேட்டீர்கள். (குறுக்கீடு) 47 மணித்துளிகள் ஆகியிருக்கின்றன. (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** 40 மணித்துளிகள் என்றால் குறுக்கீடு 20, 25 நிமிடங்கள் எடுத்துக்கொண்டார்கள். (குறுக்கீடு) அது சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது குறுக்கீடுகள். நான் என்ன செய்யமுடியும்? குறுக்கீடுகளுக்கு நான் பொறுப்பாளி அல்ல. உங்களுடைய பேச்சுகளுக்குத்தான் பதில் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) இல்லை, முடியுங்கள். திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நான் இப்போது திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்களைப் பேச அழைக்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை. வாக்கியத்தை முடியுங்கள். (குறுக்கீடுகள்) வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1-05

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரு மணி நேரத்திற்கு மேல் உங்களுடைய கட்சிக்காரர்கள் பேசுகிறார்கள். (குறுக்கீடுகள்)



2005 செப்டம்பர் 28]

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குமேல் நான் பேசக்கூடாது என்று நீங்கள் நினைத்தீர்களேயானால், இந்த அவை நடவடிக்கைகளிலே கலந்துகொள்வதிலே பொருளில்லை. நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆற்காடு நா. வீராசாமி.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீடுகள் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேசுவதற்காக வாய்ப்பளித்த தங்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு, அதிகாரிகளோடு கலந்து பேசி, இந்த முதல் துணை மதிப்பீடுகளைத் தயாரித்திருக்கிறார். நான், Accountant General's Appropriation Books Budget publications available in the Assembly Library என்ற அந்தப் புத்தகத்திலே பார்த்தபோது, 1996 ஆம் ஆணடு முதல் இந்த ஆண்டு வரையில் இந்த துணை மதிப்பீடுகள் எப்படி வழங்கப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தை—முழுவதும் படித்தால் நேரம் இருக்காது—உங்களுடைய நிலைமையும் புரிகின்ற காரணத்தினால் சொல்கிறேன். 1996-97-ல் 0.8 அளவிற்குத்தான் துணை மானியம் அளிக்கப்பட்டது. ஏன், அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த 2001-2002 ஆம் ஆண்டிலேகூட 0.1 சதவீதத்திற்குத்தான் துணை மதிப்பீடுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இந்த ஆண்டு 4.7 சதவீதம் அளவிற்குத் துணை மானியம் அளிக்கப்பட்டிருக்கிறது. தி.மு.க. ஆட்சியிலே இப்படி நடக்கவில்லையா என்று ஒரு கேள்வி கேட்டால், தி.மு.க. ஆட்சியிலே 1996-97 ஆம் ஆண்டில் அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டது. அதற்குக் காரணம் அப்போது மின்சார இலாகாவிற்கு வழங்கவேண்டிய நிதி, குறிப்பாக Supplementary Budget-ல் 5.8 அளவிற்குத் தொகை கூடியது. ரூ. 448.28 கோடிக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வரவேண்டிய கடனை சமபங்காக மாற்றியதால் ஏற்பட்ட செலவுக்கு ஈடுகட்டுவதற்காகத்தான் அப்படிச் செய்தேன். ஆனால், இப்போது 4.7 அளவிற்குத் துணை மானியம் உயர்ந்திருக்கிறதே தவிர நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்ற அறிவிப்புகளையெல்லாம் "நம் நாடு" - "நமது எம்.ஜி.ஆர்." பத்திரிகையிலே எடுத்துப் படித்துப் பார்த்தேன். வேறு ஏதாவது பத்திரிகையாக இருந்தால் அதிலேகூட குறை சொல்வார்கள். இந்த "நமது எம்.ஜி.ஆர்." பத்திரிகையிலே வந்த....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** "நம் நாடு" பத்திரிகையை இன்னும் மறக்காமல் இருப்பதற்கு நன்றி. (சிரிப்பு)

**திரு. ஆர்க்காடு நா. வீராசாமி:** எப்படி "முரசொலி"-யை நீங்கள் மறக்காமல் இருக்கிறீர்களோ, அதேபோல நாங்களும் "நமது எம்.ஜி.ஆர்." பத்திரிகையைப் படித்துக்கொண்டுதான் இருக்கிறோம். அதிலே வந்த அந்த அறிவிப்புகளைப் பார்த்தால், இந்த ஆண்டு மட்டும் 156 புதிய அறிவிப்புகளை முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள். நான் அதைத் தவறு என்று சொல்லவில்லை. அந்த 156 அறிவிப்புகளையும் நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னால், எனக்குத் தெரிந்த பொருளாதார நிபுணரோடு கலந்து பேசி அதுகுறித்து estimate போட்ட நேரத்திலே குறைந்தது 4 ஆயிரம் கோடி ரூபாய் அதற்குத் தேவைப்படுகிறது என்ற ஒரு கணக்கு வந்தது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அது தவறு. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த அளவுக்கு நிதி தேவை என்பது தெளிவாக்கப்பட்டிருக்கிறது. அவைக்குத் தரப்பட்டிருக்கிறது. ரூபாய் 2160.400 கோடி மட்டும்தான் அறிவித்திருக்கின்ற அறிவிப்புகளை எல்லாம் உள்ளடக்கக் கூடிய பற்றாக்குறை என்று கூறப்பட்டிருக்கிறது. அதற்கு வருவாய் எந்தக் காலத்திலேயும் இல்லாத அளவிற்கு புதிய கூடுதல் வரியே போடாமல், வணிக வரித் துறையிலே திறமையான நடவடிக்கை, வரி ஏய்க்கின்றவர்களையெல்லாம் கண்டுபிடித்து, வரிவசூல் செய்தல் போன்ற நல்ல நடவடிக்கைகளை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய நேரடிப் பார்வையில் ஆலோசனைகள் மேற்கொண்ட காரணத்தால் 1500 கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் கணக்கிடப்பட்டிருக்கிறது. சிக்கனத்தில் 500 கோடி ரூபாய் இருக்கிறது. அதைப்போல Registration Department-ல் வருவாய் அதிகமாகி இருக்கிறது. இது கண்கூடாக நடைமுறையில் இருந்துவருகிறது. அதனால் ஒட்டுமொத்தமாக ரூ. 2,160.41 கோடிதானே தவிர, நீங்கள் சொல்வதுபோல், ரூ. 4,000 கோடி, 5,000 கோடி என்பது எல்லாம் வெளியிலே பத்திரிகையில் வருகிற செய்தியை ஆதாரமாக எடுத்து அவையில் கூற வேண்டாமென்று மாண்புமிகு ஆர்க்காடு வீராசாமி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

**திரு. ஆர்க்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, நான் பத்திரிகையிலே வந்த புள்ளிவிவரங்களை ஆதாரமாகச் சொல்லவில்லை. எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன். ஆனால் ஒன்று, மாண்புமிகு நிதி அமைச்சர் சொல்வதை நான் மறுக்கவில்லை. அவருடைய திறமை,



முதலமைச்சருடைய திறமை, நிருவாகச் சிக்கன நடவடிக்கைகள் இவற்றின் மூலமாக ரூ. 1,500 கோடி வரும் என்று சொன்னார்கள். நான்கூட எப்படிச் சிக்கன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று பார்த்தேன். சமீபத்திலே சுய உதவிக் குழுக்களுக்காக ஒரு மாநாடு நடைபெற்றது. அந்த ஒரு மாநாட்டிலே மட்டும் 84 இலட்சம் ரூபாய் செலவு செய்து இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சிக்கன நடவடிக்கைகள் மூலம்தான் இந்த அரசு இந்தப் பணத்தை மிச்சப்படுத்துகிறதா என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஒன்று, இன்றையதினம் புதிதாக அறிவிக்கப்பட்டிருக்கின்ற இந்த அறிவிப்புகள் அத்தனையும் உறுதியாகச் சொல்கிறேன், இந்த 7 மாத காலத்திலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அல்ல, ஆண்டவனே வந்து ஆட்சி செய்தால்கூட இவற்றை நிறைவேற்ற முடியாது. ஆனால், உறுதியாகச் சொல்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001 ஆம் ஆண்டு எனது அரசு ஆட்சிப் பொறுப்பேற்றபோது தமிழகத்தின் நிதிநிலை அதலபாதாளத்தில் இருந்தது என்பதை மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிந்ததே. நிதிநிலையைச் சீர்செய்து மாநிலத்தை வளர்ச்சிப் பாதையில் மீண்டும் கொண்டுசெல்ல முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டபோது, எதிர்க்கட்சியினர் மக்களுக்கு இதனால் இன்னல்கள் ஏற்படும் என்று பெரும் கூக்குரலிட்டனர். அரசின் நிதிநிலை சீரழிந்ததற்கு சென்ற தி.மு.க ஆட்சியே முற்றிலும் காரணமாகும். எனது அரசு, இந்நிலையைச் சீர்செய்ய முயன்றபோது, இவர்கள் திடீரென்று தங்களை ஏழைகளின் பாதுகாவலர்களாகக் காட்டிக்கொண்டு, என்னுடைய அரசு மக்கள் நலனுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்வதாகக் குற்றம் சாட்டினர். அச்சமயம் அரசின் நிதிநிலை குறித்து, கிஞ்சித்தும் கவலையின்றி அரசின் நிதிநிலை எவ்வாறாக இருந்தாலும், அரசின் திட்டங்களிலும், கொள்கைகளிலும் எவ்வித மாற்றமும் கூடாது என்ற ஒரு பொறுப்பற்ற வாதத்தை முன்வைத்தனர். அதாவது நிதித் திறனை மீறி, நிதிச் சுமை ஏற்படுத்தும் வகையில் அறிவிப்புகளை மட்டும் வெளியிட்டு பொறுப்புகளை எங்களிடம் தள்ளிவிட்டு, அரசின் நிதிநிலையை அதலபாதாளத்திற்குத் தள்ளிவிட்டது முந்தைய தி.மு.க. அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

எனது அரசு அரசின் நிதிநிலையை சற்றும் கருத்தில்கொள்ளாது, பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்து வருகின்றது என்று விநோதமான நிலைப்பாட்டை இவர்கள் தற்போது எடுத்து வருகின்றனர். மக்கள் பயன்பெறும் வகையில் இத்தகைய திட்டங்கள்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2005 செப்டம்பர் 28

அறிவிக்கப்படக் கூடாது என இவர்கள் வாதிட முற்படுகிறார்கள். அரசின் நிதிநிலையைச் சிறிதும் பொருட்படுத்தாமல் புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன என்றும் இவை செயல்படுத்தப்படமாட்டாது என்றும் ஒரு அவதூறு பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ளனர். தங்களது ஆட்சிக் காலத்தில் நிதிநிலையைச் சீரழித்தவர்கள் தற்போது அரசின் நிதிநிலை பாதுகாக்கப்பட வேண்டும் என்று புதிய ஞானோதயம் ஏற்பட்டதைப் போன்று உபதேசம் செய்து வருகின்றனர். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் அறிவித்த திட்டங்களுக்கு நிதியொதுக்கீடு செய்யப்படவில்லை என்றும், அவ்வாறு நிதியொதுக்கீடு செய்யப்பட்டால் அரசின் நிதிநிலை சீர்கெடும் அபாயம் ஏற்படும் என்றும் வாதங்களை எழுப்பியுள்ளனர். இவ்வாறு நிதிக் கட்டுப்பாடு தேவையற்றது என்றும், அரசின் நிதிநிலையைக் கருத்தில்கொள்ளாது கட்டுப்பாடின்றி அனைத்து வகையான செலவினங்களும் தொடர வேண்டுமென்றும் கூக்குரல் எழுப்பிய அதே நபர்கள், இன்று மக்கள் நலன் கருதி நான் அறிவித்துள்ள புதிய திட்டங்களினால் பெருகிவரும் எனது அரசின் செல்வாக்கை எவ்வாறேனும் கட்டுப்படுத்த வழிதேடி அலைகின்றனர். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாண்டு எனது அரசு அறிமுகப்படுத்திய நன்கு வடிவமைக்கப்பட்ட புதிய திட்டங்கள் மக்களுக்குப் பயன் அளிக்கும் திட்டங்களே என்பதால் இவர்கள் மிகவும் கவலையடைந்துள்ளனர். தங்களுடைய உண்மையற்ற வாதம் வெளிப்பட்டுவிட்டதே என்ற பயத்தால், சாத்தான் வேதம் ஓதுவது போல், இவர்கள் தற்பொழுது நிதிநிலையில் சிக்கனம் என்ற வாதத்தை முன்வைக்கின்றனர். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது இருந்த மோசமான நிதிநிலையைக் கருத்தில்கொண்டு, இந்நிலையைச் சீர்செய்ய சில கசப்பான மருந்துகள் சில காலம் உட்கொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது என்று நான் குறிப்பிட்டபோது, இதே தலைவர்கள் அரசின் நிதிநிலை சீர்கெட்டுப் போனதை ஒப்புக்கொள்ள அறவே மறுத்தனர்.

*பிற்பகல் 1-15*

இத்தருணத்தில் மைய திட்டக் குழுவால் அண்மையில் தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு வளர்ச்சி அறிக்கை என்னும் தலைப்பில் வெளியிடப்பட உள்ள ஆய்வு அறிக்கையிலிருந்து மேற்கோள் காட்ட விரும்புகிறேன். 'Considerable increase in revenue deficit especially after 1995-96 is one of the major structural problems in the Tamil Nadu Budget and this leads to a large fiscal deficit and interest burden'. அதாவது, 1995-96 ஆம்



2005 செப்டம்பர் 28] [செல்வி ஜெ ஜெயலலிதா]

ஆண்டிற்குப் பிறகு வருவாய்ப் பற்றாக்குறையில் ஏற்பட்ட கணிசமான உயர்வு தமிழ்நாட்டின் வரவு செலவுத் திட்டத்தின் ஒரு பெரும் அமைப்பு ரீதியான பிரச்சினையாகும். இது பெரும் நிதிப் பற்றாக்குறைக்கும், வட்டி பளுவுக்கும் வழிவகுக்கிறது. கடந்த தி.மு.க. ஆட்சியில் அரசின் நிதிநிலை அந்த அளவிற்குச் சீர்கெடவில்லை என்று திரு. கருணாநிதி எப்போதுமே வாதிட முயன்று வந்துள்ளார்.

தி.மு.க. அங்கம் வகிக்கும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தற்போதைய மைய அரசில் உள்ள மத்திய திட்டக் குழுவினால் தயாரிக்கப்பட்ட தமிழ்நாடு வளர்ச்சி அறிக்கை தமிழக அரசின் நிதி மேலாண்மை முந்தைய தி.மு.க. ஆட்சியால் எவ்வாறு மோசமாகக் கையாளப்பட்டது என்பதற்கு மிகப் பெரும் கண்டனம் தெரிவித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதே அறிக்கை எனது அரசு நிதிநிலையைச் சீர் செய்து எடுத்த நடவடிக்கைகள் குறித்து பாராட்டியுள்ளது. "For the initial two years of projections, 2003-2004 and 2004-2005, the revenue receipts exceed the projected values by more than Rs. 400 crores. Although the revenue expenditure slightly exceeds the projected levels, both revenue deficit and fiscal deficit are considerably less than the projection level in these two years despite the present drought situation in the State." அதாவது 2003-2004, 2004-2005, ஆகிய முதல் இரண்டு ஆண்டுகளைப் பொறுத்தவரையில் வருவாய் வரவுகள் மதிப்பீடுகளை விட 400 கோடி ரூபாய் அதிகமாக உள்ளது. இவ்விரு ஆண்டுகளில் மதிப்பீடுகளைவிட வருவாய் செலவினம் சற்றே கூடுதலாக இருந்தாலும், வருவாய்ப் பற்றாக்குறையும், நிதிப் பற்றாக்குறையும் மதிப்பீடுகளைவிட கணிசமான அளவிற்குக் குறைவாக உள்ளன, மாநிலத்தில் தற்போது வறட்சி நிலை இருந்தபோதிலும் என்று, நீங்கள் ஆட்சி செய்கின்ற மத்திய அரசின் திட்டக் குழு தெரிவித்துள்ளது. இவ்வாறாக மாநிலத்தின் நிதிநிலையைச் சீரழித்து, அரசால் ஏழையெளியோர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு நலத் திட்ட உதவிகளைத் தொடராத, தொடர முடியாத நிலையை கடந்த தி.மு.க அரசு ஏற்படுத்தியது என்பது தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. எனது அரசு இதனை ஒரு மாபெரும் சவாலாக எதிர் கொண்டு நிதிநிலையைச் சீரமைக்கும் நடவடிக்கையை மேற்கொண்டு அதில் வெற்றியும் பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

நிதிநிலையைச் சீர்செய்த பின்னர்தான் ஏழையெளியோர்களுக்குப் பயனளிக்கும் வகையில் புதிய திட்டங்களை மேற்கொள்ள இயலும். இதைத்தான் நாங்கள் செய்தோம்; செய்துள்ளோம். எப்பொழுதுமே ஏழையெளியவர்களுக்காகப் பாடுபட்டுவரும் எனது அரசு, அவர்களுக்கு

உண்மையான பயன் கிட்டுவதற்கான உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நிதிநிலைக் கட்டுப்பாட்டைக் காற்றில் பறக்க விட்டுவிட்டு, மக்கள் நலனுக்காக திட்டங்களை அறிமுகப்படுத்துவது போன்ற பாசாங்கு செய்து, பின்னர் எந்தத் திட்டத்தையும் தொடர இயலாத ஒரு நிலையை உருவாக்கிய முந்தைய தி.மு.க. அரசு போலன்றி, எப்போதும் போதிய நிதிக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்தே எனது அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. எல்லா விளக்கங்களையும் ஏற்கெனவே கூறிவிட்டோம். இப்போது அறிவித்துள்ள அனைத்துத் திட்டங்களுக்கும் தேவையான நிதி இருக்கும், கிடைக்கும், செலவு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதைப்போல அவர்கள் அறிவித்த திட்டங்களை எல்லாம் ஏதோ நாங்கள் பார்த்து அதிர்ச்சியடைந்து, கவலைப்படுவதாகத் தெரிவித்தார்கள். நாங்கள் அந்தத் திட்டங்களை வரவேற்கிறோம். ஆனால், உங்களாலே அதைச் செய்ய முடியாது. நிறைவேற்ற முடியாது. காலம் கிடையாது. இன்னும் 6, 7 மாதத்திலே அது முடியாது. உறுதியாகச் சொல்கிறேன். நான் ஆண்டவனாலும் முடியாது என்று சொன்னேன். ஆனால், ஏற்கெனவே இந்த நாட்டை ஆண்ட கலைஞர் வந்து அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவார் என்பதை மட்டும் இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள்..

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...(குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் அவருடைய தலைவரைப் பற்றி இங்கே குறிப்பிட்டதால் ஒரே ஒரு கருத்தை இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். அவருடைய தலைவர் நாங்கள் அறிவித்துள்ள புதிய திட்டங்களைப் பற்றி கூறுகையில், இது ஒய்யாரக் கொண்டை, சவுரிமுடி வைக்கப்பட்ட கொண்டை, ஆகவே, இதில் உண்மையில்லை என்றார். அவர் யாரை நினைத்து இதைச் சொன்னார் என்பது எனக்கு நன்றாகவே புரிகிறது. ஒன்றை அனைவருக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது ஒய்யாரக் கொண்டையாக இருக்கலாம். ஆனால், இது சவுரிமுடி பொருத்தப்பட்ட கொண்டை அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) நான் சவுரி முடி பயன்படுத்துவது இல்லை. எனக்கு இயற்கையாகவே நீண்ட கூந்தல் இருக்கிறது.



ஆகவே, எவ்வாறு என்னுடைய கொண்டையில் இருக்கின்ற முடி உண்மையானதோ, அதைப்போலவே இந்தத் துணை நிதிநிலை அறிக்கையில் நாங்கள் அறிவித்துள்ள திட்டங்களும் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக இவை செயலபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

பிற்பகல் 1-20

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ஒன்று (குறுக்கீடுகள்) ஒன்றேயொன்று. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) ஒரே ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் பேசுகிறபோது, 'ஆண்டவனே வந்தாலும் முடியாது' என்று சொன்னார். அவர் கூறியது, ஏற்கெனவே ஆண்ட திரு. கருணாநிதியே வந்தாலும் முடியாது என்றுதான் கூறியிருக்கிறாரேயொழிய, (மேசையைத் தட்டும் ஒலி) அத்தோடு ஒன்றை (குறுக்கீடுகள்) ஒன்றை மட்டும் சொல்கிறேன். நீங்கள் விளம்பரத்திற்காக மகளிர் சுய உதவிக் குழுவைப் பற்றிச் சொன்னீர்கள். விழிப்புணர்வு, ஏழையெளிய, படிக்காத அப்பாவி மக்களுக்கு விழிப்புணர்வுக்காக ஒரு விழா எடுத்து, அதிலே விழிப்புணர்வை அவர்களுக்கு ஊட்டி, ஏழையெளிய மக்களுக்கு சுய வேலைவாய்ப்பில் அவர்கள் ஈடுபடுவதற்கு ஒரு வாய்ப்புத் தரப்பட்டது. ஆனால், உங்களைப் பொறுத்தவரைக்கும், பதவியிலே உங்கள் தலைவர் இல்லை. ஆனாலும்கூட, அரசு, மைய அரசினுடைய விழாக்கள், தாம்பரம், மீனம்பாக்கம் விழாக்களில் அவர் மைய அரசிலே அங்கமே வகிக்கவில்லை, ஆனால், in what capacity he took part in the functions, nobody knows, even God does not know. அப்படிப்பட்ட விழாக்களுக்குக் கோடிக்கணக்கில் அரசு விளம்பரத்தைச் செய்தீர்களே, அது நியாயமா? அதையும் நீங்கள் மனதில் எண்ணிப்பார்க்க வேண்டும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு விழாக்களிலே மத்திய அமைச்சர்கள் எங்கள் தலைவர் அவர்களை அழைக்கும்போது அவர்கள் செல்கிறார்கள். ஆனால், நான் சொல்ல விரும்புவது, முதலமைச்சர் அறிவித்த அறிவிப்புகள் தவறு என்று சொன்னால் நீங்கள் வருத்தப்பட வேண்டும். அந்த அறிவிப்புகளை நிறைவேற்றுவதற்கு உங்களுக்குக் கால அவகாசம்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2005 செப்டம்பர் 28

இல்லை என்பதைத்தான் சொன்னேன். உதாரணத்திற்குச் சொல்கிறேன். இப்போது தமிழகத்திலே விவசாயத் துறையைப் பொறுத்தமட்டில்—உதாரணத்திற்குச் சொல்கிறேன்—தி.மு.க. ஆட்சியிலே இருந்தபோது 2000-2001 ஆம் ஆண்டில், இது நான் சொல்வது அல்ல, 'Statistical Hand Book of Tamil Nadu, 2004', நம்முடைய முதலமைச்சர் இந்த அவைக்கு வைத்த புத்தகம்தான். அதிலே என்ன சொல்கிறார்கள் என்றால், நெல் உற்பத்தி தி.மு.க. ஆட்சியிலே 73,66,000 டன். அ.தி.மு.க. ஆட்சியிலே 35,77,000 டன். இப்படி, கம்பு, ராகி, நிலக்கடலை, இவை அத்தனையையும் பார்த்தால் தி.மு.க. ஆட்சியிலே உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் 83,04,000 டன். அ.தி.மு.க. ஆட்சியில் 42,60,000 டன். தமிழ்நாட்டை முதல் மாநிலமாக ஆக்கப் போகிறோம் என்று சொல்கின்ற-

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆற்காடு வீராசாமி, அரசைச் சாடுகிறாரா அல்லது வறட்சியை உருவாக்கிய இயற்கையைச் சாடுகிறாரா என்று புரியவில்லை.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி இருந்தாலும்கூட தி.மு.க. ஆட்சியில், பக்கத்திலே இருக்கக்கூடிய மாநில அரசுகளைக் கலந்துபேசி எப்படியாவது காவிரி நீரைக் கொண்டுவந்து தி.மு.க. ஆட்சியிலே மிகச் சிறப்பாக விவசாயிகளுக்குத் தண்ணீரைக் கொண்டுவந்தோம். நான் அந்தப் பிரச்சினைக்குள்ளே போனால் விவாதம் வரும். ஆகவே, அதற்குள்ளே போக விரும்பவில்லை....

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு விவரம் சொல்கிறார்கள்.

***மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) உங்களுடைய கட்சிப் பத்திரிகை "முரசொலி"-யையும் நாங்கள் படித்துக்கொண்டிருக்கின்றோம். அதிலேயே நீங்களே ஓர் உண்மையை ஒத்துக்கொண்டிருக்கின்றீர்கள். உங்களுடைய பத்திரிகையிலேயே 1999-2000 ஆண்டிலே சாகுபடி செய்த ஹெக்டேருக்கும், 2000-2001 ஆம் ஆண்டிலே சாகுபடி செய்த ஹெக்டேருக்கும், 2000-2001-லே விளைவிக்கப்பட்ட உற்பத்திக்கும், 1999-2000-லே உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திக்கும் இருக்கின்ற



2005 செப்டம்பர் 28] [திரு. கே. பாண்டுரங்கன்]

வித்தியாசம் உங்களுடைய ஆட்சியிலே குறைந்திருக்கிறது என்பதை நீங்களே ஒத்துக்கொண்டிருக்கின்றீர்கள். காரணம் வறட்சி. கடந்த 4 ஆண்டுகாலமாக கடுமையான வறட்சி இருந்தபோதிலும்கூட, கர்நாடக அரசு காவிரியிலே தண்ணீரைத் திறந்துவிட மறுத்துவிட்ட போதிலும்கூட, தமிழகத்திலே இருக்கின்ற மக்களுடைய வயிறு காயாமல் பார்த்துக்கொண்ட மக்கள் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1-25

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து பேசுகிற நேரத்திலே அமைச்சர்கள் பதில் சொல்வதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை, நேரம்தான் முக்கியம். அதையும் பார்த்துக்கொள்ள வேண்டும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல அருமையான திட்டத்தை வறட்சிக் காலத்திலே விவசாயிகளுக்காக அறிவித்தார்கள். 'தண்ணீர் கிடைக்காத காரணத்தினாலே, காட்டாமணக்கைப் பயிரிடுங்கள்; அதைப்போல சர்க்கரைச் சோளத்தைப் பயிரிடுங்கள்' என்றெல்லாம் சொன்னார்கள். விவசாயிகள் அதையும் நம்பி, தண்ணீர் இல்லையே, முதலமைச்சர் சொல்லியிருக்கிறாரே, எனவே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் நமக்கு வருமானம் கிடைக்கும் என்று விவசாயிகள் எல்லாம் அதை உற்பத்தி செய்யப்போக, கடைசியிலே என்ன நடைபெற்றது என்று சொன்னால், அப்படி உற்பத்தி செய்கின்ற காட்டாமணக்கு கொட்டைகளையோ அல்லது சர்க்கரை உற்பத்தி செய்வதற்கான அந்தக் கரும்புகளையோ வாங்குவதற்கு நாட்டிலே யாரும் இல்லை என்று நான் சொல்லவில்லை, 'கலைக் கதிர்' என்ற ஒரு பத்திரிகையில் விவரமாக எழுதியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டாமணக்குச் செடி உற்பத்தி செய்யப்பட்டு, பலனைத் தருவதற்கு இரண்டு ஆண்டு காலமாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, ஏதோ ஒரு பத்திரிகை உண்மைக்கு மாறான, ஆதாரமற்ற செய்தியை வெளியிட்டிருப்பதை நீங்கள் ஆதாரமாக எடுத்துக்கொள்ளக்கூடாது. (குறுக்கீடுகள்)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, கோவைப் பல்கலைக்கழகத்திலே... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவர் முடித்துவிடட்டும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, கோவைப் பல்கலைக்கழகத்திலே கடந்த 3 ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்து — நான் அந்தத் திட்டத்தைக் குறை சொல்லவில்லையே? யாருக்காவது கோபம் வரவேண்டுமென்றால் — அந்தத் திட்டம் சரியான திட்டம் என்று சொல்லவில்லை. நீங்கள் காட்டாமணக்கைப் பயிரிடுங்கள் என்று சொல்கிறீர்கள், பயிரிடுகிறோம். அதை வாங்குவது யார்? அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவில்லை என்பதைத்தான் இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு) அதற்கான நிர்வாகம் இதுவரையிலே தமிழ்நாட்டிலே உருவாக்கப்படவில்லை. அரசாங்கம் அப்படி காட்டாமணக்கு...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அவையிலே இதுகுறித்து விளக்கம் தந்திருக்கிறார்கள். காட்டாமணக்கு உற்பத்திச் செய்வதற்கு Contract Farming தனியார்களிடம் ஒப்பந்தம் போடப்பட்டு, பண்ணாரி சுகர்ஸ் போன்ற பல நிறுவனங்கள் முன்வந்து, சில மாவட்டங்கள் அவர்களுக்காக ஒதுக்கப்பட்டு, அந்தப் பணியிலே ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ணை ஒப்பந்த அடிப்படையில் காட்டாமணக்கிலிருந்து bio-diesel தயாரிப்பதற்காக தமிழகம் முழுவதும் பெறப்பட்டிருக்கின்ற, நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டிருக்கின்ற விண்ணப்பங்களுடைய எண்ணிக்கை 36 என்பதையும், தனியார் மற்றும் விவசாயிகளிடமிருந்து பெறப்பட்டிருக்கின்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 171 என்பதையும், அந்த விண்ணப்பங்களுடைய அடிப்படையிலே, — நேரத்தினுடைய அருமையைக் கருதி சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்றால் — 4 நிறுவனங்களுக்கு அந்தப் பண்ணை ஒப்பந்த அடிப்படையிலே, மாண்புமிகு அம்மா அவர்களாலே அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, Mohan Breweries Limited என்கின்ற நிறுவனத்திற்கு திருவள்ளூர் மாவட்டமும், Shiva Distilleries என்கின்ற நிறுவனத்திற்கு



கரூர், திண்டுக்கல், ஈரோடு, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களும், Dharani Sugars என்கின்ற நிறுவனத்திற்கு விருதுநகர் மாவட்டமும், Riverway Agro Products Private Limited என்கின்ற நிறுவனத்திற்கு திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி போன்ற பல்வேறு மாவட்டங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும், மேலும், வரப்பெற்றிருக்கின்ற மனுக்களின்மீது உரிய நேரத்திலே அனுமதி வழங்குவதற்கு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தயாராக இருக்கின்றார்கள் என்பதையும், விவசாயப் பெருமக்கள் உற்பத்தி செய்கின்ற காட்டாமணக்காக இருந்தாலும், சர்க்கரைச் சோளமாக இருந்தாலும், சர்க்கரைக் கிழங்காக இருந்தாலும், அந்தப் பண்ணை ஒப்பந்த அடிப்படையிலே, கொள்முதல் செய்துகொள்கின்ற அளவிற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் தயாராக இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, அரசாங்கம் அவர்களையெல்லாம் நியமித்தது உண்மை. ஆனால், அவர்கள் எல்லாம் எங்கேயிருக்கிறார்கள்? தயவுசெய்து அமைச்சர் அவர்கள் உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் இதையெல்லாம் கொள்முதல் செய்வதற்கு இப்போது எந்த இடத்திலேயும் வரவில்லை. காரணம், இன்னும் நமக்குக் காட்டாமணக்கிலே...

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதி கொடுத்ததற்குப் பிறகு கட்டுமானப் பணிகள், நிலம் கையகப்படுத்துகின்ற, வாங்குகின்ற பணிகள் எல்லாம் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** கட்டுமானப் பணிகள் எல்லாம் ஆரம்பித்து, அதற்குப் பிறகு காட்டாமணக்கைக் கொள்முதல் செய்வது என்பதெல்லாம், விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. அடுத்து, நான் சொல்ல விரும்புவது...

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** தலைவர் அவர்களே, தவறான கருத்தை இங்கே சொல்லியிருக்கின்றார். காட்டாமணக்கைப் பயிரிட்டதற்குப் பிறகு, இரண்டு வருட காலத்திற்குள்ளாக சாகுபடி கிடைத்ததற்குப் பிறகு, அந்தக் கொள்முதலை விவசாயப் பெருமக்களிடமிருந்து அந்தத் தனியார் நிறுவனங்கள் பெற்றுக் கொள்வார்கள் என்கின்ற உத்தரவாதத்தை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கொடுத்திருக்கின்றது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் முன்அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இங்கே ஒரு விவாதம் நடைபெற்றது. அந்த விவாதத்திற்குள்ளே நான் போக விரும்பவில்லை. சாலைப் பணியாளர்களைப் பற்றிப் பேசினார்கள். ஏதோ இலஞ்சம் வாங்கிக் கொண்டுதான் வேலை கொடுத்தோம் என்றெல்லாம் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் சொன்னது முற்றிலும் தவறு என்பதற்கு, அந்தக் குறிப்பிட்ட நபர்களே கடிதம் எழுதி, என்னிடத்திலே கொடுத்திருக்கிறார்கள், உங்களிடத்திலேயும் நகல் கொடுத்திருக்கிறோம். அதை நான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுகுறித்து திரு. பொன்முடி போன்றவர்கள் ஓர் உரிமை மீறல் பிரச்சினை கொடுத்திருக்கிறார்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது; திரு. பரிதி இளம்வழுதிகூட.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதற்குள்ளே போகவில்லை, போகவில்லை. ஆக ஒரு தவறான கருத்தை, இந்த மன்றத்திலே ஒரு அமைச்சரே பதிவு செய்வது வருந்தத்தக்கது. அது வேறு விவகாரம். அது மட்டுமல்ல, அந்தச் சாலைப் பணியாளர்களுடைய பொதுச் செயலாளரும், சங்கத்தினுடைய தலைவரும் இப்படி அமைச்சர்கள் ஒவ்வொரு ஊராக சாலைப் பணியாளர்களைத் தேடிக்கொண்டு போவதைக் கண்டித்து, அமைச்சருடைய வீட்டுக்கு முன்னாலே போராட்டம் நடத்துவோம் என்றும் அறிவித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலைமை அமைச்சர்களுக்கு வரக்கூடாது என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அடுத்து, கூட்டுறவுத் துறையிலே ஏதோ ஊழல் நடைபெற்றுவிட்டது. அதற்கெல்லாம் நடவடிக்கை எடுக்கப்போகிறோம், புத்தகம் வெளியிடப் போகிறோம் என்றெல்லாம் சொன்னார்கள். நீங்கள் தாராளமாக வெளியிடுங்கள். குற்றம் செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைத் தூக்கிலேகூட போடுங்கள், சட்டம் அனுமதித்தால். அதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. ஆனால், இந்த ஆட்சியிலே கூட்டுறவுத் துறையிலே எங்கேயும் ஊழலே நடக்கவில்லையா? தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாமல் இருக்கலாம். ஆனால், அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களும் மனிதர்கள்தானே? தவறு



செய்கிறார்கள். தவறு செய்கிறவர்கள், நான் சொல்லவில்லை—துக்ளக் பத்திரிகையில்—இந்த ஆட்சி எப்படி நிலைத்திருக்க வேண்டும் என்று நினைக்கின்ற துக்ளக் பத்திரிகையிலேயே, ஈரோடு மாவட்டத்தில் இலவமலை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தில் நடந்த மோசடியில், சுமார் 4 கோடி ரூபாய் அளவிற்கு நடைபெற்றிருக்கிறது...

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இலவமலை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் ஊழல் நடைபெற்றுள்ளது என்பதை 2001 ஆம் ஆண்டுக்கு முன்பு என்பதையும், அதனுடைய நிர்வாகப் பொறுப்பிலே தலைவராக இருந்தவர் சிவசுப்பிரமணியம் என்பவர் இப்போது மாவட்ட தி.மு.க-வினுடைய பொருளாளராக இருக்கிறார், முன்னாள் ஒன்றியக் கழகச் செயலாளர் என்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பத்திரிகையிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். 2001-க்கு முன்னாலே நடைபெற்ற ஊழல்கள் சில, 2001-க்கு பிறகு தனி அதிகாரிகள் இப்போது இருக்கிற நேரத்திலே நடைபெறுகின்ற ஊழல்கள் சில என்று பட்டியலிட்டு இருக்கிறார்கள். அதைப் படித்து பார்த்துக்கொள்ளட்டும். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் துணைத் தலைவர் திரு. கே. சிவசுப்பிரமணியம் 1996 முதல் 2001 வரை கடன் நிலுவை 1 கோடியே 39 இலட்சத்து 42 ஆயிரம், அதனுடைய வட்டி 1 கோடியே 6 இலட்சத்து 32 ஆயிரம், ஆக மொத்தம் 2 கோடியே 45 இலட்சத்து 74 ஆயிரம் ரூபாயை அவர் இன்று வரை அந்த வங்கிக்கு செலுத்தாமல் வைத்திருக்கிறார். அவர் அந்த வங்கிக்கு அடமானமாக வைத்திருக்கின்ற சொத்தின் மதிப்பு வெறும் 77 இலட்சம் ரூபாய் மட்டும் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். திரு. எம். செல்வராஜ், 1996-2001, முன்னாள் துணைத் தலைவர், அவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். அவர் அந்த வங்கியில் கடனாகப் பெற்றிருக்கிறார். திரு. கே.எஸ். பழனிசாமி, முன்னாள் துணைத் தலைவர், அவரும் அதே வங்கியிலிருந்து கடன் பெற்றிருக்கிறார். அந்த வங்கியிலே ஊழல் நடைபெற்ற காலம் என்பது 2001-க்கு முன்புதான். 2001-க்கு முன்புதான் இலவமலை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே ஊழல் நடைபெற்றது என்பது ஈரோடு மாவட்டத்துக்கே தெரியும். இப்போது அந்த வங்கியினுடைய முன்னாள் தலைவர்,

துணைத் தலைவர், அந்த வங்கியினுடைய இயக்குநர்கள் எல்லாம் ஒளிந்து கொண்டிருக்கிறார்கள். C.B.C.I.D-யிலே அவர்கள்மீது தனியாக வழக்கு தொடரப்பட்டிருக்கிறது என்கின்ற தகவலைச் சொல்லி அமர்கின்றேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களைக் கண்டுபிடிப்பதற்கே இந்த அரசாங்கத்திற்கு நான்கு ஆண்டுகள் ஆகியிருக்கிறது என்றால், இந்த அரசாங்கத்தினுடைய நிர்வாகத்தினுடைய திறனைத் தெரிந்துகொள்ளலாம். இன்னொன்று, கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் எந்த முறையிலே நடைபெறுகின்றன என்று சொன்னால், உதாரணத்திற்கு திருவாலங்காடு சர்க்கரை ஆலையிலே, இன்றையதினம் ஒரு டன் சர்க்கரை 1,207 ரூபாய்க்குத்தான் விற்க வேண்டும் என்று முடிவெடுத்திருக்கிறார்கள். ஆனால், வெளிச் சந்தையிலே விலை எவ்வளவு என்று கேட்டால், 1,710 ரூபாய். இப்படி 500 ரூபாய் வித்தியாசம் உள்ள அளவிற்கு ஒரு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை தனியாருக்குக் குறைத்துக் கொடுத்தால் அந்த இலாபம் யாருக்குப் போகிறது என்று எனக்குத் தெரியாது. இதுபற்றி விசாரிக்க வேண்டும். இது பொதுமககளுடைய பணம். இந்தப் பணம் தனியார் துறையிலே, தனிப்பட்ட ஆலை முதலாளிகள் கொள்ளையடித்தால் பரவாயில்லை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1-35

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு சர்க்கரை ஆலையைப் பொறுத்தமட்டிலும், வாரந்தோறும் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ஒரு தடவையும், இங்கே தலைமை அலுவலகத்தில் ஒரு தடவையும் ஆக ஃபெடரேஷன்களாக வைத்து அதன்மூலம் வெளிச்சந்தையில் இருக்கின்ற விற்பனையைவிட கூடுதலான முறையில்தான் விற்கப்படுகிறதே தவிர, தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சபைக்கு தர வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, நான் சொன்னது தவறு என்று சொன்னால் நாளைக்கே நான் இராஜினாமா செய்கிறேன். இதுவெல்லாம் அமைச்சர்கள் ஏதோ எதை வேண்டுமானாலும் சொல்லலாம் என்று சொல்லக் கூடாது. இன்று தனியார் மார்க்கெட்டில் 1,710 ரூபாய் சர்க்கரை. நான் சொல்வது இரண்டு தினங்களுக்கு முன்னாலே நடைபெற்றது. நூறு தாய்மார்கள் அந்தச் சர்க்கரை



ஆலைக்கு முன்னாலே போய் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். பத்திரிகையிலே வந்திருக்கிறது. இப்படி உண்மைக்குப் புறம்பான தகவல்களை தயவுசெய்து அவைக்குத் தெரிவிக்க வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தேர்தல் அறிக்கையிலே ஒரு நல்ல கருத்தை வெளியிட்டிருந்தார்கள். அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில், அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் யாருக்கெல்லாம் வீடு இல்லையோ அவர்களுக்கு எல்லாம் வீடு கட்டித் தரப்படும் என்றார்கள். எத்தனை வீடுகள் கட்டித் தந்திருக்கிறார்கள் என்ற விவரத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சொன்னால் நன்றாக இருக்கும்.

அதைப்போலவே மக்கள் நல்வாழ்வுத் துறையிலே நான் அமைச்சராக இருந்தபோது ஏறக்குறைய 104 கோடி ரூபாய்க்கு சென்னை பொது மருத்துவமனை புதியதாக கட்ட வேண்டுமென்று முடிவெடுத்து, பிறகு டெண்டர் விடப்பட்டு, இப்போது இந்த ஆட்சியிலே அந்தக் கட்டடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது திறந்து வைத்ததிலே மகிழ்ச்சி. ஆனால், அந்தக் கட்டடம் முழுமையாக பயன்படுத்தப்பட வேண்டும். இதுவரையிலே அந்த மருத்துவமனையிலே தேவையான அளவிற்கு, நோயாளிகளுக்குப் போதுமான அளவிற்கு படுக்கைகள் முதற்கொண்டு இன்னும் சரி செய்யவில்லை. இன்னும் புதிய கருவிகள் வாங்கப்படவில்லை என்ற ஒரு நிலை இருக்கிறது. அதை உடனடியாக..

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடு) பதில் சொல்லக் கூடாதா? (குறுக்கீடு) கேளுங்கள், பதிலை பொறுமையாகக் கேளுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடனே, இந்திய வரலாற்றிலே இன்றையதினம் தமிழகம், சுகாதாரத் துறையிலே முதல் மாநிலம் என்ற பெயரைப் பெற்றிருக்கிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு என்னவென்றால், இங்கே முன்னாள் அமைச்சர் அவர்கள் கூறினார்கள், ஏதோ அங்கு சாதனங்கள் இல்லையென்றும், அங்கே பொருட்கள் வாங்கவில்லை என்றும் சொன்னார்கள். தயவுசெய்து முன்னாள் அமைச்சருக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் பொது மருத்துவமனையை சென்று பாருங்கள். இன்றையதினம் உலகமே பாராட்டுமளவிற்கு அத்தனை சாதனங்களும் வழங்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

அத்தனை நாட்டினரும் வந்து பெருமையாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். சென்னையைப் பார்த்தவுடன், சென்னைப் பொது மருத்துவமனையினுடைய அந்த வளர்ச்சி, மருத்துவர்கள் நியமனம் அங்கிருக்கக்கூடிய அத்தனை துறைகளிலும் இன்றையதினம் போடப்பட்டிருக்கின்றன. கருவிகள் அத்தனையும் வாங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டை இந்த அவையிலே வைக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, அந்தக் கட்டடத்தினுடைய பிளான் போட்டதே எங்களுடைய தலைவர் கலைஞர்தான். எழிலார்ந்த கட்டடம். அது நன்றாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, கருவிகள் வாங்கப்படவில்லை என்று சொன்னீர்கள். எல்லாம் வாங்கப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இல்லை, அதைத்தான் சொல்கிறேன். ஏதோ நான் பொது மருத்துவமனைக்குப் போகாதவன்போல மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். (குறுக்கீடு) நானும் அங்கிருக்கக்கூடிய சில நோயாளிகளைப் பார்க்கப் போகிறேன். அங்கே இருக்கக்கூடிய டாக்டர்கள் சொல்வதைத்தான் சொல்கிறேன். வேண்டுமானால், மாண்புமிகு அமைச்சர் இன்று மாலை வந்தால் நான்கூட அவரோடு போகத் தயாராக இருக்கிறேன். எந்தெந்தப் பகுதியிலே என்னென்ன கருவிகள் இல்லை, எங்கெங்கே நோயாளிகள் படுப்பதற்கு வசதி இல்லை என்பதையும் நான் எடுத்துக்காட்டத் தயாராக இருக்கிறேன்.

அதைப்போலவே கல்வித் துறையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சில நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். அதிலே ஒரு மகிழ்ச்சி எனக்கு என்னவென்றால், உச்ச நீதிமன்றத்திலே சொன்ன ஒரு தீர்ப்பை வேண்டுமென்றே சில தனியார் கல்லூரிகள் மக்களிடத்திலே தவறான பிரச்சாரம் செய்து, பிளஸ் 2 தேர்ச்சி பெற்றிருந்தாலே போதும், அவர்களெல்லாம் பொறியியல் கல்லூரிகளிலே சேரலாம் என்று விளம்பரப்படுத்தி, ஏழையெளியவர்களை ஏமாற்ற இருந்தார்கள். ஆனால், இன்றைக்கு கல்வி அமைச்சர் ஒரு விளக்கம் தந்திருக்கிறார். உச்சநீதிமன்றம் அப்படிச் சொல்லவில்லை, பிளஸ் 2 மார்க்கிலே எவ்வளவு மார்க் வாங்கியிருக்கிறார்களோ தகுதி அடிப்படையிலேதான் சேர்க்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது என்று விளக்கம்



தந்திருக்கிறார். அந்த விளக்கம், எத்தனை பத்திரிகைகளிலே, வந்து, யார் படிக்கிறார்களோ என்பது எனக்குத் தெரியாது. அதை ஒரு அரசாங்க ஆணையாகப் போட்டு, எல்லா தனியார் கல்லூரிகளுக்கும், நீங்கள் அதை அனுப்பி, விளம்பரமாகக் கொடுத்தால்தான் ஏழையெளிய மக்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்பதை நான் கல்வி அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

பிற்பகல் 1-40

அதைப்போலவே, இந்த ஆண்டு — ஒரு அரசாங்கம்தான் எல்லாவற்றிற்கும் பொறுப்பு என்று நான் சொல்லமாட்டேன்—பாடத் திட்டத்தில், ப்ளஸ் 1, ப்ளஸ் 2 ஆகிய அந்த வகுப்புகளுக்கு தயாரித்தவர்கள், என்ன காரணத்தினாலோ—அந்தப் பாடப் புத்தகம் அச்சடிக்கப்பட்டு, காலாண்டுத் தேர்வு வருகின்ற இந்த நேரத்தில், அதில் கடினமான பாடங்கள், அவற்றையெல்லாம் இரத்து செய்ய வேண்டும் என்று ஆசிரியர்களும் சொல்லி, மாணவர்களும் முடிவெடுத்து, இறுதியாக அரசாங்கம், இன்று சில பாடங்களை இரத்து செய்திருக்கிறது. இயற்பியல், வேதியியல், கணக்கு போன்ற பாடங்களில், கடினமான பாடங்கள் என்று நீங்கள் இரத்து செய்திருக்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால், இந்த மூன்று மாத காலத்திலே, அந்தப் பாடங்களையெல்லாம் கஷ்டப்பட்டுப் படித்தார்களே, அந்த மாணவர்களுடைய நிலைமையைக் கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். அதையெல்லாம் எண்ணிப் பார்த்து, எதிர்காலத்திலே இப்படிப்பட்ட ஒரு நிலைமை வராமல் இருப்பதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இன்றையதினம், அரசுப் பணிகள் ஓரளவிற்கு முழுமையாகச் செயல்படுகின்றதா என்று கேட்டால், அது இல்லை. எனக்குத் தெரிந்தவரையிலே சொல்கிறேன். காரணம், அவர்கள் வேலைநிறுத்தத்திலே போனார்கள், அங்கே அரசாங்கத்திற்கும், பணியாளர்களுக்கும் நல்ல உறவு இல்லை என்று நான் சொல்ல மாட்டேன். ஆனால், யார், யார் ஓய்வு பெற்றார்களோ, அந்த இடங்களெல்லாம் நிரப்பப்படவில்லை. இலட்சக்கணக்கானவர்கள் ஆசிரியர்களாகவும், அரசு ஊழியர்களாகவும் இருந்தவர்கள். பணி நிரப்பப்படாத காரணத்தால், வேலைப்பளு காரணமாக, அந்த இடங்களெல்லாம் இன்றையதினம் நிரப்பப்படாமல் அங்கே வேலைகள் சரியாக நடைபெறவில்லை. அதுமட்டுமல்ல, மின்சார இலாகாவிலே மட்டும் சொல்கிறேன். 50 மாத காலமாகிறது, ஆட்சிக்கு வந்து. இன்னும் ஒப்பந்தம் போடவில்லை. 3 ஆண்டுக்கு ஒருமுறை ஒப்பந்தம் போடவேண்டும் என்று விதி இருக்கிறது.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தில் பணிபுரிகின்ற ஊழியர்களுக்கு ஊதிய ஒப்பந்தம் போடுகின்ற பணி, பேச்சு வார்த்தை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இப்பொழுது இடையிலே சட்டமன்றக் கூட்டத்தொடர் வந்ததால்தான் அந்தப் பணி — இடையிலே சென்ற வாரம்கூட, பேச்சு வார்த்தை நடைபெற்றது. அவர்களை, தொழிற்சங்கங்களையெல்லாம் அழைத்துப்பேசி, மிக விரைவிலே, முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று அந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, 36 மாதத்திற்குள்ளாகப் போட்டிருக்க வேண்டும். 50 மாதங்களாகிவிட்டன. அமைச்சர் சொல்கிறார், சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிந்தவுடனே ஒப்பந்தம் போடப்படும் என்று. நான் உள்ளபடியே, அப்படிப்போட்டால் மகிழ்ச்சி அடைவேன். அதைச் சீக்கிரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்களுடைய பிரச்சினை, நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு, அரசு சில சலுகைகளை அறிவித்தது. அந்தச் சலுகைகளைப் பொறுத்த அளவிலே, அவர்கள் ஓரளவு மகிழ்ச்சி அடைந்தாலும்கூட, தி.மு.க. ஆட்சியிலே கலைஞர் அறிவித்த பல சலுகைகள் இன்னும் இந்த அரசாங்கத்தாலே கொடுக்கப்படவில்லை. ஒன்று, கலைஞரால் வழங்கப்பட்ட போனஸ், இன்னும் வழங்கப்படவில்லை. சரண் விடுப்பு சலுகை, 15 நாட்கள், இன்னும் வழங்கப்படவில்லை. விடுப்புப் பயணச் சலுகை — L.T.C. — வழங்கப்படவில்லை. பணியின் கடைசி மாதத்தில் பெற்ற ஊதியத்தில் பாதியை ஓய்வூதியமாக நிர்ணயிக்க வேண்டுமென்ற அந்தச் சலுகை இன்னும் நிறைவேற்றப்படவில்லை. முழு ஓய்வூதியம் பெற 30 ஆண்டு பணிக்காலமாக நிர்ணயிக்க வேண்டும். இப்பொழுது 33 ஆண்டுகளாக ஆக்கியிருக்கிறீர்கள். அதை 30 ஆண்டுகளாக ஆக்க வேண்டும் என்கிறார்கள். அதையும் பரிசீலியுங்கள். ஒப்படை ஓய்வூதியத்தை — commutation of pension — 40 சதவிகிதமாக நிர்ணயிக்க வேண்டுமென்று அவர்கள் கேட்கிறார்கள். அதையும் செய்து தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்த்தி அறிவிக்கின்ற தேதியிலேயிருந்து, மாநில அரசு ஊழியர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டவாறு, மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக 30 சதவிகித வீட்டுவாடகைப்படி



வழங்கப்பட வேண்டும் என்று அறிவித்திருந்தீர்கள். அதைக் கேட்கிறார்கள். அதை வழங்குங்கள். மத்திய அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படியில் 50 சதவிகிதத்தை அடிப்படை ஊதியத்துடன் இணைத்து ஆணையிடப்பட்டுள்ளது. அதுபோன்று தமிழக அரசு ஊழியர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அதையும் செய்து தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் 15-3-2005 அன்று, 110-வது விதியின்கீழ், இன்ஸ்பெக்டர்களாக இருக்கின்றவர்களுக்கெல்லாம், 100 பேருக்கு D.S.P. பதவி வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால், இதுவரையில் அவர்களுக்கு அப்படிப்பட்ட பதவி உயர்வு வழங்கப்படவில்லை. அதை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, இந்தக் காவல் துறையைப் பொறுத்தவரையிலே, அனைவரும் மோசமானவர்கள் என்று நான் சொல்ல மாட்டேன். நல்லவர்களும் இருக்கிறார்கள். சில இடங்களிலே தவறாக தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றவர்களும் இருக்கிறார்கள். நாம் பத்திரிகையிலே பார்க்கிறோம். கடற்கரையிலே காவல் துறையைச் சேர்ந்தவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நான் என்ன சொல்கிறேன் என்றால், காவல் துறை என்பது ஒரு பொறுப்புள்ள துறை.

பிற்பகல் 1-45

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அதை எடுத்துவிடுங்கள். ** அதை முதலமைச்சர் கட்டுப்படுத்த வேண்டும். சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்போது அவருக்கு நம்பிக்கையான டி.ஜி.பி.-யைப் போட்டிருக்கிறார். அதைப்போல நல்ல அதிகாரிகளையெல்லாம் அவர்கள் போட்டிருக்கிறார்கள். எனக்கு அதிலே ஆட்சேபணை இல்லை. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிகாரிகளைப் பற்றி இப்படி 'கமெண்ட்' அடிப்பது முறையல்ல.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் பெயரையே சொல்லவில்லை..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெயரைச் சொல்வதற்காக அல்ல. அதிகாரிகளைப் பற்றி, ** என்பது அவைக் குறிப்பிலே வேண்டாம்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நல்லது என்று சொல்கிறேன். நீங்கள் அப்போது மாற்றினீர்கள். இப்போது போட்டிருக்கிறீர்கள். ரைட், வரவேற்க வேண்டியதுதான், அப்படியென்றுதான் சொல்கிறேன். அதேமாதிரி இந்த ஆட்சி பொறுப்பேற்றுக்கொண்ட உடனே சில தீவிரமான நடவடிக்கைகளை எடுத்தீர்கள். நான் சொல்வதைக் கேட்டு முதலமைச்சர் தயவுசெய்து வருத்தப்படக்கூடாது. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீதிமன்றத்திலே இருக்கின்ற பிரச்சினையைப் பற்றிப் பேசுவது சரியல்ல. தாங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. ** அதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீதிமன்றத்தில் உள்ள பிரச்சினை அதெல்லாம். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, நீங்கள் எதை வேண்டுமானாலும் நீக்குங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதை வேண்டுமானாலும் நீக்குங்கள் என்பதல்ல. நீதிமன்றத்தின் வழக்கிலே இருக்கக்கூடியது பற்றிய பிரச்சினை அது. நீதிமன்ற வழக்கிலே இருக்கக்கூடிய பிரச்சினை பற்றி விமர்சனம் செய்யக்கூடாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தினமலர் பத்திரிகையிலே ஒரு கார்டூனே போட்டிருக்கிறார்கள். அதை வேண்டுமானாலும் நீங்களும் பார்த்துக்கொள்ளுங்கள். அதைப்போல, இன்றையதினம் விவசாயிகள் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும் என்பதற்காக சில திட்டங்களை அறிவித்திருக்கிறீர்கள் என்று சொன்னீர்கள். ஆனால், அவர்கள் வாங்குகின்ற உரம் 400 டிஏபி மற்றும் யூரியா உர மூட்டைகள் எப்படி இருந்தன என்பதை இரண்டு தினங்களுக்கு முன்னாலே, நம்முடைய ஆளுநர் அவர்களிடத்திலே போய் விவசாயிகள் ஒரு புகார் மனு கொடுத்திருக்கிறார்கள். அதைப் பார்த்தால், என்னிடத்திலே, இந்தப் படமும் இருக்கிறது. பாதிக்கு மேல் அந்த மூட்டைகளில் கல்லும் மணலும் கலந்திருக்கிறது. இப்படி விவசாயிகளுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக, உரத்தை விநியோகித்தால் அந்த விவசாயிகளின் கதி என்னவாகும்?

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த உரத்தை சப்ளை செய்தவர்கள் 'இண்டியன் பொட்டாஷ் லிமிடெட்' என்ற கம்பெனியைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து இறக்கி, நேரடியாக பவானிசாகர் கொண்டுவந்து இறக்குகின்ற பொறுப்பும் 'இண்டியன் பொட்டாஷ் லிமிடெட்' நிறுவனத்தைச் சேர்ந்தது. அது மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த நிறுவனம் என்பதையும் குறிப்பிட்டு, அந்தக் குறிப்பிட்ட ஒரு விவசாயிக்கு மட்டும் அன்றையதினம் உரம் விநியோகிக்கப்படவில்லை. அதேநாளில் 50 டன் உரம் விநியோகிக்கப்பட்டு இருக்கிறது. எங்கும் புகார் எழுப்பப்படவில்லை. அந்த ஒரு குறிப்பிட்ட விவசாயி மட்டும் வேண்டுமென்றே அந்தப் புகாரை எழுப்பியிருக்கிறார் என்கின்ற விளக்கத்தைச் சொல்லி அமர்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, ஒரு விவசாயியோ, ஆயிரம் விவசாயிகளோ என்பது அல்ல. கூட்டுறவுச் சங்கத்திலே அப்படி நடைபெற்றிருக்கிறது என்பதைத்தான் சொல்கிறேன். அதைப்போலவே மணல் கொள்ளை நாட்டிலே எந்த அளவிற்கு நடைபெறுகிறது என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் தெரியும். அதிலே ஒரு குறிப்பிட்ட ஒரு தொழில் அதிபர், கோவையைச் சேர்ந்தவர், இந்த மணல் கொள்ளையிலே எப்படி அவரும் மற்றும் யார், யார் ஈடுபடுகிறார்கள் என்றெல்லாம் பார்த்தால், மூன்று, நான்கு தாசில்தார்களே கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். சட்டம் என்ன சொல்கிறது என்றால், ஒரு மீட்டர் அளவிற்குத்தான் மணல் அள்ளலாம் என்று சட்டம் சொல்கிறது. பேரவைத் தலைவர் அவர்களே, உங்களிடத்திலேயும் இதை ஏற்கெனவே காட்டியிருக்கிறேன். சுமார் 15 அல்லது 16 அடி ஆழத்திற்கு மணலை அள்ளுகிறார்கள், கொள்ளையடிக்கிறார்கள். அப்படிக் கொள்ளையடிக்கின்றவர்கள் கோடிக் கணக்கிலே...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட யாருக்கும், தனியாருக்கும் மணல் குத்தகை அளிக்கப்படவில்லை. மூன்று அடி ஆழத்திற்குத்தான் மணல் அள்ளப்படுகிறது. அதை அள்ளுகின்ற பணியைத்தான் பல்வேறு நிலைகளில் பல்வேறு நபர்களுக்கு அது ஒப்பந்தங்கள்மூலம் தரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தப் பகுதியிலாவது அதிகமாக ஆழம் எடுக்கப்பட்டிருக்கிறது என்று அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னால், தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1-50

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் அருகே, வைப்பாற்றில் மணல் அள்ளவந்த லாரியை, 117 பேர் மடக்கி அவர்களைக் கைது செய்திருக்கிறார்கள். எந்த அளவுக்கு அந்த விளாத்திகுளத்திலே மணல் எடுத்திருக்கிறார்கள் என்றால், 18 அடி அளவிற்கு ஆழமாக மணலை எடுத்திருக்கிறார்கள். அந்தப் படம் வந்திருக்கிறது. பத்திரிகையிலேயும் வந்திருக்கிறது. என்னிடத்திலேயும் வந்திருக்கிறது. வேண்டுமானால், நீங்கள் முதலமைச்சரிடம் கொடுங்கள்; மற்ற அமைச்சர்களும் பார்த்துக்கொள்ளட்டும்.

*(உறுப்பினர் தன்னிடமிருந்த சில குறிப்புகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் கொடுத்தார்.)*

இப்படி மணல் அள்ளக்கூடியவர்கள், கோடிக்கணக்கிலே கொள்ளையடித்து யாருக்குத் தருகிறார்கள் என்று எனக்குத் தெரியாது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். அதை இந்த அரசு தன்னுடைய கடமையாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் மணல் அரசு மூலமாக, பல்வேறு நிலைகளில் ஒப்பந்தங்கள் மூலமாகத் தரப்பட்டது. பல்வேறு ஒப்பந்தங்கள் மூலமாக வரப்பெற்ற தொகையும், அந்தவகையில், கிடைக்கப்பட்ட Seigniorage Fees என்ற நிதியிலே இருந்தும் மொத்தமே ஓராண்டிற்கு அரசுக்கு வருவாயாக 29 கோடி ரூபாய்தான் வந்தது. அந்த நேரத்தில், அத்தனை மணலையும் யார் கொள்ளையடித்தார்கள் என்பது, நாட்டிற்கு நன்றாகவே தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்த மணல் எடுப்பதை அரசே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஆணையிட்டதற்குப் பின்னால், 30-10-2003 முதல் இன்றுவரை, கிட்டத்தட்ட 287 கோடி ரூபாய் என்ற அளவிற்கு தற்போது மணல் மூலமாக அரசுக்கு வருவாய் வந்திருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இந்த இடைப்பட்டிருக்கின்ற கோடிக்கணக்கான ரூபாய்களை யார் கொள்ளையடித்தார்கள்? அப்போது யார் ஆளுங்கட்சியில் இருந்தார்கள் என்பதனை நாட்டு மக்கள் நன்றாகவே அறிந்து வைத்திருக்கின்றார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள், எனக்குத் தந்திருக்கின்ற இந்தப் பத்திரிகை செய்தி — "விளாத்திகுளம் அருகே பரபரப்பு; வைப்பாற்றில் மணல் அள்ள வந்த லாரியை மறித்த பெண்கள் உட்பட 117 பேர் கைது" என்று வந்திருக்கிறது. அந்தப் பத்திரிகை, 'தினகரன்' பத்திரிகை. அதுதான் பிரச்சினை. (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, எந்த ஊர் என்று அமைச்சர் கேட்டார், பக்கத்திலே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்திலே, மாளந்தூர், ஆவாஜிப்பேட்டை என இப்படிப் பல இடங்களிலே, தமிழ்நாட்டிலே...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஆதாரங்களுடன் தந்தால், அதனை விசாரணை செய்து, தவறுகள் யாராவது செய்திருந்தால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகை 'தினகரன்'-ஆக இருக்கலாம். ஆனால், நான் கொடுத்த photo, original photo. எனவே, எந்தப் பத்திரிகையிலே வந்தது என்பதல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைச் சொல்லவில்லை. அதிலே உள்ளதைத்தான் சொல்கிறேன். கைது என்றுதான் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. மணலை அள்ள வந்தவர்கள் கைது என்றுதான் வந்திருக்கிறது. நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தமிழ்நாட்டிலே, 3 தாசில்தார்கள் லாரி ஏற்றி கொல்லப்பட்டிருக்கிறார்கள். இப்படியெல்லாம் செய்தி வந்திருக்கிறது. அரசுக்குத் தெரியும். குற்றவாளிகளைத் தண்டியுங்கள் என்றுதான் கேட்கிறோமே தவிர, வேறு என்ன கேட்கிறோம்? அதைத்தான் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், மணல் கொள்ளை எப்படி நடைபெற்றிருக்கிறது என்பதற்கு ஓர் உதாரணம். அன்றைக்கு அமைச்சராக இருந்த பொன்முடி அவர்களின் மனைவியே, அந்த மணல் திருட்டிலே ஈடுபட்டு, பிடிபட்டு, அவர்கள் 2.5 ஆயிரம் ரூபாய் பணம் கட்டியிருக்கிறார்கள். அதை அவரே இந்த அவையிலே ஒப்புக்கொண்டிருக்கிறார். மணல் திருட்டு யாருடைய ஆட்சியிலே நடந்தது என்பதற்கு நான் இதைச் சொல்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. அது அவை நடவடிக்கையில் இருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேராசிரியர் அவர்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்தகால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இப்படியெல்லாம் நடைபெற்றது என்று **ஏதோ** ஒரு குற்றச்சாட்டை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொல்ல முற்படுகிறார். ஒரு குற்றச்சாட்டைச் சொல்வதாக இருந்தால், அதற்கு ஏதேனும் ஆதாரம் தரவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பேராசிரியர் அவர்கள். அந்தக் குற்றச்சாட்டு இங்கே பேசப்பட்டது. அந்தக் குற்றச்சாட்டு, இங்கே ஓர் உறுப்பினரால் சொல்லப்பட்டு, திரு. பொன்முடி அவர்களாலே அந்தக் குற்றச்சாட்டு ஏற்கப்பட்டது. அது அவைக் குறிப்பிலே இருக்கிறது. (குறுக்கீடுகள்) பொன்முடி, சொல்லுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு வேண்டிய ஆதாரம் அவைக் குறிப்பிலே இருக்கிறது. (குறுக்கீடு) மாண்புமிகு திரு. பொன்முடி அவர்களே அதை ஒப்புக்கொண்டிருக்கிறார். அதைவிட வேறு என்ன ஆதாரம் வேண்டும்? (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் சொல்கிறேன். என்னுடைய மனைவியின் பெயரிலே இருந்த லாரியிலே கடத்தப்பட்டதன் விளைவாக, அன்றிருந்த அதிகாரி பிடித்து, fine போட்டு, fine - ஐயும் கட்டியிருக்கிறோம். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், கேட்டுக்கொள்ளுங்கள். அப்போது, ஆளுங்கட்சியிலே இருந்த ஓர் அமைச்சருடைய லாரியைப் பிடிக்கிற அளவுக்கு ஓர் அதிகாரி இருந்தார். ஆனால், இன்றைக்குப் போய் அதிகாரி பிடித்தால், லாரியை வைத்துக் கொல்லுகிற அளவுக்கு ஆட்சி நடைபெறுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆற்காடு வீராசாமி, பேசுங்கள். (குறுக்கீடு) அதைத்தான் அமைச்சர் சொல்கிறார். அன்று நடந்ததைத்தான் அமைச்சர் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், மணல் திருட்டு நடைபெற்றது என்பதற்கு உதாரணத்தைத்தான் சொல்கிறேன்.



பிற்பகல் 1-55

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** அவர் சொல்கின்றார். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அப்படி இல்லை. அவைக் குறிப்பில் அப்படி ஏறவில்லை. அவர் ஏற்கெனவே ஒத்துக்கொண்டது மட்டும்தான் இருக்கிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலாளர் நல வாரியம் ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து 5-10-2005 அன்று அந்த நலத் திட்ட உதவிகளை வழங்க இருப்பதாக நாங்கள் கேள்விப்பட்டோம். அதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 'எல்காட்' நிறுவனத்திற்கு டெண்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. 'எல்காட்' நிறுவனம் அரசைச் சார்ந்த நிறுவனம். அதிலே நான் குறை காண விரும்பவில்லை. எதுவாக இருந்தாலும், 1997 டெண்டர் சட்டப்படி டெண்டர் விட்டுத்தான் 'எல்காட்'-க்கு கொடுத்திருக்க வேண்டுமே தவிர, அரசாங்க நிறுவனமாக இருந்தாலும்கூட அது nomination -லே கொடுக்கக்கூடாது என்பது விதி. எனவே, அதை தயவுசெய்து...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டை ஏற்கெனவே 'எல்காட்' நிறுவனத்தால்தான், அரசு நிறுவனத்தால்தான் அடிக்கப்பட்டது. அந்த குடும்ப அட்டையை அடிப்படையாக வைத்து இது தயார் செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, குடும்ப அட்டை அச்சடிக்கும்போது அரசாங்கம் ஒரு அட்டைக்கு எவ்வளவு செலவாகும் என்று estimate எல்லாம் போட்டு கொடுத்திருப்பார்கள். நான் சொல்வது, எதுவாக இருந்தாலும், 1997 ஆம் ஆண்டு சட்டப்படி டெண்டர் விட்டுதான் கொடுத்திருக்க வேண்டும் என்று சொன்னேன். நீங்கள் இப்பொழுது குடும்ப அட்டை கொடுத்ததனால் அதைக் கொடுத்தோம் என்கிறீர்கள். நான் அதற்குள்ளேகூட போக விரும்பவில்லை. ஆனால் ஒன்று, அந்த விவசாயத் தொழிலாளர்களுக்காக ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது, சுமார் 8 இலட்சம் பேர் உறுப்பினர்களாக

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சேர்க்கப்பட்டு, கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்து, மதுரைக்குச் சென்றபோது 2 விவசாயத் தொழிலாளர்கள் இறந்துவிட்டார்கள் என்ற உடனே, 4-வது நாளே அந்த 2 விவசாயிகளுக்கு 2 இலட்சம் ரூபாய் பணத்தைக் கொடுத்தார்கள். அந்த 8 இலட்சம் பேர், இந்த 4 ஆண்டு காலத்திலே அவர்கள் உறுப்பினர்களாக நீடிக்கிறார்களா, இல்லையா? அல்லது புதிதாக...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் இந்தத் திட்டத்தில் சேர்ந்தவர்கள் 8 இலட்சம் பேர் இல்லை. 7.5 இலட்சம் பேர். அவர்களுக்கும் இந்த புதிய உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் சலுகைகள் வழங்கப்படும்.

ஏற்கெனவே திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் பேசுகின்றபோது அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற Leave Travel Concession இரத்து செய்யப்பட்டது என்றும், அதை மீண்டும் வழங்க வேண்டும் என்றும், இங்கே குறிப்பிட்டார். அது சரி அல்ல. ஏற்கெனவே கொடுக்கப்பட்டு வந்த Leave Travel Concession இப்பொழுதும் தொடர்கின்றது. அதை நிறுத்தவில்லை. எந்த மாற்றமும் இல்லை.

மேலும், புதிதாக 100 D.S.P. பதவிகள் உருவாக்கப்படும் என்று அரசு அறிவித்தது, எந்த நடவடிக்கையும் இல்லை என்பதை இங்கே திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே, இதற்கான அரசாணை வெளியிடப்பட்டுவிட்டது. 100 கூடுதல் D.S.P. பதவிகளுக்கு அரசாணைகள் வழங்கப்பட்டுவிட்டன. இந்த D.S.P. ஆக பதவி உயர்வு பெறுகின்ற Inspector-களின் -ஆய்வாளர்களின் பட்டியலை, D.G.P. அரசாங்கத்திற்கு அனுப்பி இருக்கிறார். இது Personnel and Administrative Reforms Department-ன் பரிசீலனையில் இருக்கின்றது. விரைவிலேயே இந்த Panel approve செய்யப்படும்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்களும் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களும் நீர் நிலைப் பகுதிகளில் ஆக்கிரமிப்பு செய்து வாழும் குடும்பங்கள் மத்தியில், அவர்கள் அகற்றப்படுவார்கள் என்ற அச்சம் உருவாகியுள்ளது என்று பேசியுள்ளனர். இது உயர் நீதிமன்றத்தின் ஆணையின்படி செயல்படுத்தப்படுகிறது என்று ஏற்கெனவே விளக்கம் அளித்தேன். அவர்களுக்கு மாற்று ஏற்பாடு ஏதேனும் செய்யப்படுமா என்ற வினாவும் எழுப்பப்பட்டது. உயர் நீதிமன்றத்தின் ஆணையின்படி நீர் நிலைப் பகுதிகளிலுள்ள ஆக்கிரமிப்புகளின் விவரம் முழுமையாக சேகரிக்கப்பட வேண்டும். இதற்கான விவரங்களை அனைத்து மாவட்டங்களிலிருந்து பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



ஆக்கிரமிப்புதாரர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற கோரிக்கை ஏற்கெனவே என்னிடம் வந்துள்ளது. அதற்கென தனி திட்டம் உருவாக்க வேண்டும் என்று நான் ஆணையிட்டுள்ளேன். அதன்படி வருவாய்த் துறையின் 15-9-2005 ஆம் நாளிட்ட அரசாணை எண் 534-ன்படி முதல் தவணையாக ஏழைகளுக்கு வீட்டுமனை வழங்குவதற்கென 31 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, நீர் நிலைப் பகுதிகளில் ஆட்சேபணைக்குரிய ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கும் அங்கே வாழக்கூடிய குடும்பங்களுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்வதற்கும் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2-00*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஐந்து மணித்துளிகளில் உரையை முடியுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் 10 நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திலே சம்பள உயர்வு அளிக்கப்படும் என்று சொல்லி அறிவித்தார்கள். எங்களுக்கெல்லாம் 'அரியர்ஸ்' வந்தது. ஆனால், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு உத்தரவு போயிற்று, 10-6-2005 அன்று. "Legislators Pension - Revision of Pension" என்று சொல்லி, 'under Section 12(b) of the Tamil Nadu Payment of Salaries Act, 1951, and in partial modification of the Legislators Pension Payment Order first cited, sanction is hereby accorded for the payment of revised pension of Rs.6,000/- per month, with effect from 30-10-2001....' இதனால் பல முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் மகிழ்ச்சியோடு இருந்தார்கள். அதிலே பெரும்பாலானவர்கள் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள். ஆனால், நிலைமை என்ன என்று கேட்டால், அவர்கள் வங்கிகளிலே போய், எங்களுக்கு அம்மா அவர்கள் உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள் பென்ஷன், வந்திருக்குமே, 50,000 ரூபாய் கொடுங்கள் என்று கேட்டால், அப்படி ஒரு உத்தரவு வரவில்லை என்று சொல்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்த உத்தரவு போயிற்றே தவிர, வங்கிகளுக்கு அந்த உத்தரவு போகவில்லை. அந்தப் பணம் அவர்களுக்குப் போய்ச் சேரவில்லை. எனவே, அவர்கள் கேட்கவில்லை, நீங்களாக அறிவித்தீர்கள். அதை அமல்படுத்துங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சுனாமியைப் பொறுத்தவரையில் எல்லோரும் பேசியிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் கூட்டிய கூட்டத்திற்குக்கூட நானே தி.மு.க. சார்பிலே சென்று, அரசாங்கம் கேட்டிருக்கிற பணம் போதாது, இன்னும் கூடுதலாகக் கேட்க வேண்டும் என்றுகூட சொன்னேன். ஆனால், இன்றையதினம் மத்திய அரசு 4,000 கோடி ரூபாயை, அதற்காகப் பணம் ஒதுக்கியிருக்கிறது. இன்னமும், பல இடங்களிலே வீடுகள் கட்டப்படவில்லை என்பதைப் பார்க்கும்போது, ஓராண்டு ஆகப் போகிறது, அவர்களுக்கு எப்போது வீடு கட்டுவார்களோ, அது தெரியவில்லை. ஆனால், நொச்சிக்குப்பத்திலே இருக்கக்கூடிய மீனவர்கள் என்ன கேட்கிறார்கள் என்றால், நாங்கள் எந்தப் பகுதியிலே வாழ்ந்தோமோ அந்தப் பகுதியிலேயே வீடு கட்ட வேண்டும் என்று தம்பித்துரை என்ற ஒரு சங்கத்தினுடைய தலைவர் கேட்டிருக்கிறார். அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரும் ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறார். அவர் என்ன சொல்கிறார் என்று சொன்னால், 'நொச்சிக்குப்பம், நொச்சி நகர் ஊர் பஞ்சாயத்தார் மற்றும் ஊர்ப் பொது மக்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், நொச்சிக்குப்பம், நொச்சி நகர் பகுதிகளில் வசிக்கும் மீனவ சமுதாய மக்கள், அரசாணை எண் 172, வருவாய்த் துறை, நாள் 30-3-2005 அன்று கண்டுள்ளபடி, அவர்கள் வசிக்கும் பகுதியிலிருந்து கட்டாயப்படுத்தி அப்புறப்படுத்தப்பட மாட்டார்கள்' என்று கடிதம் அனுப்பியிருக்கிறார். ஆனால், இப்போது நொச்சிக்குப்பத்தைத் தாண்டி வேறு இடத்திலே வீடு கட்டுவதற்கு அரசு முயற்சிப்பதாக அந்த மீனவர்கள் கடிதம் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் இங்கே இருக்கிறார். மீனவர் சமுதாயத்திற்காகவே குரல் எழுப்பக்கூடியவர், அதைப் பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமி நிவாரணப் பணிகள் குறித்து ஏற்கெனவே விரிவான பதிலை இந்த அவையில் சற்று முன்னர்தான் அளித்தேன். அப்போது மாண்புமிகு திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் இந்த அவையில் இல்லை என்று கருதுகிறேன். அவருக்காக சில விவரங்களை மட்டும் இப்போது மீண்டும் கூற விரும்புகிறேன். (குறுக்கீடு) கேட்டீங்களா? பின்னர் இந்தக் கேள்வியை எழுப்ப வேண்டிய அவசியமே இல்லையே?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் சொல்ல வந்தது, நொச்சிக்குப்பத்திலே இருக்கக்கூடிய மீனவர்களுக்கு அங்கேயே வீடு கட்டி...



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பு நீங்கள் சொன்னது, சில வினாடிகளுக்கு முன்பு, வீடுகள் எப்போது கட்டித் தரப்படும், கட்டித் தரப்படுமா, அந்த நடவடிக்கையே இல்லையே என்று சொன்னீர்கள். அதற்கெல்லாம் விரிவாக ஏற்கெனவே பதில் சொல்லி இருக்கிறேனே?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் சென்னை மற்றும் வட சென்னை மாவட்டத்திற்கு உட்பட்ட கடற்கரையோர கிராம மீனவர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலைமையில், வருங்காலத்தில் பாதிக்கப்படக்கூடாது என்கின்ற அடிப்படையில் வட சென்னைப் பகுதிக்கு உட்பட்ட, என்னுடைய இராயபுரம் தொகுதி, ஆர்.கே. நகர் தொகுதி, இந்த இரண்டு தொகுதிகளிலும் இருக்கின்றவர்களை கார்கில் நகர் பகுதியிலே மாண்புமிகு அம்மாவினுடைய உத்தரவின்பேரிலே, அவர்களுடைய விருப்பத்தின் பேரிலே மாற்றம் செய்தோம். தென் சென்னையிலே இருக்கின்ற பட்டினப்பாக்கம், சீனிவாசபுரம், நொச்சி நகர், நொச்சிக்குப்பம், முல்லைமா நகர், முல்லைக்குப்பம் போன்ற பகுதிகளில் இருக்கின்றவர்கள், மீனவர்களுடைய விருப்பத்தைக் கேட்கும்போது, நாங்கள் அங்கே பள்ளிக்கரணைக்குச் செல்ல மாட்டோம், இங்கேயே எங்களுக்கு ஒரு மாற்று இடம் கொடுக்கப்பட வேண்டும் என்ற கருத்தைச் சொன்னார்கள். எனவே, மாற்று இடம் கொடுக்கப்படும் என்ற அந்த உறுதியைச் சொல்லியிருக்கிறோம். எனவே. இங்கே இருக்கின்ற மீனவர்களை மாற்றுகின்ற எண்ணம் அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நானும் அதைத்தான் சொன்னேன். அமைச்சர் அப்படிச் சொல்லியிருக்கிறார், பரவாயில்லை. டால்மியா என்ற ஒரு தனியார் சிமெண்ட் தொழிற்சாலை இந்த அரசாங்கத்திற்கு, விரிவாக்கம் செய்வதற்காக கடந்த ஆண்டு ஒரு விண்ணப்பம் தந்தது. அதுகுறித்து ஓராண்டு காலமாக என்ன காரணத்தினாலோ N.O.C. கொடுக்கவில்லை. ஆனால், திடீரென்று ஒரு நாள் இரவு 10 மணிக்கு டால்மியா நிறுவனத்தினுடைய மின்சாரமே நிறுத்தப்படுகிறது. அப்படி மின்சாரம் நிறுத்தப்பட்டு, மின்சாரம் துண்டிக்கப்பட்ட மறுநாள் காலையிலே 10 மணிக்கு மேல் மத்திய அரசாங்கத்திற்கு N.O.C. அனுப்பப்படுகிறது. இதற்கிடையில் அந்தக் கட்டடம் கட்டியவர்கள் தமிழக அரசாங்கத்திடமும் N.O.C. வாங்கவில்லை, மத்திய அரசாங்கத்திடமும் N.O.C. வாங்கவில்லை. ஆனால், அந்தக் கட்டடம் கட்டப்படுகின்ற நேரத்திலே விபத்துக்குள்ளாகி 20 பேர்களிலே

13 பேர்கள் உயிரையே இழந்துவிட்டார்கள். இப்படிப்பட்ட நிலைமைக்கு யார் காரணம் என்பதை எல்லாம் இந்த அரசாங்கம் விசாரித்து, சம்பந்தப்பட்டவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது E.B. Regulatory Commission ஒரு பரிந்துரை செய்து....

*பிற்பகல் 2-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளில் விபத்து—டால்மியா சிமெண்ட் தொழிற்சாலையில் விபத்து ஏற்பட்டதற்கும், N.O.C. கொடுப்பதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. தொழிற்சாலைகளை நடத்துகின்றவர்கள் அவர்கள் பல்வேறு contract-களை விடுகிறார்கள். விபத்து ஏற்பட்டதற்கு தொழிற்சாலையினுடைய அந்த நிர்வாகக் கோளாறுகள்தான் காரணமே தவிர, அதற்கு அரசாங்கம் பொறுப்பு ஏற்க முடியாது. அதுமட்டுமல்ல, இவர் டால்மியா சிமெண்ட் நிறுவனத்திற்கு N.O.C. கொடுப்பதற்கும், மின்சாரத்தை நிறுத்தி, மறுநாளே கொடுக்கப்பட்டது என்று சொல்வதற்கும் நிச்சயமாக எந்த வகையிலும் பொருத்தம் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதற்கு முன்பாக மாண்புமிகு உறுப்பினரவர்கள்கூட, திருவாலங்காடு சர்க்கரை ஆலையில் இரண்டு தினங்களுக்கு முன்பாக சர்க்கரை விற்பனை செய்யப்பட்டது, அதுவும் வெளிச் சந்தை விலையைவிட 500 ரூபாய் குறைவாக விற்கப்பட்டது என்றுகூட தவறான செய்தியைச் சொன்னார்கள். நான் உறுதியாகச் சொல்கிறேன், திருவாலங்காடு சர்க்கரை ஆலையைப் பொறுத்தமட்டிலும் கடந்த அக்டோபர் 2004-லிருந்து அந்த ஒரு சர்க்கரை ஆலையில் மட்டும் சர்க்கரை விற்பனை செய்யவே முடியவில்லை. காரணம், நீதிமன்றத்தினுடைய தடையாணை அங்கு இருக்கிறது. ஆகவே, விற்பனையே நடைபெறாத ஓர் இடத்தில், விற்பனையில் 500 ரூபாய் குறைத்து விற்பதாகச் சொன்னதற்குப் பொறுப்பேற்று—மாண்புமிகு உறுப்பினர் ஏற்கெனவே இராஜினாமா செய்யப் போகிறேன் என்று சொன்னார்கள். விற்பனையே நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்து (குறுக்கீடுகள்)—இராஜினாமா அவர் செய்துவிடுவார். (குறுக்கீடுகள்)



**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ** *(குறுக்கீடுகள்)* அது ஒன்றும் பெரிய கஷ்டம் இல்லை. நாளைக்கே இராஜினாமா பண்ணிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. சட்டமன்றத்தை அவமதிக்கின்ற வகையிலே பேசக் கூடாது. (குறுக்கீடுகள்)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, இப்போது தமிழக அரசாங்கம் E.B. Regulatory Commission கொடுத்த ஒரு பரிந்துரையின்பேரில் ஓர் அரசாணை பிறப்பித்திருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தச் சட்டமன்றம்தான் உங்களை இவ்வளவு நேரம் பேச அனுமதித்திருக்கிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இல்லை, இல்லை. அவர் சொன்னதனால் சொன்னேன். இராஜினாமாதான் செய்ய வேண்டுமென்றால் அது ஒரு பெரிய விஷயம் இல்லை. எனக்கு ஆட்சேபணை இல்லை என்று சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள். [illegible]

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அந்தச் சர்க்கரை [illegible]யிலே இருந்து—பத்திரிகையிலும் வந்திருக்கிறது. அங்கே வேலை செய்பவர்களும் எனக்குச் சொன்னதைச் சொன்னேன். நாளைக்கு வேண்டும் என்றால் அமைச்சரும், நானும், இரண்டு பேரும் போகிறோம், விற்கவில்லை என்றால் சரி, அவர் என்ன சொல்கிறாரோ அந்த நடவடிக்கைக்கு நான் தயார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீதிமன்றத்திலே தடையாணை இருக்கிறது என்று சொல்கிறார். அமைச்சர் சொல்வது, நீதிமன்றத்திலே தடையாணை இருப்பதனாலே விற்க முடியவில்லை என்று சொல்கிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறாக இருந்தால் நான் இராஜினாமா செய்கிறேன் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான் குறிப்பிட்டார்களே தவிர, நாம் அவர்களை இராஜினாமா செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இல்லை, இல்லை. நீதிமன்றத்திலே எத்தனையோ தடையாணைகள் இருக்கும்போது....

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய பேச்சின்போது இரண்டு, மூன்று தடவை இராஜினாமா, இராஜினாமா என்று சொல்லிக் கொண்டே இருக்கின்றார். (குறுக்கீடுகள்) அவர் இரண்டு வருடங்களுக்கு முன்பாக அல்லது ஒரு வருடத்திற்கு முன்பாக இராஜினாமா செய்திருந்தால், அண்ணா நகர் தொகுதியிலே நாங்கள் போட்டியிட்டு, நிச்சயமாக அம்மாவினுடைய நல்லாசியோடு வெற்றி பெற்று, இந்த அவையிலே வந்திருப்போம். இன்னும் தேர்தலுக்கு ஆறு மாதங்கள் இருக்கின்ற நிலையிலே, அதை சர்வ சாதாரணமாகச் சொல்லிக்கொண்டிருக்கின்றார். (குறுக்கீடுகள்)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, இப்போதும் சொல்கிறேன், 2006 தேர்தல் வரும். அமைச்சரே வந்து நிற்கட்டும் அல்லது யார் வேண்டுமானாலும் வந்து நிற்கட்டும். அண்ணா நகர் தொகுதியிலே நான் நிற்கிறேனா இல்லையா என்பதை தி.மு.க. முடிவு செய்யும். ஆனால், தி.மு.க.-வை வெற்றிபெற இன்னும் எந்தக் கட்சியும் தமிழ்நாட்டிலே பிறக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) நான் ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன். பகல் கனவு காணாதீர். கருவாடு மீன் ஆகாது. (குறுக்கீடுகள்) கறந்த பால் மடி புகாது. (குறுக்கீடுகள்) மீண்டும் தி.மு.க. ஆட்சிக்கு வருவது என்பது நடக்காத காரியம், நடக்காத காரியம், நடக்காத காரியம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, எது நடக்கும், எது நடக்காது என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி, நிறைவுரைக்கு வாருங்கள்.



*பிற்பகல் 2-10*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் பேசுகின்றபோது, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இந்த அரசால் அறிவிக்கப்பட்ட payment of arrears of enhanced pension வழங்கப்படவில்லை, அவர்கள் வங்கிகளுக்குப் போய்க் கேட்டபோது அப்படிப்பட்ட எந்த ஆணையும் பெறப்படவில்லை என்று தெரிவித்தார். இது முற்றிலும் தவறான தகவல். ஆதாரம் இங்கே இருக்கிறது. Legislative Assembly Secretariat-லிருந்து 20-5-2005 அன்றே Branch Manager, State Bank of India என்று address செய்து, எல்லாக் கிளைகளுக்கும் கடிதம் போயிருக்கிறது. இதில் என்ன உள்ளது என்றால், "necessary arrangements may kindly be made to credit the amount towards arrears of enhanced pension for the month of April 2005 as indicated therein to the respective accounts of the former members in the branches concerned as early as possible. Since the amount includes the arrears of enhanced pension for the month of April 2005, the amount may be credited into the account of the pensioners immediately. A consolidated cheque for Rs.1,90,000/- only drawn in the Reserve Bank of India in favour of the Assistant General Manager, State Bank of India, Anna Salai Branch, Anna Salai, Chennai including the amount shown in the schedule in respect of your district Branches of the State Bank of India has been issued." ஆக, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், கடலூர், தருமபுரி, நாமக்கல், சேலம், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், நீலகிரி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, மதுரை, தேனி, திண்டுக்கல், ஈரோடு, இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களிலுள்ள State Bank of India அத்தனை கிளைகளுக்கும் இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஆகவே, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்குக் கடிதம் போனதைப்பற்றி நான் சொன்னேன். அப்படி ஒரு கடிதம் போயிற்று. ஆனால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொன்னீர்கள்; வங்கிகளுக்குப் போகவில்லை என்று சொன்னீர்கள். வங்கிகளுக்குப் போயிருக்கிறது என்று முதலமைச்சர் அதைத்தான் சொல்கிறார்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இல்லை, இல்லை. நான்கு நாட்களுக்கு முன்னால் போய்க் கேட்டபோது, அந்த வங்கியிலே சட்டமன்ற உறுப்பினருக்கு இன்னும் எந்த லெட்டரும்.... (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன காரணத்தினாலேயோ என்னவோ அவர் பேசுவதை அவரே மறந்துவிடுகிறார். இப்போதுதான் அவர் சொன்னார். வங்கிகளுக்கு தகுந்த instruction அரசாங்கத்திடமிருந்து செல்லவில்லை போல் இருக்கிறது என்று சொன்னீர்கள். அதற்கான பதிலைத்தான் இப்போது தெரிவித்தேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் சொன்னதை முதலமைச்சர் கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். வங்கிகளிலே போய் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டார்கள். அவர்கள் இதுவரையிலே எங்களுக்குப் பணம் வரவில்லை, ஆணை வரவில்லை என்று சொன்னார்கள். அந்தக் கடிதத்தைக் கொடுத்திருக்கிறேன். அந்தச் சட்டமன்ற உறுப்பினர் போய்க் கேட்டுவிட்டுத்தான் நான்கு நாட்களுக்கு முன்னாலே எங்களுக்காகப் பேசுங்கள் என்று சொன்னார். அதைத்தான் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அரசினுடைய குற்றம் அல்ல. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கியின் குற்றம். மைய அரசை, டெல்லி நிதி அமைச்சரை கேட்க வேண்டிய கேள்வியை நீங்கள் இங்கே கேட்டுக்கொண்டிருந்தால் அதிலே என்ன அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வங்கிகளுக்கு இங்கேயிருந்து அனுப்பியாயிற்று. (குறுக்கீடு) நம்முடைய சட்டமன்றச் செயலகத்திலேயிருந்து போய்விட்டது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, (குறுக்கீடு) சரி. பிரச்சினைக்கு வருகிறேன். தலைவர் அவர்களே, Electricity Board Regulatory Commission ஒரு பரிந்துரை செய்து, அதை அரசாங்கம் ஒரு Gazette ஆகக்கூட வெளியிட்டிருக்கிறது. அதில் என்ன சொல்கிறார்கள் என்றால், guidelines 3-8-2005-ல் அரசு Gazette-ல் அந்த Regulation-களில் ஒன்று, இக்கமிஷன் மின்சாரக் கட்டணம் நிர்ணயிக்கப்படும்போது, எந்த வகை நுகர்வோருக்கும் மின்சார விநியோகச் செலவில் 150 சதவீத அளவிற்கு மேல் கட்டணம் வசூல் செய்யக் கூடாது எனவும், அதேபோன்று மின்சார விநியோகச் செலவில் 50 சதவீதத்திற்கு கீழான



அளவில் கட்டணம் வசூலிக்கக் கூடாது எனவும் கூறுகிறது. இது ஒரு ஆபத்தானது. ஏனென்றால், நம்முடைய தமிழக அரசே, இந்த அரசுகூட, சாதாரண ஏழையெளியவர்களுக்கு 50 யூனிட், 100 யூனிட் பயன்படுத்துகின்றவர்களுக்கு எல்லாம் ஒரு ரூபாய் 10 காசு என்று மின்சாரத்தை நாம் இன்று வரையிலே கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அப்படி இருக்கும்போது இப்படி ஒரு ஆணை Regulatory Commission போட்டிருந்தால், அதை அரசாங்கம் Gazette-லே பதிவு செய்திருக்கிற காரணத்தால், அந்தப் பரிந்துரையை நீங்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளக் கூடாது. அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்து முடிவெடுக்கின்ற நேரத்திலே ஏழைகள் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆணையால் மறுபடியும் எங்கே மின்சாரக் கட்டணம் உயர்ந்துவிடுமோ என்ற ஒரு அச்சம் மக்கள் மத்தியிலே இருக்கின்ற காரணத்தினாலேதான் இதை அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட ஆணையை முதலில் வழங்கிய அந்த Regulatory Commission வருவதற்கு மூலகாரணமே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான். அதை முதன்முதலில் ஒத்துக்கொள்ளட்டும். (குறுக்கீடு) மத்திய அரசு கொண்டுவந்த Regulatory Commission - அதை ஒத்துக்கொண்டது அன்றைக்கு அமைச்சராகயிருந்த இவர்தான். அதோடு மட்டுமல்லாமல் Regulatory Commission-னுடைய ஆணை பொதுமக்களுக்கு இடையூறாக இருக்கிறது என்பதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும் பல்வேறு முறை சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆக, இந்த ஆணையை நமது Regulatory Commission போடுவது கட்டாயமாக, சட்டப்படியான அதிகாரம் அதற்கு இருப்பதால் அதைப் போட்டிருக்கிறார்கள். அதை மறுபரிசீலனை செய்வதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 2-15

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு இப்படி ஒரு உறுதிமொழி தந்ததற்காக நான் பாராட்டுகிறேன். அதேநேரத்திலே தூத்துக்குடி துறைமுக விரிவாக்கத் திட்டம் 600 கோடியிலே மத்திய அரசாலே அறிவிக்கப்பட்டு பிறகு அந்தத் திட்டம் நிறைவேறாமல் இருப்பதற்கு என்னென்ன செய்ய

முடியுமோ அந்தக் காரியங்கள் எல்லாம் நடைபெற்று நீதிமன்றத்திற்குப் போய் கடைசியிலே நீதிபதிகள்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதைப் பற்றி நான் இங்கே விளக்கம் கூறி இருக்கின்றேன். தூத்துக்குடி துறைமுக விரிவாக்கத் திட்டத்தை இந்த அரசு வரவேற்கின்றது. அதை நாங்கள் நிச்சயமாக எதிர்க்கவில்லை. எதிர்க்க வேண்டிய அவசியமும் இல்லை. அதைத் தடை செய்ய எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. அதற்குப் பொதுமக்களிடமிருந்து கருத்துக் கேட்புக் கூட்டங்கள் நடைபெற வேண்டும். அதை மாவட்ட ஆட்சித் தலைவர் நடத்தி இருக்கிறார். ஆனால், அதற்குள் வேண்டுமென்றே இந்த அரசு, மத்திய அரசு எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தாலும் அதை எதிர்க்கிறது என்ற உண்மைக்கு மாறான ஒரு தோற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக தேவையில்லாமல் மத்திய அமைச்சர் திரு. டி.ஆர். பாலு அவர்களின் தூண்டுதலின் பேரில் துறைமுக, Port Trust தலைவர் நீதிமன்றத்தை அணுகினார். ஆனால், அதற்கு எந்த அவசியமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, முதலமைச்சர் சொல்வது அவருடைய எண்ணமாக இருக்கலாம். ஆனால், தூத்துக்குடியிலே என்ன நடைபெற்றது? 28-06-2005 அன்று ஒரு hearing நடந்தது. அங்கே அ.இ.அ.தி.மு.க.வைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திருமதி ராஜம்மாள் மற்றும் அ.இ.அ.தி.மு.க.-வினர் சிலர் திட்டமிட்டு அந்தக் கூட்டத்திலேயிருந்து வெளியேறி அந்த public hearing நடக்காமலேயே தடுத்துவிட்டார்கள். அதனால்தான் துறைமுகத்திலே இருக்கக்கூடிய தலைவர் நீதிமன்றத்திற்குப் போக வேண்டிய அவசியம் ஏற்பட்டதே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்ற உறுப்பினரைப் பற்றி நீங்கள் சொல்லி இருக்கிறீர்கள். (குறுக்கீடு) திருமதி எஸ். ராஜம்மாள்.

**திருமதி எஸ். ராஜம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கூட்டத்திலே நாங்கள் யாரும் தடுக்கவில்லை. பொதுமக்களாகிய மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் வந்து அந்தக் கூட்டத்தை நடத்தவிடாமல், அவர்களுக்கு அதில் சரியில்லை என்கிற காரணத்தினால் அவர்கள்தான் தடுத்தார்களேயொழிய, நானோ, ஒன்றிய சேர்மனோ, எங்கள் சார்பாக யாருமே அதைத் தடுக்கவில்லை. நாங்கள் முழுமையாக அதிலே கலந்துகொண்டோம் என்பதற்கு எங்கள் கையெழுத்து அதில் இருக்கிறது.



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி துறைமுகம் மையத் துறைமுகமாக Hub Port-ஆக மேம்படுத்தப்பட வேண்டும் என்று 27-6-2005 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் நானே வலியுறுத்தி இருக்கின்றேன். இந்த நோக்கத்துடன் தூத்துக்குடி துறைமுகம் பெரிய கப்பல்களைக் கையாளும் வகையில் 680 கோடி ரூபாய் செலவில் தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தித் திட்டத்தைச் செயல்படுத்த மைய அரசு உத்தேசித்துள்ளது. இதற்கான பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தினை தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் 21-9-2005 அன்று நடத்தியுள்ளார். இருப்பினும் வேண்டுமென்றே மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. டி.ஆர். பாலு அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகத் தலைவர், மாநில அரசு கருத்துக் கேட்புக் கூட்டத்தை நடத்துவதில் தாமதம் ஏற்படுத்துவதாக சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மனு ஒன்றினை தாக்கல் செய்துள்ளார். மீண்டும் சொல்கிறேன். தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தித் திட்டம் அப்பகுதி பொருளாதாரத்தை மேம்படுத்தும் என்பதால் அதனை நாங்கள் ஏன் எதிர்க்க வேண்டும்? ஏன் எதிர்க்கப் போகிறோம்? வேண்டுமென்றே மாநில அரசு மைய அரசின் திட்டங்கள் அனைத்தையும் எதிர்க்கிறது என்ற ஒரு உண்மைக்குப் புறம்பான தோற்றத்தை உருவாக்குவதற்காகவே இதுபோன்ற நடவடிக்கைகளை தி.மு.க. எடுத்து வருகிறது என்று நான் கூறுகின்றேன். மைய அரசின் ஆக்கபூர்வமான திட்டங்களை நாங்கள் எப்போதும் வரவேற்கின்றோம். மீனவர் வாழ்வாதாரங்களைப் பறிக்கும் வகையில் வகுக்கப்பட்டுள்ள சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிறைவுரைக்கு வந்துவிடுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி துறைமுக விஸ்தரிப்புத் திட்டத்தை ஆதரிக்கிறோம் என்று சொன்னார்கள். மகிழ்ச்சி. ஆனால், நடைமுறையிலே அதை மாநில அரசு மத்திய அரசோடு ஒத்துழைத்து விரைவிலேயே அந்தத் திட்டம் நிறைவேறுவதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. சேது சமுத்திரத் திட்டத்தைப் பற்றிக் கூடச் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அந்த விவாதத்திற்குள்ளே போகாதீர்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இல்லை, விவாதிக்கப்பட்டாகிவிட்டது. அதற்குள்ளே போகவில்லை. நம்முடைய முதலமைச்சரே சொல்லி இருக்கிறார். சேது சமுத்திரத் திட்டத்திற்கு அடித்தளம் அமைத்தவர் எம்.ஜி.ஆர்., செயல் வடிவம் பெற நானே காரணம் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதுபற்றி ஏற்கெனவே விரிவான அறிக்கை சொல்லப்பட்டுவிட்டது.

பிற்பகல் *2-20*

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குள்ளே போக வேண்டாம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இல்லை, அதற்குள்ளே போகவில்லை. இந்தத் திட்டம் வருவதற்காக காமராஜர் காலத்திலேயிருந்து, அண்ணா காலத்திலேயிருந்து, கலைஞர் காலத்திலேயிருந்து, எம்.ஜி.ஆர். காலத்திலேயிருந்து, நம்முடைய முதலமைச்சர் காலத்திலேயிருந்து எல்லோருமே போராடியிருக்கிறார்கள். நான் அதற்காக யாரையும் குறை சொல்லவில்லை. இன்னும் சொல்லப்போனால், வை.கோ. போன்றவர்கள் எல்லாம் கூட நாடாளுமன்றத்திலே வாதாடியிருக்கிறார்கள். இப்போது அந்தத் திட்டம் அமல்படுத்தப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே காரண, காரிய விளக்கங்கள், அதிலே இருக்கக்கூடிய சிக்கல்கள் எல்லாவற்றையும் முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். நீங்கள் அந்தப் பிரச்சினையை விட்டுவிட்டு கடைசியாக நிறைவுரைக்கு வாருங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இல்லை, இல்லை. நான் ஒன்றே ஒன்று தெரிந்துகொள்ள விரும்புவது என்னவென்றால், முதலமைச்சர் இப்பொழுது என்ன காரணத்தினாலோ அதை எதிர்க்கிறார். அதைப்பற்றி இல்லை. நான் சொல்ல வருவது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காரணங்களை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அதுதான். காரணம் சொல்லியிருக்கிறார்கள். அதிலே அவர், இந்த அவையில் பயன்படுத்திய ஒரு வார்த்தை உள்ளபடியே நமக்கு ஜனநாயக அடிப்படையிலே

சரியாகப்படவில்லை. அவர் என்ன சொல்கிறார் என்றால், சராசரி மக்களின் வாழ்வாதாரங்களை கொள்ளையடித்து, தங்களது சட்டைப் பைகளை நிரப்பிக்கொள்வதற்காகவா, சேது சமுத்திரத் திட்டம் என்று சொல்லியிருக்கிறார். அப்படியென்றால், இந்த அரசாங்கம் போடுகின்ற திட்டங்கள் எல்லாம் TASMAC சட்டைப் பைகளிலே நிரப்புவதற்காகத்தானா என்று யாராவது கேட்டால், தவறாக எடுக்க முடியுமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஒரு அரசாங்கம் போடுகின்ற திட்டத்திற்கு, ஒரு அரசு காரணம் கற்பிக்கக்கூடாது. அவர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால், மத்தியிலே இருக்கக்கூடிய அமைச்சரோ அல்லது அந்தத் திட்டத்தை நிறைவேற்றக்கூடிய பிரதமரோ, யாரை நீங்கள் குறிப்பிடுகிறீர்கள்? பைகளை நிரப்பிக்கொள்வதற்காகவா சேது சமுத்திரத் திட்டம் என்றால், இதைத் தெரிவிக்க வேண்டும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தினால் ஏற்படக்கூடிய சுற்றுச் சூழல் பாதிப்புகளைப் பற்றி பல கேள்விகளை எழுப்பி, பிரதமர் அலுவலகத்திலிருந்தே கடிதம் அனுப்பப்பட்டது. குறிப்பு அனுப்பப்பட்டது. ஆனால், அரசியல் காரணங்களுக்காக, மிகவும் pressure கொடுத்ததால், தி.மு.க.-வின் வற்புறுத்தலின் காரணமாக, குறிப்பாக தி.மு.க. தலைவர் வற்புறுத்தலின் காரணமாக அவசரக் கோலத்தில் இந்த சேது சமுத்திரம் கால்வாய்த் திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஏற்கெனவே விரிவாக இந்த அவையில் இதைப்பற்றி நான் பேசியிருக்கிறேன். திரும்ப அதற்குள் நான் போக விரும்பவில்லை. நீண்ட நேரம் அதைப்பற்றி இங்கு பேசியிருக்கிறேன். அவசரக் கோலத்தில், சுற்றுப்புறச் சூழல் பாதிப்புகளைப் பற்றி சரியாக ஆராயாமல், மீனவர் வாழ்வாதாரங்கள் அழிக்கப்படுவதைப் பற்றிக் கவலைப்படாமல் ஏன் இவ்வளவு அவசரப்படுகிறீர்கள் என்றுதான் கேட்கிறோம். ஏற்கெனவே, இங்கே சற்று முன்பு பேசுகின்றபோது, திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் சுனாமி நிவாரணப் பணிகளுக்காக மைய அரசு 4,000 கோடி ரூபாய் மாநில அரசுக்கு வழங்கியுள்ளதாகவும், அதை மாநில அரசு சரியாகப் பயன்படுத்தவில்லை என்பதைப் போலவும் இங்கே குறிப்பிட்டார். நீங்கள் சொன்னீர்கள். 4,000 கோடி ரூபாய் மத்திய அரசு ஒதுக்கியுள்ளது என்று சொன்னீர்கள். அதைப் பற்றித்தான் நான் விளக்கம் கூற விரும்புகிறேன். அது சரியான தகவல் அல்ல. மத்திய அரசு, மாநில அரசுக்கு வழங்கியுள்ளது, 625.70 கோடி ரூபாய் மட்டுமே. உலக வங்கிதான் 1,852.74 கோடி ரூபாய் கொடுப்பதாக

ஒப்புக்கொண்டிருக்கிறது. இது கடன்தான். இதைத் திருப்பிச் செலுத்த வேண்டும். அதைப்போலவே, Asian Development Bank மாநில அரசுக்கு 629.63 கோடி ரூபாய் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறது. இது ஒரு பகுதி கடன், ஒரு பகுதி மானியம் ஆகும். ஆகவே, இந்த நிறுவனங்களுக்கெல்லாம், அவர்கள் கொடுக்கின்ற பணத்தை தமிழக அரசு திரும்பவும் செலுத்த வேண்டியிருக்கிறது. ஆகவே, மத்திய அரசு மாநில அரசுக்கு 4,000 கோடி ரூபாய் வழங்கியது என்பது தவறு.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, உலக வங்கி கொடுத்திருந்தாலும், Asian Development Bank கொடுத்திருந்தாலும், மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதியில்லாமல் அவர்கள் கொடுக்க முடியாது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கி கொடுப்பதும், Asian Development Bank கொடுப்பதும் கடன். அதைத் திருப்பிக் கட்ட வேண்டும். அது ஒன்றும் grant அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிறைவுரைக்கு வாருங்கள். நேரம் ஆகிவிட்டது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** Grant—ஆக நீங்கள் வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டால், நாங்களும் உங்களோடு சேர்ந்து grant-ஆகக் கொடுங்கள் என்று கேட்பதற்குத் தயாராக இருக்கிறோம். ஆனால், இறுதியாக ஒன்றைச் சொல்கிறேன். எதற்கெடுத்தாலும், மத்தியிலே இருக்கக்கூடிய 12 அமைச்சர்கள் என்ன செய்தார்கள், என்ன செய்தார்கள் என்று சிலர் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். தினமணி பத்திரிகையிலே வந்த செய்தியைச் சொல்கிறேன். அந்த 12 அமைச்சர்கள், 16 மாத காலத்தில், 27,000 கோடி ரூபாய்க்கான திட்டங்களை, இந்தியாவிலேயே எந்த மாநிலத்திற்கும் இல்லாத அளவிற்கு தமிழ்நாட்டிற்குப் பெற்றுத் தந்திருக்கிறார்கள் என்ற செய்தி முரசொலியிலே வரவில்லை. தினமணியிலேயே வந்திருக்கிறது. இப்படிச் சாதனைகளைப் புரிகின்ற மத்திய அமைச்சர்களை அரவணைத்துக்கொண்டு, இந்த ஆட்சி இன்னும் நல்லமுறையிலே மத்திய அரசாங்கத்தை, மத்திய அமைச்சர்களையும் பயன்படுத்துமானால், நிச்சயமாகச் சொல்கிறேன், தமிழ்நாடு மேன்மேலும் வளரும். அதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

பிற்பகல் 2-25

## 6. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை 29-9-2005 அன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 29-9-2005, வியாழக்கிழமை அன்று தளர்த்தி, அந்தநேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

(தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து சென்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? உட்காருங்கள். அதற்குள் வெளிநடப்பா? (சிரிப்பு) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை 29-9-2005 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (29-9-2005) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-25 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*32.* *1983* ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் *1-12-2004* ஆம் நாளிட்ட *344* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1937* ஆம் ஆண்டு தமிழ்நாடு மது விலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *10/1937*) *54* *(3)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*34.* உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஒன்பதாவது பட்டியல்) (வரிசை எண்கள் *1* முதல் *50* வரை)

*35.* உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பத்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் *1* முதல் *45* வரை)

ஸஸஸ

D
V2 14, 31 P05
P05 . 86.1

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227000
சென்னை-600 008
நூலகம்

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
112, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.